உ

பரமபதிதுணை.

உலோககுரு

ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

சோதிட சங்கராச்சாரியம் கஉதூல்

ஆயுட்பாவகம்.

இஃது

குலசேகரமாநகரம் மடாதீனகர்த்தரவர்களாகிய ஸ்ரீலஸ்ரீ

கணபதியானந்தசுவாமிகள் மாணாக்கரும்

எட்டியாபுரம் சமஸ்தானம் நடுவப்பட்டி கர்னம்

முத்துக்குமாருபிள்ளை அவர்க்ள் குமாரருமான

சோதிடம்

M. சுப்பிரமணியபிள்ளை அவர்களாலும்

மதுரை வித்வான்,

த. குப்புசாமி நாயுடு அவர்களாலும்

சிர்திருத்தியதை

மதுரை புத்தக வியாபாரம்

S. முத்தையபிள்ளை சன்

மு. சண்முகம் பிள்ளை அவர்களால்

மதுரை

விவேகாநந்தா பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1937.

விலை. REGISTERED COPY RIGHT. ரூ.

நான்காம் பதிப்பு

காப்பி-1000

உ

குமரன் துணை.

நூன்முகம்.

உலகத்திலுள்ள சகலத்திராட்குள், சோதிட முணர்ந்த புண்ணியவான்களுக்கு மாதிடமாக வழுத்தியதாவது:—

இப்பூமியின்கண் எழுவகைப்பிறப்பு நால்வகைத் தோற்றம் எண்பத்து நான்குலட்சம் யோனிபேதங்களில் மானிட ஜென்மமாகப் பிறப்பது அரிது! அரிது!!

இப்பிறவிதப்பினால் எப்பிறவி வாய்க்குமோ வென்று தாயுமான சுவாமிகளும், தெய்வத்தா லாகாதெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும் என்று திருவள்ளுவரும், திருவுளம்பற்றினார்கள். நமக்கு நேரிடும் நன்மை தீமை திரிகாலவர்த்தமானமுந் தெரிந்து கொள்ளும்பொருட்டே மேலோர்கள் விதிவிலக்கென்னும் சோதிட சாஸ்திரம் உண்டுபண்ணி யிருக்கின்றார்கள். இதைமுன்னிட்டு மார்க்கண்டேயர் முதலான மகான்களும் பின்வருங்கால மிருத்தை யறிந்து விதியை விலக்கிக்கொண்டார்களல்லவா?

இச்சோதிடம் ஆதியில் சங்கரன் உமைக்குபதேசிக்க அதைச் சித்துபுருடாளாகிய சிலபேர்கள் பலவாறாகச் சொல்ல அதைத்திரட்டிச் சாரதம்பாள் கிருபைபெற்ற ஆதி உலோககுரு சங்கராச்சாரிய சுவாமிகள் **12000** செய்யுட்களாகச் சாற்றியதை பல இடங்களிற் சில பாகமிருந்தும் சில பாகமில்லாம லிருப்பதால் ஜாதகங்களுக்குப் பலன்சொல்ல யேதுவில்லாம லிருந்தது. இப்பொழுது வழங்கிவருகிற சாதகசிந்தாமணி குமாரசுவாமியம் முதலான சிறு நூற்களைப் போலும் ஒருவாறு செய்யுட்கள் சிறுத்தும், பெருத்தும் சொல்லவில்லை உள்ளபடி இச்சங்கராச்சாரியத்தில் ஆயுள் வித்தை சகோதரம்-மாதுர்-புத்திரர்-சத்ரு-களத்திரம்-ரோகம்-பிதுர்யோகம்-பாக்கியம் சயனம்-பதவி முதலானதுகளைப்பற்றி, பஞ்ச கிரகமுதல் தசக்கிரகம் வரையமைத்து அதற்குத் திட்டமாகப் பலன்கள் சொல்லியும் இடைகளில் வரும் அவமிருத்துக்களுக்குப் பரிகாரம், முன் ஜென்மத்திற் செய்த பழவினை விபரத்தையுங் குறிப்பாக ஒருசெய்யுள் அல்லது இரண்டு செய்யுளிற் சொல்லப் பட்டிருக்கிறது.

இச்சாஸ்திரம் இப்பொழுது சம்பூரணமாகக் கவிராஜபண்டிதர் பரம்பரை குலசேகரமாநகரம் மடாதீன கர்த்தாவர்களாகிய வேம்பத்தூர் ஸ்ரீலஸ்ரீ **கணபதியானந்த சுவாமிகளால்** எங்களில் சுப்பிரமணியபிள்ளைக்கு அருளியதை உலகோபகாரமாக யாவருங்கண்டு ஆனந்திக்கும்படி **மதுரை, த. குப்புசாமிநாயுடு** அவர்களால் சீர்திருத்தி முதலாவது பிரதானமான ஆயுட்பாவக மட்டும் அச்சிட்டிருக்கிறது.

ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகல கனவான்களுக்கும், அச்சுக்கூடத் ததிபருக்கும், அறிவிப்பது யாதெனில்:—இந்த சங்கராச்சாரியார் சோதிடம் பன்னீராயிரத்தில் (ஆயுட்பாவகம்) என்னும் சாஸ்திரத்தை அடியிற்கையொப்பமிட்டிருக்கிற எங்களால் அச்சிட்டு ரிஜிஸ்தர் செய்திருப்பதால் ஷை புஸ்தகத்தை எங்களிருவர்களுடைய அனுமதியன்றி யாராமொருவர் அச்சிடுவரேல் **1867**-ஷூத்து **25**-வது ஆக்ட்டு **20**-வது பிரிவு **6**-வது உட்பிரிவின் விதிப்படி நாங்கள் கோரும் நஷ்டத்திற்கும் பினல்கோடு செக்ஷன் குற்றத்திற்கும் உத்திரவாதிகளாக வேண்டுமென்பதைக் கவனிக்கக் கோருகிறோம்.

இதன் விலை ரூபாய் **1—4—0**. வி-பி-சார்ஜ் வேறு.

இப்படிக்கு,

☞ S. முத்தையபிள்ளை சன்,

☞ M. சண்முகம்பிள்ளை,

புக்ஷாப், மதுரை.

☞ M. சுப்பிரமணியபிள்ளை,

சோதிடம் நடுவப்பட்டி.

உ

பரமபதி துணை.

உலோககுரு

ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

சோதிடசாஸ்திரம் பன்னீராயிரத்தில்

ஆயுட்பாவகம்.

பாயிரம்.

கடவுள் வணக்கம்.

ஓதிய பெரியோர் வாக்கா லுரைத்திடும் நூல்க டன்னை
மேதினி தனிலே நன்றாய் விளங்கிடச் செய்யு ளாகச்
சோதிடப் பலன்க ளெல்லாம் தொகுத்துயான் விளம்பு தற்கு
ஆதியின் மூல மான வைங்கரன் காப்ப தாமே. (1)

செங்கண்மா லருளி னாலே செகந்தனில் மனுவுக் கெல்லாம்
இங்கித மாக நல்ல சோதிட மியம்ப வேண்டித்
திங்களின் நிறத்தை யொத்த தேவியாய் வந்து தித்த
பங்கய முகத்தாள் பால சரஸ்வதி பாதங் காப்பாம். (2)

அவனியிற் பெரியோர் தங்க ளனுக்கிர கத்தால் யானும்
புவனியின் மனுவுக் கெல்லாம் புகழ்ந்துசோ திடத்தைச் சொல்லச்
சிவனருள் மைந்த னன செந்தில்வே லவன்முன் வந்த
குவலயம் புகழு மொற்றைக் கொம்பனுங் காப்ப தாமே. (3)

அண்டம்வாழ் முனிவர் தங்க ளனுக்கிர கத்தால் யானும்
மண்டலந் தன்னில் யார்க்கும் வரும்நிகழ் செல்கா லங்கள்
உண்டிடுங் கனவுஞ் சாவும் யோகமும் ரோகம் யாவும்
வண்டணி குழலாய் மிக்க பலன்வகுத் துரைக்க லுற்றேன். (4)

பொன்னவ னிரவி செவ்வாய் புந்தியும் பிறையுஞ் சுங்கன்
தன்னொடு காரி ராகு சனிமகன் கேதின் னோர்கள்
முன்னிவர் வேத நூலால் மொழிந்திடும் பலன்க ளெல்லாஞ்
சொன்னது தவறு தென்று தொடங்கினன் சங்க ரன்றான். (5)

பாயிரம் முற்றுப்பெற்றது.

உ

பரமபதி துணை.

உலோகதரு

ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

சோதிடசாஸ்திரம் பன்னீராயிரத்தில்,

ஆயுட்பாவகம்.

சாரதாம்பாள் முன்னிற்க்.

அட்டமத்திற் குருவிருக்கக் கேந்திரத்தில் வெய்யோன்
அவர்வீட்டிற் கரியிருக்க அஞ்சினோன் றானுந்
திட்டமதா யாட்சியுச்ச மிருப்பா ராகிற்
றிறமான கணிதநூற் செலுத்தும்வகை சொல்வேன்
சட்டமுடன் வயதிருபத் தஞ்சு மேலாய்ச்
சாலியவா கனயோகஞ் சாற்றலாம் பாரு
இட்டமதா யவன்வயது அறுபதெனச் சொல்வேன்
இப்படியே உரைத்தார்கள் பெரியோர்க டானும். (1)

வேறு.

குருவுசுங்கன் மந்தனோடு கோளிலாத வீட்டினிற்
பரிதிதிங்கள் புந்திபார்வை பகாலாகும் யோகமாம்
உறுதியான வாசவன்றன் யோகமாக வுரைசெய்தார்
அறுதியாக வெழுபதெட்டு அஞ்சிரண்டி லொழியுமே. (2)

வேறு.

புகர்வீட்டிற் கரியிருக்கக் கேந்திரத்திற் சுங்கன்
புந்திசேய் வெய்யோனுஞ் சவுரிவீ டேகத்
தகவிலாக் குளிகனுமே லக்கினத்தில் நீசம்
தான்கணித நூலதனை வகையாகச் சொல்வேன்

பகரமுடன் வயதுமுப்பத் தஞ்சிரண்டிற் றானும்
பாக்கியங்கள் புத்திரர்கள் பலிக்கும் பாரு
தகருவதுக் கிடையில்லை யென்றுரைத்தார் மேலோர்
சாற்றினா ரவன்வயது யெழுபத்தஞ் சாமே. (3)

வேறு.

அஞ்சுமே யெழுப தாக அறைந்தனர் சாத கர்க்கு
மிஞ்சவே உயிரிற் றீக்கோள் விளங்கிட வளரு மாகில்
தஞ்சமா யறுப தாகச் சாற்றினார் கணித நூலில்
அஞ்சவே சனியன் வந்தா லறைந்தன ரைம்ப தாயுள். (4)

வேறு.

பன்னிரண்டுக் குடையோனுங் குளிகனோடு
பார்க்கவனு மாயிருந்த பலன்றான்சொல்வேன்
இன்னிலத்தில் அவர்தமக்கு மனைவிரெண்டாம்
இயம்பினோங் கணிதவகைப் படியேசொன்னோம்
மன்னர்புகழ் தமிழ்க்கரசன் வழக்கில்வல்லன்
மனைவிரெண்டு வாழ்ந்திடுவாள் மதியார் சொன்னோம்
துன்னிதமா யவன்வயது உரைத்தார் மேலோர்
துணிவுடனே யெழுபதனிற் றொலையுமாக்கை. (5)

வேறு.

வெய்யவ னோடு புந்தி விளங்கிடத் தனுவிற் றோன்ற
பையவே கேந்தி ரத்திற் பதிவுடன் மதியே நிற்க
வையமே யிருக்க நூலோர் வகுத்தன ரறுபத் தேழு
தையலாள் யேக மாகச் சாற்றினா ரவளால் யோகம். (6)

யோகமே யவளா லென்று வோதினார் கணித நூலோர்
போகமே அனுப விப்பான் புத்திர னாற தாகும்
வாகன யோக சாலி வயதுமுப் பதுமே லப்பால்
பாகமாய் மனைவி யாலே பாக்கிய மதிக மாமே. (7)

அஞ்சினிற் சேயு மாக அவர்க்குநா லதனிற் சுத்தம்
விஞ்சையாய் மகரந் தன்னில் விளங்கிட மதியு மந்தன்
குஞ்சரத் துடனே நிற்கக் குறித்தனர் கணித நூலோர்
வஞ்சமில் லாமற் சொல்ல மதித்தன ரெழுபத் தஞ்சு. (8)

கரியவன் குருவீ டேகக் கலைமறை பிலமா வானால்
வருமெட்டோ னுயிர்க்கு ளோனும் வளருகேந் திரமே யானால்
தருவுயிர்க் கஞ்சோன் றானுஞ் சற்குரு புகர்மா லானால்
பெருமறு பதின்மே லெட்டுப் பேணிடும் வயதென் றோதே. (9)

ஓதுயிர்க் கோளான் காரி உயிர்க்கெட்டோ னிருந்த யில்லங்
கேதுசூ ரியனுங் கூடிற் கிளத்திடும் அஞ்சு தள்ளி
நீதமா யுய்யு மென்று நிச்சய முரைத்தார் மேலோர்
ஓதரச் சேய்சேர்ந் தாலு மொழிந்திடு மதன்கீழ் பத்தே. (10)

வேறு.

மகரலெக் கினத்தில் மதியுடன் சேயும் வளர்குரு கேந்திர
மிருந்தால், தகவிலாப் புந்தி உச்சமா யிருக்கச் சனியுமே யேழி
னிற் றோன்றப், பகருடன் கணித யோகமே வகுத்தார் பன்னி
ரண் டஞ்சுமே வயதில், மகபதி போலத் தனமெலாஞ் செலுத்
தும் வயதுமே ஐம்பது வரைக்கும். (11)

வேறு.

புகருமே மூன்றி லுச்சம் பொருந்திட வவற்கு நாலில்
தகரிலான் கொடியோன் பானோன் சாரவே யிருப்பா னாகில்
நிகரிலா தனவா னவன் நீதமாய் முப்பத் தெட்டில்
தகருவ தில்லை யென்றார் தாரத்தால் யோகஞ் சாற்றே. (12)

யோகமே அவளா லாகும் ஒழியுமே ஐம்பத் தெட்டிற்
பாகமாய் மனைவி சொந்தம் பகரலாம் பதினா லாறில்
போகமே அனுப விப்பான் புத்திரன் நாலாய்த் தோன்றும்
வேகமா யிறப்பான் சொன்னேன் விஷத்தினா லவன்றன் யாக்கை.

கரிவுடன் புந்தி வெய்யோன் கலந்திட வவற்கு மூன்றில்
இறுதியாய்க் குருவுங் கேது மிருந்திடு மானாற் சொல்வேன்
உறுதியாய் மேலோர் தாமும் உரைத்திடு மொழியி னாலே
சுருதியா மவன்றன் யாக்கை சோர்தலா மறுபத் தஞ்சில். (14)

கரியவன் உச்ச மாகக் கலந்திடு மவற்கு யெட்டில்
இறுதியாய் வாக னத்தோன் இசைவிலா வுச்ச மாக
அறுதியா யவற்குச் சொன்னே னறுபது அஞ்சி ரண்டு
உறுதியா மென்று சொன்னா ருண்மையாய்க் கணித நூலோர். (15)

குருவுடன் வாக னத்தோன் கூடிடப் பாவர் சேரு
வருநிதிக் குடையோன் ரூனும் வளருகேந் திரமா னுனுஞ்
சுருதியா யவர்க்கி ரண்டு தாரமாய்ச் சொன்னர் மேலோர்
உறுதியே அவன்றன் யாக்கை ஒழியுமே யெழுப தெட்டில். (16)

வேறு.

மிதுனலெக் கினத்தில் விளங்கிடக் குருவும் வெய்யவன் ரூனு மேசேரக், கதுமெனத் திங்க ளலவனிற் ரேன்றக் காரியுந் தன்கிர கத்திற், சதியுட னிருக்க வொன்றுநான் கேழிற் பத்தினிற் சார்ந்திடக் கேது, விதிமுறை தவரு கணிதநூ லாய்ந்தோர் விளங்கிட யிப்பல னுரைப்பார். (17)

பார்தனி லிருந்து பாக்கிய போகம் பான்மையா யமைச்சற்கு நிகராய், வாரணக் கூட்டம் விளங்கிட யிந்த வயப்புலி வரும்பகை போலச், சாரவே வொழியுஞ் சகல போக் கியனுந் தாரணி தன்னிலே யிருந்து, மீரவே வயது ஐம்பது மூன்று மிரண்டினி லிப்பல னுக. (18)

பரிதியுஞ் சேயும் மதியுமே புந்தி பான்மையாய் புகருமேயாக, அறுதியா யவர்கள் அவரவர் வீட்டி லமைந்திட மந்தனுங் கேதுஞ், சுருதியாய் நட்பு உச்சம தாகிற் றய்யவே ஆட்சியானும், இறுதியா யிருந்தா லவர்பல னுரைக்க யியம்பினேங் கணிதநூ லாய்ந்தோர். (19)

ஆய்ந்ததோர் பலன்தான் கணிதநூல் பார்த்து அறைந்திட அய்யஞ்சு வயதிற், சாந்தமா யவதற்கு வெகுதனஞ் சேருஞ் சாரவே சிவிகையோ கமுமாம், வாய்ந்திடப் பரிதி யிருளது போல வரும்பகை யவர்க்குமே ஒழியுங், காந்தமா யவற்கு அறுபது வயது காசினி யதனிலே யென்றார். (20)

மூணினுக் குடையோன் முன்பினிற் பாவர் மொழிந்திட வொன்றுநான் கேழிற், ரூணுவ மாக யிருக்கும தாகிற் சற்குரு வீடுதான் பாழாய், ஆணுவ யோகன் வஞ்சக னுவன் வரும்பலன் அற்பமா மென்று, சேணித மாக உரைத்தன ரவர்க்குச் செப்பிட ஐம்பது வயதே. (21)

வேறு.

இரவியுங் குருவு மாக யிருந்திட யெட்டில் நாலில்
வாமுடன் சனியுஞ் சேயும் வரும்பகை யில்லை யானல்
தாணியி லிருந்து யார்க்குஞ் சாலவே தன்மஞ் செய்வன்
காணியா யவன்றன் யாக்கை கட்டின ரெழுபத் தஞ்சே. (22)

எழுபதும் அஞ்சுஞ் சொன்னேம் யிப்படிக் கிரக மில்லா
வழுவுடன் சனிவீ டேகில் மாயவே கேதா னுனும்
பழுதிலா வயது அஞ்சு பத்துடன் நாலு தள்ளி
விழுதியாய் மாயு மென்று மேவினர் கணித நூலோர். (23)

வேறு.

லக்கினந் தன்னிற் குருவுமே யிருக்க நாலிலே யிரவியும் புந்தி
பக்குவ மாக அவற்குமே யேழிற் பான்மையாய் மந்தனு மாகத்
தக்குவ தில்லை யவருட வயது சாற்றினேங் கணிதநூ லாய்ந்தே
மக்கனத் துடனே அறுபது மிரண்டு வயதுமே யிப்படி யதனல் (24)

வாக்குத்தா னத்தோன் உச்சமா யிருக்க வளமுடன் சேயுமே யிருந்தால், தீர்க்கமா யுரைப்பன் மொழிதடு மாறுஞ் செய்வது கவடமே யுடையான், பாக்கிய மதிகம் அறுபது மேலாய்ப் பகர்ந்தனர் பெரியவர் தானுங், தாக்கினே மென்று கணிதநூல் விதியாற் சாற்றின ரறுபதோ ரெட்டு. (25)

மகரலெக் கினத்தில் வளர்பகை அருக்கன் வாக்கிலே கொடியவன் வெள்ளி, தகவிலா நட்பு மாகவே யிருக்கச் சற்குரு வீட்டினிற் சேயும், புகருட வீட்டில் மாந்தியு நிற்கப் புந்தியுங் கரிகுரு வீடாற், றகவது மில்லை கணிதநூல் விதியாற் சாற்றினர் முப்பது ரெண்டில். (26)

முப்பது ரெண்டில் விதிமுறைப் படியால் மூட்டினர் கணிதநூல் வகைகள், தப்புவ தில்லை சகலபோக் கியனுஞ் சாற்றினர் விதிமுறைப் படியே, இப்படி யிருப்பன் யெழுபது வரைக்கும் யிசைவிலாச் செல்வமே உடையன், செப்பினே மனைவி யிரண்டது மொழிந்தார் சேதமில் லாமலே யிருப்பன். (27)

வேறு.

கரியவன் றன்வீ டாகக் கலந்திட வவற்கு யெட்டில்
உறுதியாய் மதியே சேர்ந்தால் உரைக்கலா மெழுபத் தெட்டு
இறுதியா யிருப்பார் தாமும் யிருந்தது பகையே யானல்
சுருதியாய்க் கணிதம் பார்த்துச் சொல்லின ரறுபத் தொன்று. (28)

வேறு.

அட்டமா திபனு முயிர்க்குளோன் ரூனும் ஆரல்வீ டதனிலே நிற்கத், திட்டமாய்ப் புகரு மதனிலே சேரச் சேயவன் ரூனுமே

தனத்தில், மட்டவிழ் மனைவி தானத்துக் கதிபன் வந்திட மந்திரி வீட்டிற், சட்டமாய்ப் பிறக்குந் தாணியிற் சேய்க்குச் சதிருட னெழுபது வயது. (29)

வேறு.

மதிமக னுயிரிற் சேர வருமெட்டுக் குடையோன் றானுஞ்
சதிருடன் புகர்வீ டேகச் சனியுமே சுபர்வீ டாக
விதியுடன் கருமத் தோனும் விளங்குகேந் திரமாய் நின்றால்
அதிகமா யிருக்க வல்லன் அவன்வய தெழுபத் தொன்றே. (30)

அதிகமா யிருப்பா னாகும் ஆறிரு வெட்டுச் சென்றாற்
சதிருடன் கணித நூல்கள் சகலமும் உணர்வா னாகும்
மதியுட னிறம்போல் மங்கை வருவது யீரே ழானால்
கெதிபெற யிருப்பா னாகும் கெடுவிதத் தொழிற்கு வல்லன். (31)

கரியவன் கொடியோன் றானுங் கலந்திடச் சுங்கன் வீட்டிற்
பரியவன் சேயு மாகப் பார்க்கவன் முன்பின் நின்றால்
விரிகுழற் றானத் தோனும் விதிப்படி ஆட்சி யானால்
துரிதமா யவன்றன் யாக்கை சொல்லலாம் அறுபத் தேழு. (32)

குளிகனு மீரா றானாற் குறித்தனர் தனங்க ளற்பம்
அழிவுமே உண்டாஞ் சொன்னே னனதோர் மனைவி யாலே
பழிகளும் வந்து தோன்றும் பாலக னதிக மாகும்
இழிவுட னேம னூர்க்கு ஏகுவான் நாற்பத் தேழில். (33)

வேறு.

அட்டமத்துக் குடையோனும் குருவு மாக அவற்கொன்று நாலினிலே அரவமாகத், துட்டமுடன் கொடியோனுங் கரியுமாகத் துரிதமுடன் குருவீடா யிருப்பாராகில், சட்டமுடன் வயது முப்பத் தஞ்சுக்கப்பால் சாற்றினர் திரவியங்கள் சகலமுமேவருகுந், திட்டமுடன் யிப்படியே யெண்பதுமேல் வரைக்குஞ் செல்வகுண தனவானாய்ச் சேர்க்கலாந்தேனே. (34)

வேறு.

கரியவன் புகர்வீ டாகக் கணக்கனுங் குருவீ டேகப்
பரிதியுஞ் சனிவீ டேகிப் பார்க்கவன் பிலமா வானால்
உறுதியா யுயிர்க்குள் ளோனும் உயர்வுடன் நீச மானால்
சுருதியா யவன்றன் யாக்கை சொல்லலா மறுபத் தொன்று. (35)

கரியவன் றன்வீ டாகக் கதிரவன் ஆட்சி யாக
வருநிதிக் குடையோ னெட்டோன் வளருகேந் திரமாய் நின்றால்
உறுதியா யுயிர்க்குள் ளோனும் ஒன்பதஞ் சதனிற் சார்ந்தாற்
சுருதியா யெழுபத் தஞ்சு துணிவுடன் வயது சாற்றே. (36)

வேறு.

அட்டமத்துக் குடையோனும் உயிர்க்குள்ளோனும்
அஞ்சுரெண்டுக் குடையோனும் ஆறினோனுங்
திட்டமுடன் லெக்கினமா யிரண்டுமைந்திற்
றிறமான யீராறி லிருப்பாராகில்
நிட்டைபுரி மாலிருந்த வீட்டில்மாந்தி
நின்றிடவும் பாவர்களுஞ் சேர்வாராகிற்
சட்டமதா யிறப்பளவுஞ் செல்வநாதன்
சாற்றலாம் யெழுபதுமே சரியென்றார்கள். (37)

வேறு.

அட்டமத் ததிப்பன் வாக்கி லமர்ந்திட அஞ்சி னோனுங்
திட்டமா யுயிரிற் சேர்ந்தாற் றிறமுட னறுபா னாகுஞ்
சட்டமா யுயிர்க்குள் ளோனுஞ் சற்குரு காரி யானால்
இட்டமா யைம்பத் தஞ்சு இரண்டினிற் றொலையும் யாக்கை. (38)

வேறு.

மதிவீட்டின் மதியிருக்க அரவுடனே தானும்
மாலவனும் பொன்னவனும் மாந்தியுமே தரிக்கச்
சதியாக அவர்க்கிரண்டு நாலினிலே சுங்கன்
தரித்திடவும் அவற்காறிற் சனிபரிதி யிருந்தால்
விதிமுறையா யிப்படியே மண்ணில்வருஞ் சேய்க்கு
விதிக்கலாம் வெகுபாக்யம் வேந்தர்முதல் நிகராம்
அதிபதியா யிறப்பளவுஞ் செல்வகுண யோகன்
அவன்வயது தெரிந்துரைத்தா ரைம்பத்தஞ் சொன்றில்.

வேறு.

எட்டினுக் குடையோ னீச மிருந்திடச் சனியு மெட்டிற்
றிட்டமா யுயிர்க்குள் ளோனுஞ் சேயுடன் வீட்டிற் சேர்ந்தாற்
சட்டமா யுரைக்க லாகுந் தாணியில் வந்த சேய்க்குத்
திட்டமா யைம்பத் தொன்று திறமுடன் வயது சாற்றே. (40)

மனைவிய ரொன்றே யாகும் மங்கையா லதிக பாக்யம்
அனையவ ளாலே சேரும் அந்தணர் பகையுண் டாகும்
வினையுட னிருப்பா னாகும் விதிக்கலாம் மங்கை மோகன்
அனையவன் பின்னோன் நாசம் அறிவித்தார் கணித நூலோர். (41)

வேறு.

அட்டமா திபனும் உயிர்க்குளோன் றானும் அருணன்வீ டதனிலே சேரத், திட்டமா யஞ்சோன் கரியுமே புந்தி தினகரன் றானுமே யாகச், சட்டமா யுயிரிற் றரித்திட அஞ்சிற் சந்திரன் மந்திரிபார்வை, திட்டமா யொழிக்குங் கணிதநூல் விதியாற் செப்பினா ரெழுபது வயதில். (42)

வேறு.

கரியவன் குருவீ டேகக் கலைமறை பிலமா வானால்
வருமெட்டோ னுயிர்க்கு ளோனும் வருஞ்சுபர் வீடா னாலுந்
தருமுயிர்க் கஞ்சோன் றானுஞ் சற்குரு புகர்மா லானால்
பெருமறு பதின்மே லேழாய்ப் பேணிடும் வயதென் றோதே. (43)

ஓதுயிர் தனிலே கேது உயிர்க்குளோன் றனக்குப் பத்திற்
சேதமாம் வெள்ளி சேயுஞ் சேர்ந்திடி லாயு லொட்டு
நீதமா யறுப தாகும் நிச்சய முரைத்தார் மேலோர்
வேதமாய்க் கணித நூலால் விதித்தனர் பெரியோர் மாதே. (44)

வேறு.

அட்டமா திபனும் அருணனும் புகரும் அந்தணன் வீட்டினி லிருக்கத், திட்டமா யுயிரோன் கேந்திர மாகத் திறமுடன் அஞ்சினுக்குடையோன், சட்டமாய் மந்த னில்லமே சேர்ந்தாற் சாற்றலா மவனுட வயது, திட்டமாய் நடக்கும் முப்பது ரெட்டி யிரண்டினிற் றொலையுமே தேகம். (45)

தொலைந்திடுந் தேகங் கணிதநூல் விதியாற் றோன்றிய சேயவன் றனக்கு, அலைந்திடுங் கரிமால் புகர்மறைந் திடவே அந்தவீ டதிபனும் மாந்தி, குலைந்துயிர் தனக்கு மறைந்திடச் சுபமாய்க் குறுகிட முன்தொகை வயதிற், றொலைந்திடும் நாலே ழஞ்சுடன் வயது துஞ்சிடுங் கணிதநூல் விதியால். (46)

அட்டமா திபனும் அருக்கனும் புகரும் அஞ்சினோன் றானு மொன் றாகித், திட்டமா யுயிர்க்கு அஞ்சுவொன் பதினிற் சேர்ந்திடச் சுபர்கள்வீ டாகிச், சட்டமா யுயிரோன் காரியோ டேகிச் சார்ந்திட மூன்றுமா றெட்டிற், றிட்டமாய் வயது ஐம்பத்தெட் டேழாய்ச் செப்பினார் சாதகன் றனக்கு. (47)

சாதகன் றனக்குக் கணிதநூல் விதியாற் சாற்றினார் மேலவர் மொழியால், வேதமீ ரஞ்சோன் பாவராய்த் தோன்றி விளங்கிட வொன்றுநா லேழாய்ப், போதமுன் னுரைத்த அறுபதஞ் சதிலே பொன்றிடும் யேழென வுரையே, நீதமாய் வயது வெகுதிற மாக நிகழ்த்தினர் கணிதநூல் விதியால். (48)

விதியுட னுயிர்க்கு வரும்பிணி நாசம் விதித்தனர் கணிதநூ லாய்ந்தோர், சதியுடன் வயது முப்பத்தொன் றதிலே சாற்றினா ராவுதத் துண்டாம், விதியுடன் தத்து நாசமென் றுரைக்க விதித்தனர் மேலவர் மொழியாற், பதிதனில் வந்த சாதகன் திறமாய்ப் பகர்ந்தனர் குடும்பயோக் கியமாம். (49)

குடும்பயோக் கியமாய்ப் பிறந்திடுஞ் சேய்க்குக் குருவுபின் கொடியகோள் வருமால், வடுவுநோய் காட்டுஞ் சூரியன் திசையில் வந்திடுஞ் சாதகன் வருத்தம், விடுமென வுரைத்தா ரிரவிநாட் பாதி விரைவுடன் போமென வகுத்தார், முடுகிடும் இறைவன் கேதுடன் வந்தால் முத்திடுங் கெடுவித ரோகம். (50)

வேறு.

கரியவன் செய்வீ டேகக் கலைமறை பிலமா வானால்
வருமெட்டோ னுயிர்க்கோ டானும் மறைந்திடப் பவர்வீ டாகத்
தருமுயிர்க் கஞ்சோன் றானுஞ் சார்ந்திட மறைபா தானாற்
சரியுட னோராண் டுக்குள் சாய்ந்திடுஞ் சிசுவென் றோதே. (51)

மதிமக னுயிரோ னாகி வளருகேந் திரத்தி லேற
விதியுடன் காரி சுங்கன் வெய்யவன் மறைவ தாகச்
சதியுடன் பாவ ரோடு சற்குரு மறையா தாகில்
பதிதனில் வயதி ரண்டாய்ப் பகர்ந்தனர் கணித மாய்ந்தோர். (52)

வேறு.

காரிசெய் மாலும் அட்டமா திபனுங் கருதுகேந் திரந்தனில் வருமால், கூருயிர்க் கோளன் கொடியகோ ளுடனே குருகிட

மால்மதி வீடாய்ச், சீருடன் சேய்க்கு வயதறு பதுவாய்ச் செப்பினார் விதிப்படி கணிதங், காரிமால் கருமத் தோன்மறைந் திடுமால் கருதினர் வயதுமைம் பதுவாம். (53)

பதியுமே வயது உரைத்திடுஞ் சேய்க்குப் பகர்ந்தனர் பூமி பாக்கியங்கள், சதியுடன் சமனாய்த் தோன்றிடும் பலனைச் சாற்றினார் விதிப்படி கணிதம், விதியுடன் மறையோன் திசைதனிற் பூமி விளங்கிடும் அதிகக்ஷேத் திரமாய், பதிநிதி வுயர்ச்சி யுரைத்தனர் மறைநாள் பகர்ந்தனர் சாதகன் பலனை. (54)

வேறு.

மதிமகன் பரிபாம் போடு வளருகேந் திரத்தி லேறச்
சதிருட னுயிரோன் நீசஞ் சார்ந்திடச் சுபர்க ளோடு
விதியுட னுயிரிற் பொன்னன் விளங்கிடக் காரி நீசம்
பதிதனி லறுபத் தஞ்சாய்ப் பகர்ந்தனர் வயதென் றோதே. (55)

ஓதிடுங் கரிமால் நாளில் உயர்வுடன் சமனும் யோகம்
வேதமாய்ச் சகட மென்று விதித்தனர் கணித நூலோர்
போதவே கரிநாள் மட்டும் புகழ்பெற வளரும் யோகம்
நீதமாய் மாலோன் நாளில் நேர்ந்திடு முயற்சி மேலாம். (56)

மேலவர் மொழியால் மாலோன் விளங்கிய திசையிற் பொன்னன்
சாலவே நாளில் யோகஞ் சார்ந்திடும் அரசர் கோபம்
நீலன்வந் துற்ற போது நேர்ந்திடு முயற்சி மேலாம்
மாலவன் திசைவிட் டேகி வருங்கொடி திசைநாள் வந்தால். (57)

வந்திடுங் கேது நாளில் வகுத்தனர் பூமி செல்வஞ்
சிந்தையாய்ச் சிவிகை யோகஞ் சேர்ந்திடுங் கொடிநாள் மட்டுஞ்
சுந்தரத் துடனே வாழ்வன் சொல்லினார் கணித நூலால்
விந்தையாய்ப் புகர்நாள் வந்தால் விதித்தனர் சமனும் யோகம். (58)

விதியுடன் சமனும் யோகம் விதித்தனர் பிறக்குஞ் சேய்க்கு
சதியுடன் கொடியோன் றன்னைச் சதிருடன் சேய்நோக் குற்றால்
பதிநிதி வுயர்ச்சி செல்வம் பாழ்படுங் கொடிநாள் மட்டும்
மதிமகன் திசைநாட் போல வகுத்தனர் கணித நூலால். (59)

மதிமகன் காரி யோடு வளருகேந் திரத்தி லேறச்
சதியுடன் அதனிற் பாவர் தரித்திட அட்ட மத்தோன்
விதியுட னுயிர்க்கு ஆறில் விளங்கிடத் தனிப்பா னாகிற்
பதிதனின் ஐம்பத் தாறாய்ப் பகர்ந்தனர் வயதென் றோதே. (60)

ஓதிடுஞ் சேய்க்கு யோகம் உரைத்தனர் சமனும் பூமி
வேதமாய் வருமென் றோதி விதித்தனர் கணித நூலோர்
ஓதிடும் பிதிர்த்தா னத்தி லுயர்வுடன் புகர்பாம் பானால்
சாதகன் பிதாவூர் விட்டுச் சார்ந்திடுந் தெத்தென் றோதே. (61)

மந்தனும் மீரா றுக வக்கிரன் புகர்வீ டாகச்
சந்திரன் யெட்டி னோனுஞ் சாரிட மறையா தாகில்
வந்துயிர்க் கோளன் றானும் வருமிடம் மறைவ தானால்
சிந்தையா யைம்பத் தஞ்சாய்ச் செப்பிடும் வயதென் றோதே. (62)

ஓதுயிர் தனக்குப் பத்தி லுயர்வுடன் கடுங்கோ ளேற
வேதமாய் அக்கோள் தானும் விளங்கிடப் பவர்க ளோடு
போதவே பவர்வீ டுற்றுற் பொன்றிடும் ஒன்ப தாக
நீதமாய் வயதென் றோதி நிகழ்த்தினார் கணித மாய்ந்தோர். (63)

வேறு.

அட்டமத்துக் குடையோனும் உயிர்க்குள்ளோனும்
அஞ்சிரண்டுக் குடையோனும் ஆறினோனுங்
திட்டமுடன் பத்தோனு மீராறோனுஞ்
சிறப்புடனே முதுமகனும் பிலவானானால்
சட்டதமாய்க் கேந்திரங்கள் திரிகோணத்திற்
சார்ந்திடவே யிருப்பதினால் வயதுநூறு
திட்டமுடன் யிருபதுமே செலுத்தவல்லன்
திறமுடனே யிவர்களிலே பிலத்தைப்பாரே. (64)

அட்டமத்தோ னுயிர்க்குள்ளோன் பகைநீசங்கள்
அவரில்லந் தீக்கோட்க ளிருப்பதானால்
திட்டமுடன் அவன்வயது உரைத்தார்மேலோர்
திறமுடனே முன்னுரைத்த வயதிற்பாதி

சட்டமுடன் நடக்குமென வுரைக்கலாகுஞ்
சகலநூ லறிந்தவர்கள் மொழியென்றுர்கள்
திட்டமுடன் யீரஞ்சோன் கரியன்றுனுந்
திறமுடனே யிவர்களிலே பிலத்தைப்பாரே. (65)

வேறு.

கரியவன் ஆட்சி உச்சம தாகக் கருமத்தோன் குருபுகர் மாலாய், வருமெட்டுக் குடையோ னுயிர்க்குளோனிரவி வளருகேந் திரத்தினி லிருந்தால், அறுபது பத்து அஞ்சுநா லதனி லழிவிலா திருப்பதென் றுரைத்தார், வருமுயிர் மறைந்தால் மதித்தனர் வயது மாய்ந்திடும் முப்பதோன் பதுவே. (66)

கரியவன் பெட்டிற் புகருடன் குளிகன் கண்ணுடைத் ததிபனுமாக, வருமெட்டுக் குடையோ னுயிர்க்குளோன் றூனும் வளருகேந் திரத்திலே யிருந்தால், தருமுயிர்க் கஞ்சோன் அருக்கன்மாலானுல் தரணியில் வருமுயிர் சேய்க்கு, வெருவித மான அறுபதுவொன்றில் விதித்தனர் கணிதநூ லாய்ந்தோர். (67)

வேறு.

அட்டமத்தோ னீராறேன் அஞ்சோன்வெய்யோன்
ஆறஞ்சிற் பிலமானு லறிந்தோர்மேலோர்
திட்டமுட னுயிரோனுந் திரிகோணத்திற்
றிங்களுடன் அரவமதி லிருப்பாராகில்
நிட்டைபுரி மதிமகனும் உயிரோனுனல்
நிறமுடனே அவன்வயது தெரிந்தார்மேலோர்
சட்டமதா யுயிர்சாற்ற மொழியென்றேது
தரணிதனில் அறுபதுக்குள் தரித்திடாதே. (68)

வேறு.

கரியவன் புகர்வீ டேகக் கலமறை மறையா தாகில்
வருமெட்டோ னீரா றேனும் மந்தன்வீ டதனிற் சேரத்
தருமுயிர் சுபரே யாகச் சாரிடம் பகைகட் பானுல்
பெருவய துரைத்தார் மேலோர் பேணிடு மெழுபத் தஞ்சே. (69)

எழுபது அஞ்சு சாற்ற யிறையவன் மறைவ தானுல்
பழுதுடன் அதன்கீழ் பத்து பகரலாங் கணித நூலால்

விழுதுமென் றுரைத்தார் மேலோர் விதிமுறைப் படியேசொன்னர்
பழுதிலா திருக்குந் தேகம் பார்தனி லறுபத் தஞ்சே (70)

வேறு.

மதிவீட்டில் மதியிருக்கக் கேந்திரத்திற் பொன்னன்
வரவவற்கு நாலேழி லொன்றினிலே சுங்கன்
ததியாக அவர்க்கிரண்டிற் றரித்திடவே பூமன்
சனிகுளிகன் றன்வீட்டிற் சார்ந்துமவ ரிருக்க
விதிமுறையா னுயிர்க்கிரண்டிற் சூரியன்மா லாக
விளங்கிடவே மதிமகனுந் தன்வீடே யானுற்
கெதிபெறவே தரணிதனி லுதித்திடுநாள் முதலாங்
கேசரியாம் யோகமெனத் தெரிந்துரைத்தார் மேலோர். (71)

வருநிதிகள் புகழுடையோன் குடும்பவழி யோகன்
வரவவற்குப் பெருநிதிகள் வரவரவே வருமால்
கருவழியாற் றிசையாள்வன் வேந்தர்குண சாலி
கரிபரிகள் வெகுபாக்யம் நிகரில்பெரு வாழ்வோன்
தருமுயிரோன் கனசாலி யிறக்குநாள் வரைக்குந்
தனயோகன் நிதிக்குடையன் தனங்களிடுங் கையன்
பெருவிதமா யோகமென வுரைத்தார்கள் மேலோர்
பேணிடுவா யெண்பதுநால் பேசிடுமே வயது. (72)

சதியாக அட்டமத்தோன் புகருடனே கூடித்
தரித்திடவே அவர்க்காறு சற்குருவீ டானுல்
விதியாக உயிர்க்குள்ளோன் கேந்திரங்க ளுச்சம்
விளங்கிடவே பிலமாகச் சுபரோடே வுதிக்க
மதிகுருவுங் கேந்திரங்கள் திரிகோணம் வருமால்
வருமெட்டிற் நீக்கோள்கள் மதிமகன்வீ டானுற்
கதிபெறவே உதித்திடுவான் மரணமது வரைக்குங்
கணிதமதால் யெண்பதுநால் வயதுபில மாமே. (73)

பிலமாக வயதுரைத்தார் பெரியோர்கள் மொழியால்
பெருவிதமால் உயிர்க்கதிபன் பிலத்தப்பாய்த் தனிக்கப்
பலவிதமாய்க் கேந்திரங்க ளுச்சமிலா திருக்கப்
பார்க்கவன்மால் பிறைவீடாற் பகர்ந்திடவே யிருந்தால்

கலவிதமாய் முன்னுரைத்த வெண்பதுநால் தனிலே
கழியுமெனப் பதினான்கிலொழியுமென வுரைத்தார்
பிலமுடனே அட்டமத்தோன் பத்தோனும் மறைந்தாற்
பேணிடுமே அதிற்பாதி பெரியவர்கள் மொழியால். (74)

விதியாக அட்டமத்தோன் கேந்த்ரதிரி கோணம்
விளங்கிடவே சுபரோடே மறையாமற் றனிக்கச்
சதியாக அவற்கிரண்டு சற்குருவீ டானால்
தனிப்பாவ ரதிற்சேரச் சற்குருமால் மறைய
மதியோடு உயிர்நாதன் கேந்திரத்தில் வருமால்
வருஞ்சேய்க்குத் தரணிதனில் வயதுரைத்தார் மேலோர்
அதிவிதியால் மரணமது தொலையுமென வுரைத்தார்
ஐம்பதுநால் ஒன்றுதனி லதிற்போகுந் தேகம். (75)

அட்டமத்தோன் மறைந்துபகை நீசமொடு சேர
அதிற்பாவ ருடன்சேர்ந்து சுபரோடே உதிக்க
நிட்டைபுரி அருணனுயிர் பாவருடன் சேர்ந்து
நின்றிடவே திங்கள்திரி கோணமதில் வருமால்
திட்டமதாய்க் காரியுந்தான் நீசபகை யாகிச்
சேரிடமே தீக்கோட்க ளில்லமதா யிருந்தால்
எட்டிரண்டு வயதுரைத்தார் கணிதமெனும் விதியால்
இயல்புடனே தெரிந்தவிதம் மொழியெனவே பெரியோர்.

வேறு.

அருக்கனும் புகர்வீ டேக அருணனு மதனிற் சேர
இருக்கும்வீ டதிப னால் இல்லமே யிருப்ப தாகச்
சுருக்கமாய்க் கரியு மாந்தி துணிவுடன் அதனிற் சேர்ந்தால்
இருக்கும்நா ளுரைத்தார் மேலோர் யிசைவுடன் அறுபத்தொன்று

குருவுமே மால்வீ டாகக் கொடியவன் குருவீ டேக
வருமுயிர் தனிலே மந்தன் வளர்பகை யிருப்ப தாகத்
தருவுயிர்க் கஞ்சோன் றானுஞ் சந்திரன் அருண னானால்
கருதினர் வயது நாற்பத் தஞ்சுமே கருத லாகும். (78)

வேறு.

அட்டமா திபனு மஞ்சினோ னொன்றாய் அமர்ந்திட அஞ்சுநா
னுயிராய்த், திட்டமா யுயிரோன் காரிசேய் சுபர்கள் சேரிடம்
யில்லமொன் றானாற், சட்டமா யுதிக்குஞ் சாதகன் வயதைச் சாற்
றினா ரறுபதொன் றேழாய், அட்டமந் தனிலே கேதுசூ ரியனா
லறைந்தனர் ஐம்பதொன் றாறே. (79)

ஆறுடன் வயது ஐம்பதொன் றாக அறைந்தனர் சாதகன்
றனக்குச், சீருடன் கரிமால் திசைதனிற் சமனாய்ச் சேர்ந்திடும்
அதிகபாக் கியங்கள், சாருயிர் தனக்கு அஞ்சினோன் திசைமுன்
தனச்செல வுடன் மனக் கிலேசம், கூறினர் கணிதர் மால்திசை
பாதி குறித்தன ருயர்ச்சிபாக் கியங்கள். (80)

அட்டமா திபனுங் கேதுட னுயிரோன் அருணனும் அஞ்சி
னில் வருகத், திட்டமா யஞ்சோன் காரியோ டேகிச் சேர்ந்திடத்
திங்களின் வீடால், சட்டமா யுதிக்குஞ் சேயுட வயது சாற்றினார்
அறுபதொன் றாகத், திட்டமா யிருக்குங் கணிதநூல் விதியாற்
றிறமுடன் சாதகன் றனக்கே. (81)

சாதகன் றனக்கு வயதுமிப் படியே சாற்றினார் கணிதநூல்
விதியால், ஓதிடு முயிர்க்குப் பத்தின்கோள் நீசம் உயர்வுடன்
சுபமிலா திருக்கில், வேதமாய் வயது அறுபத்தொன் றதனில்
விதித்தனர் பத்துமூன் றொழியும், நீதமா யுரைக்கக் கணிதநூல்
விதியால் நிச்சய மாமென வுரையே. (82)

உரையெனக் கணிதஞ் சாதகன் றனக்கு உயர்வுடன் புததிசை
யதனில், விரைவுடன் சமனாய் முன்னுரை பாதி விளங்கிடுஞ்
செல்வமென் றுரையாய், குறைவிலா திருக்கும் பாதியே மறைந்
தாற் குறித்தனர் பூமிக்ஷேத் திரங்கள், விரைவுடன் வருமென்
றோதினர் பிலமாய் விதித்தனர் சாதகன் பலனே. (83)

அட்டமா திபனுங் காரியு மோர்வீ டமர்ந்திடப் பவமிலா
திருக்கில், திட்டமா யுயிரோன் காரிவீ டதனிற் சேர்ந்திட ஆரல்
சூ ரியனால், சட்டமா யிறைவன் சொந்தவீ டதனிற் சார்ந்திடப்

பிறந்தசா தகர்க்குத், திட்டமாய் வயது ஐம்பது நாலாய்ச் செப்
பினர் தரணியில் மாதே. (84)

மாதவர் மொழியாற் பிறந்திடுஞ் சேய்க்கு வகுத்தனர் நூல்
விதிப் படியால், ஓதின ருயிரிற் கொடியவன் மதியும் உறைந்தி
டப் பத்துநா லொழியும், நீதமாய் வயது வெகுதிற மாக நிச்சய
மாமென வுரையே, வேதமாய்ப் பாம்பு குருவுட னுதித்தால்
விதித்தனர் மூன்றிரண் டொழியும். (85)

வேறு.

மதிமகன் புகர்பா னோடு மறைந்திடச் சுபமி லாதால்
சதியுட னுயிர்க்கோள் நீசஞ் சார்ந்திடப் பாவ ரோடு
விதியுட னெட்டோன் காரி விளங்கிடப் பிலமா வானால்
பதிதனிற் புகர்மால் காரி பரிதொகை வயதென் றோதே. (86)

ஓதிடுங் கரியன் றானு முபர்வுடன் மறைவ தானால்
வேதமுன் னுரையால் நாசம் விதித்தன ரிருபத் தொன்றில்
நீதமா யுய்யு மென்று நிச்சய முரைத்தார் மேலோர்
ஓதிடும் உயிர்க்கு யெட்டி லுயர்வுடன் பவர்வந் துற்றால். (87)

வந்திடுஞ் சேய்க்கு ஆயுள் வகுத்தனர் குருநாள் ரெட்டி
தந்திடு மென்று மேலோர் சாற்றினர் கணித நூலால்
முந்திடு முயிர்க்குப் பத்தில் முயன்றிடக் கொடியோன் வந்தால்
மைந்தனுக் காயுள் வேதன் வகுத்தது மிருபத் தெட்டாய். (88)

வேறு.

அட்டமா திபனு மருணனும் புகரும் அமர்ந்திடச் சேய்புகர்
வீடால், திட்டமா யுயிரோ னுயிர்க்குமுன் பின்னிற் சேர்ந்திடப்
பாவர்நோக் கிடுமால், சட்டமா யுதிக்குஞ் சாதகன் வயது சாற்
றினா ரைம்பதொன் றாக, அட்டமா திபனு மருணனு மறைய
அறைந்தனர் முன்னுரை பாதி. (89)

வேறு.

கரியவன் நீச மாகக் கலைமறை பாவ ரோடே
வருமெட்டோன் நீச மாகி வக்கிர னோடு சேர்ந்தால்
தருமுயிர் நாசங் காட்டுஞ் சகலநூ லாய்ந்து சொன்னார்
இருபது ரெண்டுக் குள்ளாய் யாக்கையே தொலையு மென்றார். (90)

அஞ்சினுக் குடையோ னோடு அட்டமா திபனுஞ் சேர
விஞ்சையா யுயிரிற் பாவர் விளங்கிட யிருப்ப தானால்
தஞ்சமாய் முப்பத் தொன்றிற் சார்ந்திடும் விஷத்தாற் றத்து
மஞ்சுபோ லொழிய லாகும் மன்னவன் பிலமாய் வாழ்வோன். (91)

வேறு.

சதியாக அட்டமத்தோ னுயிரோ னைச் சாருமிடஞ் சுபர்வீ
டாய்த் தனிப்பா னாகில், விதியாக மதிமகனுங் குருவு மொன்
றாய் விளங்குமிடஞ் சசிவீடாய்த் தரிக்க அக்கோள், கதியாகக்
கேந்திரங்க ளுச்ச மாட்சி கணிதநட்புச் சுபர்வீடா யிருப்ப தாகச்,
சதியாகக் காரியுந்தா னுயிரிற் சேர்ந்தால் தரணிதனி லவன்வயது
யெண்பத் தொன்றாம். (92)

வேறு.

கரியவனும் உயிர்தனக்குப் பதினொன்றாகக்
கதிருடனே மாந்தியொடு குருதிசேர்ந்தாற்
பரியவன்தா னில்லமதா யிருப்பதாகப்
பகரவே முன்னுரைத்த வயதுநாசம்
முரியுமிரு பத்தொன்று மொழிந்தார்மேலோர்
முதுமகனு மாரல்பரி யோடுசேர்ந்தால்
சரியுடனே அறுபதனில் ஒழியுமஞ்சு
சாற்றினார் கணிதவிதிப் படியென்றோதே. (93)

ஓதுமெனக் காரியொடு குருதிசேர்ந்தால்
உள்ளபடி வயதுஐம்பத் தொன்றாமென்றார்
நீதியுடன் காரியுந்தான் தனிப்பானாகில்
நிகழ்த்தினர்க ளவன்வயது நாற்பத்தொன்று
சேதமுட னீராறாய்க் காரியோடு
தினகரன்மால் புகருடனே யிருப்பதானால்
வேதமா யவன்வயது நாற்பத்தொன்று
விளங்குமெனத் தெரிந்துரைத்தார் கணிதநூலால் (94)

வேறு.

மதிமகன் பரிதி உயிரின்கோ ளுடனே வந்திடப் புகரின்வீ
டாகி, நிதிதனக் கதிபன் சேயுடன் கூடி நின்றிட அட்டமந் தன்
னில், சதியுட னுயிர்க்குப் பத்தினில் மாந்தி தனித்திட மதியுமே
பார்க்கிற், கெதிபெற வயது அரவுபொன் மந்தன் கேதுவின்
புகர்தொகை சேரே. (95)

அட்டமா திபனு மருணனு மருக்கன் ஆரல்வீ டதனிலே நிற்கத், திட்டமா யுயிரோன் நீசமாய்த் தோன்றிச் சேரிலத் தானத்துக் கதிபன், மட்டவிழ் மனைவி காரகன் தானும் வந்திடத் தனித்திடு மானல், திட்டமா யுதிக்குஞ் சேயவன் றனக்குத் திற முட னெழுபதோர் வயது. (96)

வேறு.

மதிமக னுயிரோ னாகி வளருகேந் திரமாய்த் தோன்ற
சதியுடன் சனியு மேழிற் றரித்திடச் சுபர்வீ டாக
விதியுட னட்ட மத்தோன் விளங்கிய உயிர்க்கி ரண்டில்
சதிதனித் திடினு மானாற் தாரணியி லுதிக்குஞ் சேய்க்கு. (97)

வருவது விபரஞ் சொல்வேன் வகுத்தனர் கணித நூலால்
அறுபது பதின்மூன் றாக அவன்வய துரைத்தார் மேலோர்
கருதியே அட்ட மத்துக் கதிபனே டரவஞ் சேர்ந்தால்
வருவது மூன்று நாசம் வகுத்தன ரெழுப தாமே. (98)

எழுபதென் றுரைத்தார் மேலோர் யெட்டினிற் கொடியோன் போனால்
பழுதென வுரைத்தார் பத்துப் பதிதனிற் பிறக்குஞ் சேய்க்கு
வழுவிலா திருப்பா னாகும் மதித்தனர் மேலோர் தாமும்
முழுமுத லெவர்க்கு மேலாய் மொழிதவ றாத மைந்தன். (99)

வேறு.

அட்டமதிற் குருவிருக்கக் கேந்திரத்திற் றிங்கள்
அருணனொடு சுங்கனுந்தா னமர்ந்திடவே பத்தில்
திட்டமதா யுயிரோனுந் தன்வீடே யாகச்
சேர்ந்தவற்கு யீராறிற் சேய்பரிதி யானாற்
சட்டமுடன் காரியுந்தான் தேள்தனிலே தனிக்கச்
சதிருடனே தரணிதனிற் பிறந்துவருஞ் சேய்க்குத்
திட்டமுடன் வயதுரைத்தார் கணிதவிதிப் படியே
தெளிந்தாய்ந்த பெரியோர்கள் திறமறுபத் தெட்டே. (100)

வேறு.

மிதுனலக் கினமே தோன்ற விளங்கிட அத்தா னத்தோர்
சதியுட னருக்கன் சுங்கன் சனிமதி மாந்தி யோடு
விதியுடன் காரி யில்லம் விளங்கிட உயிரிற் பாவர்
அதிகமா யிருப்ப தானால் அவன்வய துரைத்தார் மேலோர். (101)

மேலவர் மொழிதான் யார்க்கும் விளங்கிடக் கணித நூலால்
சாலவே அவன்றன் தேகம் சாற்றினார் ஐம்பத் தைந்தில்
நூலறி விதமாய்ப் போகும் நோயினா லவன்றன் யாக்கை
கோலமில் லாமல் வாழ்வன் குடும்பத்திற் சசட வாழ்வோன். (102)

மதிமகன் தன்வீ டாக மந்திரி சுங்கன் வெய்யோன்
சதியுட னுயிர்க்குப் பத்திற் றரித்திட வதனை மைந்தன்
விதியுடன் நோக்க வெட்டோன் விளங்கிட யீரா றானால்
பதிதனிற் பிறக்குஞ் சேய்க்குப் பகர்ந்தன ரெழுபத் தஞ்சு. (103)

குருதியும் பாவர் வீட்டிற் குறுகிட வத்தா னத்தோன்
பரிதிவீ டதனிற் சேரப் பாவர்கள் முன்பின் றோன்ற
வருமுயிர் தனிலே பொன்னன் வந்திடச் சுபர்வீ டாகக்
கருதியே யிருப்பா னாகிற் கருத்துடன் வயது யெட்டே. (104)

வேறு.

அட்டமா திபனு மாலுடன் புகரும் ஆரல்வீ டதனிலே சேரத், திட்டமா யுயிரோன் நீசமா யிருக்கச் சேரிடந் தானத்துக் கதிபன், மட்டவிழ் களத்ர காரகத் தானும் வந்திட மிருப்பதே யானால், சட்டமாய்ச் செனிக்குஞ் சேயவன் றனக்குத் தாரணியிலறு பதோர் வயது. (105)

வேறு.

அட்டமா திபனும் பொன்னும் ஆறனுஞ் கசியு மொன்றாய்த்
திட்டமா யுயிர்க்கு ஆறிற் சேர்ந்திடப் பாவர் வீடால்
சட்டமாய்க் கரியுங் கேதுஞ் சாரிடஞ் சுபர்வீ டானால்
திட்டமா யுதிக்குஞ் சேய்க்குத் திரமுடன் அறுபத்தொன்று. (106)

கரியவன் புகர்வீ டேகக் கலைமறை சுங்கன் கேது
வருமுயிர் தனிலே சேர வருமெட்டுக் குடையோன் றானுந்
தருமுயிர் தனக்கு மூன்றில் தனித்திட வருவ தாகில்
சுருதியா யுதிக்குஞ் சேய்க்குத் துணிவுட னறுபத் தெட்டே. (107)

வேறு.

அட்டமா திபனு மருணனு மருக்கன் ஆரல்வீ டதனிலே சேரத், திட்டமா யுயிரோன் ஆட்சியாய்த் தோன்றத் திறமுடன் வெள்ளியுங் கேதுஞ், சட்டமா யுயிர்க்கு ஆறினில் மறையச் சனியுமே வெள்ளிவீ டானால், திட்டமா யுதிக்குஞ் சேயவன் றனக்குத் திறமுடன் அறுபதோ ரெட்டு. (108)

வேறு.

கரியவன் சேய்வீ டேகக் கணக்கனும் புகரு மாகப்
பரியவன் தனக்கு ரெண்டிற் பகர்ந்திட வுயிர்க்கு நாலில்
விரிகுழ லட்ட மத்தோன் மேவிட அரவ மோடு
சரியுடன் மறைவ தானாற் றரணியி லுதிக்குஞ் சேய்க்கு. (109)

உதித்திடுஞ் சேய்க்குத் தேகம் உயர்வுடன் யெழுபத் தஞ்சாம்
விதித்தனர் வயதென் றோதி விளம்பினர் கணித நூலால்
மதித்திட அட்ட மத்தில் வக்கிரன் வருவ தானால்
கொதித்திடும் வயது நாசங் குறுகிடும் பதின்மூன் றாமே. (110)

பத்துமூன் றெழியு *மாதே பதிதனிற் பிறக்குஞ் சேய்க்கு
சத்தியா யறுபத் தொன்று சதிருடன் ஒன்று சேரு
மத்திபத் துடனே பத்தில் மதியொடு குளிகன் சேர்ந்தால்
உத்திடு மொன்று நாசம் உயர்வுடன் அறுபத் தொன்று. (111)

அறுபது ஒன்றே யாக அறிவித்தார் கணித நூலோர்
மருவுடன் காரி யோடு மந்திரி கொடியன் சேர்ந்தால்
பருகிடும் அதன்கீழ் பத்து பகர்ந்தனர் தரணி மீதே
கருவுடன் உயிர்நீ ராலே கருதினர் மாயு மாதே. (112)

அட்டமந் தன்னிற் சுங்கன் அமர்ந்திட வதனிற் பாம்பு
திட்டமா யதற்கு நாதன் சேரிடந் தன்வீ டாகச்
சட்டமாய்க் கரியும் பொன்னன் தன்மனை சேர்வதாகத்
திட்டமா யுயிரோன் றானுஞ் சேரிடஞ் சுபரோ டானால். (113)

திட்டமா யுதிக்குஞ் சேய்க்குத் திறமுடன் வயது சாற்ற
மட்டவிழ் மனைவி யாலே மாய்ந்திடு மேலோர் வாய்மை
சட்டமாய் அருண னுண்டிற் சாய்ந்திடுந் திசைமுன் பாதி
திட்டமாய் மரண மாவான் செப்பினா ரறுபத் தொன்றே. (114)

மதிமகன் புகர்வீ டேக மந்தனுஞ் சசியில் நிற்கச்
சதியுடன் மதிசே யோடு சாரிடஞ் சனிவீ டாக

---

* மாதே என்பது கன்னிலக்கின்மாக எட்டிற் செவ்வாய் நிற்க.

விதியுட னுயிர்க்கு நாதன் வெய்யவன் மாந்தி யோடு
அதிகமா யுயிர்க்கீ ராறில் அமர்ந்திட வருவதானால். (115)

வருவது மொழிந்தார் மேலோர் வயதுதன் விபரஞ் சொல்வேன்
அறுபது யெட்டே யாகும் அறிவித்தார் கணித நூலோர்
தருதுடன் கருமந் தன்னிற் றரித்திடப் புகர்பாம் பானால்
குருகிடு மதன்கீழ் பத்து குறித்தனர் தரணி மாதே. (116)

அட்டமா திபனும் பொன்னும் அமர்ந்திடப் பாவர் வீடால்
திட்டமாய் லக்கி னேசன் தினகரன் அருண னோடு
சட்டமா யுயிர்க்கு அஞ்சில் தரித்திடச் சனியு முச்சந்
திட்டமாய் நடக்குஞ் சேய்க்குத் திறமுடன் வயது சாற்றே. (117)

திறமுடன் வயது சாற்றச் செப்பினார் கணித நூலால்
வரமுட னெழுபத் தொன்றாய் மதித்தனர் பெரியோர் வாய்மை
விரவுடன் மந்த னோடு விளங்கிய மதியும் பாம்புந்
திறமுடன் வருவ தானாற் சேதமென் றுரைத்தார் பத்து. (118)

வேறு.

அட்டமா திபனும் அருக்கனும் புகரும் அமர்ந்திடப் பாவர்வீ டாகத், திட்டமா யுயிரோன் கேந்திர மாகச் சேர்ந்திடத் தானத்துக் கதிபன், சட்டமாய்க் கரியும் விழிதனில் வந்தாற் றரணியி லுதித்திடுஞ் சேய்க்குத், திட்டமாய் வயது மொழிந்தனர் மேலோர் திறமுடன் அறுபதோ டொன்று. (119)

அட்டமா திபனும் பிறையுடன் புகரும் அமர்ந்திட வுதைய கேந்திரத்தில், திட்டமா யுயிரோன் ஆரல்வீ டதனிற் சேர்ந்திட ஆரலுங் குருவுஞ், சட்டமாய்க் கேது தரித்திடு மானாற் றரணியிற் பிறந்திடுஞ் சேய்க்குத், திட்டமாய் அறுபான் மூன்றுடன் செப்பத் திறமுடன் கணிதநூல் வாய்மை. (120)

கரியவன் உயிரோ னாகியே தனிக்கக் கலைமறை குருதிகே துடனே, துரிதமா யருணன் வீடினிற் சேரத் தோன்றிடும் பாலகன் றனக்கு, விரிகுழல் மாதே உரையுமுன் வயது விசிறிடும் மூன்றாமே விதித்தார், சரியுடன் அறுபான் வயதுதன் வரைக்குந் தந்திடுஞ் செல்வனா மாதே. (121)

மதிமக னுயிரோன் உதயகேந் திரத்தில் வந்திட மாந்தியு மதனில், விதியுடன் காரி பஞ்சமா திபனும் விளங்கிய அம்புலி யுடனே, சதியுட னுயிர்க்கு அஞ்சிரண் டேழிற் றரித்திட யெட்டி னோன் மறைந்தால், பதிதனில் வயது யெழுபது ரெண்டாய்ப் பகர்ந்தனர் சாதகன் றனக்கு. (122)

சாதகன் றனக்கு வயதுமிப் படியே சாற்றினர் கணிதநூ லாய்ந்தோர். வேதமாய்க் காரி தனதுநாளதனில் விதித்தனர் வேடம்வந் துதவும், ஓதினர் பிலமாய்ச் சாஸ்திர விதியால் உரைத் தனர் அதிகபோக் கியமாய், போதவே வருமென் றோதினர் கணி தம் புகட்டினர் மேலவர் மொழியால்.

வேறு.

அட்டமத்தோன் பரிதியுடன் உயிர்க்குமூன்றில்
அமர்ந்திடவே அக்கோளு மறைவிலுச்சந்
திட்டமுடன் உயிர்க்கோளுஞ் சசிவீடேறிச்
சேர்ந்திடவே அக்கோளும் பிருகுங்கேதும்
நட்டமில்லா லக்கினகேந் திரத்திலேக
நளினகுரு தன்வீட்டி லரவஞ்சேரத்
துட்டனிவன் இருபத்தொன் றெட்டிற்கண்டம்
சொல்கடந்தா லவன்வயது ஐம்பத்தொன்றே. (124)

மாதேகேள் வருமுயிரோன் புகரேயாகி
வளருமெட்டோன் மதிக்குநா லதனிலுச்சஞ்
சீதமுடன் காரியுமே மறையோ னோடு
சேர்ந்திடவே யுயிர்தனக்கு யேழிற்றனே
ஓதுமென யுயிர்தனக்குக் கருமநாதன்
உயிர்மதியாய்ச் சுபர்மனையாய் மறைவதானல்
வேதமுடன் மறையோனு ளரவுமந்தன்
விதித்தனரா மிவர்தொகையை வயதென்றோதே. (125)

வேறு.

இரவியும் புதனும் இருந்திட வுயிரில் இறையவன் கேந்திர மேவி சரந்தனிற் புகரோ னட்டமா திபனுய்த் தரித்திடச் சேயுமத் துடனே, விரவுடன் காரி மாந்தியும் பத்தில் விளங்கிட மறையவன் பார்க்கப், பரமுடன் புகர்மால் கரியுடன் தொகைநாள் பாலகன் வயதென மொழியே. (126)

வேறு.

மாலவன் திங்க ளோடு மறைந்திடப் பவர்கள் சேற
பாலொளி சுங்கன் மாந்தி பரிதியு முயிரிற் சேரச்
சாலவே அக்கோள் தானுந் தனித்திடப் பத்திற் றனே
நூலறி விதமாய்ச் சொன்னோம் நூறல அறுபத் தொன்றே. (127)

வேறு.

மதிமகனும் உயிரோனுய்க் கருமனுமே யாகி
வந்திடவே கரிசசியும் புகர்வீட்டி லேகி
விதியுடனே அட்டமத்தோன் மாலுயிரிற் சேர்ந்து
விளங்கியபொன் ரவிகேது புகருடனே கூடிச்
சதிருடனே கேந்திரத்திற் றரித்துமே யிருக்கச்
சாதகர்க்கு வயதுமொரு அறுபதுமே யாகும்
பதியுடனே பாக்கியங்கள் சமபலமாய்ச் சேரும்
பாவையர்க்குப் பிரியமுளன் பண்புடையோன் றனே.

வேறு.

மாதேகேள் வருமுயிரோன் புகரேயாகி
வளருமெட்டோன் மாலுடனே மாந்தியோடு
சீதமுடன் கரியன்மனை யதனிலேகச்
சேருகரி யுச்சம்வரப் பவர்களோடு
ஓதுமென உயிர்தனக்குக் கருமநாதன்
உறையுமிடஞ் சுபர்மனையாய் மறையாதானல்
வேதன்விதிப் படியெனவே வயதுமேலோர்
விதித்தனரைம் பதுநாலு திறமென்றோதே. (129)

வேறு.

அட்டமா திபனுங் கதிரவன் மதியும் அமர்ந்திட வுயிர்க்கு மூன்றினிலே, திட்டமா யுயிரோன் சேயுமே யாகிச் சேர்ந்திடப் பிருகுவீ டதனிற், சட்டமாய்க் காரி குருவுடன் வீட்டிற் றரித்தி டத் தானக்கோள் பார்க்கத், திட்டமாய் வயது மூன்றினிற் றப்பில் திறமுடன் ஐம்பது நாலாம். (130)

மாதவர் மொழியாற் பிறந்திடுஞ் சேய்க்கு வகுத்தனர் பிதிர்க்கு மே தாரம், ஓதினர் மூன்று யுயிர்க்குநா லதனில் உறைந்திடப்

பாவருஞ் சேர்ந்தால், நீதமாய் வயது ஒன்றினில் நாலேழ் நிச்சயம் வந்திடுங் கிலேசம், வேதமாய்ப் பாம்பு நீலன்வீ டதனில் விளங்கிட மூன்றில்ரெண் டொழியும். (131)

வேறு.

பஞ்சமத்தோன் மதியுடனே உயிரோனோடு
பகர்ந்திடவே உயிர்தனக்கு நாலிலேக
விஞ்சையுடன் இரவியுமே அக்கோளோடு
விளங்கிடவே அட்டமத்திற் சேயேநிற்கத்
தஞ்சமுடன் பொன்னவனுங் கேதோடேகித்
தரித்திடவும் பிறைதனக்கு விழியிற்சேர்ந்தால்
கொஞ்சமுடன் வயதுரைப்பேன் சொல்லக்கேளு
கோதையே ஐம்பதுநால் குறையாதென்றே. (132)

குறையாத வயதுசொன்னோ மிப்பாற்கேளு
குணமுடனே அவன்யோகங் குணத்தைச் சொல்வேன்
நிறையாகும் ராகுவுட திசைநாள் வந்தால்
நிச்சயமாய் அரசரபி மானமுண்டாம்
மறையாத முயற்சியொடு மைந்தருண்டாம்
மங்களங்கள் மிகுந்துவரும் வரிசை தங்குந்
துரையாக மரணமட்டும் அதிகபாக்கியஞ்
சொல்லலாங் கணிதவகை தன்னாலாமே. (133)

பஞ்சமத்தோன் குருவுடனே மால்வீடேறிப்
பதிந்திடவு மவர்க்கேழிற் செவ்வாய்காரி
தஞ்சமுட னிருந்திடவே குருவும்பார்க்கத்
தனித்திடவே அட்டமத்தோன் காரிவீட்டில்
விஞ்சையெனும் மாலிரவி உயிர்க்கிரண்டில்
விளங்கிடவும் ராகலவன் தேளில்மாந்தி
மிஞ்சிடவே வருஞ்சேய்க்கு உரைத்தார்மேலோர்
மிகுந்தபலன் ஐம்பதுக்குள் வொன்பான்சேரே. (134)

சேரவே வயதுரைத்தே னப்பாகேளு
சேய்தனக்கு வொன்றிரண்டு மூன்றுமாண்டில்
பார்தனிலே பீடையுடன் அரிட்டஞ்சொல்வேன்
பாதகஞ்சேர் பிதிர்வழியாந் தோஷத்தாலே

கார்மேக வண்ணனிற முடைத்தான்பாதங்
கதிரவனார் தன்பாதங் கருத்திலுன்னி
தாரணியிற் சாந்திசெய்து அரிட்டந் தீர்த்தால்
சாற்றலா மவன்வயது தீர்க்கமென்றார். (135)

வேறு.

மாலவன் சுங்கன் கேது மார்த்தாண்ட னுடனே கூடிச்
சீலமா யுயிர்க்குரெண்டிற் சேய்புகர் வீட்டில் நிற்கக்
கோலமா யுயிரோன் காரி கொடுமைபா மாறிற் சேரத்
தூலமாய் வயது சாற்றச் சொல்லினு ரைம்பத்தேழு. (136)

வேறு.

அட்டமா திபனும் அம்புலி மாலும் ஆனதோர் பிருகுமொன்றா கிச், சட்டமா யுயிர்க்குப் பஞ்சம மதனிற் சார்ந்திடக் குருவின்வீ டானால், மட்டிலாக் காரி மதிக்குமுன் றதனில் மந்தனைச் சேயுநோக் குற்றால், திட்டமாய் வயது உரைத்தனர் மேலோர் செகத்தினி லெழுபதோ டொன்று. (137)

வேறு.

அட்டமத்தோன் குருவாகி யுயிர்க்கஞ்சேகி
யவர்தனக்கு நாலதனில் ரவிமால்சுங்கன்
திட்டமதாய் மதிஉயிரிற் றனித்தேநிற்கச்
சேய்கிரகங் களிற்பொன்னன் மதியைநோக்கச்
சட்டமதாய்க் காரியில்லங் தனிப்பானாகிற்
சாற்றலா மவன்வயது தரணிமீதில்
நட்டமில்லாக் காரியுடன் சுங்கன்மாலும்
நலமான ரவிதொகையும் வயதென்றோதே. (138)

வேறு.

மதிமகனு முயிரோனுய்க் கருமனுமே யாகி
வந்திடவே புகர்வீட்டில் வெய்யவன்பொ னோடு
விதியுடனே காரியுந்தான் பஞ்சமத்தி லாட்சி
விளங்கிடவே அட்டமத்திற் சேயாட்சி யாகில்
சதியுடனே உயிர்க்கிரண்டோன் லக்கினத்தில் நீசஞ்
சார்ந்திடவே கருமமதி லரவே யானாற்
பதிதனிலே பிறந்திடுவன் சேய்திசையி லாகும்
பலித்திடுமா மாவுகுரு கரிமாலிற் போமே. (139)

வேறு.

அட்டமா திபனும் அரவுட னஞ்சி லமர்ந்திட வேழின்கோ ளுடனே, திட்டமா யுயிரோ னாட்சியாய் மறையத் தினகரன் மாலவன் வீடாய்ச், சட்டமாய்க் கருமன் உயிர்க்கிரண் டினிலே தனித்திடக் காரியு மறையில், திட்டமாய்ப் பிறக்குஞ் சாதகன்றனக்குச் செப்பினா ரைம்பத் தைந்தாக. (140)

இடபலக் கினத்தில் மதியுடன் மாந்தி யிணங்கிட வெட்டின்கோ ளுயிரோன், திடமுட னுயிர்க்கு இரண்டினிற் சேரத் திங்கள்வீ டதனிலே கருமன், கடகவீ டதனிற் கதிரவன் புதனுங் கலந்திடப் பிறந்தசா தகர்க்குத், திடமுடன் வயது காரிநாள்வரைக்குஞ் செப்பினார் கணிதநூ லாய்ந்தோர். (141)

மாலவன் புகருங் கருமனு முயிர்க்கு வந்திட லாபமாய்க் குருவும், ஏழினோ னரவும் புகருடன் வீட்டி லிருந்திடக் காரியொன் பதனில், ஏலவே வுயிரோன் காரிவீ டதனி லிருந்துதான் குருவைநோக் குற்றால், பாலகன் வயது இரண்டின்கோள் திசையிற் பார்க்க வன்பொசிப்பினிற் றுஞ்சும். (142)

துஞ்சிடாப் புகரிற் பீடையால் மெலிந்து தோகையர் வழக்கினாற் றனங்கள், மிஞ்சிடச் சிலவாய் வந்துதான் தீர்ந்தால் வேகமாய் காரிநாள் பாதி, தஞ்சமாய் வயது தீர்க்கமா மென்று சாற்றினார் கணிதநூ லாய்ந்தோர், அஞ்சவே குருவில் காரிநா ளதனில் அன்னையர் துஞ்சிடுஞ் சேயில். (143)

பஞ்சம னெட்டோன் பொன்னவ னாகிப் பதிந்திட மதியுடன் பாக்யம், விஞ்சையாம் மதிக்கு அட்டமன் புகரும் விளங்கிடக் காரியோ டாறில், தஞ்சமாயுயிரோன் காரிவீடதனிற் றரித்திட லாபனோடேழாய், அஞ்சவே வரினும் ஆயுளுந்தீர்க்க மறைந்தனர் யெழுபதோ டொன்றாய். (144)

வேறு.

அட்டமத்திற் கேதுநிற்க வக்கோள்தானும்
ஆதித்தன் புகருடனே லாபஞ்சேரத்
திட்டமதாய்க் காரியுந்தா னுயிர்க்குயேழிற்
சேர்ந்திடவே புகர்வீடாய்ச் சேயேபார்க்கச்

சட்டமதா யுயிர்க்கிரண்டோன் குருவாய்த்தானுஞ்
சந்திரன்றன் வீடதனிற் றனிப்பானாகில்
திட்டமதா யவன் வயது செப்பக்கேளு
சேய்புகர்மால் மந்தன்மதி தொகையென்றோதே. (145)

அட்டமத்தோன் கரியாகி யுயிர்க்கீராறில்
அமர்ந்திடவே அக்கோள் தான் ஆறிலேகச்
சட்டமதாய் மாலுயிரோ னாகினாலிற்
றனித்திடவே ஆட்சியுச்சஞ் சாரிற்கர்மன்
நட்டமில்லாக் குருவாகி மாந்தியோடு
நண்ணிடவே சேய்பார்க்க வுச்சமானால்
திட்டமதா யவன்வயது செப்பக்கேளு
சேயரவு மால்குருவுந் திறமென்றார்கள். (146)

மாதேகேள் வருமுயிரோன் புகரேயாகி
வளருமெட்டோன் அக்கோள்தான் மாலோடேழிற்
சீதமுடன் காரியுந்தான் சேய்வீடாகிச்
செனித்திடுஞ்சே யுயிரினுக்குப் பத்திற்செவ்வாய்
ஓதுமென வுயிர்தனக்கு இரண்டில்மூன்றோ
னுதித்திடவே அட்டமத்தை முழுநோக்குற்றால்
வேதனுட திசைதனிலே பிறக்குஞ்சேய்க்கு
விதித்தனர்கள் நாலாண்டு அரிட்டஞ் சொல்லே. (147)

சொல்லுதற்கு நாலின்கோள் கரியாயேழிற்
றோன்றிடவே அவர்தமக்கு மூன்றில்ராகு
வெல்லுதற்கு நவமிமதி யுடனேகூடி
வேதியர்க்கு அட்டமத்தில் விளங்கவெய்யோன்
புல்கிடவே ஆறதனிற் பொன்னன்வீட்டிற்
பொருந்திடவே லக்கினத்தில் மாந்தியானால்
நல்கிடவே குருதிசையில் அரிட்டமாகும்
நாலைந்தோன் திசைமுதலே பிலமாய் வாழ்வன். (148)

வாழுவான் மிதுனநவாங் கிஷந்தனக்கும்
வளருமதி தனக்கிரண்டிற் கரியோன்பொன்னுங்
தேளுடையோன் மால்வீடங் கிஷத்திற்சேரச்
செனித்திடவே பிறந்தபிள்ளை தனக்கேஐந்தில்

கோளுடனே அரவிருக்க முன்னுள்சென்மங்
குணங்களில்லாக் கீழ்சாதி யிவனுமென்று
மீளுதற்குச் சிவனருளைப் பற்றி மீண்டான்
மேவினு லிச்செனனம் விதிக்கச்செய்தார். (149)

விதித்தார்கள் பெரியோர்கள் உலகுதன்னில்
வேதியனுர் குலத்தினிலே பிறக்கச்செய்தார்
மதித்தார்க ளிவன்பகலிற் செனித்ததாலே
மாதாவின் பிதாவுடனே தோஷமாகும்
பதித்தார்கள் முன்னுளின் பயன்களாலே
பகந்தார்க ளின்னுளிற் றேஷந்தீர்த்தால்
கொதித்தார்பின் குழந்தைதனைப் பிலக்கவேண்டி
கோவுடனே நந்தியுட பூசையாலே. (150)

மாதரசே கேளுயிரோன் புகரேயாகி
வளருமெட்டோன் மாந்தியுட னுயிர்க்கஞ்சேகிச்
சீதமுடன் கரியன்மனை யதனிற்சேரச்
சேருகரி புகர்வீட்டில் மதிகேதோடும்
ஓதுமென வுயிர்தனிலே செவ்வாய்நிற்க
ஒளிமதிக்குக் கேந்திரத்திற் குருவேசேர
வேதன்விதிப் படியெனவே வயதுமேலோர்
விதித்தனரா மைம்பதுக்கு ளொன்பான்சேரே. (151)

சேரவே வயதுரைத்தே னின்னங்கேளு
சேயுயிரிற் புகர்வீடாய் நிற்கஅக்கோள்
காரியுடன் வீடதனில் மாந்தியோடு
கருதிடவே குருநோக்கக் கனமாய்நின்றல்
பார்தனிலே அரவினுட திசையிற்பத்தோன்
பனிமதிநாள் வருங்காலம் பகரக்கேளு
சீருடனே மனைவியரு முண்டாம்பின்னும்
சிவனமு முயற்சிகளுஞ் சிறப்பாய்வாழ்வான். (152)

அட்டமா திபனும் புகருடன் குளிகன் அருணன்வீ டதனிலே சேரத், திட்டமா யுயிரோன் காரிவீ டதனிற் றிங்களும் அரவுமே மறையச், சட்டமாய்க் காரி யில்லமாய்ச் சேர்ந்தால் தாணியிற் பிறந்தசா தகர்க்குத், திட்டமாய் வயது ஐம்பத்தெட்டேழிற் சேதமே வொன்பது போகும். (153)

வேறு.

மாதேகேள் வருமுயிரோன் புகரேயாகி
வளருமெட்டோன் மாலுடனே இரவியோடுஞ்
சீதமுடன் மதிக்கஞ்சாய் மால்வீடேகிச்
சேருகரி மாந்தியுட னுயிர்க்குநாலில்
ஓதுமென வுயிர்தனக்குக் கருமநாதன்
உறையுமிடஞ் சுபர்மனையாய் மறைவதானல்
வேதன்விதிப் படியெனவே வயதுமேலோர்
வியாழன்மால் கரிசுங்கன் தொகையைப்பாரே. (154)

மாதேகேள் வருமுயிரோன் புகரேயாகி
வளருமெட்டோன் அக்கோள்தான் மதிக்குலாபம்
கோதாய்கேள் உயிர்தனிலே மதியுமாந்தி
குறுகிடவே அட்டமத்தில் மூன்றேன்றாகும்
நீதமா யுயிர்தனக்கு நாலோன்காரி
நின்றிடவே மதியினுட வீட்டிற்சார்ந்தால்
வேதன்மொழிப் படியெனவே வயதுமேலோர்
வியாழன்மால் காரிசிகி புகரிற்பாதி. (155)

வேறு.

அட்டமா திபனு முயிர்க்குளோன் றூனு மருக்கனுங் கரு மனு மொன்றாய்த், திட்டமா யுயிர்க்கு காரிவீ டதனிற் சேரிட மூன்றிட மாகச், சட்டமாய்க் காரி புகருடன் வீட்டிற் றனித்திட வுச்சமாய் மறைந்தால், திட்டமாம் வயது வெழுபது வரைக்குஞ் செல்வனு யிருந்திட வல்லன். (156)

வேறு.

அட்டமத்தோன் புகராகி உயிர்க்கீறாறில்
அமர்ந்திடவே அக்கோள்தா னறிலேகச்
சட்டமதாய்க் குருவுயிரோ னுகிநாலில்
தனித்திடவே ஆறுடையோன் நீசமாக
நட்டமில்லாக் குருதியுச்சங் குளிகன்சேர்ந்து
நண்ணிடவே சந்திரனு மாட்சியானல்
திட்டமதா யவன்வயது செப்பக்கேளு
சேயாவு குருதிசையே திறமென்றூர்கள். (157)

வேறு.

அட்டமா திபனு முயிர்க்குளோன் றூனும் அருக்கனும் மாலு மொன் றுகித், திட்டமா யுயிர்க்கு யேழினிற் றேன்றிச் சேரிடம்

மாலின்வீ டானுற், சட்டமாய்க் காரி மதிமகன் வீட்டிற் றனித்
திட வந்திடுஞ் சேய்க்குத், திட்டமாய் வயது ஐம்பத்தெட் டே
ழாய்ச் செப்பினர் தரணியில் மாதே. (158)

வேறு.

அட்டமத்தோன் புகாரால் அருணனோடு
அந்தணன்வீ டதிற்கேது கருமமீதில்
திட்டமதா யுயிரோனுங் கருமனுகிச்
சேர்ந்திடவே ஆரல்வீ டதனில்வாழ்க
நட்டமில்லாக் காரியுமே லாபனுகி
நண்ணிடவே மதிமகன்றன் னில்லஞ்சேர்ந்தால்
திட்டமதாய் வயதுரைப்பே னைம்பத்தொன்றில்
சேரவிரு மூன்றுடனே திறமிதாமே. (159)

மாதரசே கேளுயிரோன் புகரேயாகி
வளருமெட்டோ னக்கோளாய் மதிக்குப்பத்திற்
சீதமுடன் மதியரவு கரிவீடேகச்
சேருகரி உயிர்க்கோளாய் நீசந்தோன்றக்
கோதையரே உயிர்தனக்குக் கருமமீதில்
குசன்சிகியும் மதிவீடாய்த் தோன்றுஞ் சேய்க்குப்
பாதகமில் பரிதிமதி புகரோன்மந்தன்
பானுதிசை தொகைபாதி வயதென்றேதே. (160)

வேறு.

மதிமகனும் உயிரோனுய்க் கருமனுமே யாகி
வந்திடவே குருவீட்டிற் புகர்சனியுங் கூடி
விதியுடனே அட்டமத்தோன் சேயாகி மதிக்கு
விளங்கிடவே யேழதனிற் கேதுடனே சேரில்
சதியுடனே கேந்திரத்திற் பொன்னவனுஞ் சேர்ந்து
சாதகனுங் கருமமதாய்த் தனித்திடவே வரினும்
பதியுடனே அவன்வயது உரைத்தார்கள் மேலோர்
பரிதிபுகர் மால்சனியாய்ப் பகரலாம் பாவாய். (161)

மதிவீட்டிற் குருவிருந்து மந்தனுடன் சேர்ந்து
மதிதனக்குக் கேந்திரத்தி லுச்சனுமே யாக
விதியுடனே அட்டமத்தோன் அரவுடனே தோன்றி
விளங்கிடவே உயிர் தனக்கு அஞ்சதனி லேகக்
கதிருடனே மதிகூடிக் கனகனுக்குப் பத்திற்
கலந்திடச்சே யட்டமத்தில் மால்வீடாய்த் தோன்றிற்
கெதிபெறவே யிருந்திடுவன் ஆயுள்மிகத் தீர்க்கன்
கெணித்தார்க ளைம்பதுட னென்பதுயே ழஞ்சே. (162)

வேறு.

அட்டமா திபனும் காரியா யுயிர்க்கு அமர்ந்திட மூன்றினில் வரினுங், திட்டமா யுயிரோன் இறைபவன் வீட்டிற் சேர்ந்திட மறைந்திட வரினுஞ், சட்டமாய்க் கருமன் பரிதியும் புகருஞ் சார்ந்திட அஞ்சினிற் றோன்றத், திட்டமாய் வயது ஐம்பத்தெட் டேழிற் செப்பினர் பின்னுமென் றெரைகையாய். (163)

வேறு.

மதிமகன் அட்ட மத்தோன் வளர்கர்ம கேந்திரத்தில்
சதிருட னுயிரோன் காரி தனித்திட மறைந்து ஆட்சி
விதியுடன் கர்மன் செவ்வாய் விளங்கிடப் புகர்பொன் னேக்கப்
பதிதனி லாயுள் தீர்க்கம் பரிதிநாள் சனிசேய் போமே. (164)

வேறு.

அட்டமத்தோன் குருவாகி உயிர்க்கஞ்சேகி
அமர்ந்திடவே அக்கோள்தான் மாலாய்ப்பத்தில்
திட்டமதாய்க் காரியுட வீட்டிற்சேர
சேருகரி குருவீடாய் மதிக்கெட்டாகிச்
சட்டமதா யிரவிபுகர் குசனுங்கூடித்
தரித்திடவே உயிர்தனக்கு லாபஞ்சேர்ந்தால்
திட்டமதாய் வயதுரைப்பே னப்பாகேளு
சேயரவு மால்பிருகு ரவியுஞ்சேரே. (165)

ஆரலுயிர் உதித்திடுஞ்சே யவர்வீடாக
ஆரலிருந் திடத்தோன்கேந் திரமுற்றுலும்
பாராயுட் காரகனும் முன்போல்தோன்றப்
பகருபஞ்ச மத்தோனுஞ் சுபரேயாகி
நேருயிர்க்கு மறையாம லெட்டாங்கோளன்
நெடுஞ்சுபரோ டிருந்திடச்சேய் பார்க்கவந்தால்
கார்குழலே அவன்வயது ஐம்பத்தொன்றுங்
கருத்திதுசொல் லாகமத்தைக் கருதுமாதே. (166)

வேறு.

அட்டமா திபனுங் காரியா யாட்சி அமர்ந்திடப் பத்தினேன் குருவாய்த், திட்டமா யுயிர்க்கு நாலிலே தோன்றத் தினகரன் கூடவே அஞ்சோன், சட்டமாய்ப் புகராய் மாலுடன்கூடி சனியுமே பார்த்திட வரினும், மட்டிலா வயது ஐம்பத்தெட் டேழில் மதிமகன் திசையினிற் போமே. (167)

புகருடன் ஆரல் கேதுடன் மாலும் புனிதமாய்க் கர்மகேந் திரத்தில், தகரினி லுயிரோன் கருமனுய் வாழ்கச் சனியுமே மா லவன் வீடால், நிகரிலா யோகன் கீர்த்தியு மதிகம் நிகழ்த்தினர் குருதிசை யதனிற், றுகிர்நிற மான புகர்வரும் நாளிற் றன்ப மாய் மாய்ந்திடு மென்ருர். (168)

இரவியுங் கேது மெட்டினி லிருக்க யின்பமா யுயிர்க்குளோன் ருனும், விரவிய ஏழிற் சந்திரன் புகரும் விளங்கிட வுயிர்க்கிரண் டினிலே. பரவிய குருவும் அரவுமே தரிக்கப் பகர்ந்தனர் உயிர்க் குமே லாபம், நிகரிலாக் காரி யிருந்திட வயது நேசமாய் அறு பதும் ரெண்டும். (169)

நேசமாங் குருவுக் கட்டமந் தன்னில் நீலனுய்ப் புதனிருந் திடினும், வாசமாம் யோகன் சிவிகைவா கனமும் வரிசையும் புகழுமே யுடையன், நாசமாம் மனைவி யோகமே யில்லான் நாரி யர் கலவியி லதிகம், பாசமா யிருப்பன் அனேகமாந் தனங்கள் பதிந்திடும் ஒருவற்கு மீயான். (170)

பஞ்சமா திபனும் உயிர்க்குளோன்ருனும் பனிமதி யுடனுமே கூடி, விஞ்சையா யுயிர்க்கு இரண்டினிற் ருேன்ற விளங்கிய குரு கரி சிகியுந், தஞ்சமா யுயிர்க்கு நாலினிற் றரிக்கத் தானத்தோ னுயிரினில் வரினும், கொஞ்சிய அரவு கர்மகேந் திரத்திற் குச னுமே லாபம்வந் துதித்தால். (171)

உதித்திடுஞ் சேய்க்கு உயிர்க்குயி ராறில் ஒளிவிலா மாந்திவந் திடினும், விதித்திடும் வயது அறுபது மேலாம் மேன்மையாங் கரிதிசை யதனிற், குறித்திடு முயற்சி வரவர மேலாங் கோதை யர் மங்களந் தோன்றுங், கதித்திடும் பிடரி சுரிபிள வையினுற் கடினமாய்த் தோன்றியே மறையும். (172)

மறைவிலா மறையோன் திசையினிற் கஷ்டம் வந்திடும் பிதா வையுங்கொல்வன், முறையிலாச் சனியில் முந்தியும் பிடை மோ சமில் மங்கையர் தோன்றும், நிறைமதி மகனுள் திசையினிற் றன தில் நிச்சயம் புதல்வர்வந் துதிக்குங், குறையிலா முயற்சி தீர்க்க மும் வாய்க்குங் குறித்தனர் கணிதநூ லாய்ந்தோர். (173)

பஞ்சமா திபனும் உயிர்க்குளோன் ருனும் பரிதியும் மதியுடன் உயிர்க்குத், தஞ்சமா யேழி லிருந்திட வக்கோள் தரித்திடக் கேதுடன் நாலில், விஞ்சையாங் காரி அட்டமா திபனுய் விளங்கிட வுயிர்க்குஆ றதனில், அஞ்சவே கர்ம கேந்திர மதனில் அரவுட னிருந்திடுஞ் சேய்க்கு. (174)

இருந்திடுஞ் சேய்க்கு மூன்றினிற் செவ்வாய் ஏகமாய் தனித் திட வரினும், வருந்திய குளிகன் தகரினில் லாபம் வந்திடப் பிறந்திடுஞ் சேய்க்குத், திருந்திய வயது இருபது ரெண்டிற் சேத மாம் பின்னுமூன் றினிலே, மருந்தினுற் கொடூரம் வாய்த்திடுந் தப்பில் வயதுமே தீர்க்கமா மென்ருர். (175)

தீர்க்கமாய் வயது மொழிந்தனர் பெரியோர் திறமுடன் புகர்திசை யதனில், மார்க்கமாய்த் தாரந் தோன்றிடும் பருதி வந்திடில் மனைவியும் மாயும். ஆக்கமாய்ச் செல்வம் சமனுடன் வாழ்வன் அன்னையர் பிதாவையுங் கொல்வன், தாக்கிய சமர்த்தன் வஞ்சகன் சீலன் தாரணியில் மதித்திட வல்லன். (176)

அட்டமா திபனும் உயிர்க்குளோன் ருனும் அருணனும் பரி தியு மொன்ருய்த், திட்டமா யுயிர்க்கு ஆறிலே மறையச் செப்பிய கர்மகேந் திரத்திற், சட்டமாய் மதியுந் தனித்திட ஆட்சி சனியு மே மதிமகன் வீடால், திட்டமாய் வயது மதிமகன் முதலாய்ச் செப்பினுர் குசன்திசை போமே. (177)

அட்டமா திபனுங் கருமனும் அரவும் அந்தணன் வீட்டினி லிருக்கத், திட்டமா யுயிரோன் ஐந்தினிற் றரிக்கச் சேயுடன் வீட்டினிற் புகரும், சட்டமாய் மதியு மிரவியு மொன்ருய் சசி மகன் வீட்டினிற் றரித்தால், திட்டமாய் வயது குசன்முதல் நீலன் சேருமே தொகைதனைச் சாற்றே. (178)

சாற்றிய மைந்தன் பிறந்திடும் போது சசிக்குநால் பத்தினில் சர்ப்பம், வாய்த்திடு மதிக்கு அட்டமம் மாந்தி வந்திட ஆறும் மூன்ருல், தோற்றிய வயது அற்பமாய் வளருஞ் சொல்லிய சித் திரை நாளாய், வாய்த்திடு மாகில் தோஷமே அதிகம் மாய்ந்திடும் நிவர்த்தியாற் றீரும். (179)

சிங்கலக் கினத்திற் சேயுமே தனிக்கத் தினகரன் மாந்தியு மிரண்டிற், பங்கமில் லாத சனிபுகர் மாலும் பனிமதி நாலினி லரவுந், தங்கிட வுயிர்க்கு அட்டமா திபனுஞ் சனியுட வீட்டினிற் கேதும், பொங்கிய செவ்வாய் வீட்டினில் மதியும் பொருந்திய ஆட்சியில் மறைந்தால். (180)

மறைந்திடா வயது அறுபது வொன்றாய் வகுத்தனர் புகர் திசை வரைக்குங், குறைந்திடாச் செல்வம் பூமிக்ஷேத் திரங்கள் குறைவிலாச் சமனுடன் வாழ்வன், நிறைந்திடாக் கேது திசையி லே கஷ்டம் நேர்ந்திடுங் கர்மங்கள் முடிப்பன், கரைந்திட உதவி யாகிய கர்மங் களத்திரந் தனக்குமே காட்டும். (181)

வேறு.

அட்டமத்திற் குருவிருக்க அக்கோளே தானும்
ஆரலாய்ப் பரிதிவீ டதனிலே தனிக்கத்
திட்டமுடன் காரியுந்தான் கருமனுமே யாகிச்
சேயுயிர்க்கு ஆறதனில் மறைந்திடவே உயிரிற்
சட்டமுடன் மதியிருக்கப் பஞ்சமத்தோன் புகரும்
சசிதனக்கு மூன்றதனிற் றரித்திடவே வரினும்
மட்டுடனே புகர்திசைநாள் முதலாகக் குருவில்
மாய்ந்திடுமாம் புதனிலென வகுத்தனராம் பெரியோர். ()

வேறு.

பஞ்சமா திபனுங் காரியா யுயிரிற் பதிந்திட மாந்தியு மொன்றாய், விஞ்சையா மக்கோள் ஆரலாய்க் கேதும் விளங்கிடக் கருமகேந் திரத்தில், வஞ்சியர் தான நாதனும் மாலும் மறைந்திட இரவியு மொன்றாய்த், தஞ்சமா யொன்பான் சோமனு யெட்டிற் றனித்திட மறைந்திட வந்தால். (183)

வந்திடுஞ் சேய்க்கு உயிர்க்குநா லதனில் வாளரா யிருந்திட வரினுந், தந்திடும் வயது ஐம்பது நாலில் தத்துடன் கண்டமாய் விடினும், முந்திய ராகு திசையிலே கஷ்டம் முடிந்திடு மாதரு தனக்கும், பந்தமாய் ரோகந் தோன்றிடும் பிலமாய் பாலகன் வயதெழு பதுவே. (184)

எழுபது வயது உரைத்தனர் பெரியோர் இசைந்திடுங் குருதிசை யதனிற், பழுதில்லா முயற்சி களத்திரம் பூமி பாலகன் தோன்றிடும் பிலமாய், முழுவதும் நடக்குங் காரியம் முன்போல் மோசமில் லந்தண ராலே. வழுவிலாத் தனங்கள் மங்கையர் முத லாய் வாழ்ந்திடும் புகழ்ந்திட வல்லன். (185)

வேறு.

அட்டமத்திற் கரியிருக்கக் கேந்திரத்திற்சுங்கன்
அவ்வீட்டுக் குடையோனும் ஆட்சியாயுயிரில்
திட்டமுடன் கதிரோனு மீராறுனுந்
திறமுடனே இரண்டைந்திற் சேரவுச்சம்
சட்டமதாய்க் கருமனுமே மறையயெட்டோன்
சசி அரவோ டேகிடவே உயிர்க்கொன்பானில்
திட்டமதா யவன்வயது பத்துடனேரெட்டி
சேரவொரு மூன்றினிலே பெருக்கிடவேதொகையாம்.

மாதேகேள் வருமுயிரோன் புகரேயாகி
வளருமெட்டோன் அக்கோள்தான் மதிக்கஞ்சேகிச்
சீதமுடன் கரியன் மனை யதனிற்கர்மன்
சேர்ந்திடவே உயிர்தனிலே ரெண்டோன்ராகும்
கோதாய்கேள் பஞ்சமத்தோன் காரியாகி
குளிர்மதிக்கிக் கர்மமதிற் றனிப்பானுகில்
வேதன்விதிப் படியெனவே வயதுமேலோர்
வியாழன்மால் காரிமதி சிகியுஞ்சேரே. (187)

வேறு.

அட்டமா திபனும் அரவுட னுயிர்க்கு அமர்ந்திட மூன்றி னில் வரினுந், திட்டமா யுயிரோன் மாலுடன் புகருஞ் சேர்ந்திட மதிக்குமே லாபஞ், சட்டமாய்க் காரி லாபமே சேரத் தாணியிற் பிறந்திடுஞ் சேய்க்குத், திட்டமாய் வயது ஐம்பது யெட்டிற் சேத மாய்ப் போய்விடு மென்றார். (188)

மிதுனலக் கினத்திற் கேதுவே யிருக்க மேன்மையா யைந் தினிற் புதனும், இதமுடன் கருமன் பொன்னவ னாகி யிருந்திடக் காரியுமரவும், விதியுட னுயிர்க்கு யேழினிற் றேன்ற விளங்கிய புகர்மறைந் திடவே, சதுர்முக னுரைத்த படியென வயது சனி புதன் அரவுட தொகையாம். (189)

மாலவ னுயிரோன் அட்டம மதனில் வந்திட இரவியுங்கூடில், தூலமாய்க் காரி சசியுடன் வீட்டிற் றணிந்திடக் கருமனு மேழில், ஏலவே புகருங் கர்மகேந் திரத்தி லிருந்திட உச்சமாய்த் தரித்தால், கோலமாய் வயது குருதிசை கடந்தாற் கொன்றிடு மெனச் சிலர் மொழிந்தார். (190)

வேறு.

ஓதுமெனக் காரியுடன் அட்டமத்தோன் மாலும்
உறைந்திடவே உயிர்தனக்கு மறைந்திடவே வரினும்
நீதியுடன் உயிரோனுங் காரிவீ டதனில்
நின்றிடவுந் தனித்திருக்க மூன்றிடமே யாகில்
சேதமுட னுயிர்தனிலே சேயுடனே கேது
தினகரன் மால் குருவீடாய்ச் செனித்திடவே வரினும்
வேதமா யவன்வயது யெழுபதுடன் ஒன்றாய்
விளங்குமெனத் தெரிந்துரைத்தார் பெரியோர்கள் மொழியால்.

வேறு.

மகாலக் கினத்தில் அரவுமே யிருக்க மந்திரி யிரவியு முயிரோன், தகரினில் மாந்தி தன்னுடன் தரிக்கச் சாற்றினோங் கருமனும் மூன்றாய், நிகரிலாக் கர்ம னுச்சனாய் வரினும் நின்றிடி லட்டமஞ் செவ்வாய், மகபதி போல தனமெல்லாஞ் செலுத்தும் வயதுமே ஐம்பதோ டைந்தாம். (192)

வேறு.

சந்திரன் றனக்குப் பத்திற் றரித்திட இரவி சுங்கன்
வந்திடக் கேது மாந்தி வளர்குரு புதனும் யேழில்
சுந்தரத் துடனே காரி தோன்றிட அரவோ டானால்
சொந்தமா யிரவி காரி சோமனாள் மூவெட் டாமே. (193)

ஆகுமே அரவு நாளில் அந்தணன் கரியோ னாணில்
போகுமே புகர்நாள் வந்தால் புண்ணிய மனைவி சேர்வள்
வேகுமே செவ்வாய் சேர்ந்தால் வேசையின் போக னாவன்
ஆகுமே புதனாள் தன்னில் அரசரால் முயற்சி யுண்டே. (194)

வேறு.

அட்டமா திபனும் புகருட னுயிரில் அமர்ந்திடக் காரிவீடாகத், திட்டமாய்க் கர்மன் ஆட்சியாய்ப் பத்திற் சேர்ந்திட

லாபத்தி லுயிரோன், சட்டமாய்க் குருவும் நாலினிற் றனிக்கச் சாற்றினோ மிவனுட வயதைத், திட்டமாய்ச் சொல்வேன் அரவுட திசையிற் சேதமாய்ப் போய்விடு மென்றார். (195)

அட்டமா திபனுங் காரியா யுயிர்க்கு அமர்ந்திடக் குடும்பத்திற் றனிக்கில், திட்டமா யுயிரோன் இரவியோ டெட்டிற் சேர்ந்திட மதிக்குவொன் பதனிற், சட்டமாய்க் கர்மன் ஆட்சியாய்ப் பத்தில் தனித்திடப் புகருமே உச்சந், திட்டமாய் வரினுங் குருதிசை வரைக்குஞ் செப்பினார் ஆயுளைத் திறமாய். (196)

அட்டமா திபனு முயிர்க்குளோன் றானும் ஆறாய்ப் புகருட வீட்டில், திட்டமா யாறோன் மாந்தியுங் கூடத் தினகரன் மதிக்குமைந் தினிலே, சட்டமாய்க் காரி கருமனாய் மறையில் சாற்றினா ரிவனுடவயதைத், திட்டமாய்ச் சொல்ல ஐம்பது நாலிற் சேதமாந் தப்பிடிற் றிறமாம். (197)

திறமெனும் வயது புகர்திசை பாதி செப்பினார் தமிழ்மொழி யதனால், நிறமெனு மேழிற் குருவிருந் திடினும் நின்றிடப் புகருடன் கேதும், முறைமுறைப் படியே காரிநா ளதனில் முந்திய தாரமே உதவும், சாரந்தனிற் புகரும் மறைந்திடா திருந்தால் தாணியில் மனைவிரெண் டாகும். (198)

அட்டமா திபனுங் காரியுங் கர்மன் அந்தணன் தனக்குயேழதனிற், றிட்டமா யுயிரா யிருந்திட அக்கோள் சேயுடன் அரவுடன் லாபம், இட்டமாய்க் குடும்ப னேழினிற் றனிக்கி லெய்திய புகருமே யிரண்டால், மட்டிலா வயது மதிமகன் திசையில் மாய்த்திடும் பாதிமே லாக. (199)

இரவியும் மாலும் புகருட னுயிர்க்கு யிரண்டினி லிருந்திட வக்கோள், திரவிய னாகி மூன்றினிற் றனிக்கில் சேய்புகர் வீட்டினில் மறைய, நிரவிய யுயிரிற் பொன்னவ னாக்ஷி நின்றிட அட்டமன் கர்மம், பாவிய வயது முப்பது அஞ்சிற் பதிவது திங்கள்மூன் றினிலே. (200)

பதிவது உதர வியாதியாற் சீவன் பாய்ந்திடும் புவிதனிற் போகும், விதிவது தப்பில் வெய்யவன் தொகைநாள் வேண்டியே சேர்ந்திடும் பிலமாய், கெதிபெற யிருப்பன் கேசரி யோகன் கெணித்தனர் சிவிகைவா கனமும், நிதியொடு பூமி கரிபரி முதலாய் நிலையிலாச் செல்வவா னவான். (201)

வேறு.

ஆரனு முயிரோ னாகி அட்டமா திபனு மாகி
பாரமாம் புகரோன் கூடிப் பதிந்திடப் பரிதி வீடாய்
நேருமே யுயிர்க்குப் பத்தில் நின்றிடச் சனியா யாட்சி
பாரினிற் பிறந்த சேய்க்குப் பகர்ந்தது ஆயுட் கேளே. (202)

வேறு.

கேளப்பா காரிதிசை பாதிதன்னிற்
கெணித்திடுவன் புகர்திசைநாள் வரைக்குமாயுள்
வாளப்பா மதிமகன்றன் திசையிற்றூரம்
வந்திடுமே விந்தையுடன் போகம்புத்திரன்
நாளப்பா முயற்சிகளும் அற்பமாக
நாடிடுவன் தலம்பேத்தி யாகிவாழ்வன்
கோளப்பா அட்டமத்திற் கேதுநிற்கில்
குவலயத்திற் செல்வமெல்லாஞ் சமனுமென்றார். (203)

வேறு.

அட்டமா திபனும் உயிரின்கோ ளுடனே அந்தணன் வீட்டினிலமையத், திட்டமா யன்னோன் கூடியே யிருக்கத் திங்களின் வீட்டினிற் கரியாய்ச், சட்டமாய்க் கர்ம மதனிலே புகரும் சசியுடன் தரித்திட வந்தால், திட்டமாய் வயது மதிகுசன் அரவுஞ் சேர்ந்திடுங் குருதிசை வரைக்கும். (204)

வேறு.

குருவுமே மால்வீ டேகக் கொடியசேய் குருவீ டாக
வருமுயிர் தனக்கு மூன்றில் மந்தனுந் தனிப்பா னாகில்
தருமுயிர்க் கஞ்சில் நாதன் சந்திரன் அருக்க னானல்
கருதின வயது நாற்பத் தஞ்சுமே கருத லாகும். (205)
கருதலாம் அஞ்சோன் மாலும் கருமத்தா னத்தில் மேவிச்
சுருதியா மறையோன் செவ்வாய் சோமனைப் பார்க்க வந்தால்
மருவிய தானம் யேழில் வாளரா வுறினுஞ் சேயைக்
கருதினர் நாற்பத் தைந்து கடந்ததாற் பிலமென் றார்கள். (206)

வேறு.

பாக்கிய னுயிரில் மாந்தியு முடனே பதிந்திட மாலவன் வீடாய், வாக்கினோன் மதியும் மந்தனுங் குருவீ டதனிலே நாவாங்கிஷம் வந்தால், தாக்கிய புகருஞ் சேயுடன் அரவுந் தரித்திட நவாங்கிஷ மிருந்தால், போக்கினி லதிக யோகமா யிருப்பன் புத்தியு மேன்மையு முடையன். (207)

அட்டமா திபனு முயிர்க்குளோன் றானும் ஆாலாய்ப் புகருடனுச்சந், திட்டமாய்க் கர்மன் காரியாய் மதிக்குச் சேர்ந்திடப் பாக்கிய மிருந்தால், சட்டமாய் மதிக்கு யெட்டின்கோள் குசனய்ச் சார்ந்திடக் காரிவீ டானல், திட்டமாய் வயது பரிதிநாள் முதலாய்ச் சேர்த்திடு கரிதிசை பாதி. (208)

வேறு.

அட்டமத்திற் குருவிருக்கக் கதிரோனேடு
அந்தணனு மாட்சிதனி லமையக்காரி
திட்டமதாய்க் கருமமதிற் றனிக்கக்கேந்திரஞ்
சேயாட்சி பாக்கியத்திற் றிடமாய்ப்புந்தி
சட்டமுடன் காரியுட வீடேழாகத்
தரித்திடவே புகருடனே சசிக்குக்கேந்திரந்
திட்டமுடன் வருங்குழவி தனக்குஆயுள்
தீர்க்கமுடன் அறுபதுநா லஞ்சிற்போமே. (209)

வேறு.

உயிரின்கோள் மூன்றோன் பஞ்சமன் புகர்வீ டுற்றிடக் குருவுமே பார்க்கத், தயிரியன் யெட்டோன் காரியா யாறிற் றனித்திடக் குசனுமே யெட்டிற், பரிதிவீ டதனில் அரவுமே தரிக்கப் பத்தின்கோள் கேந்திர மிருந்தால், கருதினர் வயது பத்துநா லிரண்டிற் கடந்திடும் புகர்திசை தனிலே. (210)

கடந்திடும் புகரிற் கேதுநா ளதனிற் கருவியாம் பீடையால் வியாதி, தொடர்ந்திடிற் கொல்லும் அல்லது பெரியோர் சொல்வது பலனினூற் றூரம், விடந்தரும் நோயால் மாய்ந்திடு மென்று விதித்தனர் தமிழறிந் தோர்கள், நடந்திடும் படியே கணிதநூல் விதியை நாடினர் பெரியவர் தானும். (211)

அட்டமா திபனு முயிர்க்குளோன் றனும் ஆரலாய்ப் பத்தினிலுச்சம், திட்டமாய்க் கர்மன் காரியாய் மதிக்குச் சேர்ந்திடப் பத்தினி லிருந்தால், சட்டமாய் மதிக்கு யெட்டின்கோள் குருவாய்ச் சார்ந்திடச் சோமன்வீ டானல், திட்டமாய் வயது பரிதிநாள் முதலாய்ச் சேர்ந்திடுங் கரிதிசை பாதி. (212)

வேறு.

ஆரலுயிர் வீடதனிற் பரிதிதிங்கள்
அமர்ந்திடவே புகர்மந்த னிருக்கப்பொன்னன்
நேராக நோக்கிடவே யுயிரோனேழாய்
நின்றிடவும் புகர்வீடாய் அக்கோள்கேந்திரம்
பாராயுட் காரகனும் முன்போல்நிற்கப்
பகருபஞ்ச மத்தோனு முயிரிற்றேன்றில்
கார்குழலா யவன்வயது யெண்பத்தொன்றுங்
கருதியசொல் லாகமத்தைக் கருதுமாதே. (213)

வேறு.

அட்டமா திபனுங் காரிவீ டதனில் அமர்ந்திட மாலுடன் அரவங், திட்டமா யுயிரோன் காரியாய் மதிக்குச் சேர்ந்திட இரண்டினிற் கேதுஞ், சட்டமாய்க் கர்மன் பஞ்சம னுடனே தனித்திட மாந்தியோடுயிரில், திட்டமாய் வரினும் ஆயுளுந் தீர்க்கஞ் செப்பினர் புகர்திசை வரைக்கும். (214)

இரவியுங் குருவும் உயிர்க்குநா லதனில் இருந்திடச் சனியுமே யெட்டில், வரமுடன் சேயுங் குளிகனும் லாபம் வருமுயிர் மதியுடன் அரவுங், தரணியி லுயிர்க்கு அஞ்சினிற் புகர்மால் தரித்திட ஐம்பது நாலிற், றிரமிலை கண்டந் தீர்ந்திடில் வயது செப்பினர் மால்திசை வரைக்கும். (215)

அட்டமன் கரியாய் மதியுட னரவும் அமர்ந்திட உயிரிற்கேந்திரமாய்த், திட்டமாய்க் கருமன் பொன்னனுய்ப் பத்திற் சேர்ந்திடக் குளிகனும் பார்க்கச், சட்டமா யுயிரோன் ஆறின்கோளுடனே சார்ந்திட இரவியு முச்சம், திட்டமாய் வரினு மாயுளுந் தீர்க்கஞ் செப்பினரெழுபது வரைக்கும். (216)

எழுபது வரைக்குஞ் சொல்லிய சேய்க்கு யேழினிற் கேதுவுந் தரிக்கில், பழுதிலா வயது அறுபதிற் கண்டம் பகர்வது பீடையாற் றீர்க்கம், மழுகையிற் றரித்தோன் மகனெனுங் கணேசன் வல்லபை தன்னுட னிருக்கும், முழுமதி தரித்தோன் குமரனைத் துதிக்க மோசமில் தீர்ந்திடும் பிலமாய். (217)

பிலமெனுஞ் சென்ம நாள்புகர் வாரம் பெருகிய சதுர்த்தியின் தோறும், நலமுடன் நெய்யில் விளக்கிட வேண்டும் நறுமலர் பாலொடு இளநீர், குலமுடன் துதிக்கில் கொடுவினை யகலுங் கூடிடும் ஆயுளுந் தீர்க்கம், தலமுடன் தீர்த்த தானமும் அன்னந் தயங்கிடா தளித்திட வேண்டும். (218)

மதியுயிர் தனக்கு அஞ்சின்கோ ளஞ்சாய் வரவவற் கைந்தினிற் புகராய், விதியுடன் புகரும் பஞ்சம னாகி விளங்கிட நாலினில் மாந்தி, சதியுட னுயிர்க்கு இரண்டுமே ழைந்திற் றரித்திடப் பாவிக ளிருந்தாற், பதிதனில் வயது அற்பமாம் பானு திசை வரை கடந்திடிற் றீர்க்கம். (219)

அட்டமன் வாக்கி லமர்ந்திடக் குருவீ டாகியே அருக்கனும் புகரும், திட்டமா யுயிரிற் சேர்ந்திடச் செவ்வாய் திங்கள்வீ டதனிலே நீசம், சட்டமாய்க் காரி தனதுவீ டதனிற் சார்ந்திடச் சசியுடன் அரவங், திட்டமாய் வரினு மிரண்டின்கோள் நீசம் சேர்ந்திடப் பிறந்தசா தகற்கு. (220)

பிறந்திடுஞ் சேய்க்கு நாற்பத்தெட் டதனிற் பெருகிடுங் கஷ்டமாய்க் கண்டம், நிறைந்திடு மாகில் மயங்கிடும் படியே நின்றிடும் பலன்களு மதிகங், குறைந்திடா வயது ஆறுயெட் டதனிற் குறிகிடாப் பிலத்திடு மாகில், அறைந்திடும் படியே ஐம்பதெட் டதனில் அழிந்திடு மெனச்சிலர் மொழிந்தார். (221)

அட்டமன் கரியாய்ப் புகருடன் மாந்தி அமர்ந்திட உயிரிற் கேந்திரமாய், திட்டமா யக்கோ ளிரவிகே தோடு சேர்ந்திட யிலாபமாய் வரினுஞ், சட்டமாய்க் கர்மன் அரவுட னைந்திற் சார்ந்திட மதிகுசன் தனிக்கில், திட்டமாய் வயது இரவிமால் மதியுஞ் சேர்ந்திடும் புகர்தொகை சேயில். (222)

அட்டமன் மாந்தி கர்மகேந் திரத்தி லந்தண ளுகியே தரிக் கத், திட்டமா யுயிரோன் இரவியு மிரண்டிற் சேர்ந்திட மாலவன் வீடாய், சட்டமாய்க் காரி அரவுடன் மதிக்குச் சார்ந்திட நாலிற் கேந் திரமாய், மாட்டிலா வயது மாலவன் முதலாய் மாய்த்திடுஞ் சேய்திசை தனிலே. (223)

அட்டமா திபனுங் காரியு மரவு மைந்தினி லமர்ந்திட வரி னுந், திட்டமா யுயிரோன் மதியுட னில்லஞ் சேர்ந்திடக் கர்மனு முச்சஞ், சட்டமாய்க் குருவும் மாந்தியும் நாலிற் சார்ந்திட வெட் டைநோக் குற்றால், திட்டமா யெட்டோன் திசையினில் மரணஞ் செப்பினர் தமிழறிந் தோர்கள். (224)

செப்பினர் பெரியோ ருயிர்க்குஒன் பதின்கோள் சேர்ந்தி டப் புகரின்வீ டாக, ஒப்பினர் புகரு மவற்குமெட்டதிலே உறைந் திட ஆட்சியாய் வரினும், மெப்பினுற் கந்தன் கிருபையு முள் ளன் மேதினி தன்னிலே வாழ்வன், தப்பிலா வாக்கன் தயிரியன் நல்லன் சமன்வளர்த் தியுகிறஞ் சிவப்பன். (225)

வேறு.

அட்டமத்தில் மதியிருக்கக் கேந்திரத்தி லக்கோள்
அரவுடனே குருவீடா யமர்ந்திடச்சேய் பார்க்கத்
திட்டமதாய் உயிர்க்கதிபன் கேதுடனே நாலிற்
றிங்கள்தனக் கேழினிலே சேர்ந்திடவே கரியும்
சட்டமதாய் உயிர்தனிலே மாந்தியுமே தனிக்கில்
தையலர்தன் தானமதிற் சார்ந்திடச்சேய் வரினுந்
திட்டமதாய் வயதுரைப்பேன் நாற்பதினிற் கண்டந்
தீர்ந்திடிலோ ஆயுள்வெகு தீர்க்கமெனச் செப்பே. (226)

வேறு.

சூரியனும் உயிரோனும் புகர்வீடேகித்
தோன்றிடவே அக்கோளுஞ் சசிக்கஞ்சாகிக்
காரியுமே குருவீடாய் நாலிற்கேந்திரம்
கருதுமெட்டோன் பவராகிச் சுபரோடேகில்
கீருடனே யெட்டாங்கோள் குருவும்பத்திற்
சேரிடமே மதிதனக்கும் நாலாய்ச்சேரில்
கூறுமென வுயிர்தனக்கு மதியேழாகிற்
கொடுத்திடுமைம் பதுஆயுள் நாலுங்கூட்டே. (227)

வேறு.

அட்டமா திபனுங் காரியா யெட்டில் அமர்ந்திட ஆட்சியாய் வரினுந், திட்டமா யுயிரோன் ஆட்சியா யுயிரிற் சேர்ந்திடக் கரு மனு மதியுஞ், சட்டமாய் ஐந்திற் சார்ந்திட அன்னேன் தரித்திட இரவிரா குடனே, திட்டமாய் வரினும் ஐம்பதோ டாறுய்ச் செப் பினர் சாதகன் றனக்கே. (228)

சாதகன் றனக்கு அரவுதன் திசையிற் சாற்றினர் வித்தையு முயற்சி, வேதமாய்ச் சமனுப் வருமென மேலோர் விதித்தனர் குருதிசை யதனில், ஓதிடு மணநாள் முயற்சியுந் தனங்கள் உதித் திடுஞ் சமனுடன் சிலவாம், போதவே கரியில் வளர்ந்திடும் பில மாய்ப் புகழ்தனம் கீர்த்தியும் பூமி. (229)

மதிமகன் ஆரல் உயிரின்கோ ளரவும் வருமிடஞ் சுபர்மனே யாகச், சதியுடன் நாலோன் ஐந்துநா லேழாய்த் தரித்திடப் புக ருடன் வீடாய், விதியுடன் காரி பாவரோ டேகி விளங்கிட ஆட் சியா னுலும், பதிதனில் வயது அறுபத்தொன் ருகப் பகர்ந்தனர் சாதகன் றனக்கே. (230)

வேறு.

சந்திரனுங் கேந்திரமா யேழாந்தானந்
தனித்திடவே அதற்குடையோன் சாருமில்லம்
வந்திடவே புகர்வீடாய் வளரக்காரி
வருங்கொடியோன் மாந்தியுடன் கர்மமேறச்
சிந்தையுடன் உயிரின்கோள் பவராய்மாலுஞ்
சேர்ந்திடவே அரவுடனே சேயுங்கூடில்
விந்தையுடன் குருதிசையில் மரணம்பேசும்
விளங்குகரி திசைவரினும் விவாகஞ்சேரும். (231)

வேறு.

அட்டமா திபனும் இராகுடன் மூன்றி லமர்ந்திடக் கேதுமே பார்க்கச், சட்டமா யுயிரோன் காரிவீ டதனிற் றனித்திடப் புகர்புதன் பெட்டால், திட்டமாய்க் காரி மாலவன் வீட்டிற் சேர்ந்திடச் சேய்மதி கேளாய், அட்டமந் தனிலே யிருந்திடும் புகர்நாள் அணுகிடி லழிந்திடுந் தேகம். (232)

அழிந்திடுந் தேகம் ஐம்பதோ ரெட்டில் ஐநான்கு மூன்றி னில் மணமாம், கழிந்திடும் பிதாவுங் காரிநா ளதனிற் கருதிய புலனெலாமற்பம், நெழிந்திடுங் கேது திசைவரிற் பலன்கள் நேர்ந்திடுஞ் சமனென முயற்சி, பொழிந்திடும் புகரிற் புண்ணி யம் வேண்டும் புத்திர தோஷமு முரைத்தார். (233)

வேறு.

சந்திரனுஞ் சிரணமாய் மால்வீடேறிச்
சார்ந்திடவே சேய்பார்க்கத் தையல்நாதன்
முந்தியகேந் திரங்கள்தனில் லாபமாறில்
மூறிடவே லக்கினத்திற் பவருண்டாகில்
வந்தசனி புகர்வீடா யேழில்மூன்று
வருமுயிரைப் பார்த்திடமெண் ணுங்கிற்றுயாம்
அந்தவகை யறிந்திடவே யிடமுண்டானால்
அட்டவர்க்க முடன்பார்த்து அடைவாய்ச்சொல்லே. ()

மாதேகேள் வருமுயிரோன் புகரேயாகி
வளருமெட்டோன் அக்கோள்தான் மாலோடாகிக்
கோதாய்கேள் உயிர்தனிலே கொடியோன்நிற்கக்
குளிர்மதிக்கு அட்டமத்திற் காரிநின்றால்
சீதமுடன் கருமனுமே மதியாயாட்சி
சேயுடனே தரித்திடவே மூன்றிலாறேன்
வேதன்மொழிப் படியெனவே வயதுமேலோர்
விதித்தனர்கள் ஐம்பதுடன் நாலுங்கூட்டே. (235)

வேறு.

அட்டமத்திற் கரியிருக்கக் கேந்திரத்திற் பொன்னன்
அவற்குயெட்டில் மதிபுகர்சே யமர்ந்திடவே மாந்தி
திட்டமுடன் உயிர்தனிலே சேர்ந்திடவே மாலோன்
திங்களுக்கு லாபமதிற் செப்பினரா குடனே
சட்டமுடன் தோன்றிடவே வருஞ்சேய்க்கு ஆயுள்
சாற்றினர் ஐம்பதினிற் கண்டமென வுரைத்தார்
திட்டமுடன் சிரசு அரை முதுகினிலே பிளவை
சேர்ந்திடவே வருஞ்சேய்க்குச் செப்பினர்கள்பெரியோர்.

செப்பினர்கள் கருவியன்றி தீர்ந்திடுமே யாகில்
செல்லுபுகர் திசையிரவி நாள்வரையி லாயுள்
ஒப்பினர்கள் வித்தைதிறம் வஞ்சகனுங் காமி
ஓங்கியநல் லறிவுடையன் சமநிறமே யாவன்
துப்பிதழ்வா யுடையான்றன் போகபோக் கியனுஞ்
சொல்நயத்தன் விநோதமுடன் கோபிசமன் வளர்த்தி
மெய்ப்புடைய விவகாரன் சஞ்சலத்தன் தீர்க்கன்
விபசாயன் முயற்சிதனம் விரும்பிடுவன் மாதே. (237)

வேறு.

சதியாக அட்டமத்தோன் குருவாயைந்திற்
றனித்திடவே சேய்பார்க்க மாலோன்வீடாய்
விதியாக உயிர்க்குள்ளோன் யெட்டிற்சேர
விளங்கிடவே கர்மனுடன் கேதும்நாலாய்
மதிகுருவுங் கேந்திரங்கள் திரிகோணங்கள்
வரவுயிரில் மாந்தியுமே புகர்வீடாகில்
கதிபெறவே யிருந்திடுவன் மாரணமதுவரைக்கும்
கணித்தனர்க ளாயுளறு பத்துடனே ஐந்தாய். (238)

வேறு.

வருகின்ற மதிபோய்க் காரி மனையிலே வாழ வைந்தோன்
பொருகின்ற யிரவி யோடே போந்திட மறைய ஆறில்
தருகின்ற ஐந்திற் பொன்னன் சார்ந்திட மால்வீ டானால்
வருகின்ற புதல்வர் தெத்தாய் வகுத்திடக் கருமஞ் செய்யும். (239)

வேறு.

அட்டமத்தோன் மறைந்துபகை வீடதாக
அதிலிரவி மதியுடனே கேதுங்கூடத்
திட்டமதா யுயிரோனும் புகர்சேயோடு
சேர்ந்திடமே குருவீடாய் மதிக்கோறில்
சட்டமதாய்க் கருமனுமே உயிர்க்கோள் பானிற்
சார்ந்திடவே வருஞ்சேய்க்கு சாற்றக்கேளு
திட்டமதாய் வயதுரைப்பேன் ஐம்பத்தைந்திற்
சேரயிரு மூன்றுடனே திறமென்றார்கள். (240)

வேறு.

அட்டமா திபனும் இரவியுஞ் சசியு மமர்ந்திட உயிர்க்கிரண் டினிலே, திட்டமா யுயிரில் மாலவ னாட்சி சேர்ந்திடக் கருமனு மேழாய்ச், சட்டமாய்ச் செவ்வாய்க் கருமகேந் திரத்தில் தனித் திடப் புகருமே மறையில், மட்டிலா வயது புகர்திசை வரைக் கும் மதித்தனர் பெரியவர் நூலால். (241)

மதித்தனர் பெரியோர் உயிர்க்குமுன் றினிலே வந்திட ராகு வே தரிக்கில், விதித்தனர் மாந்தி கேதுடன் காரி வீட்டினில் விளங்கிட வந்தால், துதித்தனர் வித்தை மூன்றுமே யுடையன் சொல்நயம் பொருள்நய முடையன், பதித்தனர் மாலோன் திசை யினில் முயற்சி பகர்ந்தனர் வரவரப் பொருதும். (242)

பொருதுமே கேது திசையினிற் கதிரோன் புசிப்பினிற் பீடையா முயற்சி, தருகிடா மறையுஞ் சந்ததி போகுந் தனச் சில வாகிடத் திரும், மருவிலாத் தேகன் மாநிறம் போலாம் வளர்த்தியுஞ் சமனுடன் வாழ்வன், பெருமையு மரசர் தயவினால் முயற்சி பெற்றிடும் புகர்திசை பிலமாம். (243)

வேறு.

மதிமகனும் உயிரோனுக் கருமனுமே யாகி
வருமிடம்கேந் திரமாகிப் புகர்சனி யொன் றாக
விதியுடனே கருமத்திற் பொன்னவன்கேந் திரமாய்
வெய்யவன்மூன் றிடமாக விளங்கியசா தகற்குத்
துதிபெருகு மதியாவந் தோன்றிடயீ ராறிற்
சோர்வில்லா அட்டமத்தோன் கேதுடனா றாகில்
மதிமகன்வீ டுறில்மாந்தி உயிராகத் தோன்ற
மந்தனுடன் கேதுமே ஷாங்கிஷமாய் வந்தால். (244)

வந்திடவே புகர்மாந்தி ரிஷபஅங் கிஷமாய்
வளர்மிதுனங் கிஷம்புந்தி மதிகடக மாகில்
முந்தியசேய் அரவுடன்கோ லங்கிஷமே யாக
முறைமையுடன் இரவிகுரு மகரஅங் கிஷமாய்ச்
சொந்தமதாய்த் தோன்றியசேய் தனக்கு ஆயுள்
சோர்வில்லாக் கேதுதிசை முதலரவு வரையில்
விந்தையுடன் விளங்கிடுவன் வளர்த்தியனுஞ் சிவப்பன்
வேந்தரால் முயற்சியுள்ளன் வித்தையில்வல் லவனும். ()

வல்லவனும் புகர்திசையில் மாலவன்றன் பொசிப்பில்
வந்திடுமே மங்களமும் போகபோக் கியமும்
அல்லலில்லான் காமியனும் அழகுடையன் சுமுகன்
அசஞ்சலத்தன் வஞ்சகனும் அரசருக்கு மோசம்
நல்லவன்போ லிருந்திடுவன் வேசையுடன் விதவை
நலமில்லாக் கன்னியர்பின் நீசஸ்திரீ போகன்
தொல்லையுடன் பகல்நிசியும் வயதுமூத் தவளுஞ்
சோர்வில்லாப் பிரமசா தியினும்போய்த் தொடுவன். (246)

தொட்டிடுவன் போகபோக்கி யத்தினிலே பலவான்
சோம்பலிலான் புகர்திசையிற் ரேன்றிடுமே முயற்சி
மட்டுடனே சமனாக வாய்த்திடுமே மதியில்
வாகனமும் கீர்த்தியுடன் வடதிசையி லாகும்
வட்டமிலா மதிபாதி மேலாகப் பலன்கேள்
வளர்ந்திடுமே கிரகமொன் று வாகனமும் புரவி
திட்டமுடன் சேய்திசையில் சிவிகைவா கனமும்
சிறப்புடனே முயற்சியினாற் றிறமாக வருமே. (247)

வருவதுசேய் திசையினிலே அரவுநா ளதனில்
வாய்த்திடுமே பிதிர்கர்மம் வந்திடவே கணித்தார்
தருவதுசேய் திசையதனில் வெள்ளியுட லூணில்
சாய்ந்திடுமா தாமரணம் தப்பாதென் றூர்கள்
பெருவதுசேய் திசையுமதிற் சிவபூசை முதலாய்ப்
பெற்றிடுவன் போரான முயற்சியினாற் கீர்த்தி
அருமைபெரு அரசருடன் அசஞ்சலமில் லாமல்
அழகுடனே அனுதினமும் அபிமான முடையோன். (248)

வேறு.

மகாலெக் கினத்திற் கேதுவே தரிக்க மந்தன்மா லிரவிசுக்கிர னும், நிகரிலா வுயிர்க்கு மூன்றினில் நிற்க நேசமாய்க் குருவுமட் டமத்தில், தகரினோ ராறிற் சார்ந்திடச் சசியும் தையலாயுயிர்க்குயீ ராறிற். பகர்வது வயது முப்பது ரெண்டிற் பாக்கியம் பீடையுங் கண்டம். (249)

கண்டமா மதிக்கு ஏழெட்டிற் பாவர் கலந்திடப் பாவரும் பார்க்க, உண்டெனு மிரவி திசைவிட்டு மதியு முதித்திடும் வேளை யிற் பீடை, அண்டிடு மதற்கு ஆண்டுவைந் தினுக்கு அமைத்தனர் புகருடன் விரதம், சென்றிட யிருந்து குகனையுந் துதித்தால் செப் பினா ரைம்பதெட் டாக. (250)

அட்டமன் குருவாய் அரவுடன் மாந்தி அமர்ந்திடக் கர்மகேந்திரமாய்த், திட்டமா யுயிரோன் காரியு மிரண்டாய்ச் சேர்ந்திடக் கருமனுங் கேதுஞ், சட்டமா யுயிர்க்கு நாலிற்கேந் திரமாய்த் தரித்திடப் பிறந்தசா தகற்குத், திட்டமாய் வயது ஐம்பத்தெட்டிரண்டாய் செப்பினர் சாதகன் றனக்கே. (251)

சாதகன் றனக்கு வயதுமிப் படியே சாற்றினர் கணித நூல் விதியால், வேதமா யரவு திசைதனிற் புகர்நாள் விளங்கிடில் மாதரால் வருத்தம், போதவே வளரும் மயக்கத்தாற் பீடை பொன் றிடும் படியென வருமாம், ஓதினர் கணிதர் உயிர்க்கிரண் டுடையோன் உறைந்திடப் புகருட வீடால். (252)

புகருட வீடாய் மாலுமே தரிக்கப் பொன்னவன் றனக்குயே மூடையோன், நிகரிலா லாப மதனிலே சேர நீலனும் மதிக்கு கேந் திரமாய், தகரிஞேன் பார்க்கிற் சாற்றினர் தமிழால் தையலர் தோன்றிடும் பலமாய், புகரிஞேன் திசையில் யேழின்கோள் பொசிப்பிற் புகழ்ந்திடும் மங்களம் வருமே. (253)

மங்கள முடனே போகபோக் கியமும் வளர்ந்திடும் தாசியர் முதலாய், இங்கித மான போகமு முடையன் யெய்திடும் வளர்த்தியன் சுமுகன், சங்கையாந் தலையில் அரையினில் முதுகிற் சாற்றினர் மருவுடன் மச்சந், தங்கவே கீர்த்தி பூமியுந் தனமுந் தரித்திடும் வெகுபிர பலமாய். (254)

அட்டமா திபனும் அருக்கனும் புகரும் அட்டம மதனிலே தரிக்கத், திட்டமா யுயிரோன் ஆரலா யாறிற் சேர்ந்திட ஆச்சியாய் வரினுஞ், சட்டமாய்க் காரி ஐந்தின்கோள் கேதுஞ் சார்ந்திட மாந்தியுங் கருமந், திட்டமாய் வரினும் ஐம்பதெட் டேழாய்ச் செப்பினர் சாதகன் றனக்கே. (255)

சாதகன் றனக்குக் கணிதநூல் விதியாற் சாற்றின ரைம்பதோ டாறில், வேதமா யரவு திசைதனி லெட்டோன் மேவிடிற் கண்டமாய் விதித்தார், போதனு முரைத்த கண்டமே விடுகிற் பொன்றிடான் முன்னுரைப் படியே, நீதமாய் வயது வெகுதிறமாக நிகழ்த்தினர் கணிதநூ லாய்ந்தோர். (256)

வேறு.

மாதேகே ளுயிரோனும் மதிமகனுயேழில்
வந்திடவே இரவிகுசன் குருவீடாய்ச்சேரக்
கோதாய்கே ளுயிர்தனிலே குடும்பனுமேதரிக்கக்
குளிகனுடன் அட்டமத்தோன் குருகிடவைந் ததனில்
நீதமுடன் கருமனுமே மதிக்குமூன் றிடமாய்
நிற்கவெட்டிற் பஞ்சமத்தோன் காரிவீ டாகில்
வேதன்விதிப் படியெனவே வயதுமேலோர்
வியாழன்மால் காரிசிகி தொகையென்றேதே. (257)

ஓதிடுவன் புகர்தனக்கு மூன்றில்ராகு
உறைந்திடவே அவற்கேழிற் கொடியோன்நின்றால்
பாதிசிகி தொகையதிலே தள்ளிநின்றால்
பாலகன்றன் வயதெனவே பகர்ந்தார்மேலோர்
நீதியுடன் குருதிசையி லுயிரோன்நாலில்
நேர்ந்திடுமே மங்கலநாள் நிற்கிற்சுங்கன்
பாதியினில் வருமணநா ளாகுமென்று
பகர்ந்தனர்பெண் சொந்தமதா யாகும்பாரே. (258)

சொந்தமுடன் மங்கலநா ளாகுமாறேன்
றேன்றிடவே யிரவிபுத னுடனேழாகி
வந்திடவே புகர்மறையச் சனியேபார்க்க
வாய்த்திடுமா மனைவிரெண்டாய் வகுத்தார் மேலோர்
சிந்தைதனிற் காரியுடன் குளிகன்சேரில்
திருந்திடவே போகபோக் கியங்கள் செய்வன்
முந்தியதோர் சகோதரங்கள் தீர்க்கமாக
மொழிந்தனர்கள் கீர்த்திதனம் பலமென்றேதே. (259)

மாதேகேள் வருமுயிரோன் மாலாய்நாலில்
வந்திடவே கேந்திரமா யாட்சிஉச்சம்
கோதாய்கே ளுயிர்தனிலே ஆறேன்நிற்கக்
குளிர்மதிக்குக் கேந்திரத்தி லெட்டோன்கேதுஞ்
சீதமுடன் கருமன்மதி புகரைந்தோனுஞ்
சேர்ந்திடவே அட்டமத்தைப் பொன்சேய்நோக்கில்
வேதன்விதிப் படியெனவே வயதுமேலோர்
விதித்தனர்கள் ஐம்பதுடன் ஒன்றுங்கூட்டே. (260)

காரியுயிர்க் கோளாகி நாலில்நீசங்
கருதிடவே அக்கோளன் மதியினேடும்
பாருயிர்க்கு யீராறில் மறையச்செம்பொன்
பஞ்சமத்திற் றனித்திடவே யெட்டோன்லாபம்
கூறியசந் திரன்றனக்கு யெட்டிற்கேது
குறுகிடவே கர்மமதிற் புகர்மால்நின்ருல்
பாருயிர்விட் டேகிடுமே ஐம்பத்தெட்டிற்
பகர்ந்தனர்பொன் னவன்திசையில் மதிவந்துற்ருல். (261)

மதேகேள் வருமுயிரோன் புகரோயாகி
வளருமெட்டோன் அக்கோள்தான் மதிக்காருகி
நீசமதாய் மாலரவு காரியோடு
நின்றிடவே கரிவீட்டில் இரவிபொன்னும்
கோதாய்கே ளுயிர்தனிலே மதியேசிற்கக்
குசன்றனக்கு நாலினிலே கொடியோன்சேர்ந்தால்
தேவன்விதிப் படியெனவே வயதுமேலோர்
விதித்தனர்கள் ஐம்பதுநால் பிலமென்றேதே. (262)

வேறு.

அட்டமன் குருவாய் அரவுடன் செவ்வாய் ஆறினிற் புகரின் வீ டாகத், திட்டமா யக்கோ ளுயிரின்கோ ளாகிச் சேர்ந்திடக் காரிவீ டதனிற், சட்டமாய்க் காரி இரண்டினிற் றனிக்கச் சசிமக னிரவிஒன் பதனில், திட்டமாய் வரினும் ஆயுளுந் தீர்க்கஞ் செப் பினு மைம்பதெட் டாக. (263)

ஐம்பது மெட்டாய் அறைந்திடுஞ் சேய்க்கு அந்தணன் வீட் டினில் மதியால், இன்பமாய்க் குளிக னிருந்திட வுயிரில் யெய் திடும் வளர்த்தியன் கறுப்பன், அன்பனு யிருப்பன் யாவர்க்குஞ் சுமுகன் அருள்பெரும் வித்தையிற் பிரியன், துன்பமில் மனத் தன் சோர்விலாத் தனமுஞ் சொல்லினர் பெரியோர் தாமே. (264)

சந்திரன் நாலோன் அரவுடன் கூடித் தரித்திடக் குருவின் வீ டாகி, வந்திட அக்கோள் வாக்கினில் மருவ வக்கிரன் இரவிமால் மறையச், சொந்தமா யெட்டோன் காரியா யைந்திற் றேன்றிட வந்தசா தகற்கு, முந்தவே ஆயுள் மாலவன் முதலாய் முடிந்திடுஞ் சேய்திசை வரையில். (265)

வேறு.

கும்பலக் கினமே தோன்றக் குசனஞ்சி னுயிரிற் காரி
அம்புலி இரவி பொன்னும் அமர்ந்திட நால தாக
நம்பிய புகரோன் வாக்கில் நண்ணிடச் சிகிமால் மூன்ருய்
வம்பிலாத் துலாத்தில் ராகும் வந்திடக் குளிகன் சொல்வேன். (266)

சொல்வது காரி வீடாய்த் தோன்றிட வருஞ்சே யாயுள்
வெல்வது இரண்டோன் நாலில் விதித்தன மைம்பத்தொன்ருய்
அல்லலின் மனத்தன் காமி அரசரால் முயற்சி யுள்ளோன்
நல்லவன் கற்பான் வித்தை நங்கையால் வாழ்வு முண்டாம். (267)

வேறு.

அட்டமன் மதியும் கேதுடன் ஆறி லமர்ந்திடப் புகருடன் அரவுந், திட்டமா யுயிர்க்கு மறைந்திடச் செவ்வாய் தினகரன் மாலுட னுயிரில், சட்டமாய்க் குருவும் வாக்கினில் மருவச் சனி மகன் லாபமாய் வரினும், மட்டிலா வயது அறுபது ஒன்றில் மாய்ந்திடு மெனச்சிலர் மொழிந்தார். (268)

அட்டம னிரவு காரிவீ டதனி லந்தண னுயிர்க்குயி ராறிற், றிட்டமாய்க் காரி தனித்திட நாலிற் சேய்புகர் வாக்கினில் மரு வச், சட்டமாய் மதியு மாந்தியும் பத்திற் சார்ந்திட நீசமாய் வரி னும், திட்டமாம் வயது ஐம்பது ரெண்டாய்ச் சேர்ந்திடுந் திங்க ளா ருகும். (269)

அட்டம னுயிரி லமர்ந்திட அக்கோள் அருணனும் வாக்கி னில் மருவத், திட்டமாய்ப் புகர்சேய் காரியே துடனே திங்கள் நா லதனிலே சேரச், சட்டமாய் ராகும் மாந்தியுந் தகரில் சார் ந்திடப் பிறந்தசா தகற்கு, மட்டிலா வயது சேய்திசை புகர்நாள் மரணமென் றுரைத்தனர் பெரியோர். (270)

வேறு.

மதியுடனே உயிரோனும் அரவுமொன்ருய்
மங்கைத்தா னத்தில்வா அக்கோள்கேதும்
விதியுடனே உயிர்தனிலே விளங்கக்காரி
வேதியனுக் கொன்பதனில் இரவிமாலும்
பதியுடனே கரிவீடாய் லாபமாகப்
பாக்கியனும் பன்னிரண்டிற் பதியேஆட்சி
சதியுடன்மூன் றினில்மாந்தி சார்ந்தசேய்க்குத்
தரணிதனில் ஆயுள்விதி சாற்றக்கேளே. (271)

சாற்றினேஞ் குருதிசைநாள் முதலேசுங்கன்
சாருதிசை வரையதனிற் கரிமாலுணில்
வேற்றுமையாய் அரைமுதுகு சிரசில்வேதை
விளங்கியதாற் பீடையினல் மரணஞ்சொன்னேம்
பார்த்திபனு மழகுடையான் அனேவோர்க்கன்பன்
பகர்ந்தனர்நல் லறிவுடையன் பாகைமோகன்
கோத்திரம்நல் வழியாகுங் கொடுரசிந்தை
கோபியன்பின் தயவுடைய குணமுள்ளானே. (272)

வேறு.

குணமுள்ள வளர்த்தியனும் பொதுநிறமு மாவன்
கோதையர்மேற் பிரியமுளன் போகபோக் கியனும்
மணமுள்ளான் புதன்திசையில் ஒன்றுகுங் கேது
வாய்த்திடுநாள் புகர்ஒன்றும் மங்களமும் ரெண்டாம்
இனமில்லாத் திரிமோகன் இங்கிதவஞ் சகனும்
பெய்திடுமா லவன்திசையில் யேந்திளேமேற் பகையாய்த்
தனமுடைய தாசியிடம் சார்ந்திடுவன் முயற்சி
தருசமனுப் பலனுதவுஞ் சாற்றினேங்கேளே. (273)
தருசமனுப் வரும்வயது நாற்பத்தைந் தினின்மேல்
சகடவா கனமுடனே சார்ந்திடும்நல் யோகம்
வருமுயற்சி சத்திரிய சாதியிட மாக
வடகிழின் திசையதனில் வாய்ந்திடுமே பிலமாய்ச்
சுருதிமறை ஆகமநூற் படியாகச் சொன்னேம்
தோன்றிடுமே கிரகமொன்று சொல்வயதைம் பதிலே
திருவளரும் புகர்திசையிற் சிவிகைவா கனமுஞ்
சேர்ந்திடுமே பாற்பாக்கியஞ் செப்பினேம் பூமி. (274)

வேறு.

அட்டம னிரவி பாக்கிய மதனில் அமர்ந்திடக் குருகரி கேதுங், திட்டமாய்க் கர்ம கேந்திர மதனிற் சேர்ந்திட யேழின்கோள் நீசஞ், சட்டமா யுயிரோன் யேழினிற் சேரச் சந்திரன் வாக்கினிற் றரித்தால், திட்டமா யுயிரில் மாந்தியுந் தனிக்கத் திறமுடன் அரவுநாள் வந்தால். (275)

வந்திடுஞ் சேய்க்குப் புகர்திசை முதலாய் வளர்ந்திடும் குரு திசை மால்நாள், தந்திடு மரணம் தீர்க்கமாம் ஆயுள் சாற்றினர் புகர்திசை மால்நாள், சொந்தமாய் மனைவி தோன்றிடு மனமாய்ச் சொல்லினர் கணிதநூ லதனல்; விந்தையாய் வளர்த்தி சமமுடன் நிறமாய் விளங்குவன் வித்தையால் மேன்மை. (276)

மேன்மையி லதிகன் பாடிடும் வாக்கன் வேந்தாற் பிரியமுள்ளவனும், கேமமாய்ப் பெரியோர் யாவர்க்கும் பிரியன் நெஞ்சினிற் கோபியாம் வஞ்சன், தாமித குணத்தன் சகலவல் லவனுந் தயிரின் போகபோக் கியனும், ஆண்மையால் மூர்க்கன் அரசரால் மேன்மை அறிவெலாந் தெரிந்திட வல்லன். (277)

அட்டமன் மாலாய்க் கருமனுஞ் சசிவீ டமர்ந்திடக் குருகரி கேதுங், திட்டமா யுயிர்க்குக் கருமகேந் திரத்திற் சேர்ந்திட யுயிரின்கோ ளேழிற், சட்டமாய்க் காரி வீட்டினி லாவுந் தனித்திடப் பிறந்திடுஞ் சேய்க்குத், திட்டமாய் வயது ஆறுபத் திரண்டாய்ச் செப்பினர் பெரியவர் தாமே. (278)

செப்பினர் பெரியோ ராறுபத் திரண்டிற் சேதமில் பீடையால் விடுகில், தப்பித மில்லாக் குருவினில் மாலோன் சார்ந்திடில் மரணமுமுடையன், மெய்ப்புடன் யேழோன் திசையினி லாவு மேவிடிற் பிதாவுடன் கர்மம், செப்பினர் வாக்கில் மதியுமே யிருந்தாற் றெளிக்திடும் வித்தைவல் லவனும். (279)

அட்டமன் குருவா யுயிரின்கோ ளுடனே யைந்தினி லமர்ந்திடக் கருமன், திட்டமா யுயிர்க்கு யேழினிற் றனிக்கத் திங்களும் ராகுடன் பத்திற், சட்டமா யிரவி மாலவன் கேதும் சார்ந்திட நாலிற் கேந் திரமாய்த், திட்டமா யுதிக்குஞ் சாதகன் றனக்குத் திறமுடனறுபதோர் வயது. (280)

சாதகன் றனக்கு வுயிரினில் மாந்தி சார்ந்திடப் பிறந்திடுஞ் சேய்க்கு, வேதமாய் வளர்த்தி சமநிற முடையன் வித்தைமூன்றுடையவன் கோபி, போதவே பூமி க்ஷேத்திர முடையன் புண்ணிய மனமுளான் கபடன், சீதமாய் நயத்தன் காமியன் மயக்கன் சேவகத் தொழிலினில் வல்லன். (281)

வல்லவன் தீர்க்கன் வழக்கினில் வல்லன் வாய்ந்திடும் வாணிபம் பூமி, அல்லலை நினைத்தன் ஆசையாற் போகி அழகுமே அற்பமு முடையன், தொல்லையில் மனத்தன் தோத்திரப் பிரியன் சுகமுளான் சகடவா கனமாம், நல்லவ னரசர் தயவினால் முயற்சி நாடுவன் காரிநாள் முதலாய். (282)

அட்டமா திபனுங் காரியு முயிரோன் ஐந்தினோன் தானு மொன் றாகத், திட்டமாய் வளருங் கேந்திரம் வருமாற் சேரிடம் உச்சமாட் சியினால், சட்டமா யுதிக்குஞ் சாதகன் றனக்குச் சதி ருடன் யெண்பத் தைந்தாயுள், அட்டமா திபனுங் காரியு மறைந்தா லைம்பத்தைந் தாயுளாய் வகுத்தார். (283)

அஞ்சினோன் உயிரோன் மறைந்திடப் பகையாய் ஆரல்மால் சூரியன் வீடால், தஞ்சமா யெட்டோன் நீலனும் பகையாய்ச் சார்ந்திடப் பாவர்வீ டானால், மிஞ்சவே பிறக்குஞ் சாதகன் மாணம் விதித்தனர் பத்துஅஞ் சதனில், துஞ்சிடு மென்று கணித நூல் விதியாற் றோன்றிடுஞ் சாதகன் பலனே. (284)

வேறு.

அட்டமந் தன்னிற் செவ்வாய் அமர்ந்திட அதற்கு நாதன்
திட்டமா யுயிரோ னாகிச் சேரிடந் தனிப்பா னாகிற்
சட்டமாய்க் கரியும் பத்தில் தனித்திடுஞ் சாத கற்குத்
திட்டமாய் யெழுபத் தொன்றாய்த் திரமுடன் வயதென் றோதே.

எட்டினோன் உயிர்க்குள் ளோனா மிரவியு மீரைந்தோனும்
சட்டமாய் மதிவீ டேகித் தரித்திடப் பாவர் நோக்க
அட்டமந் தன்னிற் காரி அமர்ந்திடச் சுபர்வீ டானால்
திட்டமா யெழுபத் தெட்டாய்த் திரமுடன் வயதென் றோதே. ()

ஓதுயிர் தனக்கு யெட்டி லுயர்வுடன் காரி யோடு
போதவே தீக்கோள் மேவப் பொருந்திடுஞ் சாத கற்கு
நீதமா யெழுபத் தைந்தாய் நிச்சய முரைக்க லாகும்
வேதமா யுயிரோன் காரி விளங்குமோ ரில்ல மானால். (287)

வேதமா யுதிக்குஞ் சேய்க்கு விதித்தனர் அறுபத் தேழு
நீதமா யிருப்ப னென்று நிச்சய முரைக்க லாகும்
ஓதுயிர்க் காரி சுங்கன் உயிர்தனக் கிரா றானால்
சாதகன் வயதை நூலோர் சாற்றினார் முப்பத் தொன்றாய். (288)

மதிமகன் உயிரோ னாகி வக்கிர னோடு சேர்ந்து
சதியுடன் சுபர்வீ டாகித் தரித்திட மறையா தாகில்
விதியுடன் காரி ஐந்தோன் விளங்குகேந் திரமே யானால்
பதிதனிற் பிறக்குஞ் சேய்க்குப் பகர்வய தறுபத் தைந்தே. (289)

அறுபது ஐந்து சொல்வேன் ஐந்தினோன் காரி யோடு
வெருவுடன் பாவர் சேர்ந்தால் விதித்தனர் அறுப தாகும்
மருவிலா திருப்பன் மாதே மதித்தனர் கணித வாக்கால்
கருவுட னால் சேர்ந்தாற் கருத்துடன் நாற்பத் தொன்றே. (290)

அட்டமா திபனுங் கேதும் அம்புலி வீட்டி லேகத்
திட்டமா யுயிரிற் காரி சேர்ந்திடச் சுபர்க ளோடு
நிட்டை மால் பரிதி பொன்னன் நின்றிடஞ் சுபர்வீ டானால்
சட்டமா யெழுபத் தொன்றும் சதிருடன் வயதென் றோதே. (291)

ஓதுயிர் தனக்கு ஐந்தில் உயர்வுடன் மதிபாம் பானால்
வேதமாய் அறுபத் தைந்தாய் விதித்தனர் தாணி மீதே
நீதமா யிருப்ப னென்று நிச்சய முரைக்க லாகும்
போதவே பஞ்ச மத்திற் பொன்னவன் வருவ தானால். (292)

வருவது வயது நாசம் வகுத்தனர் அறுபத் தொன்று
தருமுயிர்க் கைந்தில் மால்பொன் தரித்திட வளருஞ் சேய்க்குச்
சுருதியா யிருபத் தொன்றில் துணிவுடன் நாசங் காட்டும்
உறுதியே யென்று மேலோர் ஓதினார் கணித நூலால். (293)

அட்டமந் தன்னிற் பாம்பு அமர்ந்திட அதற்கு நாதன்
திட்டமா யுயிரோ னாகிச் சேரிடஞ் சுபர்வீ டாகச்
சட்டமாய்க் காரி கேது சாரிடம் புகர்வீ டானால்
திட்டமாய் அறுபத் தெட்டாய்த் திறமுடன் வயதென் றோதே. ()

வேறு.

அட்டமா திபனு மருக்கனுங் கேது மைந்தினேன் ரூனு மொன் ருகத், திட்டமா யிறைவன் வீட்டினிற றரிக்கத் திறமுடன் காரியு முயிரோன், சட்டமாய் வளருங் கேந்திர மாகிச் சாரிடம் சுபர்கள்வீ டானுற், றிட்டமா யுதிக்குஞ் சாதகன் வயது திறமுடன் அறுபது நாலே. (295)

வேறு.

மாலவன் குருவீ டேக மந்திரி பிலமா வானல்
நீலனும் மதியு மொன்ருய் நின்றிடஞ் சுபர்வீ டானல்
சாலவே அட்ட மத்தோன் தனித்திட ஐந்தோன் பானல்
தூலமாய் அறுபத் தொன்ருய்த் துணிவுடன் வயதென் ரேதே. ()

உதயிர் தனக்கு ஐந்தில் உயர்வுடன் தீக்கோள் மேவச்
சேதமென் றுரைத்தா ரைந்து செப்பினர் கணித நூலோர்
வேதமா யுயிர்க்கு பெட்டில் வெய்யவன் வருவ தானல்
உதிடும் வயது ஐம்பத் தொன்பதென் றுரைக்க லாகும். (297)

கரியவன் குருவீ டேகக் கலைமறை உயிரிற் ரேன்ற
வருமெட்டோ னேழோன் பத்தோன் மால்புகர் யில்லஞ் சேரத்
தருமுயிர்க் கைந்தி னுதன் சற்குரு புகரி லானல்
பெருமறு பதின்மே லெட்டுப் பேணிடும் வயதென் ரேதே. (298)

அட்டமங் தன்னிற் சேயும் அமர்ந்திட அதற்கு நாதன்
திட்டமா யுயிரோ னுகிச் சேரிட மதனி லாகச்
சட்டமாய்க் காரி ஐந்தோன் சாரிட மீரா ருனல்
திட்டமாய் முப்பத் தெட்டாய்த் திறமுடன் வயதென் ரேதே. (299)

வேறு.

கரியவ னுச்ச மாட்சிய தாகக் கருமத்தோன் புகர்மறை மாலாம், வருமெட்டுக் குடையோன் உயிர்க்குளோன் ரூனும் வளருகேந் திரத்தினி லிருந்தால், அறுபது பத்து ஐந்துநா லொன்றிலழிவிலா திருப்பனென் றுரைத்தார், வருமுயிர் மறைந்தால் மதித்தனர் வயது மாய்ந்திடு முப்பது தள்ளே. (300)

அட்டமா திபனும் ஆறனு முயிரோன் அமர்ந்திட அட்டமத் தன்னில், திட்டமா யைந்தோன் காரியுங் குளிகன் சேரிடம் சுபர்

கள்வீ டாகச், சட்டமாய் மதியும் மந்தன்வீ டதனிற் றனித்திடுஞ் சாதகன் றனக்குத், திட்டமாய் வயது ஐம்பது நாலாய்ச் செப்பினர் கணிதநூ லாய்ந்தோர். (301)

அட்டமா திபனு முடவனு மெட்டி லமர்ந்திட ஆட்சிகட்பாகத், திட்டமா யுயிரோன் உதயகேந் திரத்திற் சேர்ந்திட முன்பினும் பாவர், சட்டமா யிருக்கக் கருமனு மதியுஞ் சார்ந்திட ஐந்தினேன் மறைந்தாற், றிட்டமா யுதிக்குஞ் சேயவன் றனக்குத் திறமுடன் ஐம்பத்தோ ரெட்டாம். (302)

தலாத்தினில் மதியு மாந்தியு முயிராய்த் தோன்றிட பெட்டின்கோள் நீசம், பிலத்துடன் வெய்யோன் மாலவன் கூடி பிருகுடன் மறைந்திட யீரார், கலக்கமில் லாத காரியும் பத்தில் கருதிய வாக்கினிற் கொடியோன், பிலக்கவே வரினும் ஆயுளுந் தீர்க்கம் பேசினு ரொன்பதோ ரெட்டு. (303)

அட்டமா திபனும் அட்டமந் தன்னி லமர்ந்திட ஆட்சிகட்பாகத், திட்டமா யுயிரோன் உதயகேந் திரத்திற் சேர்ந்திட முன்பினுஞ் சுபர்கள், சட்டமா யிருக்கக் கருமனு மதியுஞ் சார்ந்திட ஐந்தினேன் பிலமாய்த், திட்டமா யுதிக்குஞ் சாதகன் வயது செப்பினர் யெண்பத்தெட் டாக. (304)

வேறு.

மதிதனக்குக் கேந்திரத்தில் உயிர்கருமன் நிற்க
மந்தனுக்கு யேழதனில் மாலவன்சேய் கேதும்
நீதிக்குடைய சேய்தனக்கு யேழதனி லரவு
நின்றிடவே மாந்தியுடன் மாலவன்வீ டானல்
துதிபெருகு மிரவிமதி காரிவீ டதனிற்
ரேன்றிடவே வருஞ்சேய்க்குத் தொல்வயதீ ரேழிற்
கெதிபெறவே யிருந்திடுவன் கேசரியாம் யோகன்
கீர்த்தியினல் மேன்மைபெறுஞ் சன்யாசி யிவனே. (305)

வேறு.

அட்டமா திபனும் பாவர்க ளுடனே அருணன்வீ டதனிலே சேரத், திட்டமா யுயிரோன் காரியோ டேகிச் சேரிடஞ் சுபர்கள்வீ டாகச், சட்டமாய் மதியு முயிர்தனக் கைந்தில் தனித்திடுஞ் சாதகன் றனக்குத், திட்டமாய் வயது அறுபத்தைந் தாகச் செப்பினர் கணிதநூ லாய்ந்தோர். (306)

வேறு.

அட்டமந் தன்னிற் செவ்வாய் அமர்ந்திட அருக்க னோடு
திட்டமாய் அதற்கு நாதன் சேர்ந்திடச் சுபர்கள் வீடால்
சட்டமா யுயிரோன் றானுந் தனித்திட மதிவீ டானால்
திட்டமா யுதிக்குஞ் சேய்க்குத் திறமுட னறுபத் தெட்டே. (307)

வேறு.

அட்டமா திபனுங் கேதுடன் கூடி அருணன்வீ டதனிலே சேரத், திட்டமா யுயிரோன் காரியோ டேகிச் சேர்ந்திடப் பாவர்கள் வீட்டிற், சட்டமா யைந்தோன் சொந்தவீ டதனிற் றனித்திடப் பாவர்கள் நோக்கத், திட்டமாய் வயது அறுபது யேழாய்ச் செப்பினார் சாதகன் றனக்கு. (308)

சாதகன் றனக்கு மேலவர் மொழியாற் சாற்றினார் கணிதநூல் விதியால், நீதமா யுயிர்க்கு அட்டம மதனில் நேர்ந்திட ஆரல்சூ ரியனால், வேதமா யுயிரிற் பாம்புட னுதிக்க விதித்தன ரறுபது யேழிற், சேதமென் றுரைத்தார் பத்துட னிரண்டு செப்பினார் கணிதநூ லாய்ந்தோர். (309)

அட்டமா திபனு மந்தனு முயிரோன் ஐந்தினோன் றானுமொன் றாகித், திட்டமாய்ப் பாவர் வீடதில் மறைந்து சேர்ந்திடப் பாவர்கள் நோக்க, நிட்டைமால் வீட்டிற் பாம்புடன் சுபராய் நின்றிடுஞ் சாதகன் றனக்குத், திட்டமாய் மரணம் பத்துட னைந்தாய் செப்பினார் கணிதநூ லாய்ந்தோர். (310)

அட்டமா திபனும் மாலுடன் கூடி அமர்ந்திட உதயகேந் திரத்தில், சட்டமா யுயிரோன் மந்தனோ டேகச் சாரிட மந்தன்வீ டாகத், திட்டமா யைந்தோன் பத்தினோ னொன்றாய்ச் சேர்ந்திடப் பொன்னவன் வீட்டிற், சட்டமா யுதிக்குஞ் சேயவன் றனக்குச் சாற்றினா ரைம்பது வயதாய். (311)

அட்டமா திபனுஞ் சூரிய னுடனே அமர்ந்திட அட்டமந் தன்னிற், றிட்டமா யைந்தோன் காரியு முயிரோன் சேருமோ ரில்லமே யானால், நிட்டைமால் வீட்டிற் பாவர்கள் சேர நின்றிடுஞ் சாதகன் றனக்குச், சட்டமாய் வயது யிருபத்தைந் தாகச் சாற்றினார் கணிதநூ லாய்ந்தோர். (312)

வேறு.

மாலவன் கருதி பொன்னன் வருமுயி ரோனு மொன்றாய்ச்
சாலவே உயிர்க்கீ ராறிற் றரித்திடப் பாவர் வீடால்
ஏலவே காரி யுச்சம் யிருந்திடுஞ் சாத கற்குத்
தூலமாய் ஐந்து ஒன்றிற் றுணிவுடன் மரணங் காட்டும். (313)

வேறு.

மீனமாய்த் தோன்றி லக்கின முதிப்ப விளங்கிய லக்கின நாதன், ஆனதோர் மந்தன் ஐந்துயெட் டோனும் அமர்ந்திட வுதையகேந் திரத்தால், பானுவுங் குருதி பாம்புடன் கூடிப் பார்க்கவ னில்லமாய் வருமால், சாதகி தனக்கு யெழுபது யெட்டாய்ச் சாற்றினார் கணிதநூ லாய்ந்தோர். (314)

வேறு.

அட்டமந் தன்னிற் பொன் னமர்ந்திடச் சுபர்வீ டாகத்
திட்டமா யுயிரோன் காரி சேருமோ ரில்ல மானால்
சட்டமாய் மதியு மந்தன் சாரிட மீரா றானால்
திட்டமா யுதிக்குஞ் சேய்க்குத் திறமுடன் முப்பத் தொன்றே. (315)

கரியவன் யீரா றாகக் கலைமறை யதனிற் சேர
வருமுயிர் சுபரே யாக வந்திட அட்ட மத்தில்
தருமுயிர்க் கைந்தி னாதன் சற்குரு மாலே யானால்
பெருதுடன் வயது முப்பத் தைந்துடன் ஒன்றே யாகும். (316)

வேறு.

அட்டமா திபனுங் காரியு முயிரோன் ஐந்தினோன் பத்துமூன் றோனுங், திட்டமா யிக்கோள் ஒன்றுநா லேழிற் சேர்ந்திட யில்லமொன் றானால், சட்டமாய்ப் பிறக்குஞ் சாதகன் றனக்குச் சதிருடன் யெழுபதோர் வயது, அட்டமந் தன்னிற் பாம்புசே யுற்றால் ஐயைந்து ரெட்டிப்ப தாயுள். (317)

அட்டமா திபனுங் காரியு முயிரோன் ஐந்தினோ னீரைந்தோ னருக்கன், திட்டமா யிக்கோ ளில்லமொன் றாகச் சேர்ந்திட மறைவிலா தாகிற், சட்டமா யுதிக்குஞ் சாதகன் றனக்குச் சாற்றினா ரெழுபதாய் வயது, அட்டமந் தனிலே தீயகோள் வந்தால் ஆறுபத் தாமென வாயுள். (318)

குருவுடன் கேதும் புகருட வீட்டிற் கூடியே மறைந்திட
யெட்டாய், வருமுயிர் தனக்கு யெட்டின்கோள் சேயும் மறைந்
திட அருக்கன்வீ டாகத், தருமுயிர் தனக்கு யேழினி லாறோன்
றன்னுடன் மாலவன் றருக, மருவுடன் காரி ஒன்பதிற் றனிக்க
மாய்ந்திடு மெழுபதைந் தினிலே. (319)

குருவுடன் புகரு மதியுமா லோடு கூடியே ரில்லமே யாக,
வருமுயிர் தனக்கு யேழு ஆ றதனில் வந்திடக் காரியு மறைந்தால்,
தருமுயிர் தனிலே ஆரல்சூ ரியனுற் சார்ந்திடப் பிறந்திடுஞ் சேய்
க்கு, மருவுமூன் றாக வந்திட வயது வகுத்தன னைந்துபத்தேழாய்.

காரிமால் குளிகன் சூரியன் புகருங் கதிரவன் வீட்டினில்
வருகக், கோரினு லேழி லைந்தினோன் வருகக் குருதியு மவருட
னுனல், காரியோ னுளில் சூரியன் வந்தாற் கருத்துடன் மாண
மென் றுரைத்தார், நாரியிக் கோட்கள் யில்லமூன் றுனல் நவின்
றனர் நாலுவைந்தாயுள். (321)

வேறு.

மாலவன் குருவீ டேக மந்திரி நீச மாக
நீலனு மதனிற் சேர நெடியகோ ளுயிரி லாகச்
சாலவே யெட்டோ னைந்திற் றரித்திடுஞ் சாத கற்குத்
தூலமாய்ப் பதினெட் டாறுற் றுணிவுடன் மரணங் காட்டும். (322)

வேறு.

பீதகன்மால் சேய்புகரும் சூரியன்வீ டேகிப்
பின்மூன்னுஞ் சுத்தமதாய்ப் பெரும்பாவர் நோக்கச்
சீதகமாய்க் காரியுயிர் தனிற்சேரப் பாவர்
தினகரனுந் திங்களுமோ ரில்லமதாய் வரினும்
சாதகன்றன் வயதுரையே யெண்பதுமூன் றாகச்
சனிபரிதி யுடன்சேரிற் றரித்திடுமெண் பதனுற்
பீதகன்மால் சேய்புகரும் மறைந்துபகை சேர்ந்தாற்
பெரும்வயதோ ரைம்பத்தொன் றூய்மரண மாமே. (323)

காரியுயிர்க் கேழாகக் கேந்திரமெய் திடினுங்
கருதுமைந்தோன் யெட்டோனுங் கடும்பாவ ருடனே
வீரியமாய்ப் பவர்வீடாய்த் தரித்திடவே அக்கோள்
வெய்யவன் மால் சசிவீடால் விளங்கிடவே மறையோன்

கூருமதா யுடன் வரினுங் கோள்வயதோர் யேழுங்
குருதிதொகை யெனவுரைத்தார் கோள்வயது மேலோர்
காரியுயி ரோனேடு கடும்பாவர் வரினும்
கருத்துடனே அறுபதொன்றிற் காட்டுமென மரணம். ()

காரியுயிர் தனிற்சேரப் பவர்வீடாய்த் தொடுகில்
கருதுமெட்டோ னைந்தோனுங் காரியுடன் வருமால்
நாரியிக்கோ ளாட்சியுச்சம் யெய்திடினும் வளரும்
நன்மதிக்கு மறையாமல் வருஞ்சேய்க்கு வயது
கூறுமதா யெழுபதொன்று உரைத்தனர்கள் பெரியோர்
கொடுமுக்கோள் மறைந்துபகை நீசம்வா திடினும்
வீரியமாய் வருஞ்சேய்க்கு ஐம்பத்தொன் றாக
விளங்குமிக்கோ ளுடன்சுபராய் விதித்தனரைம் பதுவாம்.

வேறு.

மதிமகன் பரிதி உயிர்க்குளோ னுடனே வருமிடம் சுபர்
மனை யாகச், சதியுட னெட்டோன் ஐந்துநா லேழாய்த் தரித்
திடப் பாவர்வீ டாக, விதியுடன் காரி பாவபோ டேகி விளங்கிட
மால்மதி வீடால், பதிதனில் வயது அறுபதொன் றாகப் பகர்ந்
தனர் சாதகன் றனக்கு. (326)

அட்டமா திபனும் புகருட னுயிரோன் அருணனு மில்ல
மொன்றாகத், திட்டமாய்ப் பரிதி வளருங்கேந் திரத்திற் சேர்ந்
திடப் பாவருஞ் சுபருஞ், சட்டமாய்க் காரி யிரவிமால் வீடாய்த்
தனித்திடுஞ் சாதகன் றனக்குத், திட்டமாய் வயது அறுபது
நாலாய்ச் செப்பினர் கணிதநூ லாய்ந்தோர். (327)

அட்டமா திபனும் புகருடன் பரிதி அமர்ந்திடக் கேந்திரம்
வருமால், திட்டமா யுயிரோன் கொடியகோ ளுடனே சேரிட
முச்சமாட் சியினல், சட்டமாய்க் காரி சுபர்கள்வீ டதனிற் றனி
த்திடப் பிறந்திடுஞ் சேய்க்குத், திட்டமாய் வயது யெழுபத்தைந்
தாகச் செப்பினர் கணிதநூ லாய்ந்தோர். (328)

சோதிட வகையா லைந்தினோ னுடனே துணிவுடன் பாம்புவந்
துற்றால், நீதமாய் வயது அறுபத் தைந்தாக நிச்சய மாமென
வுரைத்தார், போதவே யெட்டோன் மறைந்திடு மானுற் பொன்
றிடுமைம்பதோர் வயது, சாதகன் றனக்கு வயதுயிப் படியே சாற்
றினர் கணிதநூல் விதியால். (329)

வேறு.

அட்டமத்தோன் கரியோடு பவர்கள்சேர்ந்து
அருணன்மதி கரிவீடாய் அமைவதானல்
திட்டமுடன் ஐந்துபத்தோன் உயிரோனேடு
சேர்ந்துஇக்கோள் சேய்வீடாய்த் தரிக்குமாகில்
கட்டிடுந்தன் வருமுயிர்க்கு வயதுஒன்பான்
கருத்துடனே ஐந்துரெண்டு யிருப்பன்மாதோ
அட்டமத்தோன் கரியோடு சுபர்கள்சேர்ந்தால்
ஐம்பதெட்டு நாற்பதென அழியுந்தேகம். (330)

வேறு.

கரியவன் உயிரோன் புகருபாம் போடு கதிரவன் வீட்டினில் வருமால், சதியுடன் பெட்டோன் குருவுகே துடனே சாரிடம் பவர்மனே யாகில், விதியுட னைந்தோன் பாவர்க ளுடனே விளங்கிட யில்லமொன் றுனல், பதிதனில் வயது அறுபதொன் ருகப் பகர்ந்தனர் சாதகன் றனக்கே. (331)

குருவுடன் காரி யெட்டுமைந் தோனுங் குளிர்மதி வீட்டினில் வருமால், வருமுயிர்க் கோளன் பத்தினே னுடனே வளருகேந் திரந்தனில் வந்தால், தருமுயிர் சேய்க்குப் பத்துநால் ரெட்டி சாற்றினர் கெணிதநூ லாய்ந்தோர், குருவுடன் காரி யெட்டுஐந் தோனுங் குருவுசேய் வீட்டினில் வருமால். (332)

வருமுயிர் சேய்க்கு வகுத்திட்டார் வயது மதித்தனர் முன்னுரை பாதி, உறுதியென் றுரைத்தார் கணிதநூல் விதியா லோதிடுஞ் சாதகன் றனக்குத், தருமுயிர்க் கதிபன் பத்தினேன் ருனுஞ் சாரிடம் மறைந்துபோ யிருந்தால். குருகிடும் வயது முன்னதிற் பாதி குறித்தனர் கணிதநூ லாய்ந்தோர். (333)

காரிமால் குருதி வெள்ளிபொன் னேடு கதிரவன் வீட்டினி லேக, நாரியிக் கோட்கள் தானமே சுத்தம் நல்மதி வீடுபா மூனல், கூரிட வுதிக்குஞ் சாதகன் வயதோ குறித்தனர் யிருபத் தொன் ருகக், காரிமால் குருதி வெள்ளிபொன் னேடு காரி சேய் வீட்டினில் வந்தால். (334)

வந்திடு முயிர்க்கு வகுத்தனர் வயது மால்பரி வெள்ளிபொன் தொகையாங், தந்திடும் வயது பத்துஆ றதனிற் சர்ப்பமாய் நெடுவிதத் தத்து, விந்தையாய் வருமால் மாய்ந்திடு மெனவே விதித்தனர் கணிதநூ லாய்ந்தோர், சிந்தையாய் வயது யிருபதா றதனிற் செத்திடுந் தந்தையர் கருமம். (335)

வேறு.

மாலவன் குருவீ டேக மந்திரி மால்வீ டாகச்
சாலவே யெட்டோன் காரி சாரிடம் பிலமா வானல்
ஏலவே உயிரோ னைந்தோ னிருந்திடம் பவர்வீ டானல்
தூலமாய் வயது முப்பத் தைந்துடன் றுலையுந் தேகம். (336)

வேறு.

அட்டமா திபனுங் காரிபத் தோனும் அருணனுஞ் சூரிய னென்ருய், நிட்டைமால் வீடாய்த் தரித்திட மறையால் நிருபனுந் தானுமொன் றுனல், திட்டமாய் வளருஞ் சாதகன் வயதைச் செப்பலா மெழுபத்தொன் றைந்தாய், அட்டமா திபனுங் காரி பத்தோனும் அருணனுஞ் சூரியன் மறைந்தால். (337)

மறைந்திட வருமோ சாதகன் வயதை வகுத்தனர் முன்னுரை பாதி, குறைந்திடு மெனவே கணிதநூ லாய்ந்தோர் குறித்தன ரிப்படி யாக, மறைந்திடுங் கோளோ டுயிரின்கோள் வந்தால் மாய்ந்திடும் நாலுயே மூதனல், குறைந்திடு மெனவே மேலவர் மொழியால் குறித்தனர் சாதகன் பலனே. (338)

அட்டமா திபனுங் முதுமக னுயிரோன் ஐந்துபத் தோனுமே ஒன்ருய்த், திட்டமா யுயிர்க்கு ஒன்றுநா லேழுஞ் சேரிடம் பவர்மனே யானல், சட்டமா யுதிக்குஞ் சாதகன் வயது சதிருடன் நாற்பதோ றொன்று, அட்டமா திபனும் முதுமக னென்ருய் அம்புலி வீட்டினில் வந்தால். (339)

வந்திடுஞ் சேய்க்கு வகுத்தனர் வயது மால்பரி யானவன் றுகையாய்த். தந்திடு மென்று கணிதநூல் விதியாற் சாற்றின ரிப்பல னுகும், முந்தவே உயிரோ னைந்துபத் தோனும் மதுமகன் வீட்டினில் வருமால், விந்தையாய் வயது யெட்டுஆ றென்ருய் விதித்தனர் சாதகன் பலனே. (340)

வேறு.

அட்டமத்திற் புகருடனே அருணனோடு
அருக்கனுமே தான்கூடிச் சுபர்வீடாகத்
திட்டமுடன் உயிர்க்கோளன் காரியோடு
சேரிடமே பிலமாக மறையாதாகில்
நிட்டைபுரி கருமத்தோன் சுபரேயாகி
நின்றயிடம் பிலமாக உதிப்பதானால்
திட்டமுடன் றரணிதனிற் பிறக்குஞ்சேய்க்குத்
திறமுடனே யெண்பதுநால் வயதுசாற்றே. (341)

சாற்றிடவே கருமத்தோன் பகைநீசங்கள்
சட்டாட்டந் தீக்கோட்க ளில்லமானால்
ஏற்றமுட னுயிர்க்கதிபன் அரவமோடு
இருந்தயிடஞ் சுபர்வீடா யிருப்பதானால்
மாற்றமுடன் முன்னுரைத்த வயதில்நாசம்
மாயுமென யிருபதுநால் வகுத்தார்மேலோர்
தேற்றமுட னட்டமத்தோன் பகைநீசங்கள்
சேருமிடந் தீக்கோட்க ளில்லமானால். (342)

மாயுமெனப் பெரியோர்கள் மொழியென்றோது
மாய்ந்திடுமே முன்னுரைத்த வயதிற்பாதி
தேய்பிறையாய் உயிரோனாய்ப் பிறக்குஞ்சேய்க்குத்
திறத்தப்பாய்ப் பதினாலி விறப்பான்பாரு
தாய்வழியா லவன்றனக்கு மனைவிசேருந்
தந்தையர்தாய் கருமத்துக் குதவானப்பா
சாயகமே யுயிர்க்கதிபன் பிலத்தப்பானால்
சாற்றலாந் தரணிதனி விறப்பான்மாதே. (343)

வேறு.

அட்டமா திபனும் அருணனும் பொன்னு மாறிறோன் றானு மொன் றாகத், திட்டமா யுயிர்க்கு ஒன்றுநா லேழிற் றிடமுடன் பத்தினில் வருமால், சட்டமா யுயிரோன் காரியு மைந்தோன் சாரிடம் பாவர்வீ டானால், திட்டமா யுதிக்குஞ் சாதகன் வய தோர் செப்பினார் முப்பத்தொன் றதனால். (344)

வேறு.

அட்டமா திபனும் பொன்னு மருணனுங் குசன்வீ டேகத்
திட்டமா யுயிரோன் காரி சேரிடம் பிலமா வானால்
சட்டமாய் மதியைந் தோனுஞ் சாரிடம் மறையா தானால்
திட்டமா யறுபத் தேழாய்ச் செப்பிடும் வயதென் றோதே. (345)

ஓதிடு மைந்தோ னோடு உயிர்க்கடுங் கோட்கள் சேர்ந்தால்
சேதமென் றுரைத்தா ரெட்டு செப்பிடுந் தரணி மீதே
நீதமா யுயிரா மென்று நிச்சய முரைக்க லாகும்
வேதமாய்ச் சேய்வந் துற்றால் விதித்தன ரைந்து தள்ளே. (346)

வேறு.

அட்டமா திபனும் அருணனும் புகரும் அம்புலி காரிசே யோடு, திட்டமா யுயிர்க்கு மூன்றுஆ றெட்டிற் சேரவே பன்னிரண் டானால், சட்டமா யுதிக்குஞ் சாதகன் வயதோர் சாற்றினா ரைம்பத் தொன் றைந்தா, யட்டமா திபனு மருணனும் புகரும் அம்புலி காரிசேய் மறையால். (347)

மறைவிலா தாகில் வந்திடுஞ் சேய்க்கு வகுத்தனர் ஆயுளை மதிக்கக், குறைவிலா திருப்பன் குடும்பயோக் கியனாங் குறித்தன ரெண்பதொன் வயதோர், முறையுடன் கணித்தார் வயதுதன் விதியை முடித்தனர் மரணநாள் வரைக்கும், மறையவன் வழியாற் செல்வம்வந் துதிக்கும் மதித்தனர் கணிதநூ லாய்ந்தோர். (348)

வேறு.

கரியவன் குசன்வீ டேகக் கலைமறை புகர்சே யோடு
வருமுயிர் தனக்கு ஐந்தில் வந்திடச் சுபர்வீ டாகத்
தருமுயிர்க் கதிப னெட்டோன் சாரிடம் பவர்வீ டானால்
வருமுயிர் சேய்க்கு முப்பத் தைந்துடன் வயதென் றோதே. (349)

காரிமா விரவி பொன்னன் கருதுயிர்க் கோளனோடு
சூரியன் வீட்டிற் சேரச் சுபர்களே முன்பின் றோன்றக்
கூறுமா றெட்டோ னைந்திற் குறுகிடந் தனிப்பா னாகில்
காரிமால் தொகையால் மேலோர் கருதினர் வயதென் றோதே. (350)

வேறு.

அட்டமா திபனுங் காரிகே தோடு அமர்ந்திடக் காரிகேந் திர மால், திட்டமா யுயிரோன் மால்புக ருடனே சேரிடம் மறைவிலா தாகில், மட்டுவார் குழலே சாதகன் வயதை வகுத்தனர் மேலவர்

மொழியால், திட்டமா யுரைக்க ஐம்பது நாலாய் செப்பிடுங் கணிதநூ லாய்ந்தோர். (351)

வேறு.

மதிமக னுயிர்க்கோ ளோடு வருமிடம் மறையா தாகிற்
சதியுடன் காரி யெட்டோன் சாரிடஞ் சுபர்வீ டானால்.
விதியுடன் உயிரிற் பாவர் விளங்கிடத் தனிப்ப தானாற்
பதிதனிற் பிறக்குஞ் சேய்க்குப் பகராயுள் முப்பத் தொன்றே. (352)

அட்டமா திபனுங் கேதும் அருணன்வீ டதனிற் கூடத்
திட்டமா யுயிரோன் காரி திங்களும் நட்ப தானால்
கட்டிடுங் குருதி பொன்னன் கதிரவன் வீட்டிற் போனால்
சட்டமாய்ப் பிறக்குஞ் சேய்க்குச் சாற்றினா ரறுபத் தேழாய். (353)

கரியவன் கதிர்வீ டேகக் கதிரவன் பிலமா வானால்
வருமுயிர்க் கோளன் றானும் வருமிட மறையா தாகிற்
சதியுடன் பாம்போ டாகிற் சார்ந்திட மறைவ தானாற்
றுரிதமாய் நாற்பத் தாறாய்த் துணிவுடன் வயதென் றோதே. (354)

மந்தனும் மால்வீ டேக மாலவன் மறைவீ டாகப்
புந்திவீ டதனி லெட்டோன் பொருந்திடத் தனிப்பா னாகிற்
சிந்தையா யுயிர்க்கோள் தானுஞ் சேரிட மறையா தாகில்
வந்துயிர் புகர்மா லாரல் மதிதொகை வயதென் றோதே. (355)

அட்டமா திபனுங் கேதும் அருணனும் ஓர்வீ டாகத்
திட்டமா யுயிரிற் காரி சேர்ந்திடந் தனிப்பா னாகிற்
சட்டமா யைந்தின் கோளுந் தரித்திட மால்வீ டாகத்
திட்டமாய் வயது ஐந்தாய்ச் செப்பிடுஞ் சாத கற்கே. (356)

அட்டமந் தன்னில் வெள்ளி அமர்ந்திடப் பவர்வீ டாகத்
திட்டமா யுயிர்க்கோள் காரி சேர்ந்திடப் புகர்வீ டுற்றால்
கட்டிடு மாரல் தானுங் கதிரவன் வீட்டில் வந்தாற்
சட்டமாய் வயது நாலாய்ச் சாற்றிடுங் கணித நூலே. (357)

மிதுனலக் கினமே தோன்ற வெய்யவன் றானுஞ் சுங்கன்
சதியுடன் மறையா தாகிற் சாரிடந் தான நாதன்
மதியுட னில்லஞ் சேர மந்திரி மாந்தி பாம்பு
விதியுடன் ஒன்றாய்ச் சேர விளங்கிட அட்ட மத்தில். (358)

அட்டமந் தன்னிற் செவ்வாய் அமர்ந்திட அதனிற் கேது
திட்டமா யதற்கு நாதன் சேரிடஞ் சுபர்வீ டானாற்
சட்டமா யுதிக்குங் கோதை தரணியில் வயது சாற்றத்
திட்டமா யெழுபத் தொன்று திறமுட னிருக்கு மாதே. (359)

வேறு.

அட்டமா திபனும் வளருகேந் திரத்தி லமர்ந்திடப் பவரிருந் திடுகில், திட்டமா யுயிரோன் கொடும்பவ ருடனே சேரிட மறைவிலா தாகில், திட்டமா னுடனே காரியுங் கூடி நின்றிட மறைந்திடா தானால், சட்டமாய்ப் பிறக்குஞ் சேய்க்குமே வயது சதிருடன் நாற்பது வாமே. (360)

வேறு.

மதிமகன் புகர்வீ டேக மந்தனும் பிறைவீ டாகச்
சதியுடன் மதிசே யோடு சாரிடஞ் சனிவீ டாக
விதியுட னுயிர்க்கு நாதன் வெய்யவன் மாந்தி யோடு
அதியமா யுயிர்க்கீ ராறி லமர்ந்திட வருவ தானால் (361)

வேறு.

மிதுனலக் கினமாய்த் தோன்றிட வதனில் விளங்கிய லக்கின நாதன், சதியுட னுயிர்க்கு நாலினில் வருகச் சசிபுகர் காரியு மதனில், கெதிபெற வேழோன் உதயகேந் திரத்திற் கேதுசே யுடன் வரு மானால், சதியுட னுதிக்குஞ் சாதகன் வயதைச் சாற்றினா ரெண்பத்தொன் றாமே. (362)

எண்பத்தொன் றாக வுரைத்தனர் கணித ரியல்புடன் யேழினிற் பாவர், தண்பட யிருக்கில் ஆறுநா லெட்டிற் றாமும் வருமென மொழிந்தார், செண்பக நிறத்தாய் அரவுநாள் வருகிற் சேர்த்திடும் மங்கையர் தனமும், மண்படப் போகும் சாதகன் றனக்கே வகுத்தனர் சோதிட நூலோர். (363)

வேறு.

கரியவன் புகர்வீ டேகக் கலைமறை மறையா தாகில்
வருமுயிர்க் கோளன் றானும் வருமிடம் பவர்வீ டுற்றால்
சரியுடன் முக்கோள் தானுந் தனித்திடப் பிறந்த சேய்க்குத்
துரிதமாய் மரண வாழ்நாள் சொல்லினர் கரிவந் துற்றால். (364)

வந்திடுங் கரிவந் துற்றால் மாய்ந்திடும் வயதென் றோது
சிந்தையாய் முக்கோ ளோடு சேர்ந்திடச் சுபர்வந் துற்றால்
வந்திடு மிறைவன் நாளில் வகுத்தனர் கணித நூலோர்
விந்தையாய் ஐம்பத் தைந்தாய் விளங்கிடுந் தரணி மீதே. (365)

அட்டமா திபனும் பொன்னும் அருணனும் புகர்வீ டாகத்
திட்டமா யுயிரோன் காரி சேரிடஞ் சுபர்வீ டானால்
சட்டமா யுதிக்குஞ் சேய்க்குச் சதிருடன் வயதென் றோதத்
திட்டமாய் முப்பத் தாறாய்ச் செப்பினர் கணித நூலோர். (366)

வேறு.

மேடமாய்த் தோன்றி லக்கின முதிப்ப விளங்கிடும் லக்கினத் ததிபன், நீடிய யெட்டோன் காரியோ டேகி நின்றிட ஆட்சிநட் பானால், கூடிடுங் கோட்கள் பவரிலா திடுகில் குறித்தன ரவற்குமே மேலோர், ஓடிடும் வயது ஒன்பதைந் தாக உரைத்தனர் கணித நூல் விதியால். (367)

கரியவன் யிறைவன் புகருகே துடனே கதிவரன் வீட்டினில் வருமால், சரியுட னுயிர்க்கோ ளெட்டினோ னுடனே சாரிடம் வளருகேந் திரமாய், வருமுயிர் தனக்கு ஐந்தினோன் மதியாய் வருமிடம் பவரிலா திடுகில், தருமுயிர் வயதை வகுத்தனர் பெரியோர் சாற்றினா ரெழுபத்தா றதனால். (368)

மாலவன் குருதி புகருகே துடனே வருமிட மறைவிலா திடுகில், நீலனு முயிரோ னைந்தினோ னுடனே நின்றிடச் சுபர்களில் லானாற், சாலவே பிறக்குஞ் சாதகன் றனக்குத் தந்திடுங் கணித நூல் விதியால், மாலவன் குருதி புகர்துகை யாக வகுத்தனர் வயதென நூலோர். (369)

வேறு.

கரியவ னுயிரிற் சேரக் காரணன் பிலத்தப் பாக
வருமெட்டோன் குருதி யோடு வந்திட வுயிர்க்கு நாலில்
தருமுயிர் தனக்கு யேழிற் றனித்திடப் பரிதி வந்தால்
துரிதமாய்ப் பிறந்த வன்றே துஞ்சிடும் பிறந்த சேயாம். (370)

வேறு.

அட்டமா திபனுங் காரியு முயிரோன் ஐந்தினோன் றானு மொன் றாகத், திட்டமா யுயிர்க்கு ஆறுமூன் றெட்டிற் சேர்ந்திடச் சுபமிலா திடுகில், சட்டமாய்ப் பிறக்குஞ் சாதகன் றனக்கு சாற்றினார் கணிதநூ லாய்ந்தோர், திட்டமாய் வயது மூன்று ஆறதனிற் செத்திடும் பிறந்ததோர் சேயாம். (371)

அட்டமா திபனுங் காரியு மோர்வீ டமர்ந்திடக் கேந்திரத் துறுமால், திட்டமா யுயிரோன் உதையகேந் திரத்திற் சேர்ந்திடப் புகர்பவ ருடனே, சட்டமா யிறைவன் ஆல்வீ டதனிற் றனித்திடப் பிறந்தசே யதற்குத், திட்டமாய் வயது ஐம்பத்தைந் தாகச் செப்பினார் சாதகன் றனக்கே. (372)

சாதகன் றனக்கு ரவிமதி குருதி சதிருடன் பாம்புதன் திசையில், வேதமா யோகம் வருமெனக் கணிதர் விதித்தனர் பரிதிதன் திசையில், ஓதினார் பிலமாய் அரசர்தன் யோகம் உரைத்தனர் குருதிநாள் வரையும், சாதகன் றனக்கு வெகுநிதி பூமி சார்ந்திடும் அன்னிய தேசம். (373)

வேறு.

கரியவ னுயிர்க்கோ ளோடு கருத்துடன் பிலத்தப் பாகச்
சரியுட னெட்டோ னைந்தோன் சாரிட மறைவ தானால்
வருமுயிர் தனக்கு மேலோர் வகுத்தனர் வயதென் றோது
குறுகிடும் பதின்மூன் றாகக் கோள்வய துரைத்தார் மேலோர். (374)

வேறு.

மதிபுகர் மால் கரிவீடாய்த் தரித்திடவே கரியும்
வரவவர்க்கு யீராறில் வந்திடவே தனிக்கச்
சதியுடனே சேயிறைவன் உயிர்க்கோள னுடனே
சாரிடமே மறையாமற் சுபர்வீடாய் வருமால்
விதியுடன்சேய் பிறந்திடும்நாள் யெழுபதனிற் றந்தை
விஷமுடனே மாய்ந்திடுவன் விளங்குமன்ய தேசம்
கதிபெறவே சாதகன்றன் பலனுமிது வென்று
கணித்தனர்கள் யெழுபதென வயதெனவே மேலோர். ()
பீதகனு முயிர்க்கோளாய்க் கேந்திரமே விடுகிற்
பின்முன்பு சுபர்வருகிற் சுபக்கிரக மதனால்
நீதியுடன் காரிமதி ஐந்தின்கோ ளுடனே
நின்றயிடம் மறையாமற் சுபர்மனைவந் திடுமால்
ஓதிடவே னிப்படியே தோன்றிவருஞ் சேய்க்கு
உரைத்தனர்க ளதியோகம் உயர்வுடனே வாழ்வை
சாதகன்றன் மாணமது கணிதமொழி நூலால்
சாற்றினர்கள் காரிகுரு புகர்தொகையென் றோதே. (376)

அட்டமா திபனும் பொன்னும் அம்புலி புகர்பா னேடு
திட்டமா யோர்வீ டாகிச் சேர்ந்திட உயிர்க்கோ ளாட்சி
சட்டமாய்க் காரி யேழிற் றனித்திடச் சுபர்வீ டானல்
திட்டமாய்ப் புகர்மால் காரி சேய்பரி தொகையென் றேதே. (377)

ஓதிடும் வயது நூலோர் உரைத்தனர் சாத கற்கு
வேதமாய் மொழியென் றேதி விதித்தனர் கணித மாய்ந்தோர்
நீதமாய் அட்ட மத்தில் நின்றிட அரவஞ் சேர்ந்தால்
சேதமா யேழு தள்ளித் திறமுடன் வயது சாற்றே. (378)

சாற்றவே அட்டமத்திற் சனிதனித் திடினு மானல்
ஏற்றமுன் னுரையி லேந்து யிசைவுடன் நாசங் காட்டுந்
தோற்றிட வுயிரிற் பாவர் தோன்றிடத் தனிப்பா னகில்
மாற்றிடும் வயது பத்து மாயுமென் றுரைத்தார் நூலோர். (379)

அட்டமா திபனும் பொன்னு மருண னுங் கரிசே யோடு
நிட்டைமால் புகர்வீ டாகி நின்றிட மறையா தாகில்
சட்டமா யுதிக்குஞ் சேய்க்குச் சாற்றின ரெழுபத் தேழு
அட்டமா திபனும் பொன்னு மருண னுங் கரிசேய் வேறும். (380)

வேதமாய் மறைவ தானல் விளம்பிடுங் கணித நூலால்
நீதமாய்ப் புகர்சே யாண்டு நிகழ்த்தினர் வயதென் றேதே
ஓதிடுங் கரிசேய் பொன்னு முயர்வுடன் பிலமா வானல்
சாதகன் றனக்கு ஆயுள் சாற்றின ரைம்பத் தெட்டே. (381)

வேறு.

அட்டமா திபனும் அட்டமந் தன்னி லமர்ந்திடக் கடும்பவ ருடனுய்த், திட்டமா யுயிரோன் காரிபொன் னேடு சேரிடஞ் சுபர்மனே யதனுற், கட்டிடும் வயது காரிமால் தொகையாய்க் கருத்துட னுரைத்தனர் நூலோர், திட்டமா யுயிரோன் நீசம்வந் திடுகிற் சேதமா யைந்துட ஞெழியும். (382)

வேறு.

கரியவன் றன்வீ டாகக் கலேமுறை பிதிர்த்தா னத்தில்
சரியுட னுயிர்க்குள் ளோனுஞ் சற்குரு புகரே யானல்
துரிதமா யெட்டோ னேந்தோன் சோமனும் பூம னனல்
உறுதியா யவன்றன் யாக்கை உரைக்கலா மறுபத் தொன்றில். (383)

சூரியன் யெட்டின் கோளுந் தோன்றிடக் காரி வீடால்
சாருமக் கோளன் மாறித் தரித்திடச் சுபர்க ளோடு
கூறுயிர்க் கோளன் வாக்கிற் குறுகிடச் சுபரோ டானல்
காரிபொன் புகர்நா ளாகக் கருதினர் வயதென் றேதே. (384)

ஓதிடு மிருபத் தொன்றுமே னுரைத்தனர் முயற்சி செல்வம்
வேதமாய்ச் சமன மென்று விதித்தனர் மறைநாள் மட்டும்
ஓதிடுங் கரிநாள் வந்தா லுரைத்தன ருயர்ச்சி பூமி
நீதமாய் வருமென் றேதி நிகழ்த்தினர் பலன மற்பம். (385)

வேறு.

மிதுனமாய்த் தோன்றி லக்கின முதிப்ப விளங்கிய லக்கின நாதன், உதயகேந் திரத்திற் புகர்பரி பாம்போ டுதித்திடக் கேது பொன் மறையச், சதியுடன் காரி சொந்தவீ டதனிற் றனித்திட முன்புபின் பவரால், பதிதனிற் றேன்றுஞ் சாதகன் வயது பகர்ந் தன ரெழுபத்தொன் றதுவே. (386)

அட்டமா திபனுங் காரிசே யுயிரோ னமர்ந்திடம் மறைந்தி டா திடுகில், திட்டமாய் மதியும் அட்டமந் தன்னிற் சேர்ந்திடத் தனித்திடு மாகில், சட்டமாய்த் தாரணி தன்னிலே விளங்கச் சங்கரன் கணிதநூல் விதியால், திட்டமாய் வயது ஐம்பத்தெட் டாகச் செப்பினர் சாதகன் றனக்கே. (387)

சாதகன் றனக்குப் பாம்புபொன் காரி தங்கிய திசைதனில் யோகம், வேதமாய் வருமென் றேதினர் பாம்பு விரைவுடன் மாலவன் வந்தால், போதவே யோகம் வெகுதிற மாகப் பொருந்திடும் பாம்புநாள் வரையும், ஓதின ரிறைவன் திசைவரு முதலே உரைத்தனர் வெகுநிதிக் குடையோன். (388)

இறைபவன் திசையில் ராஜயோக் கியமாய் இருநிதி பூமிசேத் திரங்கள், குறைவிலா திருப்பன் குடும்பயோக் கியனுங் குறித்தனர் அரசர்சந் தோஷம், மறைபவன் திசைநாள் வகுத்தனர் நூலோர் வருங்கரி திசைவரு மாகில், விரைவுடன் விஷத்தால் தத்தென நூலோர் விதித்திடு மாய்ந்திடு முடனே. (389)

அட்டமா திபனுங் காரிமா லுயிரோன் அருக்கனு முதயகேந்திரமாய்த், திட்டமாய் மதியும் பத்தின்கோ ளுடனே சேரிடம் மறைந்திடா திடுகில், சட்டமாய்த் தோன்றுஞ் சாதகன் றனக்குச் சாற்றினார் வயதுயெண் பதுவாம், அட்டமா திபனு முயிர்க்குளோன் மறைந்தா லறைந்தனர் வயதெழு பதுவாம். (390)

அட்டமா திபனுங் காரிமால் பரிதி அமர்ந்திட வுயிர்க்குயீ ராறில், திட்டமா யுயிரோன் பத்தின்கோ ளுடனே சேரிட மறைந்திடா திடுகில், சட்டமாய்த் தோன்றுஞ் சாதகன் றனக்குச் சதிருட னிருபது வயதாம், அட்டமா திபனும் பத்தின்கோள் மறைந்தா லறைந்தனர் மூன்றுரை பாதி. (391)

வேறு.

குருதிஉயிர்க் கோளாகிக் கரிமனைவந் திடுமால்
கோளனுயிர் தனிற்சேரச் சுபர்பவர்வந் திடவே
சுருதிஉயிர் தனக்காறில் மதிமகன்பா னோடு
தோன்றிடஅக் கோடனையுஞ் சுபர்பவர்நோக் கிடுமால்
கருதிஉயிர் பிறந்திடுஞ்சேய் வயதெனவென் றோது
கருதுபவர் அட்டமத்திற் கருத்துடன்தோன் றிடுமால்
அறுதியிவன் மரணமது உரைத்திடவென் றோத
அறைந்தனர்கள்புகாருணன் அந்தணன்சேய்தொகையாம்.

ஆரலுயிர்க் கோளாகிக் கேந்திரமெய் திடுமால்
அக்கோள்பொன் யெட்டோனும் அம்புலிமால் வீடால்
வீரமுடன் ஐந்தோனும் மாலுடன் சேர்ந் திடுமால்
விளங்குமக்கோள் தனைப்பாவர் விரைவுடன்வந் திடுமால்
தாரணியிற் பிறந்திடுஞ்சேய் வயதெனநூல் மேலோர்
சாற்றினர்கள் முப்பதுவாய் ஜல்தியில்மாய்ந் திடுவன்
சேருமொழி யிதுவெனவென் றோதினர்கள் நூலோர்
செப்பிடுமே யிப்பலனைத் தெரிந்துரையென் றோதே. (393)

காரிஉயிர் தனிற்சேர மாந்திபுக ருடனே
கருதுமக்கோள் பிலமாகித் தனித்திடவே வருமால்
சூரியன்மா லுடன்சேர்ந்து சுபர்மனைவந் திடவே
தோன்றுமிடம் மறைந்திடவே சுபர்பவர் பார் வையினால்

சீருடனே ஐந்தின் கோள் மால்மதிவீ டாகிச்
சேரிடமே மறைந்துதனித் திடினும்வரு மாகிற்
கூறினர்கள் வயதுதொகை கணிதமொழிப் படியே
குறித்தனர்கள் காரிபுகர் மால்பரிதி தொகையே. (394)

அட்டமத்தோன் காரிஉயிர்க் கோளுடனே ஒன்றாய்
அம்புலிமால் வீடேகிப் புகர்குருநோக் கிடுமால்
திட்டமுட னைந்தின்கோள் சூரியன்சேய் வீடாய்
தினகரனு மதிற்சேரச் சுபர்களும்வந் திடுமால்
சட்டமுட னிவ்விதமாய்ப் பிறந்திடுஞ்சேய் வயதைச்
சாற்றினர்கள் கணிதமொழிப் படியெனவே நூலோர்
திட்டமுடன் காரிபுகர் மால்பரிதி குருதி
சேருதொகை யெனமொழியச் செப்பிடுஞ்சேய் மரணம்.

மால்பரிதி கேதுடனே சூரியன்வீ டேகி
வரவவர்முன் பவர்வருகிற் சுபக்கிரக மதனால்
சீலமுடன் காரி உயிர்க் கோளுடனொன் றாகிச்
சேரிடமால் வீடதுவாய் தரித்திடவே வருமால்
தூலமுடன் சேய்பிறக்கும் வயதெனவென் றோதத்
தொகுத்தனர்கள் காரிபுகர் மால்குருவு தொகையாம்
மால்பரிதி கேதுடனே மாலவன்வந் துற்றால்
மாய்ந்திடுவன் சேய்பரிதி மந்திரிநாள் தொகையாம். (396)

மந்திரிசேய் காரிஉயிர்க் கோளுடனே வொன்றாய்
வருமுயிர்க்கு நாலதிலே வந்திடவே பவராய்
விந்தையுயிர் தனிற்கோளன் அட்டமத்தோ னுடனே
மேவிடவே சுபர்வீடாய்ச் சுபர்வரினு மாகில்
வந்திடுஞ்சேய் வயதெனவே வேதமொழிக் கணிதர்
வகுத்தனர்கள் யெழுபதினால் மரணம்வரும் மாதே
மந்திரிசேய் காரியுயிர் கோளுடனே மறைந்தால்
வகுத்தனர்கள் மால்பரிதி மதிதொகையென் றோதே. ()

காரிஉயிர்க் கோளுடனே மதிவீடேகிக்
கருதியக்கோள் கேந்திரமாய்ப் பவரோடானால்
சூரியன்மா லுடன்சேர்ந்து சுபர்வீடாகித்
தோன்றுமிட மறையாமற் றரிக்குமாகில்

சீருடன்முக் கோளுடனே பவர்வந்துற்றால்
செப்பிடுமால் கரிபுகர்பொன் சேருதொகை வயதோர்
காரியுயிர்க் கோளுடனே மறைந்துநெடு நீசங்
கடும்பவர்வீ டுற்றிடவே ஐம்பதுயெட் டாயுள். (398)

காரியுடன் மால்பரிதி பவர்மனைவந் திடவே
கருதியக்கோள் லக்கினக்கோள் சுபர்மனைவந் திடுமால்
வீரமுடன் காரியுயிர்க் கோளனுமெட் டோனும்
விளங்கிடுங்கேந் திரமாகிப் பவர்வரினு மானல்
பார்தனில்வந் திடுஞ்சேய்க்கு வயதுயென வோத
பரிதிதொகை யாகவெனப் பகருமொழி மாதே
சூரியன்மந் தனுமாலுஞ் சுபர்மனையில் மறைந்தால்
தோன்றிடுநாற் பதுமூன்றாய்ச் சொல்லுமென வாயுள். ()

வேறு.

மந்தனும் புகர்வீ டேக மதிமகன் அதனிற் சேரச்
சந்திர னெட்டோ னேந்தோன் சாரிடம் மறைவ தாகில்
விந்தையா யுயிர்க்கோள் கேது விளங்குகேந் திரமே யானல்
வந்திடுஞ் சேய்க்கு ஆயுள் வகுத்தனர் நாற்பத் தொன்றாய். (400)

அட்டமந் தன்னி லாசா னமர்ந்திடச் சுபர்வீ டாகத்
திட்டமா யுயிர்க்கோ ளாட்சி சேர்ந்திடச் சுபர்க ளோடு
சட்டமாய்க் காரி யெட்டோன் சாரிட மறைபா தாகில்
திட்டமா யிருபத் தைந்தாய்ச் செப்பினர் சாத கற்கே. (401)

வேறு.

சூரியனும் உயிரோனுங் கரிபொன் மாந்தி
தோன்றுமிட மறையாமற் கரிமனைவந் திடுமாற்
சாருமுயிர்க் கட்டமத்தோன் பவராகிப் புகருஞ்
சார்ந்திடக்கேந் திரமாகி சுபர்மனைவந் திடுமால்
கூறுமுயிர்ச் சாதகற்கு வயதறுபத் தொன்றாய்
குறித்தனர்கள் கணிதமொழிப் படியெனவென் றுரையே
காரிகுரு மாந்தியுடன் பவர்மனையாய் மறைந்தால்
கருதும்வய திருபத்தைந் தினிற்கண்ட மாமே. (402)

மாதவமாய்த் தோன்றிடுஞ்சேய் வயதிருபத்தொன்மேல்
வகுத்தனர்க ளுபர்ச்சிநிதி வரும் பலனென்றுரையே
வேதமாய் அற்பபலன் தோன்றிடுமே சமனுய்
விதித்தனர்கள் கரிவரைக்கும் விளங்கிடுஞ்சாதகற்கு
ஓதிடவே கரிமுதலே பூமியினுற்பிலமா
யுரைத்தனர்க ளதிகபலன் உரைத்திடும்நூல்மொழியால்
நீதியுடன் பலன்சமனுய் சேர்ந்திடுமே சேய்க்கு
நிகழ்த்தினர் கணிதமொழி நூல்விதியென்றேதே. (403)

காரிஉயிர்க் கோளுடனே புகரோடேகிக்
கடும்பவர்வீ டேகிஅக்கோள் மறையாதாகிற்
சூரியன்மா லுடன்சேர்ந்து பவர்வீடேகித்
தோன்றுமிடம் மறையாமல் வருமேயாகில்
பார்தனிலே வருமுயிர்சேய் வயதெனவென்றேதப்
பகர்ந்தனர்கள்யெழுபத்தொன்பானெனவேபெரியோர்
சூரியன்மா லுடன்மறைந்து சுபர்வீடுற்றால்
தொகுத்திடுமன்பது அஞ்சாய்ச்சொல்லினர்மேல்நூலோர்

சூரியனும் உயிரோனும் புகரும்ஒன்றாய்த்
தொல்பவர்வீ டேகியிக்கோள் மறையாதாகிற்
காரிபவ ருடன்சேர்ந்து பிலமாய்த்தோன்றக்
கருதுமெட்டோன் சுபராகித் தனிப்பானுகிற்
சீருடனே வருஞ்சேய்க்கு வயதுநூலோர்
செப்பினர்கள் யெழுபத்தொன் றாய்த்திறமென்றேதக்
கூறுமுயிர் தனிற்கடுங்கோள் வருவதானல்
கோள்வயது அறுபதெனக் கொடுக்குமாதோ (405)

வேறு.

அட்டமா திபனுங் காரியுங் குளிகன் அமர்ந்திடக் காரிவீ டேகத், திட்டமா யுயிரோ னுரல்கேதோடு சேரிட மறைந்திடா திடுகிற், சட்டமா யைந்தோன் அருணன்வீ டதனிற் றனித்திடப் பிறந்தசா தகற்கு, திட்டமாய் வயது அறுபத்தைந்தாகச் செப்பினர் கணிதநூல் விதியால். (406)

விதியுடன் பிறக்குஞ் சாதகன் றனக்கு விதித்தனர் பாம்பு பொன் திசையில், சதியுடன் முயற்சி சகலமுஞ் சமனுய்ச் சார்ந் திடும் ராகுநாட் பாதி, பதிநிதி பூமி முயற்சிமே லாகப் பகர்ந் தனர் பொன்னவன் வந்தால், அதிகயோக் கியமாய்க் கணிதநூல் மொழியா லறைந்தனர் சாதகன் பலனே. (407)

வேறு.

அட்டமா திபனுங் கேது மம்புலி ஓர்வீ டாகித்
திட்டமா யுயிரிற் பாவர் சேர்ந்திட உயிரோன் றுனுஞ்
சட்டமாய்க் காரியோடு தரித்திட மால்வீ டானுல்
திட்டமாய் வயது ஐம்பத் தைந்தெனச் செப்பு மாதே. (408)

மாதவர் மொழியாற் பொன்னன் வருந்திசை யே ற்கு மாகில்
நீதமா முயற்சி மேலாம் நேர்ந்திடுஞ் சிவிகை யோகம்
போதவே கரிநாள் வந்தால் புகழ்நிதி உயர்ச்சி மேலாம்
ஓதினுர் சாத கற்கு உரைத்தனர் பலனென் றேமாதே. (409)

வேறு.

சதியாக அட்டமத்தோ னுயிரோனுகிச்
சாருமிட மறையாமற் சுபர்வீ டாக
விதியாகக் காரியுடன் ரெண்டே ழோனும்
வெய்யவனு மாந்தியுடன் பரிமால் வீடால்
மதியுடநீ ரைந்தோனு முதயமேற
வருஞ்சேய்க்குத் தாணிதனில் வயதுமேலோர்
அதிவிதியால் புகர்குருமால் தொகையென் றேத
அறைந்தார்கள் கணிதமொழி யதனுலோதே. (410)

ஓதுமுயிர்ச் சாதகற்கு குருநாள் யோகம்
உரைத்தனர்கள் சமபலனு யுரைத்தார்மோலோர்
நீதியுடன் காரிவருந் திசையிற்செல்வம்
நேர்ந்திடுமே சமபலனும் மால்வந்துற்றுல்
வேதமொழிப் படியாக உயர்ச்சிமேலாய்
விதித்தனர்கள் கரிநாளில் மதிவந்துற்றுல்
ஓதிடுவன் பிலனுகப் பூமிசெல்வம்
உரைத்தனர்க ளற்பபலன் உரைக்கும்மாதே. (411)

அட்டமாதி பனும் ஆறுமே ழோனும் அருக்கனுங் காரியும் உயிரோன், திட்டமா யோர்வீ டேகியே பிலமாய்ச் சேரிட மறைந்திடா திடுகில், சட்டமாய்த் தோன்றுஞ் சாதகன் வயது சாற்றினு ரெழுபத்தைந்தாக, அட்டமா திபனும் ஆறுமே ழோனும் அருக்கனுங் கரிஉயிர் மறைந்தால். (412)

மறைந்திடுஞ் சேய்க்கு வகுத்தனர் வயது மால்குரு சேய்மதி தொகையாம், அறைந்தனர் பிலமாய்க் கணிதநூற் படியே அம்புலி திசைதனில் யோகங், குறைந்திடா தெனவே குடும்ப யோக் கியனுய்க் குறித்தன ராசர்சந் தோஷம், அறைந்தனர் பூமி நிதிபதி உயர்ச்சி அம்புலி திசைமுழு ததனுல், (413)

அட்டமா திபனுங் காரியு மதியும் அருணனும் உதயகேந் திரமாய்த், திட்டமா யுயிரோ னுரல்கே தோடு சேரிட மறைந்திடா திடுகில், சட்டமாய்த் தோன்றுஞ் சாதகன் வயது சாற்றினு ரறுபதொன் றதனுல், அட்டமா திபனுங் காரிமால் மறைந்தால் அறைந்தனர் வயதுநாற் பதுவாம். (414)

வேறு.

மதிமகனும் புகர்சேயும் மதிவீடாக
மதியிறைவன் மந்தனுமோ ரில்லமாகச்
சதியுடன்முக் கோளுடனே பவர்வந்தெய்தச்
சனிமாலும் புகர்சேயும் சாருமிடம்பிலமாய்
விதியுடனே பிறந்துவருஞ் சாதகனும்யோகம்
விதித்தனர்கள் கேசரியாம் யோகமெனவுரையே
பதியுடன்வந் திடுமுயிர்தன் மாணமொழியெனவே
பகர்ந்தனர்கள் மதிகாரி பார்க்கவன்மால் தொகையே.

காரிமதி புகர்மாலுங் கரிமனை வந்திடவே
கருத்துடனே அவன்றனக்கேழ் கதிரவன்வந்திடவே
மாரியுயிர் தனக்கோளன் கேந்திரமேவிடவே
வபவக்கோள் தனக்காறில் மந்திரிவந்திடுமால்
சீருடனே பிறந்திடுவான் செப்பிடுஞ்சே யுயிர்க்குத்
திறமுடன்மால் புகர்காரி சேய்மதியின்றொகையாம்
காரிமதி புகர்மாலும் மறைந்திடவேவருமால்
கருத்துடன் சேய் மால்கரியாய்க்காட்டும்வகைமரணம்.

வேறு.

அட்டமா திபனுங் காரியு முயிரோ னைந்தினோன் றானுமொ ன்றாகத், திட்டமாய் வளரு கேந்திர மெய்திச் சேர்ந்திடச் சுபர் மனை யானால், சட்டமா யுதிக்குஞ் சாதகன்றனக்குச் சதிருடன் யெழுபதோ ராயுள், அட்டமா திபனுங் காரியு முயிரோன் ஐந் தினோன் வாக்கினில் வருமால். (417)

வருவது முயிர்க்குப் பத்தினோன் றானும் வந்திடப் பவர்மனை யானால், பெருமறு பதின்மே லெட்டினிற் கண்டம் பேசிட வகுத் தனர் கணிதர். தருதிரு முக்கோ ணுடன்வரப் பாம்பு தரித்திடப் பிறந்தசா தகற்கு, இருபது வயது ரெட்டியாய்ப் பதினே ழிசை யுட னோதென வுரையே. (418)

அட்டமா திபனுங் காரிமா லருக்கன் அமர்ந்திடக் கேந்திரங் குருமால், திட்டமா யுயிரோன் சுபரதாய்த் தோன்றிச் சேரிடஞ் சேய்புகர் வீடால், சட்டமா யைந்தோன் பவருடன் மறைந்தாற் சார்ந்திடும் யெழுபதாம் வயதே, அட்டமா திபனும் பரிதிமால் மறைந்தா லறைந்தன ரைம்பதெட் டாயுள். (419)

அட்டமா திபனுங் காரியுமுயிரோ னருக்கனும் பிறையு மொன் றாகித், திட்டமா யோர்வீ டேகியே மறையாற் சேர்ந்திடுஞ் சாதகன் றனக்குச், சட்டமாய் வயது மால்புகர் தொகை யாய்ச் சாற்றி னார் கணிதநூ லாய்ந்தோர், அட்டமா திபனும்உயிர்க்குளோன் மறைந் தால் அறைந்தனர் குருதிமால் தொகையாம் (420)

வேறு.

சோமனோடு மந்தனாகச் சுங்கனோடு கன்னியில்
நேமமாக யிடபவீடு நீசனாகப் பாவர்கள்
காமநாத னுலகமேறக் கன்னிவந்த ஆண்டினில்
நேமமாக ஒழியுமென்று நிகழ்த்தினார்கள் பாவையே. (421)

வேறு.

மதிமக னுயிரோ னாகி வரும்பவ ருடனே சேர்ந்து
சதியுட னுயிர்க்கி ரண்டிற் றரித்திட யெட்டோன் நோக்க
விதியுட னைந்தோன் காரி விரைவுடன் மறையு மாகிற்
பதிதனில் முப்பத் தொன்றாய்ப் பகர்ந்தனர் வயதென் றோதே. ()

மந்தனுங் குருவீ டேக மந்திரி உயிர்க்கோ ளெட்டோன்
வந்துமிக் கோட்கள் தானும் வளருகேந் திரமா னாலுஞ்
சிந்தையா யட்ட மத்திற் சேர்ந்திடப் பத்தோன் வந்தால்
சந்திரன் புகர்மால் காரி சதிருடன் தொகையே யாயுள். (423)

வேறு.

அட்டமா திபனுங் காரியு மோர்வீ டமர்ந்திடக் கேந்திரத் துறுமால், திட்டமா யுயிரோன் சுபரதாய்த் தோன்றிச் சேரிடம் பரிதிமால் வீடால், சட்டமா யைந்தோன் பரிதிமா லுடனே சாரிட மறைந்திடு மாகில், திட்டமாய் வயது அறுபத்தெட் டாகச் செப்பினார் சாதகன் றனக்கே. (424)

சாதகன் றனக்கு வயதுயிப் படியே சாற்றினார் கணிதநூ லாய்ந்தோர், நீதமா யிறைவன் லக்கினத் தவனை நேர்ந்துமே நோக்கிடு மானால், வேதமாய்ப் பாம்பு யிறையவன் காரி விளங் கிய திசைவரு மாகிற், போதவே முயற்சி நோக்கிடும் பலமாய்ப் பொன்னவன் திசைதனில் யோகம். (425)

இறையவன் காரி திசைதனிற் பிலமா யிசைவுடன் பூமிக்ஷேத் திரங்கள், குறைவிலா திருப்பன் அதிகயோக் கியமாங் குறித்த னர் சாதகன் பலனை, விரைவுடன் காரி திசைதனில் யோகம் விதித்தனர் மேன்மையா முயற்சி, முறையுட னிறைவன் காரிதா ன் பலனை மொழிந்தனர் சாதகன் றனக்கே. (426)

காரிமா லுடனே உதயகேந் திரத்திற் கருத்துடன் சுபமிலா திடுகிற், சாருமெட் டோனும் ஐந்துபத் தோனுஞ் சார்ந்திட வளருகேந் திரமாய்ச், சீருட னுதிக்குஞ் சாதகன் றனக்குச் செப்பிடும் அறுபதாம் வயது, பார்தனில் யோகம் வயதுபத் தேழிற் பாக்கியம் நிகரென மதியே. (427)

மதியதாங் கணிதர் யோகமென் றுரைக்க வகுத்தனர் குருதி மால் திசையிற், சதியுடன் சிவிகை யோகமென் றுரைக்கச் சாற் றினார் மேலவர் மொழியாற், கெதிபெற யிருப்பன் மரணநாள் வரைக்குஞ் கேசரி யோகமென் றுரையே, துதிபெருங் குருதி மாலவன் திசையிற் றோன்றிடுங் கெதிபெற வாழ்வன். (428)

அட்டமா திபனும் மறைந்திடப் புகரோ டமர்ந்திடப் பரிதி மா லுடனே, திட்டமா யுயிர்க்கோள் காரியோ னுச்சஞ் சேர்ந்திட வளருகேந் திரமாய்ச், சட்டமாய்த் தோன்றுஞ் சாதகன் வயதோர் சாற்றிஞ றெழுபதொன் றெனவே, திட்டமா யுயிரோன் மறைந்திடக் காரி சேரிடம் நீதமாய் வருமால். (429)

வருமுயிர் சேய்க்கு வகுத்தனர் பிலமாய் வந்திடும் வயதறு பதுவாந், தருமுயிர் தனக்கு அட்டமந் தனிலே தனித்திடக் கொடியகோ ளுற்றால், வருவது வயது அறுபது தனிலே மாய்ந்திடு மாறென அறையே, தருமுயிர் தனிலே காரிவந் துற்றால் சார்ந்திடு வயதுநாற் பதுவாம். (430)

அட்டமா திபனும் உதயகேந் திரத்தி லமர்ந்திடச் சுபர்மனை யாகத், திட்டமா யுயிர்க்கோள் பாம்புடன் கூடிச் சேரிடம் வளருகேந் திரமாய்ச், சட்டமாய்க் காரி கொடியகோ ளுடனே தரித்திடக் கேந்திரத் துறுமால், நிட்டைமால் புகழும் மறைந்திடத் தோன்றும் நின்றிடுஞ் சாதகன் றனக்கு. (431)

சாதகன் றனக்குக் கணிதநூல் மொழியாற் சாற்றினர் அறுபத்தெட் டாக, நீதமாய் வயதென் றோதினர் மேலோர் நிச்சய மாமென வுரையே, போதவே அருக்கன் ஐந்திறே னுடனே பொருந்திடப் பஞ்சமம் வருமால், வேதமாய்ப் பாம்பு இறையவன் திசையில் விதித்தனர் வெகுபலன் மாதோ. (432)

மாதவர் மொழியாற் பாம்புநாள் வருமால் வந்திடு முயற்சி பாக்கியமே, ஓதிடு முயிரோன் திசைவரு மாகில் உரைத்தனர் பூமிக்ஷேத் திரங்கள், நீதமாய் வருமென் றோதினர் பிலமாய் நேர்ந்திடும் பாக்கிய முயற்சி, போதவே அதிகந் திசைதனிற் பாதி புகட்டினர் சாதகன் பலனே. (433)

வேறு.

மந்தனு முயிர்க்கோ ளாகி வருமிடம் பிலமா வானல்
விந்தையா யுயிர்க்கு யெட்டோன் விரைவுடன் மால்வீ டேகிச்
சிந்தையாய்க் கரும நாதன் சேரிட மறைவ தானல்
வந்திடும் வயது ஐம்பத் தொன்றென வளரு மாதோ. (434)

மாதவர் மொழியாற் புந்தி வன்கொடி புகர்பான் னாளில்
போதவே அற்ப மாகப் பொருந்திடுஞ் செல்வங் காட்டும்
ஓதிய புகர்நாள் காரி வுயர்வுடன் மறையோன் வந்தால்
சேதமாய்ப் பலன்கள் நாசம் செப்பினர் சாத கற்கே. (435)

சாதகன் றனக்குச் செல்வஞ் சார்ந்திடும் புகர்நாள் மாலோன்
நீதமாய் அற்ப மாக நேர்ந்திடுஞ் செல்வ மாதே
வேதமாய் அருக்கன் வந்தால் விதித்தனர் பூமி செல்வம்
போதவே பரிநாள் மட்டும் புகழ்பெற வளரு மாதோ. (436)

கரியவன் சேய்வீ டேகக் கலைமறை மறைவ தாக
வருமுயிர்க் கோளன் றூனும் வருமிடம் மால்வீ டுற்றால்
தருமுயிர்க் கட்ட மத்தோன் சாரிடம் பரிதி வீடால்
வருமுயிர் சாத கற்கு வகுத்தன ரைம்ப தாயுள். (437)

அட்டமா திபனுஞ் சேயும் ஐந்தின்கோ ளுடனென் றூகித்
திட்டமாய்க் காரி வீட்டிற் சேர்ந்திடக் காரி யுச்சம்
சட்டமா யுயிரோன் றூனுந் தனித்திடப் பிறந்த சேய்க்குத்
திட்டமாய் வயது மால்பொன் சேய்பரி துகையொன் றேதே. (438)

ஓதிடுங் காரி புந்தி வுயர்வுடன் திசைவந் துற்றால்
வேதமாய் அதிக செல்வம் விதித்தனர் சாத கற்குச்
சேதமாய்க் கொடியோன் வந்தால் செப்பிடுஞ் செல்வ மெல்லாம்
போதவே நாசங் காட்டும் பொருந்திய புகர்நாள் யோகம். (439)

பொருந்திய புகர்நாள் பாதி புகழ்நிதி பூமி யெல்லாம்
வருந்திடுங் கீர்த்தி மானய் வகுத்தனர் சாத கற்கு
அருந்திய செல்வ நாசம் அருக்கன்வந் தேற்கு மாகிற்
பொருந்திடும் பலனு மென்று புகட்டினர் சாத கற்கு. (440)

காரிமால் குருதி பொன்னன் கருத்துடன் யிக்கோ ளொன்றாய்ச்
சாருயிர் தனக்குப் பத்திற் றரித்திடப் பாவர் பார்க்கக்
கூறிய உயிரோன் றூனுங் குறுகிட மறைவ தானல்
ஆருயி ரிருநா லேழில் அழிந்திடுந் தாணி மீதே. (441)

மாந்தியு முயிரிற் சேர வளரும்லக் கினத்து நாதன்
சார்ந்திடக் காரி வீட்டிற் றரித்திட வெட்டோ னோடு
சேர்ந்திடுங் காரி புந்தி சேரிடம் பிலமா வானால்
ஏந்திழை யாளே சேய்க்கு யிருபதை யிரட்டி யாயுள். (442)

இருபதே யிரட்டி யாக யிசைவுடன் வயதென் றோத
வருமுயிர்க் கோளன் வந்தால் வாய்த்திடும் பூமி யெல்லாம்
தருமெட்டோ னேற்கு நாளிற் றரித்திடுங் காலில் ரோகம்
கருவிழி மான்போ லுள்ள கண்ணிணை யுடைய மாதே. (443)

சேரும்லக் கினத்தின் கோளன் தினகரன் மாலோ டேகிச்
சாருயிர் தனக்கு ஐந்திற் றரித்திடக் காரி யோடு
சீருடன் அட்ட மத்தோன் சேய்புக ருடனொன் றாகி
ஒருயிர் தனிலே வந்தா லுரைத்தனம் வயது செப்பே. (444)

செப்பிய சாத கற்குச் சேர்ந்திடு மெழுப தாயுள்
முற்படி கோட்க டானும் முறையுடன் மறைவ தானாற்
றப்பிய தெழுப தாயுள் சார்ந்திடும் பாதி நாசம்
செப்பிய சாதகற்குத் திறமுடன் வயதென் றோதே. (445)

வேறு.

சுங்கனும் வெய்யோ னாறினில் வருகச் சோமனும் அரவுடனேழிற், றங்கிடு மாலும் ஐந்தினிற் றோன்றச் சவுரியம் மூன்றினிற் குறுக, மங்கலன் பொன்னன் சிகியவ னுயிரில் மந்தனார் மகனிரண் டிடத்தில், இங்கித மாகக் கன்னியு முயிராய் இப்புவி யதனில்வந் தவற்கே. (446)

வந்தவர் தமக்குச் சோதிட விதியால் வகுத்தனர் பெரியவர் தாமும், சொந்தமாய் மனதில் வஞ்சக முடையான் துலங்கிடும் பொதுநிறத் தவனாய், விந்தையா யிளைத்த மெய்யுடை யவனாய் விளங்கிடுஞ் சாதகன் றனக்குப், பந்தமாய்த் துணைவர் தோட முண்டாகும் பாடினர் கணிதவாக் கியமே. (447)

கணிதவாக் கியத்தால் மேலவர் மொழியாற் கணித்தனர் தந்தைக்கே தாரம், வனிதையே யிரண்டு முதல்வரும் வழக்கு வகுத்தனர் சாதகன் பிந்தித், தனிமையாய் வருகும் அவட்குமே புத்திரர் தந்திடு மிரண்டுதீர்க் கமுமாம், நனிதமாய்த் துணைவர் பலனிது வாக நாட்டின ராகமநூலே. (448)

நூலவர் மொழியாற் சாதகன் றனக்கு நுகர்ந்திடும் மாதுரு கருமஞ், சாலவே வருகும் மால்திசை பிற்கூர் தரித்திடும் நாளதி சாரங், காலமா மயனூ ரதனிலே மரணங் காட்டினர் புததிசை முன்னிற், சீலமாய்த் தத்து புத்திரன் வருவன் செப்புவர் சாதகன் றனக்கே. (449)

செப்புவர் மேலோர் தத்துப்புத் திரன்றான் சேர்ந்திடும் நாளதின் மீதில், ஒப்புடன் புத்திரர் மூவர்வந் திடுவர் உகந்திடு மதிற் சம வூணும், இப்புவி யதனில் யிருந்திடுஞ் சிசுவில் யெய்திடு மாதுரு வொன்றும், தப்பிடா திருந்த சாதகன் றனக்குச் சார்பினால் மயக்கரோ கமுமே. (450)

மயக்கரோ கமுமே வந்திடுஞ் சேய்க்கு மதித்தனர் கொடி திசை பிற்கூர், தியக்கமாய்த் தாரம் வந்துமே சேருந் தெரிவையர் நடத்தையுஞ் சமமாம், அயக்கமாய் மதியின் திசையதின் முடிவில் அமர்ந்திடுஞ் சேய்திசை முன்னால், வயக்கமாய்த் தோன்றி யுதித்திடுஞ் சேய்க்கு வகுத்தனர் சோதிடப் பலனே. (451)

பலனென வுரைத்த சாதகன் றனக்குப் பாம்புதன் றிசைவரும் முன்னால், சலனமாய் விசனஞ் சாதகன் றனக்கு சாற்றினார் வேதியர் தாமே, குலமதி சேய்க்கு சிகியவன் றானுங் குறுகிடா தத்திசை விட்டுப், பிலமுடன் புகர்தான் வந்திடும் முன்னால் பேணிடுந் தந்தையர் கருமம். (452)

அட்டமா திபனுங் காரிசே யோடு அமர்ந்திட மறைந்திடாதிடுகில், திட்டமா யுயிரோன் பவருடன் கூடிச் சேரிடஞ் சுபர்மனை யாகச், சட்டமா யைந்தோன் உயிர்க்குநா லதனிற் றரித்திடப் பொன்னவன் மறைந்தால், திட்டமாய் வயது ஐம்பது நாலாய்ச் செப்பிடுஞ் சாதகன் றனக்கு. (453)

சாதகன் றனக்கு மாலவன்கேது சதிருட னைந்தினோன் திசையில், வேதமா யோகம் வருமென மேலோர் விதித்தனர் மேலவர் மொழியால், ஓதிடு மைந்தோன் திசைதனிற் குருதி வுயர்வுடனுள்வரு மாகிற், பேதக மில்லை முயற்சிமே லாகப் பேணிடும் வெள்ளிநாள் வரையே. (454)

வேறு.

சேரும் லக்கினக் கோளுடன் காரியுங்
கூறு மட்டமக் கோளுடன் பத்தினோன்
சாரு மோரில்ல மாகத் தரித்திடச்
சீரு டன்வரும் சேய்வய தொன்றதே. (455)

வேறு.

சூரிய னுயிரோன் சுங்கன் தோன்றுமட் டமத்தோ னோடு
சாருயிர் தனக்கி ரண்டிற் றரித்திடச் சுபர்கள் நோக்கச்
சீருட னுயிற் காரி சேர்ந்திடச் சுபரோ டுற்றாற்
கூறினர் வயது ஐம்பத் தெட்டெனக் கொடுக்கு மாதே. (456)

கரியவன் குருவீ டேகக் கலைமறை கேந்த்ர மாகில்
வருமெட்டோ னுயிர்க்கு ளோனும் வருமிடம் மறையா தாகில்
தருமுயிர் தனக்கு ஆறில் தரித்திடப் புகர்மா லானால்
வருமுயி ரெழுபத் தெட்டாய் வகுத்தனர் வயதென் றோதே. (457)

ஓதிடும் உயிரோன் காரி உயர்வுட னிக்கோ ளோடு
வேதமாய்ப் பவக்கோள் சேர்ந்தால் விதித்தன ரறுபத் தெட்டு
நீதமா யுயிரா மென்று நிச்சயம் உரைத்தார் மேலோர்
சாதகன் றனக்கு யோகஞ் சார்ந்திடுங் குருதி வந்தால். (458)

வந்திடுங் குருதி நாளில் வகுத்தனர் சமனும் யோகம்
சிந்தையாற் பாம்பிற் பாதி சேர்ந்திடு முயற்சி செல்வம்
வந்திடு நாசங் காட்டும் வருமுயிர்க் கதிபன் வந்தால்
விந்தையா யுயர்ச்சி செல்வம் விதித்தனர் குருநாட் பாதி. (459)

வேறு.

செப்பிடுஞ் சேய்க்குப் பாம்புநா ளதனிற் சேர்ந்திடும் பலன் சமனாகும், இப்படிப் பலனாய்க் குருபுதன் திசையி லியம்பினர் முன்னுரை வருமால், தப்பிடா தெனவே மறையவன் திசைபின் சாய்ந்திடுஞ் சமபல னெல்லாந், துப்பித ழாய்கேள் கணிதநூல் விதியால் சொல்லினர் மேலவர் மொழியே. (460)

மந்தனு முயிர்க்கு ளோனும் வளருகேந் திரத்தி லேறச்
சந்திரன் பத்தினோனுஞ் சாரிட மறையா தாகில்
வந்துயிர் தனக்கு ஐந்தோன் மாதவன் புகரே யானாற்
சிந்தையாய்த் தோன்றுஞ் சேய்க்குச் செப்பினர் வயது பத்தே. (461)

கரியவன் மால்வீடேகக் கலைமறை பிலமா வானால்
வருமுயிர்க் கோளன் றானும் மதிமகன் பான்கே தோடு
சரியுடன் உயிர்க்கி ரண்டிற் றனித்திடப் பிறந்த சேய்க்கு
அறுபது வயதாய் நூலோ ரறைந்தனர் தரணி மீதே. (462)

மாதவர் மொழிநூ லாலே வகுத்தனர் கணித நூலோர்
போதவே பரிதி நாளிற் பொருந்திய திசைமுன் பாதி
ஓதினார் பலன்க ளெல்லாம் உயர்வுடன் நாசங்காட்டும்
போதவே அதிக செல்வம் பொருந்திடும் குசநாள் மட்டும். (463)

மட்டிடும் பாம்பு நாளில் வகுத்தனர் பூமி செல்வந்
திட்டமாய் நாசங் காட்டுஞ் செப்பினார் சாத கற்குச்
சட்டமா யன்ய தேசஞ் சார்ந்திடு மோராண் டாகும்
திட்டமாய்க் கணித நூலாற் றிறமுடன் யிருப்பன் மாதே. (464)

அட்டமா திபனும் பொன்னும் அம்புலி கரிபா னோடு
திட்டமா யோர்வீ டேகிச் சேர்ந்திட முன்பின் சுத்தம்
நிட்டைமா னுடனே தீக்கோள் நின்றிடப் பிறந்த சேய்க்குச்
சட்டமாய் வயது முப்பத் தைந்தெனச் சாற்று மாதே (465)

மாதவர் மொழியாற் பொன்னன் வந்திடுந் திசையில் யோகம்
நீதமாய்ச் சிவிகையோகம் நேர்ந்திடுந் திசைமுன் பாதி
வேதமாய் மொழியென் றோதி விளம்பினார் சாதகற்குப்
போதவே திசைமுற் பாதி பொன்றிடுஞ் செல்வ மெல்லாம். (466)

அட்டமந் தன்னிற் பொன்னன் அமர்ந்திட அக்கோள் தானும்
திட்டமா யுயிர்கோ ளோடு சேர்ந்திடக் காரி வீடால்
சட்டமாய்க் காரி உச்சந் தனித்திடப் பிறந்த சேய்க்குத்
திட்டமாய் வயது பத்தாய்ச் செப்பினார் கணித நூலால். (467)

அட்டமா திபனும் பொன்னும் அமர்ந்திடக் குருவீ டாகத்
திட்டமா யுயிரோன் காரி சேரிட மறையா தாகிற்
சட்டமாய்க் கரும நாதன் சற்குரு புகர்சே யானாற்
றிட்டமாய்ப் புகர்மால் திங்கள்சேருமத் தொகையாய்ச் சொல்லை. ()

சொல்லிடும் வயதென் றோதிச் சூட்டினார் கணித நூலோர்
வெல்விதிப் படியாற் பாம்பு விளங்கிய திசையிற் செல்வம்
நல்விதிப் படியாற் சேரும் நாடியே உயர்ச்சி யோகம்
சொல்லுமத் திசைநாள் மட்டுந் தோன்றிடுஞ் சமனாய்ப்போகும் (469)

வேறு.

காரியுயிர்க் கோளுடனே புகர்வீடேகிக்
கருமக்கோ ளுடன்சேர்ந்து மறையுமாகிற்
சீருடனே உயிர்தனக்கு யெட்டின்கோளன்
திங்களுடன் ஒன்றாகி மறையாதாகில்
சாரிடவே உயிர்தனக்கு ஐந்தின்கோளன்
சசிமகன்பான் புகராகிப் பிலமாவானால்
கூறினர்கள் வருஞ்சேய்க்கு வயதென்றோதக்
குறித்தனர்கள் அறுபதொன்று கொடுக்குமாதே. (470)

மாதவநூல் கணிதமொழிப் படியிருபத்தொன்மேல்
வகுத்தனர்கள் சமபலனாய் உயர்ச்சிசெல்வம்
வேதமொழிப் படியாகக் குருநாள்மட்டும்
விதித்தனர்க ளிப்பலனாய்த் தரணிமீதே
நீதியுடன் காரிவருந் திசையிற்செல்வம்
நேர்ந்திடுமே அதிகபலன் உயர்ச்சியுண்டாம்
ஓதினர்கள் பிலமாகக் கரிநாள்மட்டும்
உரைத்தனரால் சாதகற்குப் பயனென்றோதே. (471)

வேறு.

மந்தனுங் கேதோ டொன்றாய் வருமிடம் மறைவீ டாக
வந்திட அக்கோள் மூன்றில் வாய்த்திடப் பாம்போ டேக
விந்தையா யுயிரோ னாறில் விளங்கிடத் தனிப்பா னாகிற்
சிந்தையாய் வளருஞ் சேய்க்குச் செப்பின னைம்ப தாயுள். (472)

வேறு.

அட்டமா திபனுங் கேதுபொன் னுயிரோன் அமர்ந்திட வளருகேந் திரமாய், நிட்டைமால் காரி பத்தினோ னுடனே நின்றிடங் காரிவீ டானால், சட்டமாய் வயது அறுபது நாலாய்ச் சார்ந்திடுஞ் சாதகன் றனக்கு, அட்டமா திபனுங் கேதுபொன் னுயிரோன் அமர்ந்திட மறைந்திட வருமால். (473)

மறைந்திட யிக்கோள் பவர்மனை யதனில் வந்திடச் சுபர்கள் நோக் காதால், குறைந்திடும் வயது முன்னுரை தொகையிற் குறித்தனர் பாதியென் றுரையே, அறைந்தனர் பிலமாய்க் கணித நூல் விதியா லமர்ந்திடுஞ் சாதகன் றனக்கு, உறைந்திடுங் கரிமா னுடன்மறைந் திடுமா னுரைத்ததிற் றுஞ்சிடும் பாதி. (474)

வேறு.

கரியவனும் புகர்வீடாய் மறையோன்நோக்கக்
கருதுமிக்கோள் உயிர்தனக்கு முன்பின்னாக
வருமுயிரோன் சுபராகி உயிர்க்குநாலில்
வளர்ந்திடவே பத்தினுக்கோ ளுடன்வந்துற்றால்
தரும்வயதைம் பதுயேழு பதினொன்றாகச்
சார்ந்திடுஞ்சே யவன்றனக்கு மரணங்காட்டும்
அறுமறைநூற் படியாக வயதேழொன்றில்
அதிபதியாய் வருந்தந்தை தனவான்மாதே. (475)

மாதேகேள் வரும்வயது யிரெட்டாறில்
வருமுயற்சி பதிகீர்த்தி வளரும்பூமி
ஓதிடுவன் தனவானாய் உயிர்ச்சிமேலாம்
உதவிடுமே பாம்புதிசை வரும்நாள் செல்வம்
நீதியுடன் அரசர்புகழ் கீர்த்தியாவன்
நேர்பாம்பு திசைபாதி வளருமாகில்
சோதிடநூற் படியாகச் சிவிகையோகந்
தோன்றிடுமே மறைவரைக்கும் உயர்ச்சிசேரும். (476)

சேருமென மறைதனதில் உயர்ச்சிதுஞ்சும்
சேதம்வரும் மனக்கவலை அரசர்கோபம்
சாருமென மறைதிசையிற் கரிவந்துற்றால்
சார்ந்திடுஞ்சே யவன்றனக்கு உயர்ச்சிமேலாம்

சீருடனே மறைபாதி திசையிற்கீர்த்தி
 செப்பிடுமே பதிபூமி சிவிகையின்பம்
கூருடனே மேலோர்கள் கணிதவாய்மை
 குறித்தனர்கள் சாதகற்கு முறையைச்செப்பே (477)

காரியுடன் மாலுயிரோன் ஓர்வீடேகிக்
 கருதிடக்கேந் திரமாகி உதயமேறச்
சூரியன்யெட் டோனுடனே கரிவீடாகத்
 தோன்றிடவே உயிர்தனக்கு முன்பின்னாகக்
கூறியதோர் பத்தினுக்கோ ளாட்சியுச்சங்
 குருகிடவே பவர்நோக்கச் சுபர்நோக்கில்லா
சீருடனே ஆயுள்விதி கணிதமாய்ந்தோர்
 செப்பினர்முப் பத்தேழாய்த் தெரியச்சொல்லே. (478)

அட்டமத்திற் புகருடனே உயிரின்கோளும்
 அருக்கனுமா லுடன்சேர்ந்து சுபர்வீடாகத்
திட்டமுட னுயிர் தனக்கி ரண்டாறெட்டிற்
 சேர்ந்திடமே கரிவருகில் குருவும்பார்த்தால்
மட்டவிழ்சேர் பத்தினுக்கோள் ஆட்சியுச்சம்
 வருமணேகேந் திரமாகிச் சுபர்நோக்குற்றால்
சட்டமுடன் வரும்வயது கணிதமாய்ந்தோர்
 சாற்றினர் அறுபதெனத் தரணிமீதே. (479)

மாதவர் நூற் படியாகக் கணிதநூலோர்
 வகுத்தனர்மே லோர் மொழியாய்த் தரணிமீதில்
ஓதிடுவன் உயிர்தனிலே அரவுமாந்தி
 உறைந்திடவே பிலமாறு லுரைமுன்சொன்ன
வேதன்விதிப் படியாக யீரேழொன்று
 விளங்கிடுமுன் றொகையதனில் ஒழியுமாதே
நீதியுடன் நாற்பதைந்து வயதென்றோதி
 நிச்சயமாய்த் தமிழாய்ந்து கணிதஞ்செப்பே, (480)

செப்பிடவே புகர்வருநாள் சமனுஞ்செல்வம்
 சேர்ந்திடுமே பிலமாகப் பரிநாள்வந்தால்
ஒப்படியே யிச்சேய்க்குத் தனம்வந்தெய்தும்
 உரைத்தபடி முன்பாக வளரும்பூமி

தப்பிடுமே மதிதிசையில் வருமுற்பாதி
 சாய்ந்திடுஞ்சேத் திரம்பூமி தவறும்மாதே
அப்படியென் றெண்ணாதே மதிபிற்பாதி
 யானதினுல் சேத்திரமும் பூமிவரும்பிலமே. (481)

வேறு.

அட்டமா திபனுங் காரியு மோர்வீ டமர்ந்திடக் கேந்திரத் துறுமால், நிட்டைமா லுயிரோன் புகர்பதி யுடனே நின்றிடம் வாக்குமூன் றேழாய்ச், சட்டமா யுதய கேந்திர மதனிற் றனித்திடப் பொன்னன்வந் துற்றால், திட்டமாய் வயது ஐம்பது மூன்றாய்ச் செப்பினர் சாதகன் றனக்கே. (482)

சாதகன் றனக்கு வயதுபத் தேழிற் சார்ந்திடும் உயர்ச்சிவந் தெய்தும், ஓதினர் பிலமாய்ப் பதிநிதி பூமி உரைத்தனர் அரசனிற் றோஷம், நீதமா யுயர்ச்சி வருமென மேலாய் நின்றிடுங் காரிநாள் வரையும், வேதநூற் படியா லுயர்ச்சியே பிலமாய் விதித்தனர் சாதகன் றனக்கே. (483)

வேறு.

அட்டமத்தோன் கேந்திரமாய்ச் சுபர்களோடு
 அமர்ந்திடவே பரிவீடாய்த் தரிக்கயிக்கோள்
திட்டமுடன் உயிர்க்கோளன் கரியனோடு
 சேரயிவ ருடன்சுபர்கள் கேந்த்ர திரிகோணம்
சட்டமுடன் சேய்கருமன் குருவினில்லஞ்
 சாரயிவர் சேய்மரணம் யிருபத்தஞ்சோன்
அட்டமத்தோன் பாவருடன் மறையுமாகில்
 அறைந்திடுமுன் தொகைவயதில் ஒழியும்பாதி. (484)

சூரியன்வீ டதனில்வரு மாயுள்நாதன்
 தோன்றிடத்தன் னுடன்கருமக் கோளன்யேகக்
காரியிருந் திடுமதின்கோள் அருணனில்லங்
 கனகனுடன் மறையாமற் பவர்கள்நோக்கப்
பாருயிர்க்கோள் புகராகிப் பவர்களில்லம்
 பதிந்திடவே உயிர்பாழாய்ப் பவர்மூன் றுற்றால்
தாருலகி லிவன்மரணம் யெழுபதாகத்
 தங்கியசேய் யெமபுரஞ்சென் றணுகுமென்றே. (485)

அணுகுமெனக் காரியுடன் பாவர்சேர
அவன்றனக்கு முன்சுபர்கள் பவர்கள்ஒன்றாய்
நணுகிடவே யிவன்மரணம் யெழுபதாயுள்
நாசமதில் நாலுடன்யேழ் யோகம்ஓது
துணிவுடன்முக் கோளுடனே உயிரின்கோளன்
தோன்றிடமுன் பவர்வருகில் உயிரில்யெக்கோள்
அணுகிடவே அறைந்தனர்முன் வயதில்ஆறு
அழியுமென வாகநூல் வழியென்றோதே. (486)

சனியவன்றன் வீடதுவாய்த் தரிக்கயிக்கோள்
சாருயிர்க்குக் கேந்திரமாய்ச் சுபரில்லாதால்
புனிதமுடன் உயிர்க்கோளன் ஆரலாகிப்
பொருந்துமிடங் கேந்திரமாய்ச் சுபரொன்றாக
இனிதமுடன் சூரியன்கே துடனென்றாகி
யெட்டினுக்கோ ளில்லமதிற் றரிக்கயெட்டோன்
சனிதனக்கு மறைந்திடவே உயிர்க்கோள்பாதி
தனித்திடவே யெழுபதெனச் சாற்றுமாயுள். (487)

சாற்றுமென ஆயுளெழு பதுபத்தாகச்
சார்ந்திடுமா கமப்படியாய்க் கணிதமோதும்
பாருயிர்க்கோள் சேயவனாய் மறைய ஆட்சி
பகர அவ ருடன்சுபர்கள் தரியாதானால்
கூறியதோர் யெழுபதனி லழியும்பத்து
குறித்தனர்சேய் நமபுரஞ் சென் றணுகுமென்று
ஆரியன்மே லாணையெனக் கணிதமாய்ந்தோர்
ஆகமசாஸ் திரப்படியே அறையலாமே. (488)

வேறு.

மதிமக னுயிரோ னாகி வளருகேந் திரத்தில் நீசஞ்
சதிருடன் கரிபாம் போடு தரித்திட உடனென் றாக
விதியுட னதற்கு நாதன் விளங்கிடக் கரிவீ டானாற்
பதிதனில் மரணம் ஐம்பத் தொன்பது பகரு மாதே. (489)

மாதவர் மொழியால் வெள்ளி மறைந்திட மாந்தி யோடு
நீதமாய் மறைக்கு நாலில் நின்றிட ஆட்சி யானால்

வேதமாய்ப் புகரோன் நாளில் விளங்கிடப் பரிவந் தாற்றால்
ஓதின மனைவி யாலே உதித்திடு முயற்சி கூறே. (490)

கூறினர் முயற்சி மேலாங் குறித்தனர் தனங்கள் பூமி
சீருட னரச ரின்பம் சேர்ந்திடும் புகழோ னவன்
ஆறிரு யெட்டோ னைந்தி லறைந்திடு வயதின் மேலாய்ப்
பாரினிற் றனவா னாகிப் பகர்ந்தனர் சிவிகை யோகம். (491)

வேறு.

வருமுயிர்க்கோள் புகராகி மறையினில்லம்
வளருச்ச மாகிடவே மதியுமாலுந்
தருமுயிர்க்கோள் தனைக்கூடி தரிக்க அக்கோள்
சாருயிர்க்குக் கேந்திரமாய் தனிக்குமாகில்
புரிகுழல்சேர் கரியனொடு கருமநாதன்
புந்திமனை தரித்திடவே பொருந்துஞ்சேய்க்கு
அருமறைநூற் படிவிதியாற் கணிதமாய்ந்தோர்
அறைந்தனரைம் பதுயேழு அதனிலொன்று (492)

சந்திரனும் உயிர்க்கேழாய்ப் பவர்களில்லம்
சாரயிவர் கேந்திரமாய்ப் புகரொன்றாக
வந்துயிரில் மாந்திகரி வருமெட்டோனும்
வரஉயிர்க்கி ரஞ்சாங்கோள் மறையாதானால்
சிந்தையுடன் தோன்றியசேய் வயதுமேலோர்
செப்பினர்நாற் பதுஆறு யேகமாகும்
விந்தையுடன் உயிர்க்கோளன் மறையுமானால்
விளங்கியமுன் றொகைவயதில் ஒழியும்மூவேழ். (493)

வேறு.

மதியுமுயி ரோனாகிக் கேந்திரத்தில் வாழ்க
மதிதனக்கு ஒன்றேழில் மந்திரிவந் திடுமால்
துதிஆரல் பத்தோனுஞ் சுபருடனே கூடித்
தோன்றுமிடம் பிலமாகிக் கேந்திரம்வந் திடுமால்
சதியுடனே அட்டமத்தோன் காரியர வுடனே
சாருமிட மறையாமற் பிறந்திடுஞ்சா தகற்கு
விதியுடன்சேய் காரிபுகர் கேதுவருந் தொகையாய்
விதித்தனர்நூல் கணிதமொழிப் படியெனவென் றுரையே.

உரைத்திடுஞ்சா தகற்குவரும் உயிர்குருதன் திசையில்
ஓதிடுவன் யோகபலன் உலகதனிற் சமனும்
விரைத்திடுவன் குருதிசையில் நிதிபதிக்ஷேத் திரமாய்
விதித்தனர்கள் அற்பபலன் விதியுடன்வந் தணுகும்
முறைப்படிவந் தேகிவரும் நாற்பதுமே லபிதம்
முயன்றிடுஞ்சா தகற்குஅது மோசவிதம் வருமால்
உரைத்தனர்கள் கரிமாலும் வுயர்வுடன்மாய்ந் திடவே
உண்மையுடன் கணிதமொழி ஓதிடுநூ லோர்கள். (495)

வேறு.

மாலவன் பருதி காரி மந்திரி புகரோ டொன்ருய்ச்
சாலவே உயிர்க்கு யெட்டிற் றரித்திடப் பாவர் வீடால்
தூலமா யிக்கோள் தன்னைத் துணிவுடன் சுபர்நோக் குற்ருல்
பாலகன் வயது மூன்றிற் பாழ்படப் பிறக்கும் மாதோ. (496)
புந்திசெய் காரி யெட்டோன் பொன்னுயிர்க் கோளோடொன்ருய்
வந்திடும் உயிர்க்கி ராறில் வந்திடப் பாவர் வீடால்
சிந்தையாய்த் தோன்றுஞ் சேய்க்கு செப்பினர் வயது செப்ப
விந்தையாய்க் குருநாட் பாதி விதித்தனர் தரணி மாதோ. (497)

வேறு.

அஞ்சினில் மாலுங் கரியவ னாக அருக்கனும் நான்கினிற்குறு
கத், தஞ்சமா யாறிற் புகாவ ஞட்சி சர்ப்பமும் யேழினிற்ருேன்ற,
வஞ்சியே யெட்டிற் சேயவன் வருக வகுத்திடும் பொன்வியமாகக்,
கொஞ்சியே மதியுங் குளிகனும் லாபங் குறித்தனர் சிலையுயி ராக. ()

சிலையுயி ராக வந்திடுஞ் சேய்க்குச் சிகியவன் உயிரினிற்
ருேன்றக் குலவிய பலன்க ளுரைத்தனர் மேலோர் குருதிசை யத
னில்வந் துதிப்பன், நலமுடன் மாலோன் றிசையது யோகம் நல்கிடுஞ்
சமமது வாகப், பிலமுடன் கொடியோன் றிசையது நடுவிற் பெற்
றிடுந் தத்துவந் தணுகும். (499)

தத்துமொன் ருகும் புகர்திசை முன்னில் சார்ந்திடு மாணமுண்
டாகும், இத்தல மதனிற் கரியவன் றிசையில் யெய்திடுஞ் சகோதர
சுபமும், கொத்துடன் துணைவர் சலனமுந் துணைவி குறித்திடு
மங்கல நாசம், வித்தையும் பொன்னின் றிசையது வருமேல் விளங்
கிடத் தக்கதென் றுரையே. (500)

உரைத்தனர் மேலோர் சேயவன் றனக்கு உண்மையாய்க்
கரியவன் பிறகூர், விருத்தமாய்த் துணைவர் பிறந்திடு வார்கள்
விளங்கிடும் மாலவன் றிசையில், கதித்திடு மொன்ரு மென்று
ரைத் தனர்கள் கந்தனைத் துதித்திடத் துணைவர், குறித்தனர்
தீர்க்கம் ஆண்களும் மூன்று கோதையர் மூன்றெனக் குறியே. ()

குறியென உரைத்த சாதகன் றனக்குக் கூறுவர் புத்திர
பலனை, மறியென நால்வர் வந்திடு வார்கள் மதித்தன ரிரண்டதி
லற்பம், தறியென வொன்று சமமதாய் வருகுஞ் சார்ந்திடும்
வயதுமுப் பதற்குள், சிறியெனத் தாரம் வந்திடும் நிறமுஞ் சிகப்
பியும் வளர்த்தியுஞ் சமமே. (502)

சமமென வுரைத்த சாதகன்றனக்குச் சாற்றினர் பெரியவர்
மொழியால், நிமமதாய்ச் சேயோன் வளர்த்தியுஞ் சமமாம்
நேர்ந்திடு நிறங்கறுப் பதுவாம், தமமெனச் சாந்தன் மவுனவஞ்
சகத்தன் சார்ந்திடும் வித்தையுஞ் சமமாம், அமர்ந்திடு மிவற்கு
யிப்பல ஞக அறைந்தன ரந்தணர் மொழியே. (503)

அந்தணர் மொழியால் வந்திடுஞ் சேய்க்கு அறைந்தனர்
மாலவன் றிசையில், தொந்தமா யவன்றன் றிசைநடு வதனிற்
சொல்லினர் தந்தைக்கே கருமம், விந்தையா யவன்றன் றிசை
யது பின்ஞல் விதித்தனர் மாதுரு கருமம், சந்தத மிந்தக் கணித
நூற் படியே சாற்றினன் சங்கரன் ருனே. (504)

வேறு.

நீலனுமால் பார்க்கவனும் மதியெட்டொன்ருய்
நின்றிடங்கேந் திரமாகிச் சுபர்நோக்கில்லா
தூலமதாய் உயிர்க்கதிபன் பவராய்த்தோன்றி
தோன்றுமிடம் பவர்வீடாய்ப் பவர்சுபர்நோக்குற்ருல்
சாலவரு முயிர்தனக்கு யெட்டைந்தோனுஞ்
சாருமிடம் பிலமாகி வளருஞ்சேய்க்கு
மால்மதிபொன் புகர்துகையாய் வயதென்ருேதி
வகுத்தனர்சா தகற்குயிது மாணமாதோ. (505)

மாதுயிரோன் வயதிருப தின்மேற்செல்ல
வந்திடுமே பவவிதத்தாற் புகழுங்கீர்த்தி
நீதமுடன் அத்திசையிற் சமனும் செல்வம்
நேர்ந்திடுமே யாவருக்குங் கனவானவன்
ஓதிடுவன் காரிதனிற் பலன்களற்பம்
உலகதனிற் சாதகற்கு உரைத்தார்மேலோர்
வேதன்விதிப் படியாக மாலோன்வந்தால்
வேண்டியபேர்க் குபகாரம் விதித்தார் நூலோர். (506)

வேறு.

கரியவன் சேய்வீ டேகக் கலைமறை மறையா தாகில்
வருமுயிர்க் கோளன் யெட்டோன் வருமிடஞ் சுபர்வீ டாகத்
தருமுயிர் தனக்குப் பத்தோன் சாரிடம் புகர்மால் வீடால்
வருமுயிர் சேய்க்கு ஆயுள் வகுத்தனர் அறுப தாமே. (507)

அறுபது வயதென் றோதி அறைந்தனர் சாத கற்கு
இருபது வயதின் மேலாய் இருநிதி உயர்ச்சி செல்வம்
வருவது அதிக மாக வகுத்தன ரறுப துக்கும்
மருவிலா திருப்ப னென்று வகுத்தனர் கணித நூலோர். (508)

பொன்னவன் உயிரோ னாகிப் புகழ்மதி யுடனென் றூக
மின்னிய கருமந் தன்னில் விளங்கிடக் காரி யெட்டோன்
நன்னிய பத்தோ னாகி நவின்றிட மறையா தாகில்
சொன்னது வயது ஐம்பத் தேழெனத் தோன்று மாதோ. (509)

மாதவர் மொழிநூ லாலே வகுத்தனர் பிலமாஞ் சேய்க்கு
வேதமா யிறைவன் நாளில் விதித்தனர் பூமி செல்வம்
போதவே உயர்ச்சி மேலாய்ப் புகழ்பெற வாழ்வு மாகும்
ஓதினர் அதிக பாக்கியம் உரைத்தனர் யார்க்கு மேலாய். (510)

அட்டமா திபனும் பத்தி லமர்ந்திடக் காரி யோடு
திட்டமா யுயிர்க்கோள் நீசஞ் சேர்ந்திடப் பாவர் வீடால்
சட்டமாய்க் கருமநாதன் சாரிடஞ் சசிமால் வீடாய்த்
திட்டமாய் நடக்குஞ் சேய்க்குச் செப்பினர் முப்பத் தெட்டாய். ()

சந்திரன் உயிரோ னாகச் சாரிடம் புகர்சேய் வீடாய்
வந்திடு முயிரோ னோடு மால்கரி பத்தோன் வந்தால்
சிந்தையாய்த் தோன்றுஞ் சேய்க்குச் செப்பினர் புகர்மால் காரி
வந்திடுந் தொகையா யாயுள் வகுத்தனர் தாணி மாதே. (512)

மாதுல னாகி வந்த வருமுயிர்ச் சாத கற்கு
ஓதினர் பூமி செல்வம் உயர்வுடன் நாசங் காட்டும்
வேதமாய் உயிரோன் வந்தால் விதித்தனர் கீர்த்தி மானாய்ச்
சேதமில் லாமல் வாழ்வன் சேயவன் றனக்கு மாதே. (513)

குருவுமே கரிவீ டேகக் குறுகிட அதற்கு நாதன்
வருமுயிர் தனிலே யேறி வந்திட யெட்டோன் பத்தால்
கருதியே ஐந்தோன் வெள்ளி கதிரவன் மால்சே யானால்
குருதிமால் புகர்பொன் னுண்டாய்க் குறித்தனர் வயதென் றோதே.

ஓதிடு முயிர்க்கு யெட்டில் உயர்வுடன் கரிசேய் மாலாய்ச்
சேதமாய் மறையு மாகிற் செப்பிய வயதிற் பத்து
போதவே நாச மென்று புகட்டினர் கணித நூலோர்
ஓதினர் மதிபாம் பானால் உயர்வுடன் கழியு மைந்தே. (515)

அஞ்சினோன் திசையிற் செல்வம் அறைந்தனர் பிலமாய்ச் சேரும்
விஞ்சையா யுயர்ச்சி பூமி விதித்தனர் அதிக மாகத்
தஞ்சமாய் வாழ்வ னென்று சாற்றினர் கணித நூலோர்
அஞ்சினோன் திசையே யுற்றால் அறைந்தனர் நாசம் பூமி. (516)

வேறு.

காரியுயிர்க் கோளுடனே குருவீடே யேகிக்
கருங்கொடியோன் புகருடனே காரியுடன் வருமால்
சீருடனே சேய்மதியு முயிர்தனக்கீ ராறிற்
சேர்ந்திடவே சுபர்நோக்கப் பவர்மனைவந் திடுமால்
மாறிடுஞ்சேய் உதித்திடுநாள் முப்பதனிற் றந்தை
வகுத்தனர்கள் தவவேடம் வந்திடுமென் றோது
கூறுடனே பிதாவின்சொல் தடுத்திடுவா னெனவே
குறித்தவய தைம்பதுடன் குருவுதொகை வுரையே. (517)

குருவுதொகை வயதெனவே சோதிடநூ லாய்ந்தோர்
குறித்தனர் கள்வருஞ்சேய்க்குகொடுமொழியென் றுரையே
வருமுயிரோன் காரியொடு அட்டமத்தோ னுடனே
வருமிடங்கேந் திரமாகிச் சுபர்மனைவந் திடுமால்
தருமுயிர்க்கைந் தினிற்பவர்கள் தரித்திடவே சுபருஞ்
சாருமனை பிலமானால் சாற்றிடுவோம் ஆயுள்
அருமால் காரிமதி புகர்தொகையா மெனவே
அறைந்தனர்கள் கணிதமொழி நூலெனவென் றோதே. ()

ஓதுமொழி யிப்பலனாய் உற்பவிக்குஞ் சேய்க்கு
உலகதனிற் சொன்னவய துறுதியுடன் பாரே
நீதியுடன் காரியுயிர்க் கோளுடனே யெட்டோன்
நின்றயிடம் பிலமாகிச் சுபர்மனைவந் திடுமால்
வேதமொழிப் படியெனவே உதித்திடுஞ்சே யாயுள்
விதித்தனர்கள் காரிபுகர் மால்தொகையா மெனவே
ஓதிடுவா ரிப்பலனாய்க் கணிதமொழி நூலோர்
உரகதத்து வயதெட்டில் உயர்வுடனே விஷத்தால். (519)

விஷமுடனே தீரவொரு சர்ப்பமது செய்து
விடையோன்றன் ஆலயத்திற் சாந்தியது செய்வாய்
வசமுயிர்க்கோ ளட்டமத்தில் வாய்த்திடவே காரி
மதிமகனுஞ் சேய்புகரும் வந்திடக்கேந் திரமாய்
இசைவுடனே வருஞ்சுதர்க்கு குருதொகையால் ரெட்டி
யெனவயதென் றுரைத்தனர்க ளியற்றியநூ லோர்கள்
வசமுயிர்க்கோள் மதிமகன்சேய் புகர்காரி மறைந்தால்
வகுத்தனர்கள் வயதுஒன்று வந்திடுமென் றோதே. (520)

வேறு.

மந்தனுயிர்க் கோளுடனே மால்வீடேகி
மறைந்திடஅக் கோளுடனே சுபர்வந்துற்றால்
சிந்தையுட னுயிர்தனக்கு யெட்டைந்தோனுஞ்
சேருமிட மறையாமற் சுபர்பவர்நோக்கிடுமால்
வந்திடுலக் கினந்தனக்குப் பத்தின்கோளன்
வருமிடங்கேந் திரமாகிச் சுபர்வீடுற்றால்
மந்தனுமால் வெள்ளிவரு திசையாண்டாக
வகுத்தனர்சா தகற்குயிது வயதென்றோதே. (521)

ஓதுயிரோன் திசைமறைவன் வருநாட்செல்வம்
உரைத்தனர்கள் சமபலனாய் உரைக்கும்பொன்னில்
வேதன்விதிப் படியாக மறைநாள் முன்னில்
விதித்தனர்கள் உயர்ச்சிநிதி யுதவுமாதே
நீதமுடன் காரிதனில் தனத்திற்செல்வம்
நேர்ந்திடுமே முன்னுரையா யாட்சிகாட்டும்
சேதமெனப் பின்னுறையாய்ப் பூமிசெல்வஞ்
செப்பினர்சா தகற்குயிது திறமென்றோதே. (522)

வேறு.

அட்டமா திபனுங் காரியு முயிரோன் அமர்ந்திடக் கேந்திரம் வருமால், திட்டமா யுயிர்க்குப் பத்துவைந் தோனுஞ் சேரிடம் உதய கேந் திரமாய்ச், சட்டமாய்த் தோன்றுஞ் சாதகன் வயது சாற்றினா ரறுபத்தே மாகுந், திட்டமா யுயிர்க்குப் பத்துவைந் தோனுஞ் சேரிடம் மறைந்திட வருமால். (523)

வருமுயிர் சேய்க்கு வகுத்தனர் பிலமாய் மதிகரி புகர்தொகை வருநாள், சரியுடன் வயதென் றோதினர் கணிதர் சாற்றினார் மேல் விதிப் படியால், தருமுயிர்க் கோளன் யெட்டினோன் காரி சாரிட மறைந்திட வருமால், குறுகிடும் வயது முன்னுரை பாதி குறித்த னர் சாதகன் றனக்கு. (524)

அட்டமா திபனுங் காரியைந் தோனும் அம்புலி பத்தினோன் உயிரோன், திட்டமாய்க் கோளன் ஓர்மனை பிலமாய்ச் சேர்ந்திட மறைந்திடா திடுகில், சட்டமாய்த் தோன்றுஞ் சாதகன் வயது சற்குரு புகர்தொகை ரெட்டி, அட்டமா திபனும் ஐந்தினோன் உயிரோன் அமர்ந்திட மறைந்திட வந்தால். (525)

வந்திடுஞ் சேய்க்கு வகுத்தனர் வயது மால்புகர் மதிகொடி திசையாய்த், தந்திடுந் தொகையென் றோதினர் கணிதர் சாற்றினார் மேல்மொழிப் படியால், வந்திடுங் காரி மால்புகர் திசையில் வகுத்தனர் பலனெலாம் அற்பம், முந்திடப் புகர்நாள் பாதிமே லாகி மொழிந்தனர் சமபலன் மாதே. (526)

வேறு.

காரிஉயிர்க் கோளாகிக் கேந்திரம்வந் திடுகில்
கருதுமக்கோ ளுடன்சேயுங் கணக்கனும்பாம் புடனே
சாருமிடம் புகர்வீடாய்ச் சற்குருநோக் கிடவத்
தானதிபன் பவரோடே மறைந்திடவே சுபமாம்
கூறிடவே சேய்வயது கணிதமொழிப் படியால்
குறித்தனரெண் பதுநாலாய்க் கூறினர்கள் பிலமாய்க்
காரிஉயி ரோன்மறைந்து சுபருடவீ டுற்றால்
கருதைம்பத் தெண்வயதாய்க் காட்டினர்நூல் மொழியால்.(527)

மொழியாகக் காரிதிசை மால்திசைவந் திடுகில்
மொழிந்தனராம் காரிதிசை முற்பாதி மோசம்
அழிவுவரும் மாதுர்வழி பிதிர்வழியிற் கிலேசம்
அறைந்தனர்கள் காரிதிசை பிற்பாதி பிலமாம்
தெளிவதால் பூமிநிதி சேர்ந்திடுமே பிலமாய்ச்
செப்பினர்கள் மாலவனிற் சேர்ந்திடுமே உயர்ச்சி
மொழியாகச் சமபலனாய் முற்பாதி வரையில்
மொழிந்தனர்கள் சாதகற்கு மூன்றுரையாய்ப் பலனே. ()

வேறு.

மந்தனும் பரிதி யோடு வளருங்கேந் திரத்தி லேற
வந்துயிர்க் கோளன் றானும் மறைந்திடச் சுபர்வீ டாகச்
சிந்தையாய்க் குருமால் சேயும் சேரிடம் மறையா தாகில்
விந்தையா யைம்பத் தொன்றாய் விதித்தனர் வயதென் றோதே. ()

ஓதுயிர் தனக்கு ஐந்தில் உயர்வுடன் கொடியோன் வந்தாற்
சேதமா யேழு தள்ளித் திறமுடன் வயதென் றோது
போதவே அக்கோ ளோடு புந்திசேய் பரிவந் துற்றால்
சாதகன் றனக்கு முப்பத் தொன்றெனச் சாற்று மாதோ. (530)

மாதவர் மொழியால் மேலோர் வகுத்தனர் பிறக்குஞ் சேய்க்கு
நீதமாய் வயது பத்தில் நெடுவித விஷமாய்க்காட்டும்
ஓதிடும் வயது ஒன்றில் உயர்வுடன் மாதா சாவாம்
வேதமாய் மொழியென் றோதி விதித்தனர் கணித மாய்ந்தோர்.(531)

வேறு.

அட்டமா திபனுங் கேதுடன் கூடி அமர்ந்திடச் சுபர்மனை யாகத், திட்டமாய்க் காரி மதிபதி யுடனே சேரிடங் கேந்திரங்

குருமால், சட்டமா யுயிரோன் பாவவீ டேகித் தரித்திடப் பாவர்வந் திடுகிற், றிட்டமாய் வயது பத்துநா லைந்தாய்ச் செப்பினார் சாதகன் றனக்கு. (532)

அட்டமா திபனுங் காரியு முயிரோன் அமர்ந்திட வளருகேந் திரமாய், நிட்டைமா லைந்தோன் உதயகேந் திரத்தில் நின்றிடச் சுப மிலா தானால், மட்டுடன் வளருஞ் சாதகன் றனக்கு வகுத்தனர் வயதுஐந் ததினால், சட்டமாய் நடத்துங் கணிதநூற்படியே சாற்றினார் மேலவர் மொழியால். (533)

வேறு.

அட்டமந் தன்னிற் சுங்கன் அமர்ந்திட உயிர்க்கு நாதன்
திட்டமா யக்கோ ளோடு தினகரன் மதிமா லேகச்
சட்டமாய்க் காரி நீசஞ் சார்ந்திடப் பிலமா வானால்
திட்மாய் வயது முப்பத் தைந்தெனச் செப்பு மாதோ. (534)

வேறு.

அட்டமா திபனுங் காரிசேய் மாலும் அமர்ந்திட வளருகேந்திர மாய்த், திட்டமா யுயிரோன் பாவரோ டொன்றாய்ச் சேர்ந்திடக் கேந் திர மாகிற், சட்டமாய்த் தோன்றுஞ் சாதகன் வயதுசாற்றினா ரறு பதொன் றதனாற், றிட்டமாய் வயது யிருபது மேலிற் சேர்ந்திடும் முயற்சிபாக் கியமே. (535)

காரிசேய் அருக்கன் அட்டமா திபனுங் கருதுகேந் திரந்தனில் வருமால், கூறுயிர்க் கோளன் கொடியகோ ளுடனே குறுகிட மால்மதி வீடால், சீருடன் சேய்க்கு வயதறு பதுவாய்ச் செப்பினர் கணிதநூற் படியால், காரிமால் பத்தோன் மறைந்திட வருமால் கருதினார் வயது ஐம்பதினால். (536)

வேறு.

கரியவன் சேய்வீ டாகக் கலைமறை அவர்க்கீ ராறில்
வருமுயிர்க் கோளன் யெட்டோன் வருமிடஞ் சுபர்வீ டாகத்
தருமுயிர் தனக்குப் பத்தோன் சாரிட மறையா தானாற்
கரியவன் புகர்மா லாண்டாய்க் கருதினர் வயதென் றோதே. (537)

அட்டமா திபனும் பொன்னும் அமர்ந்திடச் சுபர்வீ டாகத்
திட்டமா யுயிரோன் சேய்வீ டதனிலே சேரு மாகிற்

சட்டமாய்க் கரிமால் பத்தோன் சாரிடம் மறைவ தானால்
திட்டமாய் வயது நாலிற் செத்திடுஞ் சிசுவென் றோதே. (538)

வேறு.

அட்டமா திபனுங் காரியும் ஓர்வீ டமர்ந்திடப் பவமிலா திடு கிற், றிட்டமா யுயிரோன் காரிவீ டதனிற் சேர்ந்திட ஆரல்சூ ரியனால், சட்டமா யிறைவன் சொந்தவீ டதனிற் சார்ந்திடப் பிறந்தசா தகற் குத், திட்டமாய் வயது ஐம்பது நாலாய்ச் செப்பினார் தாணியில் மாதோ. (539)

மந்தனும் புகரும் வருமுயிர்க் கோளும் வக்கிரன் பத்தினோன் ஒன்றாய், சிந்தையா யுயிர்க்கு யெட்டின்கோ ளுடனே சேர்ந்திட ஓர் மனை மறையால், வந்திடுஞ் சேய்க்கு வகுத்தனர் வயது மால் புகர் காரிபொன் றொகையாம், மந்தனும் வேராய் வரும்பவருடனே மறை ந்திடப் பவர்மனை வருமால். (540)

வருமுயிர் சேய்க்கு வகுத்தனர் வயது மால்புகர் மதிகொடி தொகையாய் சரியுடன் பிலமென் றோதியே கணிதர் சாற்றினார்மேல வர் மொழியால், தருமுயிர்க் கோளன் பாம்பினிற் சமனாய்ச் சார்ந்திடு முயற்சிபாக் கியங்கள், வருமுயிர்க் கதிபன் திசைதனிற் பூமி வகுத்த னர் உயர்ச்சிமேல் மதியே. (541)

மதியெனக் கணிதர் சாதகன் றனக்கு வகுத்தனர் உயர்சிமே லாகச், சதியுடன் வருமென் றோதினர் பிலமாய்ச் சார்ந்திடு மிப்பல னாக, விதியுட னைந்தோ னுயிர்க்குநா லதனை விளங்கிடப் பாவர்நோக் கிடுமால். பதிதனில் வளருஞ் சேயவன் வயது பகர்ந்தனர் மறை தொகை ரெட்டி. (542)

அட்டமாதிபனுங் காரியும் ஓர்வீ டமர்ந்திடக்கேந்திரத் துறுமால், திட்டமா யுயிரோன் பவருடன் மறைந்து சேரிடஞ் சுபர்மனை வரு மால், மட்டிடும் பரிமால் புகருசே யுடனே வருமிடம் வளருகேந் திர மாஞ், சட்டமாய் வயது யெழுபதெட்டாகச் சாற்றினார் வருமுயிர் தனக்கு. (543)

வருமுயிர் தனக்கு வயதுமிப் படியே வகுத்தனர் கணிதநூலா ய்ந்தோர், தருமுயிர்க் கதிபன் உயிர்தனைச் சேயைச் சார்ந்

திடப் பாவர்நோக் கிடுமால், குறைகிடுஞ் சேய்க்கு முன்னுரை வயதிற் குறித்தனர் பத்துநா லொழியும், சரியுட னுயிரைக் கோளனைச் சேயைச் சார்ந்திடச் சுபர்கள்நோக் கிடுமால். (544)

வேறு.

ஓதுயிர்க் கோளன் பான்வீ டுறைந்திடப் பவரோ டொன்றாய்
வேதமா யிக்கோள் மூன்றில் விளங்கிடப் பிறந்த சேய்க்கு
நீதமா யறுபத் தொன்றாய் நிச்சய முரைக்க லாகும்
ஓதினார் பிலமாய் நூலோர் உரைத்தனர் யோகஞ் செப்பே. (545)

செப்பிடி லரவு பொன்னன் சேருமத் திசையில் யோகம்
முற்படி அரவு நாளில் மொழிந்தனர் சமனும் யோகம்
தப்பிடா தெனவே பொன்னன் சாருமத் திசையில் முன்பால்
செப்பிடு முயற்சி செல்வஞ் சேர்ந்திடுங் குறைவி லாதான். (546)

அட்டமா திபனுங் கேதும் அம்புலி யிக்கோ ளொன்றாய்த்
திட்டமாய்ச் சேய்வீ டேகிச் சேர்ந்திடப் பிலமா வானால்
சட்டமா யுயிரோன் காரி சாரிடம் மறைவ தானால்
திட்டமாய்த் தோன்றுஞ் சேய்க்குத் திறமுடன் வயது நாலேழ். ()

வேறு.

குறுவுடனே அட்டமத்தோன் மதிகேதோடு
குறுகிடக் கேந் திரமாகிப் பவர்வீடாக
வருமுயிரோன் சுபராகி உதயமேறி
வந்திடப்பாம் புடன்சேர்ந்து பிலமாவானால்
தருமுயிரோன் றனக்கொன்று நாலேழ்பத்தில்
தரித்திடப்பத் தோன்கரியுஞ் சசியுங்கேந் திரமாய்
வருமுயிர்சேய் வயதெனவே நூலாய்ந்தமேலோர்
மால் மதியும்புகர்சேயும் வருந்தொகை யென்றுரையே. ()

உரையுமெனக் கேதுபுகர் திசையதனிற்பூமி
உயர்ச்சிபதி சமபலனாய் உரைத்தனர்நூல் மொழியோர்
விரைவுடனே புகர்திசையில் சூரியன்நாள்வருகில்
விதித்தனரோ ராண்டுவரை விளங்குபலன் சமனாய்
முறையுடனே புகர்மதிநாள் வருமுதலே பூமி
முயற்சிநிதி பிலமாக மொழிந்தனர்கள் பிலமாய்
குறைவிலதாய் சாதகன்றன் யோகமெனச் செப்பு
குறித்தனரால் கணிதமொழி கூறினர்கள் பெரியோர். ()

வேறு.

காரிபொன் னெட்டோன் கலைமதி உயிரோன் கடும்பவக் கோட்கனொன் ருகிச், சீருடன் சுபர்வீ டுதயகேந் திரமாய்ச் சேர்ந்திடச் சுபர்கள்நோக் காதால், கூறிடுஞ் சேய்க்குக் கோள் வய தெனவே குருவுமால் புகர்மதி தொகையாம், காரிவீ டுயி ரோன் காரிமால் வீடாய்க் கரந்திடக் கரிபுகர் வயதே. (550)

கரிபுகர் தொகையாய் வயதெனக் கணிதர் காட்டினர் மேலவர் மொழியால், சரியுடன் வயது பத்துஐந்ததன்மேல் சார்ந்திடும் நிதிபதி பூமி, வருமெனப் பிலமாய் வகுத்தனர் சேய்க்கு வருநிதி பூமிவந் திடுமால், விரிகுழல் மாதே நிதியினுற் பிலமாய் விதித்தனர் சாதகன் றனக்கே. (551)

சாதகன் றனக்குக் கணிதநூல் விதியாற் சாற்றினர் முன்னு ரைப் படியே, வேதமா யுயிரைக் காரியைப் பாவர் விளங்கிட நோக்கிடு மாகில், ஓதினர் வயது முன்னுரை யதனில் ஒழிந்தி டும்பத்துயே யைந்து, நீதமா யுயிராய் நிச்சயத் துடனே நிகழ்த் தினர் சாதகன் உயிரே. (552)

அட்டமா திபனுங் காரியு மோர்வீ டமர்ந்திடச் சுபர்மனை வரு மால், திட்டமா யுயிரோன் வளருகேந் திரத்திற் சேர்ந்திட வுடனவர் பவராய்ச், சட்டமா யிறைவன் உதயகேந் திரத்திற் றனித்திடப் பிற ந்தசா தகற்குத், திட்டமாய் வயது ஐம்பதெட்டாகச் செப்பினர் மேல வர் மொழியால். (553)

மேலவர் மொழியாற் பிறந்திடும் சேய்க்கு விதித்தனர் பாம்பு பொன் றிசையில், சாலவேபூமி நிதிபதி உயர்ச்சி சார்ந்திடும் அதிக யோக் கியமாய்ச், சூலமா யிறைவன் றிசைதனில்முன்னுற் றேன்றிய முன்பலன் நாசம், ஏலவே யிறைவன் பின்னுறை யதனி லிருநிதி பூமிசேய் சமனும். (554)

வேறு.

கரியவன் புகர்வீ டாகக் கோளனும் உயிர்க்கோள் தானும்
வருமுயிர் தனக்கீ ராறில் வந்திடச் சுபமி லாதால்

தருமுயிர் தனக்கு யெட்டோன் சாரிடம் பிலமா வானல்
குறுகிடுஞ் சேய்க்கு ஆயுள் குறித்தனர் மறைநாள் ரெட்டி. (555)

மறைதொகை ரெட்டி யாக வகுத்தனர் பிறக்குஞ் சேய்க்கு
விரைவுட னைந்தோ னீசம் விளங்கிடப் பவரோ டுற்ருல்
முறையுடன் மால்சேய் ஆண்டாய் மொழிந்தனர் தாணி மீதே
குறைவுடன் உயிரைக் கோளைக் கொடும்பவர் நோக்குஞ் சேய்க்கு. ()

சேயவன் றனக்கு ஆயுள் செப்பினர் யீரா ருக
மாயுமென் றுரைத்தார் மேலோர் வரும்விதி யான நூலால்
தூயமா யுயிரிற் பாவர் தோன்றிடப் பிறந்த சேய்க்கு
ஆயுள்நூல் பரிதி நாளாய் அறைந்தனர் தாணி மீதே. (557)

வேறு.

பீதகனு முயிர்க்கோளாய்க் கேந்திரமெய் திடுகிற்
பின்முன்பு சுபர்வருகிற் சுபக்கிரக மதனுல்
நீதியுடன் காரிபுகர் வீடேகித் தனிக்க
நின்றிட அக் கோளனுமே நேர்ந்திடக்கேந் திரமாய்
ஓதுமுயிர் தனக்குவியத் தானமதிற் பாம்பு
உறைந்திட அட் டமத்தோனும் உகந்திடவந் திடுமால்
வேதன்விதிப் படியாகப் பிறந்திடுஞ்சேய் வயது
வெய்யவன்மால் காரிபுகர் விளங்குதொகை அறையே. (558)

அறையுமெனக் கணிதநூற் பெரியோர்கள் மொழியால்
அமர்ந்திடுஞ்சேய் வயதுபிலம் ஆரியன்சொற் படியால்
மறையவனு முயிர்க்கோளாய் மறைந்திடப்போய் பவமாய்
மால்புகர்க்கு யீராறில் வந்திடுஞ்சா தகற்கு
முறையுடன்முன் னுரைத்திடுஆண் டதனில்வரு நாசம்
மோசமென நாலிரண்டு மூன்றுரெட்டி லொழியும்
விரைவுடனிப் படியாக உரைத்தனர்மே லோர்கள்
மேதினியிற் சங்கநூல் விளம்பிடுமென் ரேதே. (559)

ஓதுமெனக் காரிஉயிர்த் தானமதை நோக்க
உயிரதனுக் கெட்டோனை யுயர்பவர்நோக் கிடுமால்
தீதுடனே வருஞ்சேய்தன் மரணமெனத் தொகையைச்
செப்பினர்கள் காரிபுகர் தொகையதனை யுரையே

கோதில்குணக் காரிஉயிர்த் தானதிபன் வொன்றாய்க்
குறுகிடஆ றெட்டில்வரும் தானமவர் பிலமாம்
சேதமென ஆயுள்விதி செப்பினர்நூ லோர்கள்
தேர்ந்தவிதம் முன்னுரையிற் சேதமெனப் பாதி. (560)

வேறு.

அட்டமா திபனுங் காரிபத் தோனும் அரவனும் ஓர்மனை
மறையால், திட்டமா யுயிரோன் அட்டமா திபனுஞ் சேர்ந்திடப்பவர்
மனை வருமால், மட்டிடுஞ் சேய்க்கு வகுத்தனர் வயது மால்புகர்
காரிபொன் தொகையாய்ச், சட்டமா யுயிரோன் அட்டமா திபனுஞ்
சாரிடம் ஓர்மனை மறைந்தால். (561)

மறைந்திடுஞ் சேய்க்கு வகுத்தனர் வயது மதிமகன் கரிபுகர்
தொகையாய், அறைந்தனர் பிலமா யரவுநாட் கரியி லஞ்சிடும்
அற்பமாய் வருத்தம், துறந்தனர் கரிமால் திசையிரண் டதனிற்
றோன்றிடும் அதிகசேத் திரங்கள், குறைந்திடா தெனவே குடும்ப
யோக் கியனாய்க் குறித்தனர் சாதகன் பலனே. (562)

சாதகன் பலனைக் கணிதநூல் விதியாற் சாற்றினார் மேலவர்
மொழியால், ஓதிடு முயிர்க்கோ ளுறைந்தவீ டதிபன் உயிர்தனைப்
பாவர்நோக் கிடுமால், வேதமுன் னுரையிற் பாதிமாய்ந் திடவே
விதித்தனர் வயதுயிப் படியாம், நீதமா யுயிர்க்கோ ளதிபனைப்
பாவர் நேர்ந்திட வயதுபொன் தொகையாம். (563)

அஞ்சினுக் குடையோன் தசத்தினோன் ஆறோன் ஆரல்தன்
மனைதனில் வருகத், தஞ்சமாய் மூன்றிற் பொன்னவ னிருக்கச்
சவுரியும் நோக்குறு மாகில், கொஞ்சிய சேயோன் பூருவ மத
னிற் குறித்திடும் பறையனா யுதித்து, விஞ்சையாய் மறையோன்
றனைவதை புரிந்த விதத்தினா னாகமநூலே. (564)

அஞ்சினில் மாலுங் கரியவன் மனையில் அமர்ந்திடக் கரியுமூன்
றிடத்தில், தஞ்சமா யாறிற் பரியவன் சுங்கன் சர்ப்பமும் மதியுட
னேழில், விஞ்சையா யுயிரிற் சேயவன் கொடியும் வியாழனு
மொன்றதாய்ச் சேரக், கொஞ்சிய உயிருங் கன்னியாய் வருகுங்
குழவிதன் பலன்களு முரைப்பாம். (565)

உரைத்தனர் பெரியோர் சாதகன் றானும் ஊனமாய்ப் பூருவ
மதனிற், றிருத்தமாய் வசியர் குலமதி லுதித்துச் சேர்ந்திடுங்
கோடிசொத் துளனாய், விருத்தமாய் மறையோன் மாதுமோ கத்தால்
விளங்கிடும் பிராமணன் றன்னை, மறித்திடு மிரண்டு விழிகளைக்
கெடுப்பன் மாரணத் தொழில்விதி யாலே. (566)

விதியினா லென்ற சாதகன் றானும் விளங்கிடு மறையவன்
றன்னைத், துதிபெரும் விழிக ளிரண்டையுங் கெடுத்துச் சொகு
சுட னவன்மனை யாளைப், பதியென வடைந்து போகமுஞ் செய்
து பாரினி விச்சென னத்தில், கதியென வணிகர் குலமதி லுதிப்
பன் காட்டினர் பூருவ தோடம். (567)

பூருவ தோடம் வந்திடும் விதியால் பொருந்திடும் மிளைத்த மெ
ய் யுளனாய், நாரிய ரிணக்கஞ் செய்திடப் பிலனும் நல்கிடா தவனு
மாய் மயக்கம், பேருட னடையும் ரோகியா யயலூர் பெற்றிடு வாச
னு மாகி, சீரிலாச் சுகத்தை யடைகுவா னெனவே செப்பலா
மாகம நூலே. (568)

ஆகம நூலாற் பூருவ தோடம் அமர்ந்திடுஞ் செனனமேழ்
வரைக்கும், சாகமா யதுவுந் தீர்த்திட வென்றாற் றரித்திடு மிச்
சென னத்தில், தாகமாய்ப் பூவி லுயர்குலத் தவர்க்குச் சார்ந்தி
டுங் கன்னிகா தானம், ஏகவே செய்து பரியவன் விரதம் இருந்திடிற்
றோடமும் போமே. (569)

தோடமும் போகும் யினிவருஞ் செனனம் சொல்லினர் வணி
கர்தன் குலத்தில், நீடிய பத்து நூறுமெண் பதுவாய் நேர்ந்திடுஞ்
செனனமு மாகிக், கூடிய வசிய குலமதிற் செனனங் குறித்திடுங்
கோடிநூ றதுவாய், வாடிய மறையோன் குலமதிற் செனனம் வகுத்
தன ராயிர மாதே. (570)

மாதர்க ளரசே சாதகன் தன்பின் மருவிடும் வன்னிலோ கத்தில்
நீதமா யடைவன் தந்தைதன் செனனம் நேர்ந்திடுங் கோடிநூ றது
வாய், வேதியன் குலத்தி லுதித்துபின் னுலகில் விளங்கிடு மரசர்தன்
குலத்தில், கோதிலாச் செனன மாகிநற் கதியிற் குறுகிடு வாவென
வுரையே. (571)

வேறு.

பொன்னவனும் ஐந்ததனில் மதியும்மூன்றில்
புகர்கொடியும் ஆயதனிற் கரியீரைந்தில்
நன்னயஞ்சேர் பரிசேயும் மாலும்யேழில்
நாட்டினர்கள் கட்கமது உயிராய்வந்தால்
இன்னிலத்திற் கரிமுடிவில் சாதகற்கு
யிசைவுடனே மரணமது வருகுமென்றே
சொன்னதுதான் தவருது தாரமூன்று
சொல்லுவர்கள் சாதகற்குக் கணிதநூலால் (572)

வேறு.

நூலவ ருரைத்த சாதகன் றனக்கு நுகர்ந்திடுஞ் சேய்திசைமுடி வில், சாலவே மாதுர் கர்மமுண் டாகும் சாற்றினர் துணைவர்க ளில் லான், கோலமாய்ப் பொன்னன் றிசைதனிற் பரிசேய் குலாவியே வூன திற் றந்தை, சாலவே விண்ணே ருலகடைந் திடுவன் சாதகன் பல னிது மாதே. (573)

வேறு.

சதியாக அட்டமத்தோன் பாம்புயிர்க்கோ ளுடனே
சாகுமிடம் மறையாமற் சுபர்மனைவந் திடுகில்
விதியாகக் காரிமதி யுடன்சேர்ந்து அருணன்
வீடதுவந் தேகிடமால் வெய்யவனும் மறையால்
துதிஆரல் மால்பரிபொன் னன்புதனின் றெகையாய்த்
தோன்றிடுஞ்சா தகற்குயிது சொல்லினர்கள் நூலோர்
சதியாக அட்டமத்தோன் பாம்புடனே மறைந்தால்
சற்குருமால் புகர்பரிதி தருந்தொகையென் றேதே. (574)

ஓதிடுவோம் பெண்மயிலே மேலவர்நூல் மொழியால்
உயர்குருதன் திசையதனி லுரைத்தனர் பாக் கியமால்
நீதியுடன் காரிதிசை வந்திடுநாள் முதலே
நேர்ந்திடுஞ்சேத் திரமாக நிதிபதியோக் கியமாம்
வேதன்விதிப் படியாகத் தோன்றிடுமிப் பலனுய்
விதித்தனர்மே லோர்கள்மொழி விளம்பிடுஞ்சா தகற்கு
ஓதுமுயிர்க் கதிபனையும் உயிர்தனையும் மறையும்
உகந்திடவே சரிநோக்கும் உரைவுடன்சா தகற்கு. (575)

உரையுடன்சா தகற்குவய தோதினர்மால் பரியா
யுரைத்தனர்நூல் கணிதமொழிப் படியெனமே லோர்கள்
விரைவுடனே அட்டமத்தோன் உயிர்க்கோளன் கரியும்
விளங்குமிக்கோ ளொன்றுகி யோர்மனையாய் மறைந்தால்
தரையிடைவந் துதித்தனனே மாயமெனக் கணிதர்
சாற்றினர்கள் சிசுதனக்கு சாரும்வய தெனவே
முறையுடன்முக் கோளனுமே கேந்த்ரதிரி கோணம்
முயன்றிடச்சா தகற்குவய தெழுபதென வுரையே (576)

வேறு.

சூரியன் மாலோ டொன்றுய்த் தோன்றிட வுதய மேறச்
சாருயிர்க் கோளன் மாறித் தனித்திடப் பவர்வீ டாகச்
சீருடன் காரி யெட்டோன் சேரிடம் புகர்வீ டானுற்
கூறினர் அறுபத் தொன்றுய்க் குறித்தனர் வயதென் றேதே. ()

ஓதிடுஞ் சேய்க்கு யோகம் உரைத்தனர் கரிநாள் வந்தால்
வேதமா யுயர்ச்சி பூமி விதித்தனர் பிலமாய்ச் சொல்ல
நீதமாய்க் கரிநாள் மட்டும் நேர்ந்திடு மதிக பாக்யம்
போதவே வருமென் றேதிப் புகட்டினர் பிறக்குஞ் சேய்க்கு. (578)

சேயவன் றனக்கு யோகஞ் செப்பினர் கணித நூலோர்
தூயனு முயிரின் கோளேத் துணிவுடன் பவர்நோக் குற்றுல்
மாயுமென் றுரைத்தார் பாம்பில் வகுத்தனர் வயது சாற்றச்
சேயவன் றனக்கு நூலோர் செப்பினர் மரண மென்றே. (579)

வேறு.

மதிமகன் பானு உயிர்க்குளோ னுடனே வருமிடஞ் சுபர்மனை யாகச், சதியுட னெட்டோன் ஒன்றுநான் கேழாய்த் தரித்திடப் பாவர்வீ டாக, விதியுடன் காரி சுபர்களோ டேகி விளங்கிடப் புகர் மதி வீடால், பதிதனில் வயது அறுபதொன் றுகப் பகர்ந்தனர் சாதகன் றனக்கே. (580)

சாதகன் றனக்குப் பெரியவர் மொழியாற் சார்ந்திடு முன்னுரை தொகையில், வேதமாய்ப் பாம்பு உயிர்தனிற் பிலமாய் விளங்கிட காரிநோக் கிடுமால், போதமுன் னுரைத்த அறுபத் தொன் றத னிற் பொன்றிடும் நாலுயேழ் வயதாம், ஓதினர் நலமாய் ஐயைந்து யெட்டி லுரைத்தனர் மேலவர் மொழியால். (581)

மேலவர் மொழியாற் சாதகன் றனக்கு விதித்தனர் கணிதநூற் படியே, சாலயெட் டோனைக் காரிநோக் கிடவே தனையுமக் கோள் கள்நோக் கிடுமால், தூலமிப் படியே தோன்றுசேய் வயது சொல்லி னர் ஆறெட்டிற் போகும், சாலயெட் டோனுங் காரியொன் ருகித் தரித்திட வோர்மனை மறையால். (582)

மந்தனு முயிரோன் மறையவன் கேது வரும்புகர் உதயசேந் திரமாய், வந்திடு முயிர்க்கு வரினுமட் டமத்தோன் வருமிடம் பவர்மனை பகையாற், சுந்தரப் படியிற் பிறந்திடுஞ் சேய்க்குத் தோன்றிடும் வயதுயெண் பதுவாம், மந்தனு முயிரோன் வரு மிடங் குருதி வளர்மனை தோன்றிட வருமால். (583)

வருமுயிர் சேய்க்கு வகுத்தனர் வயது மால்புகர் மதிகரி தொ கையாய்ச், சதியுட னுயிரோன் சாரிடம் பகையாய்த் தரித்திட வெட்டினு னுடனே, விரிகுழல் மாதே தோன்றிடுஞ் சேய்க்கு விதித்தனர் வெள்ளிமால் குருதி, பரியுடன் தொகையாய் மறைந்த னர் கணிதர் பண்புடன் வாய்மையென் றுரையே. (584)

வேறு.

சூரியன்மா லட்டமத்தோன் உயிரோன்காரி
தோன்றுமிக்கோள் மறையாமற் சுபர்வீடாகச்
சேருடனே உயிர்தனக்கு ஐந்தோன் பத்தோன்
சேரிடமே சுபர்வீடாய் உயிர்க்காறற்றால்
கூறினர்சேய் கோள்வயது புகர்மால்காரி
குருவுமதி வருந்தொகையாற் கொண்டிடுநூல் மொழியாற்
காரிஉயிர்க் கோளுடனே உயிர்க்குமுன்றிற்
கடும்பவரோ ருடன்மறைந்து மதிக்கெட்டானல். (585)

மதிதனக்கெட் டாகிடவே வருஞ்சேய்ஆயுள்
வகுத்தனர்மால் புகர்மதிபொன் வருந்தொகை யென்று
சதியுடனே ரவிமதிசேய் திசைநாட்செல்வஞ் [ரையே
சார்ந்திடுமே உயர்ச்சிநிதி சமனும்பூமி
விதியுடன்வந் தேகிடுமே தோன்றுஞ்சேய்க்கு
விளம்பினரால் பாம்புதிசை வரினுமாகிற்
பதிதனில்விட் டேகிடுமே பொருளாஞ்சேதம்
பகர்ந்தனரால் சேயலைச்சல் பகருமாதோ. (586)

மாதவராற் பாம்புதிசை மறைநாள்மட்டும்
வருமலைச்சல் பொருட்சேதம் வருமென்றோதே
வேதமெனப் பாம்புதிசை கரிநாள்வந்தால்
விதித்தனராற் சமபலனு யுதவும்பூமி
சேதமெனப் பாம்புவிடும் மறைநாள்வந்தால்
சிலவுகொஞ்சம் பொருட்சேதம் சேருந்துன்பம்
ஓதிடுவன் சேய்தனக்கு அறைந்தார் நூலோர்
உதவும்விதிப் படியாக உரைக்குமாதோ. (587)

மாலவனு முயிரோனுய்ச் சேய்புகர்வீடேகி
வரினுமுடன் பாவருமே வந்திடவே மறையால்
நீலனுமெட் டோனுடனே கொடியோன்மேவி
நின்றிடவே சுபர்வீடாய் உயிர்க்கிராருய்ச்
சாலவே உயிர்தனக்குப் பத்தேழோனுஞ்
சாருமிடம் பவர்மனையாய்ப் பவர்வந்துற்றால்
தூலமுடன் வருஞ்சேய்க்கு வயதென்றோதத்
தொல்புகர்பொன் பாம்புவருந் தொகையாய்ச்செப்பே. (588)

வேறு.

அட்டமா திபனும் ஆறினே னுயிரோன் அமர்ந்திட வோர் மனை மறையத், திட்டமாய்க் காரி உயிர்க்குமுன் பின்னுற் சேர்ந் திடச் சுபர்கள்நோக் கிடாதால், நிட்டைமால் மதியும் மாந்திகே துடனே நின்றிடப் புகர்க்குயி ராருய், மட்டிடுஞ் சேய்க்கு வருங் கொடி முழுதில் மாய்ந்திடும் வரும்வய துரையே. (588)

வேறு.

காரிசேய் குளிக னென்றுய்க் கதிரவன் வீட்டி லேகச்
சீருடன் உயிர்க்கோ ளெட்டோன் சேருயிர் தனில்வந் தெய்தச்
சாருயிர் தனக்குப் பத்தோன் சாரிடம் மறையா தாகில்
கூறினர் கரிமால் சுங்கன் குருவுநாள் தொகையென் றோதே. (590)

ஓதிடுங் துகையா யாயுள் உரைத்தனர் பிறக்குஞ் சேய்க்கு
வேதமா யுயிர்க்கோ ளெட்டோன் மேவிட மறைவ தானல்
போதமுன் துகையில் யீரேழ் பொன்றிடும் வயதென் றோத
நீதமாய்க் கணித மாய்ந்தோர் நிகழ்த்தினர் பலன்றுன் செப்பே. ()

செப்பிடும் பலன்தான் பாம்பு சேருயிர்க் காறேன் நாளும்
முற்படி யிருக்கோள் நாளில் மொழிந்தனர் சமனும் செல்வம்
யிப்படி வருமென் றேதி யிசைவுடன் அறைந்தார் சேய்க்குத்
தப்பிடா தெனவே மேலோர் சாற்றினர் மறைநாள் மட்டும். (592)

சந்திர னெட்டோ னென்றுச் சாரிடஞ் சேய்வீ டாக
வந்துயிர்க் கோளன் காரி வருமிடம் மறையா தாகில்
சிந்தையாய் மதிக்குப் பத்தில் தினகரன் மால்கே துற்றால்
விந்தையா யறுபத் தேழாய் விதித்தனர் தாணிமாதோ. (593

மாதவர் மொழியால் மேலோர் வகுத்தனர் வயது செப்பே
ஓதிடு முயிர்க்கு பெட்டில் உயர்வுடன் தீக்கோள் வந்தால்
வேதமுன் உரையில் நாசம் விதித்தனர் யீரா றென்று
சேதமாய் வயதா மென்றே செப்பினர் வருஞ்சே யோகம். (594)

வருமுயிர் சேய்க்குப் பூமி வகுத்தனர் சமனுஞ் செல்வம்
இருநிதிபூமி சாலி யிசைவுட னிரண்டே ழைந்தில்
தரும்வய ததனிற் செல்வஞ் சார்ந்திடும் பிலமாய்ச் செப்பே
வருமெனக் கெணித மாக வகுத்தனர் அதிக வாக்கால். (595)

மதிமகன் பெட்டோன் கேது வரும்பரி யுடனென் றுகச்
சதிருடன் உயிர்க்கு மூன்றில் தரித்திடப் பவர்வீ டாக
விதியுட னுயிர்க்கோள் கேந்த்ரம் விளங்கிடக் காரி மாந்தி
மதிமக னில்லஞ் சோந்தால் மாய்ந்திடும் யீரே ழாண்டில். (596)

வேறு.

அட்டமா திபனும் உதயகேந் திரத்தில் அமர்ந்திடக் கேது மா லுடனே, திட்டமா யுயிரோன் காரியோ டொன்றுய்ச் சேரிடஞ் சுபர்மனை மறையால், மட்டிடுங் கருமத் ததிபனுஞ் சுபராய் வந்திடக் காரிபொன் வீடால், சட்டமாய் வருமால் தாணியிற் றேன்றுஞ் சாதகன் வயதுஒன் பதுவாம். (597)

வேறு.

காரியுயிர்க் கோளுடனே மதியோடொன்றுய்க்
கருதுமிக்கோள் மறையாமற் சுபர்வீ டாகச்
சூரியன்மால் புகருடனே கருமநாதன்
தோன்றிடமே சுபர்வீடாய் உயிர்க்காறுற்றால்

சீருடன்தோன் றிடுஞ்சேய்க்கு வயதென்றேதச்
செப்பினர்மால் புகர்மதிசேய் தொகையாண்டாகக்
கூறினர்நூ லோர்கள்மொழிப் படியேசெப்பக்
குறித்தனர்சா தகற்குவரும் பலனைச் செப்பே. (598)

செப்பிடுஞ்சா தகற்குவரும் பலனென்றேதச்
சேருமுயிர்க் காறேன்றன் றிசைமுன்போனல்
முற்படிதோன் றிடுஞ்சேய்க்குப் புகர்பிற்பாதி
மொழிந்திடுஞ்சேத் திரபலன்கள் சமனுய்ப்போகுந்
தப்பிடவே பரிமதிநாள் திசைநாளெல்லாஞ்
சார்ந்திடுமே உயர்ச்சிநிதி சாருமாதே
துப்பிதழ்வாய் மொழிந்தனர்கள் பரிநாள்வந்தால்
தோன்றிடும்பாம் பதின்விஷத்தாற் றுயரம்மாதே (599)

மாதவராற் சூரியன்றன் றிசைநாள்வந்தால்
வரும்விஷமாய்ப் பிலமாக மயக்கஞ்சேரும்
நீதியுடன் மறுதேசந் தனிலேபோகும்
நேர்பாம்பு விஷமதினுற் றுயரந்நீங்கும்
ஓதிடுவன் றிசைமுடிவில் தண்ணீராலே
உரைத்தனரால் வருந்துயரம் உடனேமாயும்
வேதன்விதிப் படியாகத் தோன்றுஞ்சேய்க்கு
விதித்தனர்நூ லோர்கள்மொழிப் படியாய்ச்சொல்லே (600)

சூரியன்மா லுயிரோனுங் குளிகனேடு
தோன்றிடக்கேந் திரமாகிப் பவர்வீடாகக்
காரியுந்தான் வீடதுவே தனிக்கபெட்டோன்
கருதுபவர் வீடாகி மறைபாதாகில்
சீருடன்சேய் பத்தினுக்கோள் மதியோடொன்றுய்ச்
சேரிடமே சுபர்வீடா யுயிர்முன்பின்னுற்
கூறினர்சேய் வயதுபுகர் மதிமால்காரி
குறுகியே அத்தொகையாய்க் கொடுக்கும்மாதோ (601)

மாதவராற் சேய்பாம்பு குருநாள்காரி
வருந்திசையிற் கனவானுய் வளரும்பூமி
ஓதிடுவன் பாம்புதிசை மறைநாளெல்லாம்
உரைத்தனர்பாக் கியமாக உதவுஞ்செல்வஞ்

சோதிடநூற் படியாகக் கனமேபூமி
தோன்றிடுஞ்சேத் திரமாக வளரும்மாதே
சேதமெனக் காரிதிசை குறையுஞ்செல்வஞ்
சேதம்வரும் அரசர்பயம் செப்புமேலோர் (602)

வேறு

அட்டாமா திபனும் உதயகேந் திரத்தில் அமர்ந்திடப் புகர் மதி யுடனே, திட்டமாய்க் காரி மதிதனக் காறிற் சேர்ந்திடச் சுபரிலா திடுகில், நிட்டைமா னுயிரோன் மாந்திபா னென்றாய் நின்றிட உயிர்க்குயி ராறிற். சட்டமாய் வயது ஐம்பத்தொன் றாகச் சாற்றினர் கணிதநூல் விதியால். (603)

விதியுடன் சேய்க்குப் பாம்புபொன் றிசையில் விதித்தனர் பாக்கியம் பூமி, சதிருடன் பிலமாய் அறைந்தனர் தனமாய்ச் சார்ந்திடும் அதிகக்ஷேத் திரமாய்ப், பதிதனில் வருமென்றோதி னர் கணிதர் பகர்ந்தனர் மறைதிசை யதனிற்,கதிபெற யிருப் பன் குடும்பயோக் கியனாய்க் கட்டினர் சாதகன் றனக்கே. (604)

அட்டமா திபனுங் காரிசே யுயிரோன் அமர்ந்திட உதயகேந் திரமாய்த்,திட்டமாய்ப் பாம்பு பதிபுக ருடனே சேரிடம் உயிர்க் கிரண்டானல், சட்டமாய்த் தோன்றுஞ் சாதகன் வயது சாற்றி னர் கணிதநூல் விதியால்,திட்டமாய்க் காரி மால்புகர் தொகை யாய்ச் செப்பினர் மேலவர் மொழியால். (605)

வேறு.

மாதேகேள் மறைஉயிர்க்கோ ளாகியே மாலும்
வருங்கருமக் கோளனும்பான் வாயிவர்க ளொன்றாய்
சாதாவா யுயிர்தனக்கு மறையாம லிவர்கள்
சார்ந்திடவே சுபர்வீடா யிருந்திடக்கேந் திரமாய்க்
கோதேகே ளட்டமத்தோ னுயிர்க்குபய மதனிற்
குறுகிடவே வளருகேந் திரமதிலே வருமால்
மாதேகேள் தோன்றியசேய் வரும்வயது மேலோர்
வகுத்தனரெண் பதுவாக மாய்ந்திடும்வாழ் நாளே. (606)

நாளெனவே தோன்றியதோர் நல்லுயிர்க்கொன் பானும்
நவின்றிடுமீ ரைந்தோனும் நாடியிக்கோ ளொன்றாய்த்
தாழுறவே அட்டமமார் தானமதாய் வியத்திற்
சார்ந்திடவே யிவர்களவர் தங்கியசேய் வயது

சூழுறமுன் சொல்லியதோ ரெண்பதுவாழ் நாளிற்
றுஞ்சிடுமே பாதியெனச் சொல்லினர்நூல் மொழியால்
வாழ்வுடன்தோன் றிடுஞ்சேய்க்கு வயதிருஆற் மூன்றின்
வருந்திசைநாள் முதலெனவே வந்திடும்பாக் கியமாம்(607)

பாக்கியஞ்சேத் திரம்பூமி பலிக்கும்வெகு பிலமாய்ப்
பகர்ந்தனர்க ளவருமதி பகர்மொழிவஞ் சகனுத்
தாக்கிடுவன் வருந்தனங்கள் சாரும்வெகு பிலமாய்ச்
சார்ந்தெவர்க்கு மீயாதான் தன்மொழியுமே லாகும்
தீர்க்கமுடன் முப்பதுமூன் றும்வயது வரையுஞ்
செப்பினர்கள் பாக்யமெனச் சேருமதின் மேலாய்
பாக்கியங்கள் வரும்பூமி நாசமென அலைச்சல்
பதியைவிட்டு யேகிடுமே பகர்ந்தனர்நாற் பதுவே. (608)

வேறு.

அட்டமந் தன்னிற் பத்தோன் அமர்ந்திட அதற்கு நாதன்
திட்டமாய்க் கரிபாம் போடு சேரிடம் மறையோன் வீடால்
நிட்டைமா னுயிரோன் றானும் நின்றிடம் வாக்கா றானல்
சட்டமாய் வயது நாற்பத் தாறெனச் சாற்று மாதே. (609)

மாதவர் மொழியாற் சேய்க்கு வயதுயி ரைந்து மேலாய்
ஓதினர் சமமாய்ப் பூமி உதவிடுந் தனங்க ளற்பம்
நீதமாய் வயது முப்பத் தொன்றுடன் வரையுஞ் செல்வம்
ஓதினர் சமமென் றோதி உரைத்தனர் கணித மாய்ந்தோர். (610)

ஆய்ந்திட உயிர்க்கோள் தன்னை அந்தணன் நோக்கு மாகில
சேர்ந்திடு முயிரோன் நாளிற் செப்பிய புகர்வந் துற்றால்
சார்ந்திடுந் தனங்கள் பூமி சம்பிரமம் அதிக செல்வம்
கூந்தலாள் வரும்யோ கத்தாற் குறித்தனர் செல்வஞ் சேரும். (611)

சேருமே தனங்க ளின்பம் க்ஷேத்திரம் புகழோ டிவன்
சாருமே பிதாவின் பூமி சார்ந்திடுஞ் சமம தாகுங்
கூறினர் கணித மாய்ந்தோர் குறித்தனர் மரண மட்டும்
பாரினி லதிக செல்வம் பாக்கிய வானென் றோதே. (612)

வேறு.

அட்டமா திபனும் அருக்கனு முயிரோன் ஆயுள்கா ரகனுடன் கூடித், திட்டமா யுயிர்க்கு மறைந்திடா திவர்கள் சேரிடங்

காரிவீ டேகச், சட்டமாய்க் கருமன் மறைந்திட நீசஞ் சார்ந்திட வுடன்பவர் தரிக்கக், கட்டிடுஞ் சேய்க்கு வயதுஐம் பதுவாய்க் கருதினர் மேலவர் மொழியால். (613)

மேலவர் மொழியாற் பிறந்திடுஞ் சேய்க்கு வெள்ளிமால் திசை யது முழுதுஞ், சீலமாய்ப் பூமி பாக்கியஞ் சமமாய்ச் சேர்ந்திடும் யிப்படி யதனாற், கோலமாய் மதிநாள் முதலெலன முடிவு குறித்த னர் அதிகபாக் கியனும், சாலவே ஆரல் திசைவரு முதலே சாய்ந்தி டும் பூமிகள் சலனம். (614)

வேறு.

ஆரனுயிர்க் கோளாகி உதயந்தன்னில்
அமரவக்கோ ளுடன்மதியும் ஆயுள்நாதன்
சாருமிக்கோ ளொன்றாகித் தரிக்கப்பத்தோன்
சந்திரன்றன் புதல்வனுடன் மாந்தியோடு
கூருமிக்கோள் மாலவன்வீ டதனிற்சேரக்
குளிர்மதிவீ டதிற்புகரோன் குருகுமானல்
பாரதனி லிவன்மரணம் ஐம்பத்தைந்திற்
பகருயிர்போய் நமபுரஞ்சென் றணுகுமென்றே. (615)

என்றெனவே தோன்றியசேய் வளருந்தெத்தா
யிருந்திடுவன் தந்தையர்தாய் கருமமென்றான்
தொன்றுபுகர் திசையதனிற் சேருந்தத்து
தோன்றும்வழி யாலிவன்றன் வாழ்வுமென்றே
நன்றெனவே தோன்றியதொல் புகரின்நாளில்
நாடிடுமே வரும்பூமி தனங்களின்பம்
துன்றுபுகர் திசைவரையுஞ் சமமேயாகுந்
தோன்றிவரும் பூமியினாற் பலனைச்செப்பே. (616)

செப்பியதோர் சூரியன்நாள் திசைமுற்பாதி
சேய்தனக்கு வரும்பலன்கள் பூமிநஷ்டம்
தப்பியதோர் மனப்பீடை அலைச்சல்துக்கம்
சாற்றுமென முற்பாதி வரைக்கும்மேலாய்
முற்படியே வரும்பூமி தனங்கள்சேரும்
மொழிந்திடுவன் மத்தியநாள் வரினுமானாற்
செப்புமெனத் தோன்றியசேய் தனக்குப்பூமி
சேருமென வெகுபிலமாய்த் தாணிமாதே. (617)

மாதேகேள் தோன்றியநாள் மதியின்நாளாய்
வருபரிகள் பொருள்லாபம் வளருமின்பம்
ஓதிடுவன் மனதுசல னங்களில்லான்
உரைத்தனர்க ளிதுகெணித விதியாமென்பார்
சேதமென ஆரல்திசை வரினுமானாற்
செப்பியதோர் வரும்பதிகள் பூமிகஷ்டம்
தீதெனவே மொழிவசனம் உரையுமாகுஞ்
செப்புமெனச் சாதகன்றன் பலனைக்கூறே. (618)

சந்திரனும் அட்டமமாய்த் தனிக்க அக்கோள்
சற்குருசேய் மாந்திபுக ருடனொன்றாகி
வந்துயிர்க்கு உபயமதாய் ஆறீராறில்
வரவவர்க்கு நாலதிலேழ் கரிகேதாக
விந்தையுடன் உயிர்க்கோளன் மறைந்துநீசம்
விளங்கிடுஞ்சே யவன்றனக்கு வயதுமேலோர்
சிந்தையுடன் கெணிதபர லாகச்சேர்த்துச்
செப்பினரைம் பதுஉபயந் தொகை யென்றோதே. (619)

ஓதிடவே மால்கொடியோன் றிசையின்மட்டும்
உதவியாம்பாக் கியம்பூமி சமமேயாகும்
நீதியுடன் புகர்திசையில் ஆரல்சேரும்
நேர்ந்திடும்வந் தபகாரம் முதலேசுங்கன்
வேதமாய் முடிவதுநாள் வரையுஞ்செல்வம்
விளங்கிடும்பாக் கியம்பூமி அதிகயோகம்
ஓதினர்கள் பிலமாக வாழ்வனென்றே
உரைத்தனர்பான் றிசைமுடிவும் பலன்களற்பம். (620)

வேறு.

வில்லினிற் சென்ன முதித்திடக் கொடியோன் விளங்கிட மாந் தியு மதனிற், சொல்லிய உயிர்க்கோள் கருமனோ டொன்றாய்த் தோ ன்றிடம் பிகர்மனை யாக, நல்லுயிர் தனக்கு உபயவீடதனில் நல்கிட ஆயுள்கா ரகனும், தொல்புகர் கருமந் தனில்வா யெட்டோன் றோன் றிடஞ் சூரியன் வீடால். (621)

வீடினிலெட்டோன் தனித்திட அக்கோள் விளங்கிட மறைந் திடு மாகில், நீடுற வரினும் தோன்றிடுஞ் சேய்க்கு நிச்சய மாமென வயது, சூடினர் பிலமாய் ஐம்பத்தொன் னுபயம் சொல்லினர் கணித வாக்கியமாம், கூடிய பயனை உரைத்திட நூலோர் குறித்தனர் புகர் முதற் பரியில். (622)

பரியினுள் வரையும் பலன்சமம் பூமி பாக்கிய மின்பமுஞ் சம மாம், குறுகிடும் மதியின் பாதிநாள் வரையுங் குறித்தனர் பலனெலா மாயும், வருமதிற் பீடை பொருளழி கிலேசம் வந்திடும் பாதியின் மேலாய், சரியுடன் பாதி முதலெனப் பூமி சார்ந்திடு குருதிநாள் வரை யும். (623)

வரையெனப் பூமி தனச்சுகம் வரவு வகுத்தனர் பூமியாற்பலி தம், விரைவுடன் குருதி நாளினிற் பூமி விளங்கிடும் அதிகக்ஷேத் திர மாம், அறையென அதன்மே லரவுவந்திடுகில் அழிந்திடும் பூமிக்ஷேத் திரங்கள், குறைவுட னாகக் குறித்தனர் துன்பங் கொண்டிடுஞ் சாத கன் பலனே. (624)

வேறு.

அட்டமத்தோன் கேந்திரமாய் ஆரலோடு
அமர்ந்திடவே அட்டமத்திற் கொடியபாவர்
திட்டமுடன் உயிர்க்கோளன் மறையனுகிச்
சேர்ந்திடங்கேந் திரம்வளரத் தனிக்குமாகில்
சட்டமுடன் பஞ்சமவீ டதனிற்காரி
தனித்திடவே அதற்குடையோன் உபயந்தன்னிற்
கட்டினர்நல் லரவுடனே தரிக்குமானுற்
கருதிடச்சேய் வயதெனவே கணிதநூலோர். (625)

நூல்மொழியால் ஆயுள்விதி அறுபத்தொன்று
நூனுமதில் மரணமெனக் கணிதவாய்மை
சீலமுடன் புகர்திசையின் பாதிமேலாய்ச்
செப்பியபான் றிசைவரையும் பூமிசெல்வம்
சாலவெனத் தோன்றிடுமே சமமதாகச்
சாருமதி முதற்குருதி வரையும்பூமி
தூலமுடன் வருந்தனங்கள் அதிகபூமி
தோன்றியதோர் பாக்கியங்கள் கணிதங்கூறே. (626)

கூறுமெனத் தோன்றியசேய் தனக்குமேலோர்
குறித்தனர்கள் வெகுபலனை யுரைக்கலாகும்
சாருமென அரவுவருந் திசைமுன்பாதி
தன்னில்வெகு தனங்கள்மிகப் புகழ்தான்யேற்பன்
சீருடனே வெகுபூமி வளருமென்று
செப்பினர்கள் பாக்கியனைக் கணிதமாய்ந்தோர்
கூறினர்கள் தப்பாது யிதுவென்றோதிக்
குறித்தனர்கள் ஆகமநூல் வழியாமாதே. (627)

மாதேகேள் வருமுயிர்க்கோள் மாலோனுகி
வண்புகர்பா னுடன்கூடி நாலேழேகச்
சீதமுடன் அட்டமத்தோன் கரியனோடு
சேருதய கேந்திரத்திற் றரிக்குமாகில்
நீதமுடன் வருங்கரும னீரைந்தைந்தில்
நின்றிடவே உடனவர்கள் இருக்குமானல்
வேதமுடன் முப்பத்தைந் திரட்டியாயுள்
விதித்தனர்க ளாகமநூல் வழியாய்க்கேளே. (628)

கேளெனவே வருமுயிர்க்கோள் புகர்பானோடு
கெணிதமுட னுயிர்தனக்கு மூன்றுறெட்டிற்
றாழ்வுடனே தரித்திடவே சாருமாயுள்
சாய்ந்திடுமே வேழுதள்ளி நிசமென்றோது
சூழுறவே அட்டமத்தோன் கரியவன்றானுஞ்
தோன்றுபகை நீசம்வரச் சுபர்நோக்கில்லா
யேழுடனேழ் தொகையிரட்டி வயதுதள்ளி
யிசைவுடனே கணிதமொழி யறைந்ததன்றே. (629)

வேறு.

அறைந்தனர் பிலமாய்ப் பிறந்திடுஞ் சேய்க்கு ஐம்பத்தெட் டாயுளே பிலமாம், மறைந்திடுங் கரிமால் பரிதியோ டொன்றாய் மறைந்திட அதற்குநா தனுமே, குறைந்திட உயிர்க்கி ராறினிற் றனிக்கக் குருதியும் மதியைநோக் கிடுமால், அறைந்தனர் சேய்க்கு முன்னுரை வயதில் ஆயுளு மிருபத்தொன் பதுவாம். (630)

மதிமகன் புகரும் வக்கிர னுயிரோன் வருமிடம் உதயகேந்திர மாய், விதியுட னெட்டோன் கரியுட னென்ருய் விளங்கிட மதிமனை வருமால், சதியுடன் கருமத் ததிபனும் பொன்னுஞ் சாரிடம் பவர் மனை மறைந்தால், மதிமகன் புகர்சேய் மதிவரு தொகையாய் வகுத் தனர் வயதுசா தகற்கே. (631)

சாதகன் றனக்குப் பாம்புநாள் முடிவிற் சார்ந்திடும் உயர்ச்சி பாக் கியங்கள், வேதமாய் வருமென் ருேதினர் பிலமாய் விளம் பிடுங் கணிதநூல் விதியால், ஓதிடுமறைநாள் திசைமுடி மட்டும் உரைத்தனர் பதிநிதி பூமி, நீதமா யுலகில் வருமென சேய்க்கு நிகழ்ந்திடும் மறைதிசை முழுதும். (632)

அட்டமா திபனு மருணனும் புகரும் அம்புலி பொன்னுட னென்ருய்த், திட்டமா யோர்வீ டேகியே பிலமாய்ச் சேர்ந்திடப் பவர்மனை வருமால், மட்டிடுங் கருமத் ததிபனுங் கரியும் வருமி டஞ் சூரியன் வீடால், திட்டமாய்ப் பிறக்குஞ் சாதகன் றனக்குச் செப்பினுர் வயதுஐம் பதுவாம். (633)

செப்பிடும் வயது ஐம்பதென் ருேதிச் செப்பினுர் கணிதநூல் விதியால், முப்படி காரி வருமிடஞ் சுபமாய் முயன்றிடப் பவர்கள் நோக் காதால், செப்பிடுஞ் சேய்க்கு முன்னுரை வயதிற் சேதமாம் நாலென வுரையே, தப்பிடா தெனவே பிறந்திடுஞ் சேய்க்குச் சாற்றி னுர் சங்கரன் வாக்கால். (634)

வேறு.

கரியவன் உயிர்க்கீ ராறிற் கலந்திட மாலோ டொன்ருய்ப்
பரியுடன் உயிரோன் யெட்டோன் பகரிடம் மறையா தாகிற்
சரியுடன் பத்தோன் வீட்டிற் றரித்திடப் பிறந்த சேயக்குக்
கரியவன் புகர்மா லாண்டாய்க் கருதினர் வயதென் ருேதே. (635)

வேறு.

சதியாக அட்டமத்தோன் உயிரோனுகிச்
சதிதனக்கு மறைந்திடவே உதயமேற
விதியாகக் காரியுடன் கருமநாதன்
விளங்கிடக்கேந் திரமாகிச் சுபர்நோக்குற்ருல்

அதிபதியாய் மாலுடன்சேய் புகர்பொன்காரி
அம்புலிதன் வருந்தொகையாய் வயதென்ருேதே
மதியாக அட்டமத்திற் பாம்போடைந்தோன்
மறைந்திடவே வருஞ்சேய்க்கு வகுத்தனரைம்பதுவாம்.

குருவுடனே அட்டமத்தோ னேர்வீடாகிக்
குறுகிடக்கேந் திரமாகிச் சுபர்வீடாக
வருமுயிரோன் றனக்காறிற் கரிசேயொன்ருய்
வந்திடவே யிக்கோட்கள் மதிக்கேழுற்ருல்
தருமுயிர்க்கு ஐந்தோனும் உயிர்க்குமூன்றிற்
றனித்திடவே சுபர்வீடாய்ப் பவர்நோக்குற்ருல்
குருவுடன்மால் மதியாண்டாய் வயதுசெப்பக்
குறித்தனர்சா தகற்குவிதி கொடுக்குமாதோ. (637)

மதிதனக்குக் கேந்திரத்திற் குருதியெட்டோன்
வருமுயிர்க்கோ ளுடன்சேர்ந்து உயிரோன்வீடால்
விதியுடனே காரிஉயிர் தனக்கேழாகி
விளங்கிடவே சுபர்நோக்க விளங்குமைந்தோன்
சதிருடனே உயிர்தனக்கு யீராருகித்
தனித்திடவே மதிதனக்கு மறையாதாலுல்
பதிதனில்வந் தேகிடுஞ்சேய் வயதுமேலோர்
பகர்ந்தனரெண் பதுவாகப் பகரும்மாதே. (638)

மாதேகே ளட்டமத்திற் றீக்கோள்வந்தால்
வகுத்தனர்முன் ருகையதனில் மாயும்பத்தேழ்
ஓதிடுவன் வருஞ்சேய்க்குப் புகரோன்நாளில்
உரைத்தனர்பாக் கியம்பூமி உயர்ச்சிஅற்பம்
நீதியுடன் சூரியன்றன் திசைநாள்வந்தால்
நேர்ந்திடும்பாக் கியம்பூமி உயர்ச்சிமேலாம்
சோதிடநூற் படியாக மதிநாள்மட்டும்
சொல்லினர்க ளிவன்றனக்கு யோகஞ்செப்பே. (639)

வேறு.

மந்தனுங் கேது மொன்றாய் மறைந்திடச் சுபர்நோக் கில்லா
வந்திட வுயிரோன் பொன்னும் வருமுயிர்க் கெட்டோ னோடு
விந்தையா யோர்வீ டாகி விளங்கிட மறையு மானால்
சந்திரன் பரிபொன் னாளாய்ச் சாற்றினார் வயதென் றோதே. (640)

வேறு.

மதியுயிர்க்கோள் தானாகி உதயந்தன்னில்
வரவவர்க்குக் கேந்திரத்தில் மாந்தியெட்டோன்
சதியுடனே வளருமனை புகர்தன்னில்லஞ்
சாரவக்கோ ளாட்சியுச்சந் தரிக்கப்பாவர்
துதிபெறவே உயிர்தனக்குக் கருமனோடு
தோன்றிடவே பன்னொன்றி லிருப்பாரானால்
விதியுடனே பிறந்திடுஞ்சேய் வயதுமேலோர்
விதித்தனர்மால் சேய்புகர்பான் றொகையென்றோதே. ()

ஓதுமென உயிர்தனக்கு ஒன்பான் வீட்டி
லுறைந்திடவே பாம்பதனிற் றரிக்க அக்கோள்
மாதுபயந் தன்னில்வளர் யிவன்றன்யோகம்
வரவுயிர்க்கு நாலாங்கோள் திசைவந்துற்றால்
நீதியுடனிவன்றிசையிற் கருமநாளில்
நேர்ந்திடுஞ்சே யவன்றனக்கு உயர்ச்சிகாட்டும்
வேதமாய் வருமுயற்சி அரசரின்பம்
விலங்கிடும்பாக் கியனாகக் கணிதங்கூறே. (642)

கூறுமெனப் புகர்திசையிற் கரிவந்துற்றால்
குறுகியசே யவன்றனக்குஞ் சிவிகையுண்டாம்
சாருமதில் வருமுயற்சி வளருமேலாய்
சார்ந்திடுமே யிதுகணிதத் தவறாதென்றார்
பாருயிர்க்கு உபயமென அதிபன்றானும்
பகர்திசைவந் திடுமாகிற் பாழாம்முன்சொல்
சீருடனே அவன்றிசையில் மனதிற்பீடை
சேயலைச்சல் பொருட்செலவு கணிதஞ்செப்பே. (643)

செப்புமெனத் தோன்றுயிர்க்கோள் திசைவந்துற்றால்
சேய்தனக்கு வருமுயற்சி வளரும்மேலாய்ச்
சப்ரமஞ்சம் வருந்தனங்கள் புகழோனாகித்
தரணிதனில் வெகுபூமி சாருஞ் சொன்னேன்
முற்படிவந் திடுமதனி லரசரின்பம்
முழங்கியபாக் கியனாக வாழ்வான்றானே
தப்பியசே யவன்றிசையில் முயற்சிதுஞ்சும்
தாழ்வெனவே வரும்பலன்கள் தவறுமென்னே. (644)

வேறு.

அட்ட மத்தினிற் காரி புகருடன்
திட்ட லக்கினக் கோளொடு பத்தினோன்
சட்ட மாகத் தரித்திட மால்வரை
எட்டு ரெண்டு வயதுசென் றேகிடும். (645)

வேறு.

மாதெனவே லக்கினமா யுதிக்கமாந்தி
வருங்கொடிய பாவருடன் வருகமாதோன்
சீதமுடன் மறையமனை அதனிலேகிச்
சேருமக்கோ ளுச்சம்வரத் தனிக்குமானால்
ஓதுமென உயிர் தனக்கீ ராறிற்காரி
உரைந்திடவே மதிக்கிவன்றன் மறையாதாக
நீதியுட னுயிர்தனக்கட் டமக்கோளெட்டில்
நின்றிடவே ஆயுள்விதி நிலையைக்கூறே. (646)

கூறுமெனத் தோன்றியசேய் தனக்குஆயுள்
கொள்ளுமென நாற்பத்தைந் திரட்டியொன்றில்
ஆரியன்மே வாணையெனப் படியென்றோதி
அழிந்திடுஞ்சேய் ஆரியனோ டுறையுமென்று
கூறினர்க ளாகமநூல் தெரிந்தமேலோர்
குறித்தனர்கள் வெகுபிலமாய்க் கணிதமாகச்
சீருடன்வே தாந்தநெறி தெரிந்துசொல்வன்
செப்பினர்க ளிதுதவறா தெனவென்றோதே. (647)

வேறு.

கரியவன் உயிர்க்கீ ராறிற் கலந்திடச் சுபர்வீ டாக
வருமுயிர்க் கோளன் யெட்டோன் வருமிடம் மறையா தாகிற்

றுருமுயிர் தனக்குப் பத்தோன் சசிமகன் சேயோ டொன்றாய்
வருமிடஞ் சுபர்வீ டானால் வகுத்தனர் வயதென் றேதே. (648)

ஓதிடும் புகர்மால் காரி ஒளிர்மதி தொகையைச் செப்பே
வேதமாய்க் கணிதமாய்ந்தோர் விதித்தனர் பிறக்குஞ் சேய்க்குப்
போதவே குருநாள் வெள்ளி பொருந்திய திசைக ளெல்லாம்
நீதமா யுயர்ச்சி பூமி நேர்ந்திடுந் தனவான் மாதோ. (649)

வேறு.

சூரியன்மா லட்டமத்தோன் உயிர்க்கோள் கேது
தோன்றுமிக்கோ ளாரனுடன் உதித்திடக்கேந் திரமாய்
காரியுடன் புகர்கருமத் தோனுடன்மூன் றேனும்
கருதுமிக்கோள் மறையாமற் சுபர்மனைவந் திடுமால்
சீருடன்தோன் றிடுஞ்சேய்க்கு புகரதுநாள் காரி
சேயவன்மால் திங்கள்வரும் சேர்ந்திடுஞ்சேய் வயதாம்
கூறிடவே காரியுந்தான் தனித்திடவே மறைந்தாற்
குருவுகரி புகர்வருநாள் திசைதொகையா யறையே. (650)

அறையுமெனக் குருவுதிசை தனில்வருநாள் சமனுய்
அறைந்தனர்சே யவன்றனக்கு அற்பமெனப் பலன்தான்
விரைவுடனே காரிதிசை முன்னிடும்பா தியிலே
விதித்தனரால் உயர்ச்சிவரும் விளங்கிடுமே சமனுய்
முறையுடன்பிற் பாதிவர மொழிந்தனர்கள் பிலமாய்
முயற்சிநிதி பதிபூமி முதுமகன்நாள் வரையுங்
குறையிலதாம் யாவருமே கனமெனவே மதிக்கக்
குறித்தனர்சா தகற்குவரும் பலனெனவே உரையே.(651)

வேறு.

மந்தனும் பத்தோன் கேது வருமிடம் புகர்வீ டாக
விந்தையாய்க் கோள னெட்டோன் விளங்குயிர்க் கோளோடொன்றாய்
வந்துயிர் தனக்கு மூன்றில் மறைந்திடப் பிறக்குஞ் சேய்க்குச்
சிந்தையாய்க் குருநாள் ரெட்டி செப்பினர் வயதென் றேதே. (652)

ஓதிடுங் குருநாட் பாதி உரைத்தனர் சமனுய்ச் செல்வம்
வேதமாய் மறையிற் பாதி விரித்தனர் முயற்சி கீர்த்தி

போதவே கணித மாகப் புகட்டினு ரதிக செல்வம்
ஓதினுர் பிலமாய் நூலோர் உரைத்தனர் பிறக்குஞ் சேய்க்கு. (653)

வேறு.

மறையவன்மால் காரிபரி உயிர்க்கோளெட்டோன்
வரினுமிக்கோ ளொன்றாகி மால்வீடாக
விரைவுடனே உயிர்தனக்கு யிக்கோள்தானும்
விளங்கிடவே மறையாமற் சுபர்நோக்கில்லா
முறையுடன்தோன் றிடுஞ்சேய்க்கு வயதுசுங்கன்
முதுமகன்மால் மதிதொகையாய் அறைந்தார்நூலோர்
குறையிலதாம் புகர் பரிநாள் மதிசேய்பாம்பு
கூடியிக்கோள் திசைபலனைக் குறித்தார் மேலோர். (654)

மேல்மொழியாய்ப் புகர்பரிநாள் மதிவந்துற்றால்
விளங்கிடயித் திசையதனில் விளங்குஞ் செல்வந்
தூலமதாய் அற்பபலன் பிலமாய்க்காட்டுந்
தோன்றிடுஞ்சேய் திசையதனிற் றுலங்குஞ் செல்வஞ்
சாலவெனப் பாதியின்மே லுயர்ச்சிசேரும்
சமபலனு யதிபதியிற் றரிக்கும்மாதே
கோலமதா யரவுதிசை யதனிற்செல்வங்
குறித்தனர்பாக் கியமாக உயர்ச்சி சேரும். (655)

சேருமெனப் பாம்புவருந் திசைமுற்பாதி
சேர்ந்திடுமே முயற்சிகளும் சமனுய்ப்போகும்
சீருடனே பிற்பாதி திசைநாளெல்லாம்
சேர்ந்திடுமே உயர்ச்சிநிதி சேருஞ்செல்வம்
சாருமென அத்திசையி லுயர்ச்சிதுஞ்சும்
சர்ப்பபயம் மனக்கவலை தப்பாதாகும்
கூறினர்கள் மேலோர்கள் வருஞ்சேயோகங்
குறித்தனரிப் படியாகக் கொடுக்கும் மாதே. (656)

வேறு.

சதியாக அட்டமத்தோன் சுபராகி மறைந்து
சாருமனை பவமாகி யுடன்பாவர் தரிக்க
விதியாக உயிர்க்கோளன் சுபராகி யுச்சம்
விளங்கிடவே உடன்பாவ ரொன்றாகிப் பிலமாய்த்

துதியாரல் வீடதனிற் காரிமதி பிலமாய்த்
தோன்றிடவே மறையாமற் சொல்லிடுஞ்சேய் வயது
மதியாரல் மால்பருதி வருங்காரி தொகையாய்
வகுத்தனரால் வரும்பலனை மாதவர்நூ லுரையே. (657)

மாதவர்நூற் படியாக வருங்கேது புகரில்
வரும்பலனே சமனாக வரும்பாதி வரையும்
ஓதிடுவன் புகர்நாளிற் பிற்பாதி பலனை
உரைத்தனரால் அற்பபலன் உதவிடுமே பிலமாய்ச்
சேதம்வரும் மனக்கவலை புகர்வரையு மேலோர்
செப்பிடவே பரிமதிநாள் சேர்ந்திடுமே பலனை
வேதன்விதிப் படியாக அறைந்தனர்கள் பிலமாய்
விளங்கிடுவன் சமனாக விதித்தனரால் கணிதர். (658)

வேறு.

கதிரவன் மாலோ டொன்ருய்க் கரியுடன் பவர்வீ டாகித்
தரிகிட உயிர்க்கோள் நீசம் சார்ந்திடக் கேந்தி ரத்தில்
விரிகுழல் மாதே யெட்டோன் விளங்கிட மறையா தானற்
கரிபுகர் மதிஆண் டாகக் கரந்தனர் வயதென் றேதே. (659)

வேறு.

மதியுயிரோ னுகிக்கேந் திரத்தினிலே வாழ்க
மதிதனக்கு மறையாமல் வன்புகராட் டமத்தோன்
சதியாகக் காரியுடன் ஒன்ருகி யுயிர்க்குத்
தனக்காறிற் றரித்திடவே சற்குருநோக் கிடுமால்
துதியாரல் பரிவீடாய்த் தரித்திடவே யெட்டிற்
சுபர்பார்வை நோக்கிடவே தோன்றிடுஞ்சேய் வயது
விதியாக மால்குருசேய் மதிவருநாட் டொகையாய்
விதித்தனர்நூற் படியாக விளம்பிடுஞ்சா தகற்கு. (660)

மதியுயிரோ னுகிக்கேந் திரத்தினிலே வாழ்க
மதிதனக்கு மறையாமல் வன்புகராட் டமத்தோன்
சதியாகக் காரியுடன் ஒன்ருகி உயிர்க்குத்
தனக்காறிற் றரித்திடவே சற்குருநோக் கிடுமால்

துதியாரல் கரிவீடாய்த் தரித்திடவே யெட்டிற்
சுபர்பார்வை நோக்கிடவே தோன்றிடுஞ்சேய் வயது
அதிபதியாய் மால்குருசேய் மதிசிகிநாட் டொகையாய்
அறைந்தனர்நூற் படியாக அரன்விதியென் றேதே. (661)

ஓதிடுஞ்சே யவன்றனக்கு உயிர்க்கதிபன் திசையில்
உரைத்தனர்முற் பாதியின்மேல் உதவிடும்க்ஷேத் திரங்கள்
வேதன்விதிப் படியாகச் சமபலனாய் வருமால்
விளங்குமுப்ப ததின்மூன்று வயதின்மேற் செல்வம்
நீதியுடன் தனவானாய்ப் பதிவரும்க்ஷேத் திரங்கள்
நேர்ந்திடும்நாற் பதுவரையும் நிச்சயமென் றுரையே
சோதிட நூற் படியாகப் பாம்புவருந் திசையிற்
றேன்றிடும்க்ஷேத் திரம்பூமி சொல்லினர்நூ லுரையே.(662)

உரையெனவே பாம்புதிசை முற்பாதி யதனில்
உரைத்தனர்பாக் கியம்பூமி உதவிடுமே பிலமாய்
விரைவுடனே கனவானாய் வாகனயோக் கியமாய்
விளங்கிடுவன் யாவருக்கும் விளம்பிடுஞ் சொற் றவருன்
முறையுடனே தாரமதாய் மனக்கவலை வருமால்
மொழிந்தனரத் திசையதனில் முதுமகன்நாள் வருகில்
குறைவுடனே சர்ப்பபயந் தோன்றிடுமே பிலமாய்க்
குறித்தனரிப் படியாகக் கொண்டிடுஞ்சேய் பலனே. (663)

வேறு.

மாலுயிர்க்கோள் மறைந்திடவே மதிக்கொன்றேழில்
வரயிவர்க ளுடன்கர்மக் கோளன்யேக
சீலமுடன் உயிர்தனக்கு வருமெட்டோனுந்
தினகரனு முடன்கூடி உபயமேற
நீலனுடன் மாந்திமறை யிவர்களொன்ருய்
நின்றிடவே மதிதனக்கு மறையாதானல்
தூலமுடன் தோன்றியசேய் வயதுஐம்பத்
தொன்றுடன்ஆ றென்றுவருந் தொகையென்றேதே.

ஓதுமென மதிதனக்கு லாபந்தன்னில்
உறைந்திடக்கே துடன்புகரும் உதயம்வந்தால்
சீதமுடன் தோன்றியமால் திசையிலின்பம்
சேருமதில் வருமுயற்சி அரசர்பேட்டி

நீதியுடன் வருந்தனங்கள் பொருள்கள்சேரும்
நிச்சயமாய் வருமுயற்சி பலமென்றோது
வேதமெனக் கேதுதிசை தனதிற்சேய்க்கு
விளங்குமென வருமலைச்சல் அதனின்மேலாய். (665)

மேலெனவே வருமுயற்சி அரசரின்பம்
விளங்கியநாட் பாதியின்மேல் உறையுஞ்செல்வம்
சீலமுடன் வருமுயற்சி அதிக மேலாய்ச்
செப்பினர்கள் யிவன்றனக்குப் புகழுண்டாகுந்
தூலமுடன் புகர்தனதில் முயற்சிதுஞ்சுந்
தோன்றியநாள் திசையதனிற் பரிவந்துற்றால்
சாலவென வருமுயற்சி சதமென்றோதி
சாஸ்திரநூற் படிவிதியைச் சதமென்றோதே. (666)

இறையவனும் மாந்தியுடன் உதயந்தன்னில்
இருந்திடுங்கோ ளாட்சியுச்சந் தனிக்கயிக்கோள்
முறையுடனே மதிதனக்கு மறையக்கேந்திரம்
முதுமகனுங் கேந்திரமாய் வளருமாகில்
விறைவுடனே கரிநீசந் தனிக்கயெட்டோன்
விளங்கிடவே உடன்கூடி வரினுமானால்
அறையெனவே தோன்றியசேய் வயதுஐம்பத்
தொன்பதென அவன்மரணம் அழியுமென்றே. (667)

வேறு.

கரியவன் கருமன் கேது கருதுமிக் கோட்க ளொன்றாய்ப்
பரியவன் வீட்டி லேகப் பரியுமே உயிர்முன் னாகச்
சரியுடன் உயிர்க்கோ ளெட்டோன் தரித்திட நீசங் கேந்திரம்
வருமுயிர் தகரே யானால் வகுத்தனர் வயது சொல்லே. (668)

சொல்லவே கணிதநூலோர் தொகைவய தைம்பத் தாறு
நல்லுயிர் பிரியு மென்று நவின்றனர் கணிதமாய்ந்தோர்
தொல்லையில் உயிர்க்கு ஒன்பான் தோன்றிட மறைய வந்தால்
எல்லையில் வருஞ்சே யோகம் யியம்பினர் கணிதஞ் சாற்றே. (669)

சாற்றிய பூமியோகஞ் சமமதாய் மறையோ னாறில்
தோற்றிய மனது பீடை தோன்றிடும் அலைச்சல் துக்கம்

மாற்றிய பூமி செல்வம் வரும்பலன் சமம தாகும்
நாற்றிய கரிநாள் வந்தால் நவின்றனர் பலனைக் கூறே. (670)

கூறிய கரிநாள் தொட்டுக் குறுகிய கொடியோன் மட்டும்
சாருமே அலைச்சல் பூமி சார்ந்திடும் பலன்க ளற்பம்
சீருடன் கரியில் சுங்கன் சேரும்நாள் முதலே பூமி
பாரினிற் றனங்க ளின்பம் பலித்திடுங் கரிநாள் மட்டும். (671)

வேறு.

பங்கமிலா துயிர்க்கோளன் மறையவனுமாகிப்
பகருயிர்க்கா றெட்டதனில் யீராறிலேகச்
சங்கையுடன் அட்டமத்தோன் உயிரில்உச்சம்
சாரவவ ருடனெவர்கள் தரியாதாகப்
பொங்குகரி வீடதுவாய் லாபந்தன்னிற்
பொருந்துமவ ருடன்கேது தரிக்குமானாற்
றுங்கமுடன் தோன்றியசேய் வயதுமுப்பத்
தொன்றுடனென் றுகவெனக் கணிதஞ்செப்பே. (672)

செப்புமெனத் தோன்றியசேய் தனக்குப்பூமி
சேர்ந்திடுமே சமபலனாய் மறையனுளில்
முற்படியே வரும்பலன்கள் சமமதாகும்
மொழிந்தனர்கள் மறைதிசைமுன் பாதிமேலாய்த்
துப்பிதமாய் வருமலைச்சல் பீடைகாட்டுந்
தோன்றியசே யவன்றனக்குக் கணிதநூலாய்ச்
செப்பினர்க ளிதுவெனவே நிசமென்றோதிச்
செகதலத்தி லவன் பலனைக் கணித்துச்சொல்லே. (673)

ஆரனுயிர்க் கோளாகி ஆட்சியுச்சம்
அமர்ந்திட அக் கோளுடனே அருணன்பொன்னும்
சாரிடங்கேந் திரமாகச் சனியன்வீடால்
தரித்திடவே சசிக்கிவர்கள் மறையுமாகிற்
காரிதின கரனுடனே மாந்தியொன்றாய்க்
கருதுயிர்கட் டமமாறு பதினென்றானால்
பாருயிர்சுத் தமுமாக வளருஞ்சேய்க்குப்
பகர்வயது நாற்பதுஆ றுபயஞ்சேரே. (674)

சூரியன்றன் வீடதனி லாயுள்நாதன்
தோன்றியபத் தோனுடனே தரிக்குமாகிற்
பாருயிரில் உயிர்தனக்கட் டமக்கோள்யேகப்
பகருமவ ருடனுயிரோன் அதனிற்சேர்ந்தால்
கூறியசே யவன்றனக்குக் கணிதமாய்ந்தோர்
கொன்ளுமென முப்பதுநா லிரட்டியாயுள்
ஆரியன்மே லாணையெனப் படியென்றோதி
ஆகமசாஸ் திரப்படியே அறையலாமே. (675)

அட்டமத்தோன் கேந்திரமாய்ப் பவர்களோடு
அமாந்திடவே சுபர்மனையாய்த் தரிக்குமாகில்
நிட்டைபுரி உயிர்தனிலீ ராகவக்கோள்
நேராகக் கருமக்கோள் புதன்வீடேகச்
சட்டமுட னுயிர் தனக்கைந் ததனிற்காரி
சார்ந்திடவே பிறந்திடுஞ்சேய் தாணிதன்னில்
திட்டமுடன் வயதெழுபத் தெட்டொன்றோதிச்
செப்பினர்கள் கணிதமொழி தேர்ந்தமேலோர். (676)

மேலெனவே தோன்றுமெட்டோன் மறைந்து ஆட்சி
விளங்கிடவே உடன்கொடியோ னதனிற்சேர்ந்தால்
தூலமெனச் சொல்லியமுன் வயதுதன்னிற்
சொல்லியயீ ரெட்டேழ்நால் வயதுதள்ளி
சீலமுட னைம்பதுஆ றுபயமென்று
செப்பினர்கள் வெகுதிறமாய்க் கணிதம்ஓது
சாலவே உயிர்க்கோளன் மறையுமானற்
சாருமுன்சொல் வயதிருவேழ் தொலையுமென்னே. (677)

சூரியனு முயிர்க்கோளாய்ப் பகைநீசத்திற்
றேன்றிடவே மாலுமதில் வருமெட்டோனும்
பாருயிர்க்கு வரும்லாபத் தானமேகிப்
பகர்ந்திடவே வருஞ்சுபர்கள் நோக்காதாகில்
காரியுயிர்க் குபயமதிற் றனிக்கப்பத்தோன்
கருதுமொரு கோளுடனே தன்வீடுற்றால்
சீருடனே மதிபுகர்மால் குருதியாகச்
சேருமிக்கோள் மதிதொகையாய் வயதென்றோதே. (678)

காரியுடன் பத்தினுக்கோ ளுதயமேறக்
கருதுமுத யக்கோளன் கரிவீடேகப்
பாருயிர்க்கட் டமக்கோளன் நீசமேறிப்
பகர்மதிகே துடன்கூடித் தரிக்குமாகிற்
சீருடனே விடையுதயந் தோன்றுஞ்சேய்க்குச்
செப்பினர்கள் வெகுபாலாந் திரட்டிப் பார்த்துக்
கூறினர்கள் நாற்பதுநா லுபயமாயுள்
குறித்தனர்க ளாகமசாஸ் திரத்தினாலால். (679)

நூலெனவே ஒன்பான்கோ ளுதயமேற
நுவலுமந்தக் கோளனுமே மாறியொன்பான்
சீலமுடன் வீடதனிற் றனிக்கவந்த
சேருமொன்பான் கோள்தனையே மறைநோக்குற்றால்
தூலமுடன் வயதிருபத் தொன்றின்மேலாய்த்
தோன்றுநாற் பதுஆறு வரையுஞ்செல்வஞ்
சாலவே வெகுபுகழோன் கீர்த்தியேற்பன்
சாருதனம் பூமிபதி உயர்ந்தவாழ்வோன். (680)

மந்தனுட னெட்டாங்கோள் புகர்பான்பாம்பு
வளருமிக்கோள் கேந்திரமாய்க் கருமன்வீடாய்
விந்தையுடன் வருங்கரும னுயிரோனுகி
விளங்குயிர்க்கு மறையாமற் றரிக்குமாகில்
சிந்தையுடன் மாதுதயந் தோன்றுஞ் சேய்க்குச்
செப்பினர்க ளாயுள்விதி கணிதநூலாற்
சுந்தரமாய் முப்பதுயே ழிரட்டியாகச்
சோதிடசாஸ் திரப்படியாற் கணிதமோதே. (681)

சூரியனு முயிர்க்கோளாய்க் கரியனில்லந்
தோன்றிடவே அட்டமக்கோ ளுடன்வந்தெய்தப்
பாருயிர்க்கு வருங்கருமன் கரிவீடேகப்
பகர்கரியு முச்சம்வாத் தனிக்குமானற்
கூறுமெனத் தோன்றியசேய் தனக்குஆயுள்
குறுகிடுமே பணிதிசைவந் தேற்குநாளிற்
சீருடனே மறைகரிநாள் திசையின் செய்கை
செப்புகிறேன் மறைதிசைதன் பலனைக்கேளே. (682)

கேளெனவே மறைதிசைநாள் முடிவுமட்டும்
கிளர்ந்தனர்கள் வருமுயற்சி சமனுஞ் செல்வம்
சூழுறவே கரிதிசைவக் திடுகிலந்தர்
தோன்றுபுதன் புத்தியினில் முயற்சிகஷ்டம்
வாழ்வெனவே தனதுபுத்தி அலைச்சல்காட்டும்
வளருமதி லச்சமதாய் முயற்சிகாட்டும்
தாழ்வுவரா தெனவேதன் தினமேலாகச்
சாருதிசை முடிவுவரை முயற்சியுள்ளோன். (683)

வேறு.

காரியு மறைந்து நீசங் கருதிய மால்பா னோடு
சாரிட மாரல் வீடாய்த் தரித்திட உயிர்க்கோ ளுச்சம்
கூறிய வெட்டோன் கேது குறுகிட உபயஞ் சேர்ந்தால்
சீருடன் வயதுநாற்பத் தொன்றெனச் செலுத்து மென்றே. (684)

வேறு.

கரியுயிரி லுச்சமுற உயிரின்கோளன்
கருதுயிர்க்கு மறையாமற் றனிக்குமாகில்
வருமுயிர்க்கு வருங்கருமன் மறையோடொன்றாய்
மதிமகன்வீ டலதுமதி வீட்டிலேகத்
தருமுயிர்க்கு அட்டமமே சுத்தமாகச்
சார்ந்திடுஞ்சே யாயுளெண்பத் தாறைந்தாகும்
வருமுயிர்க்கட் டமந்தன்னி லரவோனுற்றால்
வகுத்திடுமுன் னுயுளதில் மாய்ந்திடுமேமூவேழ். (685)

மதிமகனு முயிர்க்கோளா யுதயமேறி
மாந்திமறை பானரவு கருமனோடு
சதிருடனே உயிரிலது கருமமானல்
தரித்திடவே யிவர்கள்தனைச் சுபர்நோக்கில்லா
விதியுடனே காரிமதி கொடியோனோடு
விளங்குயிர்க்கு மறையாமற் றரிக்குமானல்
அதிபதியாய் வயதெழுபத் தொன்றதாக
அறைந்தனர்கள் ஆரியன்மே லாணையாமே. (686)

அட்டமத்தோன் கேந்திரத்தில் மதிகேதோடு
அமாவக்கோ ளட்டமமார் வியத்திலேகச்
சட்டமுடன் வருமுயிர்க்கோள் மதிபுகரேயாகிச்
சாருயிரிற் பவருடனே தரிக்குமாகில்

திட்டமுடன் வருங்கரியன் தன்வீடாகிச்
சேர்ந்திடவே உபனொருகோள் தரியாதானல்
மட்டிடுஞ்சே யவன்றனக்கு ஆயுள்மேலோர்
வகுத்தனரைம் பத்தாறு வளருமாதே. (687)

அட்டமத்தோன் வருமுயிர்க்கா றதனிலேக
அதற்குடையோன் கேந்திரமா யுச்சமேறத்
திட்டமுட னுயிர்க்கோளன் மதிகேதாகிச்
சேருமுயிர்க் கஞ்சலது உபயமாகிச்
சட்டமுடன் மாந்திபுக ருடனொன்றாகித்
தரித்திடவே கருமனுமால் வீட்டிற்போனல்
மட்டிடுஞ்சே யவன்றனக்கு வயதுமேலோர்
வகுத்தனர்க ளெழுபதெனக் கணிதம்ஓது. (688)

ஓதுமென அட்டமத்திற் கொடிய பாவர்
உறைந்திடவே முன்பின்பு சுத்தமாகச்
சீதமுடன் உயிர்க்கதிபன் அரவுவெள்ளி
செப்புமென மாந்தியுடன் றரிக்குமானல்
வேதமெனச் சொல்லியதோ ரெழுபதாயுள்
விளங்குமதிற் பத்து அஞ்சு யேகந்தள்ளி
நீதியுடன் ஐம்பதுநாள் வயதென்றோத
நிச்சயமாய் ஆகமநூற் சொல்லுந்தானே. (689)

சந்திரனு மட்டமத்தோ னுகிப்பத்திற்
றனித்திடவே அதற்குடையோன் சனிவீடேகி
வந்திடவே உடன்புகர்பான் றரிக்க அந்த
வருங்கரியு மாட்சியுச்சந் தனிக்குமாகிற்
சுந்தரமா யுயிர்க்கோள னுதயமேறத்
தோன்றியசே யாயுள்தொகை திரட்டிநூலால்
சிந்தையுடன் முப்பதுநால் கணிதமென்று
செப்பினர்கள் செல்வமென வளருமாதே. (690)

மாதேகேள் பாக்கியக்கோள் தனத்திலேற
வளருமந்தக் கோளுடனே புகர்மாலேகச்
சீதமுடன் தனத்தினுக்கோ ளொன்பான்வீட்டைச்
சேரும்விழிப் பார்வையினல் நோக்குமாகில்

வேதமுடன் மதிதனக்கு நாலிற்பொன்னன்
விளங்கிடவே வெகுநிதிபொன் புகழேயுள்ளோன்
நீதியுடன் வயதிருவே ழாண்டின் மேலாய்
நேர்ந்திடுமே வெகுயோகன் அதிகவாழ்வோன். (691)

வாழ்வெனவே வெகுமதிநேத் திரங்கள்பூமி
வளருதனங் காலியின்பம் சிலவின்மிக்கோன்
தாழ்வுவரான் மரணம்வரை தவறுதாகும்
சாஸ்திரநூல் வெகுஅறிவு கணிதவித்தை
சூழுமென வெகுவரிசை சிவிகையின் பந்
தோன்றுகரி பரிவளருந் தொகுத்தமாதோன்
ஊழ்விதிநூற் படியெனவே கணிதமென்று
உரைத்தனர்க ளாகமநூல் துறந்தமேலோர். (692)

வேறு.

அட்டமா திபனு மருக்கனு மோர்வீ டமர்ந்திட மூன்றிடமாகத், திட்டமா யுயிரோன் கேந்திர மதனிற் சேர்ந்திடக் குருபுகருடனே, சட்டமாய் மந்தன் ஆட்சியாய் ஆறிற் சார்ந்திடப் பிறந்தசாதகற்குத், திட்டமாய் வயது ஐம்பத்தெட் டேழாய்ச் செப்பினுராயுளைத் திறமாய். (693)

அட்டமன் செவ்வா யுயிரின்கோள் கர்மன் அமர்ந்திட வேழினி லாகத், திட்டமாய்க் காரி யெட்டினில் நீசஞ் சேர்ந்திடப் புகருமேகூடிச், சட்டமாய் மதியு முச்சமா யிருக்கச் சார்ந்திடப் பிறந்தசா தகற்குத், திட்டமாய் வயது அறுபத் தைந்தாகச் செப்பினர் சாதகன் றனக்கே. (694)

மாலவ னிரவி யரவுடன் நாலில் வந்திட யெட்டின்கோ ளிரண்டில், தூலமாய்க் காரி மாந்தியும் லாபந் தோன்றிடச் சேயுமாறிருக்கக், கோலமாய்க் கரும னுயிர்க்கு ஐந்தினிலே குறுகிடப் பிறந்தசா தகற்கு, ஏலவே வயது குருதிசை முதலாய் எய்திடுங் கேதுநாள் வரையும். (695)

அட்டம னிரவி மாலவன் புகரு மமர்ந்திடக் கருமகேந் திரத்தில், திட்டமாய்க் குடும்பன் காரியா யாறிற் சேர்ந்திடக் குருவுமெட்டாகச், சட்டமா யுயிரி லரவுமே தனிக்கச் சார்ந்திடப் பிறந்தசா தகற்கு, மட்டிலா வயது நாற்பத்தெட் டேழாய் மதித்தனர் பெரியவர் தாமே. (696)

அட்டமன் குருவா யுயிர்க்குமூன் றினிலே அமர்ந்திட யிரவு மாலரவுந், திட்டமாய்ச் சேயுஞ் சேர்ந்திட வேழில் திங்களுங் குடும்பமாய்த் தரிக்கச், சட்டமாய்க் காரி நாலிற்கேந் திரமாய்த் தனித்திடப் பிறந்தசா தகற்குத், திட்டமாய் வயது ஐம்பதுநாலாய்ச் செப்பினர் பெரியவர் தாமே. (697)

பொன்னவன் காரி அரவுட னுயிரிற் பூமனும் கேதுமே ழாகச், சொன்னது புகரு மாந்தியு மைந்திற் றேன்றிட மாலவன் சேர, முன்னநூ லாய்ந்தோர் மொழிந்தன ராயுள் மோசமில் ஐம்பது நாலிற், றன்னவன் னியினுற் பீடையாற் கண்டம் தப்பினுற் புதன்திசை பாதி. (698)

வேறு.

சதியாக அட்டமத்தோன் மால்புகரோ டாறிற்
சார்ந்திடவே சனியரவு முயிர்தனிலே வருகில்
விதியாக வுயிரோனுங் காரியின்வீ டேகி
விளங்கிடவே மதிதனக்குக் கர்மகேந் திரமாய்த்
துதியாரல் யீராறில் ஆட்சியதாய் மறையில்
சோமனுக்கு யிரண்டினிலே கேதுடனே பரிதி
பதியாக யிருந்திடவே பிறந்திடுஞ் சாதகற்குப்
பகர்ந்தனர்கள் வயதுநிலை பரிதிபுகர் கரிமால். (699)

வேறு.

அட்டமா திபனுங் காரிவீ டதனில் அமர்ந்திடச் சந்திரன் மாலுந், திட்டமா யெட்டிற் சேர்ந்திடக் கரியுந் திங்களுக்கெட்டதாய் வரினும், சட்டமாய்க் குருவும் ஆறினில் மறையச் சாற்றினுருயிரினிற் கேதுந், திட்டமாய் வரினு மாயுளுந் தீர்க்கஞ் செப்பினு ரைந்துபத் தெட்டாய். (700)

பொன்னவ னுயிரோன் சேயுடன் கேது பொருந்திடக் கர்மகேந் திரத்தில், சொன்னது உயிரின் பரிதிமால் புகருந் தோன்றிடக் காரியு மறையில், நன்னய முடனே மதியுடன் மாந்திநாடிட மாலவன் வீடாய், இன்னிலம் பிறந்த சாதகன் வயது இருபது முப்பது நாலே. (701)

அட்டமன் குருவா யுயிர்க்குநா லதனில் அமர்ந்திட இரவி மால் மறையத், திட்டமா யுயிரிற் புகர்கரி கேதுஞ் சேர்ந்திடச் சேயுமே பார்க்கச், சட்டமாய் மதியும் பொன்னவன் வீடாய்ச் சார்ந்திடப் பிறந்தசா தகற்கு, மட்டிலா வயது ஐம்பத்தா றுகமதித்தனர் பெரியவர் நூலால். (702)

அட்டமன் மதியும் உதயகேந் திரத்தி லமர்ந்திடக் குருவுமே பார்க்கச், சட்டமா யுயிரோன் கருமனுங் கேதுஞ் சார்ந்திடப் புகருடன் லாபம், திட்டமாய்க் குருவும் பாக்கிய மதனிற் சேர்ந்திடக் காரியே மூாகிற், சட்டமாய் வயது முப்பத்தே மூாகச் சாற்றினர் திங்களோன் றுடனே. (703)

அட்டமன் மாலா யுயிர்க்குயி ராறி லமர்ந்திட மறைந்திட வரினுந், திட்டமாய்க் காரி உயிரிற்கேந் திரமாய்த் தினகரன் குருபுகர் மாந்தி, சட்டமாய் லாப மதனிலே நீசம் சசியுமே யேழினிற் றரித்தால், திட்டமாய் வயது குருதிசை வரைக்குஞ் செப்பினர் பெரியவர் தாமே. (704)

அட்டமன் குருவாய்க்கேதுட னாறி லமர்ந்திட நீசமாய் வரினுந், திட்டமா யுயிரி லிரவிமால் சனியுஞ் சேர்ந்திடக் கருமனு மூன்றால், சட்டமாய் ஒன்பான் வாக்கிலே தனிக்கச் சசியுமே நாலினில் நீசம், நட்டமாய் வயது இருபத்தெட் டாக நாடினர் புகர்திசை போமே. ()

புகர்திசை யதனிற் கிரகவா கனமும் பூவையர் மணமுடன் குழவி, நிகரிலா தனமும் வாணிப முதலாய் நிகழ்த்தினர் பெரியவர் நூலால், தகரிஞேன் மதிக்கு லாபமாய்த் தரிக்கிற் சகோதராள் கலகமே யுடையன், பகர்வது நல்ல சுமுகனும் யோகன் பாவையர் கலவியில் மயக்கன். (706)

அட்டமன் மதியாய்ப் பாக்கிய மதனி லமர்ந்திட இரவிமால் புகரும், திட்டமா யரவுஞ் சேர்ந்திட வைந்திற் செம்பொனும் உயிரினில் வருகச், சட்டமாய்க் காரி ஆட்சியாய் மூன்றிற் சார்ந்திட வந்தசாதகற்குத், திட்டமாய் வயது ஐம்பத்தெட் டுள்ளாய் செப்பினர் சாதகன் றனக்கே. (707)

மதிமகன் வெள்ளி திங்கள்வீ டதனில் மந்தனும் மாந்தியோடிருக்கில், சதிருட னுயிரோன் பொன்னவ னுகிச் சார்ந்திட யிரவிவீ டதனில், விதியுட னெட்டோன் கர்மகேந் திரத்தில் விளங்கிடப் பிறந்த சா தகற்குப், பதிதனில் வயது நாற்பது யெட்டிற் பகர்ந்தனர் திங்களார் திறமே. (708)

அட்டமன் மதியா யுயிர்க்கிரண் டினிலே அமர்ந்திடக் காரி மூன் றுகத், திட்டமாய்க் கர்மன் புகருடன் கேது சேர்ந்திடமிலாபமாய் வரினும், சட்டமா யுயிரோ னிரவியோ டுயிர்க்குச் சார்ந்திடம் மறைந்திடு மாகில், மட்டிலா வயது குருதிசை வரைக்கும் மதித்தனர் பெரியவர் தாமே. (709)

அட்டமா திபனும் பொன்னவன் வீட்டி லமர்ந்திடக் கருமகேந் திரமாய்த், திட்டமா யக்கோ ளரவுடன் கரிவீ டதனிலே சேர்ந்திட வரினுஞ், சட்டமா யுயிரோன் ஐந்தின்கோ ளுடனே சார்ந்திட வயதுமே கேளாய், திட்டமாய்ப் புகர்நாள் முதலுமேயாகச் சேர்ந்திடுங் குருதிசை பாதி. (710)

வேறு.

காரியுயிர்க் கோளாகி ஆட்சியுச்சங்
கருதிடவே பவர்சுபர்கள் கிரகமாகக்
கூறியதோ ரட்டமத்தோன் சுபர்களோடு
குறுகிடங்கேந் திரம்வளரத் தரிக்குமாகிற்
சாருமென உயிர்தனக்குக் கருமநாதன்
சாரிடந்தன் வீடதுவா யிருக்குமாறுற்
சீருடன்தோன் றியசேய்க்கு ஆயுள்மேலோர்
செப்பினரெண் பதுபதிஞென் றுரும்மாதே. (711)

மாதேகேள் உயிர்க்கோளன் கரியன்நீசம்
வருமிடங்கேந் திரமாக வளரவக்கோள்
சீதமுடன் மறைந்திடவே ஆட்சியுச்சஞ்
சேர்ந்திடவே உடன்பவர்கள் தரிக்குமாகில்
நீதியுடன் அட்டமத்தோன் பகைநீசங்கள்
நின்றிடவே உயிர்தனக்கு மறையுமானல்
வேதமெனச் சொல்லியதோர் ஆயுள்முன்சொல்
விளங்குமதி லைம்பதுமே மொழியுமானே. (712)

மானேகே ளட்டமமுஞ் சமமதாக
வருமுயிரிற் பாம்புவர வருமுன் பின்னும்
தேனேகேள் சுபர்பவர்கள் தரிக்குமாகிற்
செப்பியமுன் சொல்வயது அதனில்நாலே

ஊனவரு மிதுகணிதர் உறையென்றோத
உலகில்மனி தர்க்கெனவே உரைக்கலாகுந்
தேனேகே ளட்டமத்திற் பாவர்சேரத்
தியங்கிடமுன் வயதுதனில் அழியும்பாதி. (713)

வேறு.

அட்டமத்திற் குருவிருக்கக் கேந்திரத்தில் மந்தன்
அவர்க்கிரண்டில் வெய்யோனும் அம்புலிசுங் கனுமாய்த்
திட்டமதா யாட்சியுச்சஞ் சேர்ந்திடவே வரினுந்
தினகரனுக் கிரண்டினிலே திங்கள்மகன் அரவும்
சட்டமதாய் மாந்தியுடன் சார்ந்திடவே வாக்கில்
தனித்திடச்சேய் குருபார்க்கக் கேதுபுகர் வீடால்
திட்டமதாய் வயதுரைப்பேன் ஐம்பதுநா லதனில்
திறமான கண்டமது தீர்ந்திடிலே பிலமாம். (714)

பிலமாகப் புகர்திசையிற் குருபுத்தி கூடிற்
பெருத்திடுமே வியாதியினற் பிசகிடுமே உயிர்தான்
தலமாக மதிதிசையிற் றன்போகும் வயது
தப்பிடா தறுபதுடன் யெட்டெனவே யாகும்
குலபூமி க்ஷேத்திரங்கள் குறையாமல் வாழ்வன்
கொடுத்திடுமே காரிதிசை கூடிடுமே பிதாவும்
நலமாக அரசர்தய வுடன்மேன்மை கீர்த்தி
நலமுடைய பாக்கியங்கள் நண்ணிடுவன் றனே. (715)

வேறு.

அட்டமன் பதியா யிரவிமா லுடனே அமர்ந்திட வுயிர்க்கு ஒன் பதனிற், றிட்டமா யுயிரோன் பஞ்சம மதனிற் சேர்ந்திட யெட்டி னிற் புகராய்ச், சட்டமாய்க் காரி சேயுடன் பத்திற் சார்ந்திடப் பிறந்தசா தகற்குத், திட்டமாய் வயது அறுபது நாலாய்ச்செப்பினர் கணிதநூ லாய்ந்தோர். (716)

வேறு.

சூரியன்மா லட்டமத்தோன் புகரொன்றாகித்
தோன்றிடக்கேந் திரமாகிச் சுபர்நோக்கில்லா
காரியுயிர்க் கோளுடனே மதிக்கொன்பானிற்
கருதிடநல் லோர்வீடாய் இருக்குமாகிற்

சீருடனே மாந்தியுடன் அரவொன்றாகிச்
சேருமனே குருவீடாய்த் தரிக்கவந்த
கூறியசே யவன்றனக்கு வயதுமேலோர்
கொள்ளுமென ஐம்பதுநால் கணிதம் ஓதே. (717)

ஓதுமென மதிவுயர்க்கு லாபந்தன்னில்
உறைந்திடவே மறைவருகில் உயிரோன்நோக்க
நீதியுடன் பவர்வீடாய்த் தரிக்கப் பாம்பு
நேர்ந்திடுநாள் புகர்பாதி யோகஞ்சேரும்
வேதமாய் வருமுயற்சி சமமென்றோதி
விதித்தனர்பொன் னவர்திசையிற் காரிபுத்தி
சோதிவெகு இருநிதியஞ் சேர்வதோடு
தோன்றிடுமோ ரரசர்புகழ் வளரும்மேலாய். (718)

மேல்மொழியால் மறைகரியிற் சிவிகையின்பம்
விளங்கிடும்சேத் திரம்பூமி நிதிவந்தெய்தும்
சீலமுடன் மறைபாதி முயற்சிதுஞ்சம்
சேர்ந்திடுமே புகர்பாதி செல்வஞ்சேரும்
நீலன்வருந் திசையதனில் நிதியும்பொன்னும்
நேர்ந்திடுமே மனக்கவலை துயரமாகும்
தூலமுடன் தோன்றியசேய் பலனைமேலோர்
சொல்லினர்நூற் படியாகக் கணிதமாய்ந்தோர். (719)

ஆய்ந்திடவே மறையிருந்தோ னாட்சியுச்சம்
அமர்ந்திடவே பிலமாகச் சுபரொன்றாணாற்
சார்ந்திடுமே முன்னுரைத்த சிவிகையின்பம்
தங்கியசேத் திரம்பூமி யோகம்மேலாம்
சேர்ந்திடவே மறையிருந்தோன் அதிபன்றானுஞ்
சேருமனே நீசபகை தனிக்குமாளுல்
மாய்ந்திடுமே மறைகரியில் முயற்சிதுஞ்சும்
வரும்பலனைச் சமமாக அறையுமாலோ (720)

மாலுயிர்க்கோள் சூரியனும் ஓர்வீடாக
வந்திடக்கேந் திரமாகி மறைக்கேழ்பத்தில்
நீலனுட னட்டமத்தோ னென்றாய்ச்சேர்ந்து
நின்றிடவே சுபர்வீடாற் றரிக்கப்பத்தோன்

சிலமுடன் உயிர்தனக்கு மறையாதாகிற்
செப்பினர்கள் முப்பதுநால் வயதுசாற்று
மாலுயிர்க்கோள் தினகரனும் மறையுமாகில்
வருத்தனர்முன் தொகைவயதில் மாயும்பாதி. (721)

காரியுயிர்க் கோளுடனே குளிகன்வெள்ளி
கருதுமிக்கோள் மதிகேந்த்ரம் உயிர்க்குநாலு
சூரியன்மால் கேதுடனே உயிர்க்கெட்டோனும்
தோன்றுமிக்கோ ளுயிர்க்காறு மதிக்கோன்பானுச்
சேருடனே உயிர்தனிலே கருமநாதன்
சேர்ந்திடவே பவாகித் தரிக்குமானாற்
கூறினர்மால் சேய்புகர்பான் மதிபொன்னுளாய்க்
குறுகியசே யவன்றனக்கு வயதுசெப்பே. (722)

வேறு.

அட்டமந்தன்னிற் சுங்க னமர்ந்திட வுயிர்க்கோ ளோடு
திட்டமாய்க் கரும நாதன் சேரிடங் காரிவீடால்
சட்டமாய்க் காரி பன்னேன் தானமாய் வளரு மாகில்
மட்டிடு மைம்பத் தொன்றாய் வருத்தனர் வயதென் றோதே. (723)

ஓதவே வருஞ்சே யோகம் உண்டது கரிநாள் வந்தால்
வேதமாய் முபற்சி செல்வம் விளங்கிடு மதிக மேலாம்
நீதமாய்க் கரிநாள் மட்டும் நேர்ந்திடும் மிக்க பூமி
சாதகன் றனக்கு மேலோர் சாற்றினர் கணித மாய்ந்தோர், (724)

வேறு.

அட்டமத்தோன் மாலுயிரோன் தசமநாதன்
அருக்கனுடன் காரியுமே யிவர்களொன்றாய்த்
திட்டமுடன் பத்தேழ்நா லுயிர்கடன்னிற்
சேர்ந்திடவே யிவர்மதிகேந் திரம்வந்தாற்றால்
சட்டமுடன் தோன்றியசேய் வயதுமேலோர்
சார்ந்திடுமே யெண்பதுநால் தாணிமீதே
அட்டமத்தோன் மாலுயிரோன் கருமநாதன்
அருக்கனுடன் காரியுமே மறையுமானால். (725)

மறையுமெனத் தோன்றியசேய் வயதுமேலோர்
வருத்தனர்முன் தொகைபாதி அழியுமென்றே
விரைவுடனே உதித்திடுஞ்சேய் தனக்குவெள்ளி
விளங்கியநாள் திசைமுடிவில் வளரும்பூமி
முறையுடனே சமமாகச் சசிவந்தாற்றால்
விளங்கியநாள் திசைவரையும் பலனைச்செப்பே
குறையிலதாம் பிறந்திடுஞ்சேய் பலனைமேலோர்
குறித்தனர்கள் நூற்படியாய்த் தாணிமாதே. (726)

மாதேகே ளிவன்றனக்கே மால்பொன்வெள்ளி
மந்தனுப்பா லுதித்திடவே வளருநாதன்
நீதியுடன் பவர்வீடாய்ப் பகைநீசத்தில்
நின்றிடவே சுபர்பவர்க ளுடன்வந்தாற்றால்
ஓதிடுமுன் தோன்றியகோள் வரினுமக்கோள்
உதவியநாள் திசைவருகில் மாணஞ்சேயாஞ்
சீதமுடன் பெரியோர்கள் உரையென்றோதி
செப்பியசா தகற்குயிது தெரிந்துசொல்லே. (727)

அட்டமத்தோன் கேந்திரமாய்க் காரியில்லம்
அமர்ந்திடவே அதற்குடையோன் மறைந்துஆட்சி
திட்டமுடன் சேய்மதியும் உடனென்றாகிச்
சேர்ந்திடவே சுபர்நோக்க மறையுமாகில்
சட்டமுடன் குருமனையிற் கருமநாதன்
தனித்திடவே மறைகேந்த்ரந் தரிக்குமாகில்
நீட்டைபுரி மால்குருசேய் பரிதிநாளாய்
நிச்சயமாய்த் தொகையாக வயதென்றோதே. (728)

ஓதிடவே தோன்றியசேய் பலனைமேலோர்
உரைத்தனராம் பாம்புதிசை உதவும்பூமி
நீதியுடன் சமமாக வளரும்பொன்னன்
நேர்ந்திடுநாள் முதலாக அதிகக்ஷேத்ரம்
வேதமாய்த் தோன்றிடுமே. மிக்கசெல்வம்
விளங்கிடுமே பிலமாகத் தாணிமீதில்
சோதிடநூற் படியாகப் பலனைமேலோர்
சொல்லினரா மிப்படியாய்ப் பிறக்குஞ்சேய்க்கு. (729)

மந்தனுங் கேந்திரமாகி உயிர்க்குநாலில்
வந்திடவே அதற்குடையோன் உயிர்க்குயேழில்
விந்தையுடன் சுபர்கூடித் தரிக்கயெட்டோன்
விளங்கிடவே ஆட்சியுச்சம் மறையப்பாவர்
சிந்தையுட னொன்றாகித் தரிக்கபத்தோன்
சேருமனே சுபர்வீடாய் உயிரின்கோளும்
வந்திடவே தோன்றியசேய் வயதுமேலோர்
வகுத்தன ரைம்பதுவாகக் கணிதஞ்செப்பே. (730)

செப்பிடவே மறைகரியோன் றிசையிற்செல்வஞ்
சேர்ந்திடுமே சமமாகக் கணிதம்ஓதே
தப்பியதோர் மால்திசையி லுயருமின்பம்
சார்ந்திடுமே பதிபூமி வளரும்யோகம்
முற்படியே மால்திசையிற் பாதிமேலாய்
முன்னுரைத்த க்ஷேத்திரங்க ளதிகஞ்செப்பு
இப்படியே தோன்றியசேய் பலனைமேலோர்
யிசைவுடனே கணிதமொழி வகையாம்மாலே. (731)

மாலுடனே அட்டமத்தோன் உயிரின்கோளன்
மந்தனும்பொன் சூரியனும் புகர்பத்தோனும்
சீலமுடன் கேந்திரமாய் வளர அக்கோள்
சேருமனே ஆட்சியுச்சம் வளரக்கேந்த்ரம்
தூலமுடன் தோன்றியசேய் வயதுமேலோர்
சொல்லினரால் யெண்பதுநால் தரணிமீதில்
மாலுயிரோன் அட்டமத்தோன் கரிபொன்வெள்ளி
வருங்கருமத் தோன்பரியு முயிர்க்குமென்றார். (732)

ஆறெனவே யீராறு பதினொன்றெட்டு
அமர்ந்திடயித் தானமதில் வளரயிக்கோள்
கூறெனவே சுபர்நோக்கா திருக்கவந்த
குறுகியசே யவன்றனக்கு வயதுமேலோர்
மாறெனவே யெண்பதுநால் கணிதந்தன்னில்
மாய்ந்திடுமே பாதியென்ன வரினுமாயுள்
சாறெனவே தோன்றியதோர் வயதுநூலோர்
சாஸ்திரவிதிப் படியாகக் கணிதஞ்செப்பே. (733)

செப்பிடவே அட்டமமாய்க் கொடியபாவர்
சேர்ந்திடவே சுபர்நோக்க வளருமாகில்
முற்படியே தோன்றியசேய் வயதுமுன்சொல்
மொழியதனில் ஐயேழு வருடமாகும்
தப்பியதோ ருயிரதனிற் கொடியபாவர்
சார்ந்திடவே முன்னுரையில் மதியும்பாதி
துப்பிதழா யுதித்திடுஞ்சே யாயுள்மேலோர்
சொல்லினரால் தப்பாது தரணிமீதே. (734)

வேறு.

அட்டாமா திபனும் உதயகோ ளுடனே அமர்ந்திடச் சேய்மனே மறையால், திட்டமாய்க் கோளன் கருமனோ டொன்றாய்ச் சேர்ந்திடக் கரிமனே யாகிச், சட்டமாய்க் கரியு முடன்வரப் பிலமாய்ச் சார்ந்திடக் கேந்திரம் வருமால், மட்டுறுஞ் சேய்க்கு வயததன் விதியை வகுத்தன ரைம்பது மாதே. (735)

மாதவர் மொழியாற் பிறந்திடுஞ் சேய்க்கு வகுத்தனர் பாம்புநாள் பலனே, வேதமா யுரைக்கத் திசையில்முற் பாதி விளங்கிடும் பூமிக்ஷேத் திரங்கள், நீதமாய்ச் சமமாய் பலன்வருந் திசையில் நேர்ந்திடும் பாதியிற் பாதி, ஓதினார் மயக்கம் பொருளழி கிலேசம் உதவிடும் ராகுநா ளுரையே. (736)

உரையெனக் குருநாள் தனதினிற் றுயரம் உதவிடும் பொருட்களும் பூமி, விரைவுட னழிவு பலன்சம மாகும் விளங்கிய சாதகன் றனக்கு, அறையெனப் பிலமாய்த் தனதுநாள் முடிவில் அறைந்தனர் அதிகக்ஷேத் திரங்கள், குறைவிலா திருப்பன் குடும்பயோக் கியனாய்க் குறித்தனர் கணிதநூல் விதியால். (737)

அட்டமத்திற் பாம்புடனே கரியொன்றாகி
யமர்ந்திடவே அதற்குடையோ னருணன்வீட்டில்
நிட்டைபுரி மாலுடனே பரிதியொன்றாய்
நின்றிடவே மதிகேந்திர மிவர்களாகத்
திட்டமுடன் உயிர்க்கதிபன் கருமனோடு
சேருமனே உயிர்தனக்கு யீராறுற்றால்
சட்டமுடன் தோன்றியசேய் வயதுமேலோர்
சாஸ்திரவா கமப்படியே கணிதங்கூறே. (738)

கூறுமெனப் பிறந்திடுஞ்சேய் பலனைமேலோர்
குறித்தனரால் வெள்ளிபரி மதியிற்செல்வம்
சாருமென அற்பபலன் தரணிமீதிற்
சார்ந்திடுமே தப்பாது கணிதவாய்மை
சேருமெனத் தோன்றியசேய் மரணமேலோர்
செப்பினர்கள் சந்திரனாள் திசையிற்காலம்
கூறினர்கள் பாதியென முடிவிற்றுஞ்சுங்
கொள்ளுமென ஆரியன்மே லாணைமாதே. (739)

சந்திரனு முயிர்க்கோளாய் மூன்றாறெட்டிற்
றனித்திடவே அதற்குடையோன் வளருங்கேந்த்ரம்
விந்தையுடன் கரிநீசம் சுபர்நோக்காமல்
விளங்கிடவே பவர்நோக்கத் தனிக்குமானால்
சிந்தையுடன் உயிர்தனக்குக் கருமனாதன்
சேரிடமூன் றாறெட்டுப் பன்னொன்றானால்
வந்திடவே ஆரியன்மே லாணைசேய்க்கு
வகுத்தனரீ ரொன்பதுவாய் மரணமாதே. (740)

சூரியன்சேய் மாலுயிரோன் காரியில்லங்
தோன்றிடவே அதற்குடையோன் உயிர்க்கெட்டோனுஞ்
சாரிடமே ஆட்சியுச்சம் தரிக்க அக்கோள்
சார்ந்தயிடங் கேந்திரமா யிருக்குமாகில்
கூறியபத் தோனுடனே சேர்ந்துஆட்சி
குளிர்மதிக்கு மறையாமல் வளருமானால்
சீருடனே பிறந்திடுஞ்சேய்க் கெழுபத்தைந்து
சேர்ந்திடுஞ்சா தகற்குயிது வயதென்றோதே. (741)

ஓதுமெனப் பிறந்திடுஞ்சேய் கருமனோடு
உறைந்திடவே கொடும்பாவர் தரிக்குமாகில்
வேதமதாய்த் தோன்றியதோ ரெழுபத்தைந்தில்
விதித்தனரேழ் மூன்றெனவே வயதுமாயுள்
நீதியுடன் வரும்வயது நிசமென்றோதி
நிச்சயமா யுதித்தவற்கு வயதுவோது
சோதிடமாய்ப் பாம்புகுரு கரியிலின்பஞ்
சொல்லினர்கள் வரும்பலனைக் கணிதஞ்செப்பே. (742)

செப்பியதோர் பாம்புதிசை தனதிலின்பம்
சேர்ந்திடுமே வருமுயற்சி பொருள்கள்சேரும்
தப்பிடுமப் பணிதிசையில் வருமுற்பாதி
தனிலதிக பொருட்செலவு உயர்ச்சிதுஞ்சும்
முற்படியா மாவுதிசை புகர்பொசிப்பில்
முயற்சிசமம் பாம்புதிசை முடிவிற்பொன்றுங்
துப்பிதமாம் பொன்னன்வருந் திசையிற்பாதி
சொல்லதிகம் பொருளுயர்ச்சி வளருமேலாம். (743)

மேல்மொழியாம் பொன்னன்வருந் திசையிற்பாதி
விளங்கியநாள் முதல்சமமே மனதிற்பீடை
நீலன்வருந் திசைமுதலே அரசரின்பம்
நேர்ந்திடுமே பொருளதிகம் உயர்ச்சிமேலாம்
சீலமுடன் தோன்றியசேய் தனக்குப்பூமி
சேர்ந்திடுமே பிலமாகத் தரணிமீதில்
தூலமுடன் தப்பாது கணிதவாய்மை
சொல்லினர்கள் மேலோர்கள் துலங்கத்தானே. (744)

மாதேகேள் காரிகுரு கொடியகோளும்
வருமுயிர்கேந் திரமாகி வளர அக்கோள்
நீதியுடன் மதிதனக்கு லாபந்தன்னில்
நின்றிடநட் பாட்சியுச்சம் வளருமானால்
வேதமாய்த் தோன்றியதோர் குருவுகாரி
விளங்கியமுன் னுரைத்தபலன் உதவுமாதே
மாதேகேள் காரிகுரு கொடியகோளும்
மறைந்திடவே மதியுயிர்க்கு மறையுமானால். (745)

மறையுமெனக் காரிகுரு கொடியகோளும்
வளருமனை நாதனுமே பகைநீசத்தில்
விரைவுடனே தனித்திடுமால் வளரவந்த
விளங்கியசே யவன்றனக்குக் குருவுங்காரி
முறையுடனே வருமுதலே அலைச்சல்துக்கம்
முயற்சியில்லான் வரும்பலனே உதவுமாதே
அறையெனவே பொருளழிவு பீடைநோய்கள்
அழியுமெனச் சாதகற்குக் கணிதம்ஓதே. (746)

வேறு.

ஆறினேன் உயிரோன் பாம்பு அமர்ந்திட வோர்வீ டாகச்
சாரவே அக்கோள் பத்தில் தரித்திடக் குருகே தற்றால்
கூறினர் காரி நாளில் குறுகிய தனதிற் பாதி
சாரவே மயக்கங் காட்டுஞ் சார்ந்திடும் ஓராண் டோதே. (747)

வேறு.

காரியுயிர்க் கோளுடனே அருணன்வெள்ளி
கருதியஜங் தோனுடனே யிவர்களொன்றாய்ப்
பாருயிர்க்கேந் திரமாக வளருமிக்கோள்
பதியமனை சுபர்கிரக மிவர்களாகிக்
கூரியசந் திரன்றனக்கு மிவர்கள்கேந்திரம்
குறுகிடவே அட்டமத்தோ னுதயம்வந்தால்
பாருயிர்விட் டேகிவிடும் அறுபத்தொன்றிற்
பகருமென ஆகமநூற் படியென்றேதே. (748)

வேறு.

கடகமாய்த் தோன்றி லக்கின முதிப்பக் கருதிய லக்கினநாதன், திடமுடன் காரி யுடன்வரப் பாம்பு சேர்ந்திடு மிவர்கள் கேந் திரமாம், விடமுடன் உயிர்க்குக் கர்மகோ ளுச்சம் விளங்கிடப் பிறந்தசா தகற் குச், சடலம்விட் டேகுக் தாணியில் வயது சார்ந்திடும் அறுபதேழ் மாதே. (749)

மாதவர் மொழியால் உதயகோள் காரி வருமிடம் மறைந்திடப் பாம்பும், நீதமா யொன்றாய் இருந்திட யிக்கோள் நின்றிட நாதன் கேந் திரமாய், ஓதிமுன் சொன்ன வகைதொகை யதனில் ஒழிந்திடு மெட்டுமே மைந்து, சாதகன் றனக்கு நாற்பதா றென்றிற் சாய்ந் திடுங் காலன்வந் திடுமாம். (750)

அட்டமா திபனு மாயுட்கா ரகனும் அருக்கனுங் கூடியோ ரில்லங், திட்டமா யுயிர்க்கு மறைந்திட மதிக்குச் சேர்ந்திடம் யிவர் கள்கேந் திரமாய், நிட்டைமா னுயிரோன் காரிவீ டதனில் நின்றி டச் சுபர்கள்நோக் கிடுமால், சட்டமாய்க் கருமன் மதியின் கேந் திர மாய்த் தரித்திடுஞ் சாதகன் வயது. (751)

சாதகன் வயது நாற்பத்தே ழொன்றிற் சாய்ந்திடுஞ் சேய்கம புரத்தில், ஓதினர் கணித வாக்கியப் படியே உரைத்தனர் வேதநூ லாய்ந்தோர், வேதமா யரவு திசைவருந் தனதில் விளங்கிய சேயவன் றனக்குச், சேதமாம் பொருள்கள் சகோதர நாசம் செப்பினர் மனது சஞ் சலமாம். (752)

சஞ்சலம் பிலமாம் மனதினிற் கவலை சார்ந்திடுந் தந்தையர் தன க்கு, அஞ்சவே துன்பம் மைந்தனுற் சேதம் அழிந்திடும் உயிர்ப்பொ ருள் பிலமாந், தஞ்சமா யரவு தனதினிற் கஷ்டஞ் சார்ந்திடுஞ் சாதகன் றனக்கு, விஞ்சையா யரவு குருவரு மதனில் விளங்கிடு முயற்சிவந் திடுமால். (753)

வந்திடுஞ் சமமா யோகபாக் கியங்கள் வகுத்தனர் பாம்புமுற் பாதி, விந்தையாய் வரும்பின் பாதியிற் கஷ்டம் விளங்கிடும் பாதியிற் பாதி, சிந்தையி லதிகம் உயர்ச்சிசந் தோஷஞ் சேர்ந்திடும் ராகுநாள் முடிவுஞ், சுந்தரப் படியாற் குருவருந் திசையிற் றுஞ்சிடு முயற்சிசா தகற்கே. (754)

வந்திடுங் காலன் பத்திடு முயிரை வகுத்தனர் கணிதவாக் கிய மாய், முந்திய மறைபொன் றிசைவரும் முதலே முதுமக னெய்திடும் வரையும், விந்தையாய் வளரும் பாக்கிய மதிகம் விளங்கிய பலன்சம மாகும், சுந்தரப் படியாற் காரிநாள் முதலே தோன்றிய பலன்வகை யுரையே. (755)

உரையெனக் காரி திசைமுதற் பலனை யுரைத்தனர் சமமதாய் வளரும், விரைவுடன் தனங்கள் மனதுசஞ் சலங்கள் விளங்கிய நா ளெல்லாம் வளரும், அறையென உயிர்க்கா தானக்கோள் சுபாய் அமர்ந்திடம் மறைந்திடப் பிலமாய், முறையெனப் புவியிற் கொடிய கோள் பிலமாய் முயன்றிடு முதுமகன் றிசையில். (756)

முதுமகன் றிசையில் முடிவினிற் சேய்க்கு முந்திய நெடுவித ரோகம், விதமுடன் அணுகும் பிலமதாய் வளரும் விளங்கிய சாதகன் றனக்குச், சதமெனப் பிலமாய்ச் சார்ந்திடும் ரோகர் தப்பிடும் வழிவ கை யுரையே, இதமுடன் மறையோன் குருவினுற் றோஷம் பிணங்கிய சர்பத்தாற் கூறே. (757)

கூறிடு மறையோன் றனக்குநீ பிலமாய்க் கூடிய கன்னிகா தானஞ், சாருமென் றுதவ அதுவழி பாவந் தப்பிடும் பாதியிற் பாதி, சீருடன் குருவால் தோஷம்நீ விலக்கச் செப்பிய பூமிதானங்கள்,விரியத் துடனே கொடுத்துநீ தொலைத்தால் விலகிடும் நெடுவிதரோகம். (758)

வேறு.

அட்டமத்திற் பாம்புடனே அருணன்பொன்னும்
அமர்ந்திடவே அதற்குடையோன் வளரஉச்சம்
சட்டமுடன் மதியுயிரோ னுகி ஆயுள்
தனில்வருங்கா ரகன்மனையிற் சுபர்களோடு
திட்டமுடன் மறையாமற் றரிக்கப்பத்தோன்
சேருமனே சுபர்வீடாய்த் தனிக்குமானல்
கட்டியசே யவன்றனக்கு யெண்பத்தைந்திற்
காலன்வருந் தப்பாது கணிதங்கூறே. (759)

கூறியதோர் அட்டமத்தோன் மறையஆயுள்
குறுகிடுகா ரகனுடனே தரிக்குமானல்
பாருயிர்தோன் றிடுமுறைமுன் னெண்பத்தைந்திற்
பகர்ந்தனரேழ் நால்தொகையுங் குறையுமாயுள்
ஆறிருவேழ் நாள்தனில்மேல் முயற்சிசேரும்
அதில்வருமே பலன்சமமே அறையுமேலோர்
சீருடனே மறைதிசையில் யோகமில்லான்
செப்பியநாள் பலன்சமனே தாணிமாதே. (760)

வேறு.

அட்டமா திபனுங் காரியு மோர்வீ டமர்ந்திட உயிர்க்குலன் பதுவாய், நிட்டைமா னுயிரோன் புகர்மதி அலரி நின்றிடம் உதயகேந்திரமாய்ச், சட்டமாய்க் கருமன் உயிர்க்குயே 'ழதனிற்றனித்திடச் சாதகன் றனக்குத், திட்டமாய் வயது இருபதேழ் ரெட்டி செப்பிய தொகையின்முன் சேரே. (761)

சேரெனத் தொகையாய்க் கணிதவாக் கியமாய்ச் செப்பிய சாதகன் றனக்குக், கூறினர் உயிரோன் திசைவரு முதலே குறித்தனர் முயற்சிவந் திடுமாஞ், சீருட னுயர்ச்சி அருணனுட் பாதி செப்பினர் அரசர்சந் தோஷம், பாருயிர் தனிலே பூமிக்ஷேத் திரங்கள் பகர்ந்தனர் அதிகபாக் கியனும். (762)

வேறு.

சந்திரன் மாந்தி யோடு சாருயிர் தன்னிற் சேர
வந்துயிர் நாவின் கோளன் மறைந்திடச் சுபர்வீ டானல்
சிந்தையாய் வருஞ்சே யன்னே செத்திடும் இருநா ளுக்குட்
சந்திரன் மறைய வுச்சஞ் சாய்ந்திடும் வயதேழ் பத்தில். (763)

வேறு.

காரிமனே தனிலரவு உயிரின் கோளும்
கருதுமெட்டோ னுடன்கூடித் தரிக்கஅக்கோள்
பாருயிர்க்கு உதயமதிற் றனித்துநிற்கப்
பகலவன்மா னுடன்கூடி மறையுமாகிற்
சாருயிர்க்கோ ளாகிடவே கீர்த்திக்கீரிற்
றனித்திடவே யுயிரினுக்குக் கருமன்வந்தால்
கூறியசே யவன்றனக்கு மாணமோது
குருதிதிசை யந்தியமாங் கணிதஞ்செப்பே. (764)

வேறு.

மறையவன் உயிரோ னுகி வருங்கரி மால்பா னேடு
விரைவுடன் சேய்வீ டேகி விளங்கிடச் சுபர்நோக் கில்லா
முறையுடன் யெட்டோன் பத்தில் முயன்றிட மதிசேய் பார்த்தால்
அறையென வருஞ்சே யாயுள் அழிந்திடு மிருபத் தெட்டில். (765)

வேறு.

ஆரனுயிர்க் கோளாகி உதயமேறி
அமர்ந்திடவே வுடனெருகோள் சேரானகச்
சாருமெட்டோன் கருமனுடன் புகரொன்றுறுற்
சனிமனேயிற் றரித்திடவே சனியன்றானும்
கூறுமுயிர்க் கேழதனில் வளர அக்கோள்
குறுகிடவே ஆயுளறு பதுவேயாகும்
பாருயிர்க்கோள் வியத்தில்வர வுயிரிற்பாம்பு
பகர்ந்திடமுன் வயதீரா றழியும்பாரே. (766)

வேறு.

மேடமாய்த் தோன்றி லக்கின முதிப்ப விளங்கிய லக்கின நாதன்
வாடிய உயர்க்கீ ராறினிலலது வரும்பஞ்ச மத்தினில் வருக
நீடிய காரி கொடியகோ ளுடனே நின்றிட வுச்சமாய் வளருங்
கூடியசேய்க்குக் குருகிடும்வயது குறித்தனர் கொடிதிசைமுடிவில்.

வேறு.

சூரியன்வீ டதிற்கரியன் யெட்டின்கோளன்
தோன்றுகொடி யோன்மாந்தி யுடனே அக்கோள்
பாருயிர்க்கா றெட்டிலது தரிக்குமாகிற்
பகருயிரோன் மாலாகிப் புகர்வீடேகச்
சீருடனே வருங்கருமன் உயிர்க்குநாலிற்
சேர்ந்திடவே உயிரதனில் வருஞ்சேயுற்றால்
கூறுமெம புரமணுகும் லாபக்கோளன்
குருதிசை முடிவதனில் மரணங்காட்டும். (768)

அட்டமத்தோன் கரியுடனே சேய்வீடேகி
அமர அக்கோ ளுயிர்தனக்கட் டமத்திலேகத்
திட்டமுடன் வருமுயிர்க்கோள் பரிபாம்போடு
சேருயிர்க்கு மூன்றலது யீராறேகச்
சட்டமுடன் விடைஉதயம் மதியுந்தோன்றச்
சார்ந்திடுமே யவன்றனக்குக் கணிதநூலால்
அட்டமத்தோன் உடன்வரினு மக்கோள்நாளில்
அந்தியத்திற் சேய்மரணந் தப்பாதென்றே. (769)

மதிமகனும் உயிரின்கோ ளுதயமேற
வருங்கேதும் ரவிகூடித் தரிக்குமாகிற்
சதிருடனே அட்டமக்கோள் சனியனுகிச்
சாருயிர்க்கா றதனிலுற வாறேன்னீசம்
விதியுடனே வருங்கருமன் பதினொன்றேகி
விளங்கிடவே யிக்கோள்கள் தரியாதானால்
அதிபதியாய் வயதெழுப துபயமென்று
அரைந்தனர்கள் வெகுபரலாய்த் திரட்டியோதே. (770)

ஓதுமென முப்பதுஆர் வயதுமேலா
யுதவிடுமே வெகுதனவான் அதிகபூமி
வேதமுடன் புகழோங்கி வளருங்கீர்த்தி
வெகுதீர்க்கம் சொல்மொழியும் மேலாமென்றே
நீதியுடன் வெகுஅரசர் தயவுசேரும்
நேருமணம் வெகுதீர்க்க னுயர்ந்தவாழ்வோன்
சீத்முடன் வரும்ராஜ யோகஞ்கி
செலுத்திடுவன் மரணம்வரை தவறுதென்றே. (771)

அட்டமத்திற் கரியுடனே அலரியோடு
அமாவக்கோள் மாலுடனே அமருமில்லந்
திட்டமுடன் கேந்திரமாய்த் தரிக்கஅந்த
செப்பியகோள் தனைப்பவர்கள் சுபர்கள்நோக்கச்
சட்டமுடன் வருமுதயஞ் சிலைமீனகைச்
சாருயிர்க்கோள் மாந்தியுடன் உயிரிற்சேர்ந்தால்
மட்டிடுஞ்சே யவன்றனக்கு வயதுமேலோர்
வகுத்தனர்க ளைம்பதுயே முபயஞ்செப்பே. (772)

வெய்யவனும் புகரவனும் யிரண்டிலாக
விளங்குபொன்னன் மதியுடனே யெட்டிற்றோன்றப்
பையரவஞ் சேய்மூன்றிற் பதிந்துநிற்கப்
பகர்கின்ற சேயவனு மாட்சியாகத்
துய்யதொரு மாலவனும் உயிரில்லாகத்
தோன்றிவா வியமதனிற் கரியுமாக
வையகத்தில் மாந்திசுபர் மனையில்வாழ்க
வாழ்வுடனே குடமதனி லுதித்தபேர்க்கே. (773)

வேறு

உதித்திடுஞ் சேய்க்கு அரவுநாள் முதலாய் உயர்ந்திடுந் தனங்களும் லாபம், பதித்திடுயோக பாக்கியஞ் செல்வம் பகர்ந்தனர் பொன்றிசை வரைக்கும், சதித்திடும் குருவின் றிசையது பிற்கூர் சார்ந்திடுந் தத்துமுண் டாகும், விதித்திடும் கரியின் றிசையது நடுவில் விளங்கிய மரணமென் றுரையே. (774)

உரைத்தனர் மேலோர் சேயவன் முடிவில் உகந்திடும் அரவுபிற் கூரில், சரித்திடும் தத்தாம் பீடைக ளாகும் சார்ந்திடும் நாகர்தன் வலமும், விருத்தமா வரினும் சுகமதுண் டாகும் விளங்கிடுஞ் சாதகன் றனக்கு, கருத்துடன் வித்தை புத்தியு மூர்க்கம் காட்டிடும் வஞ்சக னுவன். (775)

வஞ்சகக் குணத்த னுகியே யுதிப்பன் வாழ்வுடன் முந்திய துணைவர், துஞ்சிட வரினும் எமனுக் கிறையாய்ச் சொல்லுவர் பிந்திமூன் றாகும், தஞ்சமாய்ச் சமமும் ஒன்றதிற் றிரமுஞ் சார்ந்திடும் பெண்துணை குறுகும், வஞ்சியே பிந்தி வருந்துணை மூன்றில் வகுத்தன ராண்களு மிரண்டாம். (776)

இரண்டென வகுத்த சாதகன் றனக்கு எய்திடும் மாதுல னென்றும், திரண்டென வரினும் அன்னைதன் பிதுர்க்குச் செப் பினர் தெத்தென ஒருவன், காண்டமாய் சேயோன் திசையது பிற்கூர் காட்டினர் அன்னைக்கே கடினம், முரண்டிடும் அரவின் றிசையது நடுவில் முழங்கிடும் மாதுரு கருமம். (777)

கருமமென் றுரைத்த சாதகன் றனக்குக் காட்டினர் புத்திரர் ஐந்தாம், வருமமா யதனில் யிரண்டுமே சமமாய் வகுத்தனர் ஐந்தினி லாண்கள், பரணமா யிருவர் தீர்க்கமு மாவர் பதித்தனர் சேயவள் பிற்கூர், தருமமாய்த் தாரம் வந்துமே சேரும் சாற்றினை ராகம நூலே. (778)

ஆகம நூலால் வந்திடுஞ் சேய்க்கு அறைந்தனர் பிதுருவின் றனக்கு, மாகமா யரவின் றிசைவரு முன்னால் மதித்தனர் பீடை யுங் கடினம், தாகவே கணிதர் சாதகன் றனக்குச் சாற்றினர் மேல் மொழி யதனால், சாகவே யரவின் றிசையது பிற்கூர் தந்தைக்கே கருமமுண் டாகும். (779)

வீரிய தனத்தோ னெட்டினோன் சேயாய் விளங்கிட வுயிரினி லன்னோன், காரிபொன் றனக்கு நவத்தினி லிருக்கக் கதிருடன் சேரநல் கலையுந், தேறியே புகரோன் இல்லத்திற் சுபராய்ச்செழுங் கவி சேயுடன் நான்கில், நாரியர் தனத்தோன் பொன்னும்ரா குடனே ரவிமக னுடனுற நண்ணே. (780)

நண்ணுசேய் வயதில் யோகவான் பின்னே நாடியே தந்தை தாய் மரணம், எண்ணிய கருமம் முடித்திடான் துணைவர் யில்லை யாண் பெண்டுணை பகையான், வண்மையும் புகழான் அரசர்க னுறவான் மனத்தினிற் கவலையுள் ளவனே, திண்ணமாய் வயது ஐம்பத்தைந் தினிலே சேர்குவ னெமபுரந் தானே. (781)

வேறு.

மாந்திமதி பகைவனிருந் ததிபதியான் சேயாய்
மையவனைச் சார்ந்துயிரில் மதியவன்றன் னிடத்தில்
சேர்ந்திடுவர் வாகனத்தோன் சாமிவெய்யோ னுடனே
திரிகோணத் ததிபனுக்குஞ் சேய்தனக்கும் வாக்கிற்
பாந்தமதாய் உயிர்தனையும் மதியவனும் நோக்கப்
பாம்பிருந்த அதிபதியும் நீசமுற நான்கிற்
சாந்தகுண சவுரியவான் அரசர்கெரு விதனும்
தந்தையர்க்கு மேலவனுந் தாட்டிகனென் றுரையே. (782)

வேறு.

உரைப்பவர் சிசுக்கு அட்டமன் றிசையி லுற்றிடு மன்னையர் சிரத்திற், காப்பனீர் நோவாம் கண்டமும் விலகுங் கருதிய தாய்வழி சலனம், நிறைத்திடும் பிதிர்க்கு யினத்தினிற் கலகம் நேசரும் பகை பவக் கேடு, துரைத்தனர் பயமுஞ் சாதகன் றனக்கு சுரத்துடன் அலைச்சல்புண் கண்டம். (783)

கண்டமும் விலகப் பாலனர் உடுவிற் கதிரவ னுதித்திடும் வேளை, பண்டுள தலத்திற் பொன்னதாற் காகம் பகர்ந்தனர் வெள்ளி யாற் கருடன், ரண்டுமே செய்து நவத்தின்கோள் பூசை நல்கிடு சோடசத் துடனே, மண்டலஞ் சரியாய் முடிந்தபின் வரைமேல் வரும்நதிக் கரையின்மேல் யாகம். (784)

யாகமே மூன்று தலத்தவர் மண்ணுஞ் சர்ப்பம்வாழ் புத்துமண் ணதனால், நாகம்போல் ஓமக் குழிசெய்து படத்தில் நாடிய கருடனை வைத்துக், காகம்வால் புரத்திற் காங்குசெந் துகிலுங் களபமும் நறு மலர் புனைந்து, தேகம்வெண் சாவல் கருங்கடாய் பெருங்காய் தேங் குடன் பெலிசெய்யத் தினமே. (785)

தினத்தினிற் காகம் ஐந்துமே வைத்து தீபதூ பங்களும் கொடு த்து, நினைத்தவர் பிறந்த லக்கினஞ் சொல்லி நெய்யினால் ஓமமுஞ் செய்ய, அனைத்தவன் கண்டம் விலகியே ஐம்பத் தாறுநா லைந்துட னிருப்பன், கனதன முடையோய் மேருவைச் செப்பைக் கலசத் தைப் பழித்திடு மாதே. (786)

வேறு.

சுக்கிரனட் டமக்கோளாய்க் கரியனோடு
தோன்றுயிர்க்கட் டமந்தன்னிற் றரிக்குமாகிற்
றக்கதென வுயிர்க்கோளன் மறையனுகிச்
சாருதய கேந்திரத்திற் பவர்களோடு
தொக்குமெனத் தரித்திடவே தோன்றுஞ்சேய்க்குச்
சொல்லியதோர் வயதெழுப துபயமாகும்
திக்குமெனு முயிர்க்கோளன் நீசமேறிச்
செப்பியதோர் பவருடனே சேருமாகில். (787)

சேருமென முன்னுரைத்த ஆயுள்தன்னிற்
செப்பினர்மூ வாறுதள்ளி நிசமென்றோது
பாருயிர்க்கோள் நீசம்வாக் கரியெட்டோனும்
பகருமொரு கோளுடனே மறையுமானாற்

சாருமென முன்னுரைத்த ஆயுள்தன்னிற்
சாய்ந்திடுமே வேழுரெட்டி தொலையுமென்று
கூறினர்கள் கணிததமி ழாய்ந்தமேலோர்
குறித்தனர்கள் வருஞ்சடையோ னணையென்றே. (788)

வேறு.

கடகமாய்த் தோன்றி லக்கின முதிப்பக் கருதிய லக்கின நாதன், திடமுட னுயிர்க்கு ஆறினி லமரச் செப்பிய ✳ஐயிரு கோளன், விடமதிற் றரிக்க விளங்கிட முன்பின் விளங்கிய பாவர்வந்திடுக, நடமிடுங் காரி கேந்திர மதனில் நல்கிட நீசமா யவற்கு. (789)

வருமென வயது வகுத்தனர் புகர்மால் வக்கிரன் நாள்தொகையாக, அருமறை விதியால் அறைந்தனர் பிலமாய் ஆகம நூற்படியாகத், தருமுப யக்கோள் தங்கிடுந் திசையிற் சார்ந்திடும் பூமிக்ஷேத்திரங்கள், இருநிதி பூமி வளர்ந்திடு மெனவே யியம்பிய சாதகன்றனக்கு. (790)

அட்டமன் கரியா யிரவிமால் கேது அமர்ந்திட வுச்சமா யைந்தில், திட்டமாய்க் குருவுஞ் சேயுடன் மாந்தி சேர்ந்திட வுயிர்க்கிரண்டதனிற், சட்டமாய் மதியுங் காரிவீ டதனிற் சார்ந்திடப் புகருமே நீசம், திட்டமாய் வரினுங் குருதிசை யதனிற் சேய்வரில் மரணமென் றுரையே. (791)

அட்டமன் மாலாய் குருவுடன் உயிரில் அமர்ந்திடக் காரியுங் குளிகன். திட்டமா யுயிர்க்கு ஒன்பதில் வரினுஞ் சேயுமே யொன்றின்கோள் நாலாய், சட்டமாய்க் கர்மன் மதிக்குகேந் திரமாய்த் தனித்திடப் பிறந்தசா தகற்கு, மட்டிடா தெட்டோன் றிசைமுதல் செவ்வாய் வரையென மதித்தனர் வயதை. (792)

மதித்தனர் வயதில் மதிதிசை யதனில் வாய்ந்திடும் பீடையுமதிகம், விதித்தனர் வயது நாற்பதிற் கண்டம் விளங்கிடும் வியாதியா லனேகம், துதித்தனர் பிலமாய்த் தோன்றிடு மென்று சொல்லினர் கணிதநூ லதனால், வகுத்தனர் சத்தி கணபதி தன்னை வணங்கிடத் தீர்ந்திடும் பிணியும். (793)

✳ஐயிருகோளன் என்பதும் திங்களின் கோளன் என்பதும் பலன் ஒற்றுமையாயிருக்கும்.

வேறு.

சூரியனும் உயிர்க்கோளாய் உதயமேறக்
தொல்கருமக் கோளுடனே தரிக்குமானால்
சீருடனே அட்டமக்கோள் பதினொன்றேகிச்
சேர்ந்திடவே அதற்குடையோன் கரிசேயோடு
சாருயிர்க்கு உபயமதில் யீராறுகத்
தனித்திடவே கருமமதிற் பவர்வந்துற்றால்
கூறினர்க ளாயுள்தொகை நாற்பத்தொன்றிற்
குறுகிடுஞ்சேய் எமபுரஞ்சென் றணுகுமாதே. (794)

கோலலது விடையலது உதயமாயக்
கோளனும்பான் மாந்தியெட்டோ னிவர்களோடு
சீலமுட னுயிரிலது யீராறேகிச்
சேர்ந்திடவே யிவர்கள் தனைச் சுபர்நோக்கில்லா
நீலனும்பான் விடலது மால்வீடேகி
நின்றிடவே அட்டமத்தில் யெக்கோளுற்றால்
காலன்வரும் நாளெனவே யெட்டில்வந்த
கருதியக்கோள் திசைமுடிவில் மாணங்காட்டும். (795)

வேறு.

மதிதனக்குக் கேந்திரத்தில் வருமுயிர்க்கோள் காரி
வளருமெட்டோன் பத்துடையோன் வரயிவர்கள் தனிக்க
விதியுடனே மதியுயிரிற் றனித்திடவே வுதயம்
மின்னெனவே தோன்றியசேய் விளங்குமென வயது
சதிருடனே அட்டமக்கோள் சார்திசைநாள் முடிவிற்
சார்ந்திடுஞ்சே யெமபுரத்திற் சேர்ந்திடுமென் றோது
மதிதனக்கு முன்னுரைத்த கோள்மறைந்து தனித்தால்
மாய்ந்திடுமோர் தினமதனில் வகுத்தனர்கள் மேலோர். (796)

வேறு.

கரியுடன்சேய் மாலுடனே யிவர்களொன்றாய்க்
கருதுதய கேந்திரத்திற் றரிக்குமாகில்
வருமுயிர்க்கோள் சூரியனும் யீராறெட்டில்
வந்திடவே அட்டமத்தோன் மறைந்துநீசம்
தருதுமென வருகருமன் நீசமுற்றால்
சாருமைம்ப தாயுளைந்து கணிதம்ஓது
வருமுயிர்க்கோ ளட்டமத்தோன் பவரோடுற்றால்
வகுத்திடுமுன் னாயுளதில் மாயும்யீராற். (797)

சந்திரனும் மாந்தியுடன் உயிர்க்கெட்டோனுஞ்
சாருமிடங் கரிமனையாய்த் தரிக்க அக்கோள்
சிந்தையுடன் உயிர்தனக்கு யீராறாகிச்
சேர்ந்திடவே உயிர்க்கோளன் புகர்வீடாகப்
புந்தியுடன் பத்தினுக்கோள் புகரொன்றாகிப்
பொருந்திடக்கேந் திரமாகிச் சுபர்வீடானால்
வந்திடுஞ்சே யவன்றனக்கு நாற்பத்தொன்று
வகுத்தனர்கள் அவன்வயது தாணிமாதே. (798)

மாதேகேள் தோன்றிடுஞ்சேய் வருநாள்தொட்டு
வகுத்தனர்பாக் கியம்பூமி வளருங்கோதே
நீதியுடன் குருவருநாள் வருமுற்பாதி
நேர்ந்திடுமே மனக்கவலை துயரம்பீடை
வேதன்விதிப் படியாக வருமென்றோதி
விதித்தனர்பிற் பாதியிலே விளங்குஞ்செல்வம்
ஆதிமொழிப் படியாகக் கணிதமாய்ந்து
அறைந்தனர்கள் பிலமாக அவனிமீதே. (799)

சூரியன்மா லட்டமத்தோன் ஓர்வீடேகித்
தோன்றிடகேந் திரமாகிச் சுபர்வீடாகக்
காரியுடன் மதிஉயிரோன் புகரொன்றாகிக்
கருதிடங்கேந் திரமாகிப் பவர்நோக்கில்லா
கூறிடுஞ்சே யவன்றனக்கு யெழுபதாயுள்
குறித்தனர்நூற் படியாகக் கணிதமாய்ந்தோர்
சூரியன்மா லட்டமத்தோன் மறையுமானாற்
றோன்றிடுமைம் பதுவாக வயதென்றோதே. (800)

ஓதிடவே அரவுடனே மாந்தியொன்றாய்
உதயம்வா அக்கோளை குருநோக்குற்றால்
நீதியுடன் அரவுதிசை தனத்திற்றொட்டு
நேர்ந்திடுமே உயர்ச்சிவரும் அரசரின்பம்
போகமெனப் பதிஉயர்ச்சி பூமிகீர்த்தி
புகழ்பெறவே வருமுயற்சி அதிகமேலாம்
ஓதிடுவன் அரனாணை தப்பாதென்று
உரைத்தனர்பாம் பதின் திசைநாள் உயர்ச்சிகூறே. (801)

சூரியன்மா லட்டமத்தோன் புகரொன்றாகித்
தோன்றிடக்கேந் திரமாகி உதயந்தன்னில்
சாருயிர்கோ னுடன்சேர்ந்து பவர்வீடாகித்
தரித்திடவே மதிதனக்கு மறையுமாகில்
காரியுச்சங் கேதுடனே உயிர்க்குமூன்றிற்
கருதிடவே தோன்றிடுஞ்சேய் வயதொன்றோதக்
கூறினர்மால் கார்புகர் மதிநாளாகக்
குறித்தனர்நூற் படியாகத் தாணிமாதே. (802)

மாதேகேள் தோன்றிடுஞ்சேய் வரும்யோகத்தை
வகுத்தனர்நூற் படியாகக் கணிதமாய்ந்தோர்
ஓதிடுவன் பாம்புவருந் திசைவந்துற்றால்
உறைத்தனர்பாக் கியம்பூமி உதவியின்பம்
நீதியிடன் தனவானாய்க் குருமுற்பாதி
நேர்ந்திடுமே பதிபூமி கீர்த்திசெல்வம்
வேதமதாய்க் குருவருநாள் வரும்பிற்பாதி
விதித்தனரால் மனக்கவலை பொருள்கள் துஞ்சும். (803)

துஞ்சியதோர் காரிவருந் திசைமுற்பாதி
தோன்றிடுமே பொருள்வரவு வளரும்பூமி
தஞ்சமதாய் வரும்பதிகள் நிதிகள்பூமி
சார்ந்திடுமே பிலமாகத் தாணிமீதில்
விஞ்சையுடன் ராகுதனில் மறைவந்துற்றால்
விளங்கியசே யவன்றனக்கு அரவுதத்து
துஞ்சிடுமே அதில்மயக்கம் பொருள்கள்சேதம்
சோதிடநூற் படியாகக் கணிதமாய்ந்தோர். (804)

மாலுயிரோன் சூரியனும் ஓர்வீடாக
வந்திடவே மறைதனக்கு மறையாதாகிற்
சீலமுடன் கரிகுளிகன் குருவீடேகிச்
சேர்ந்திடவே மதிஉயிர்க்கு மறையாதானால்
சாலவென உயிர்தனக்கு நாலேழ்பத்திற்
தரித்திடவே யெட்டின்கோள் தனிக்குமாகில்
சீலமுடன் பாலன்வய தறுபத்தெட்டுச்
செப்பினர்கள் சேய்மாணந் தாணிமாதே. (805)

மாதேகேள் ஐந்தினுக்கோள் திசையிலின்பம்
வந்திடுமே பாக்கியனுய் வளரும்பூமி
ஓதிடுவன் மால்திசையில் உதவுஞ்சேய்க்கு
உரைத்தனரால் வரும்பலனே சமமென்றேது
சேதமென மனக்கவலே கொடியோனுளிற்
செப்பிடவே புகர்பாதி சேருந் துன்பம்
சோதிடமாய்ப் பெரியோர்கள் கணிதவாய்மை
தோன்றிடவே புகர்பாதி துயரம்போக்கும். (806)

வேறு.

எட்டினேன் சனியாய் இந்துவி னிடத்தி லிருந்திட யிந்துவுஞ் சேயைத், தொட்டுவெண் கவியைச் சூழ்ந்திடச் சாமி சூரியன் பகைவன்மாந் தியும்போய், இட்டமா யணைய யெட்டினேன் நோக்க இவர்க்கவர் நடுவிலே உடலோன், சட்டமா யிருக்கச் சாதகன் றனக்குச் சாற்றினேம் மத்திப வயதே. (807)

வயதெனு மாண்டு யிரண்டரை நாலுள் மயக்கிடும் சூரியன் றிசையும், பயமதாம் யீரா றுண்டினிற் பிணியாம் பயங்கரம் மதி திசை விடினும், அயருமாம் அன்னே ஆரலோன் திசையில் அரிட் டம்நோய் இருபது யெட்டில், துயர்செயும் நாற்பா றுறிலுங் கண்டம் துஞ்சுவன் ஐம்பது மெட்டே. (808)

வேறு.

மந்தபவ னதிபதி அமாமதி யாக
மணக்கோளன் சேயுடனே மருவிடவு மூன்றிற்
புந்தியுறச் சாமிதனக் கேவியத்தி லிருக்கப்
புதியமதி திசைவரினும் புகலுசுதன் கண்டம்
தந்தையும்தா யெனவெறுப்புச் சாதிகளிற் கேடு
தகைசுரங்கள் ரணபீடை தண்ணீராற் பயமும்
வந்திடுமாம் அனற்பயமும் சோற்றினு லச்சம்
மாதுருக்குப் பீடைவரும் வகைதெரிந்து விலகே. (809)

ஆடதனிற் செனித்திடவத் ததிபனும்நா லதனில்
அம்புலியில் லம்புகுந்து அவர்தமக்குக் கேந்த்ரம்
சாடியினேன் நோக்கமுற்று மால்புகர்பொன் பரியும்
தங்கிடவும் அடுத்திடத்தில் மாந்தியுறப் பத்தில்
நாடுதனத் தோனிருக்க வியத்தினிலா றதனில்
நற்சசியுங் கரும்பாம்பும் நண்ணிட அங் கிஷத்தில்
தேடுகரி வர்க்கோத்மம் திங்களும்சொட் சேத்ரம்
சேய்துலேயாய் மால்நீசம் சுரர்குருவுங் குடமாய். (810)

குடமதனில் யிருந்திடவும் புகராட்சி யேறக்
கோதண்டஞ் சிகியுறவும் பரிகயலிற் சோத்
திடமனவான் நல்லூகன் விநயபரன் ஒளிவன்
தீர்க்கமொழி தந்தையரைத் தெய்வமதைப் பேணுன்
விடைபுருஷன் அரசர்செயுந் தொழிலதனுல் இறைவன்
மேலவனு மிவர்துணேவர் அதியோகன் பலவான்
அடமிகவே செலுத்திடுவன் அன்பர்க்குப காரி
அதியுறுதி சாதுரியன் அசரர்கள்யோக் கியனே. (811)

யோக்கியனும் அட்டமத்தோன் சாமிதிசை வரினும்
உயர்வழக்கு யிழந்திடுவன் ஓரறிவு தந்தை
தாக்கிடுமாம் வழிச்சலனம் வேறுவெனக் காட்டும்
சஞ்சலமுந் தவறிவிடும் வைசூரி சுரப்பன்
நோக்கினிய பிணிசேரும் நுண்ணிடையாள் வசியம்
நுட்பலன் தம்பியதில் துற்பலன்கள் கொடுக்கும்
வாக்கினுக்கு வாக்கினிலே உறைபரவு திசையில்
வளர்சுகமுந் துணேப்பேரும் மங்களமா யுரையே. (812)

மங்களமும் உரைத்திடுவோம் முன்னதிக பலனும்
வாய்ச்சாலன் பிதிர்பிணக்கு வழக்குகளே மதிக்கும்
சங்கையெனச் சேதமுண்டாம் பொருள்விரையந் தனத்தில்
சார்ந்திடவும் பாலன்வய திருபதினெண் மேலாய்
நிதிபெருகுந் தீரகுணன் அறந்தேட வல்லன்
நீதிவழு வான்கணவி மகதோஷ முடையான்
துதிபெருகும் வாகனங்கள் க்ஷேத்திரமேற் கிரகன்
தூயவய தறுபதெனச் சொல்லினர்மே லோர்கள். (813)

வேறு.

கவிகதிர் பகைவன் கதிர்மக னுடனே கலந்திட அன்னவ னதனில், யிவையினே மறையோன் அரவுவீ க்ஷணிக்க யிந்துலக் கினத்தினிற் பிலக்க, அவைதனேச் சுபர்கள் பவர்கள்நோக் கிடி னும் ஐந்தினிற் பவருற வதனேன், உபயமுற் றதனில் வெய்யவ னிருக்க உரைத்தனர் வயதுமத் திபமாம். (814)

மத்திப மெனவும் அட்டமா திபனே மருவினர் திசைவிட வரினும், பெற்றதாய் துணைவர் தாரநோய் பிதிர்க்கும் பிலத்திடுந் தனக்குகண் டமதாம், அத்திசை யதனில் தநயரை யழிப்பன் அன்னையர் தந்தையுஞ் சலனம், இத்திசை விடுமுன் சிகிகவி சனிக்கு யிணங்கிய மகவுக்காம் யாகம். (815)

யாகமே சுதனும் பிறந்திடும் உடுவில் அம்புலி உயருநாட் பானு, வேதமாய் நடுவில் வந்திடும் வேளை வெள்ளிபொன் தங்கதாம்பூரம், நாகமாம் நாலும் உருவைந்து சிரசால் ராகுடன் கேதுருசெய்து, ஏகமா யிவன்கை தாரத்தின் கையால் யீந்திடும் படிசதை வாங்கே. (816)

வாங்கியே நதியின் கரையின்மேற் புத்து மண்ணினல் யாகமேவகுத்து, காங்குடன் வெள்ளை சிகப்புமாக் காவி கலையினு லரவுக்கா சனமாய்ப், பாங்குடனிருத்திப் பாலாபி ஷேகம் பலதுரை சுகந்தமுஞ் சாற்றி, நாங்கர வினுக்கும் மாந்தளிர் புனைந்து நாட்டிடும் காகமஞ் சமுதாம். (817)

அஞ்செனக் காகம் அரவுமுன் வைத்து யாகத்துக் காவின் நெய் ஓமம், கஞ்சமா மலரின் தண்டுநா லுடனே காக்கையின் கூடதின் சமுதை. மிஞ்சியே யாகம் முடிந்தபின் காயம் வில்வக் காய் கருங்கடாய் சாவல், மஞ்சள்நீ ராட்டிப் பெலிகொடுத் திடவும் மகவுண்டாம் கண்டம்போம் ஜெயமே. (818)

ஜெயமெனும் புகரின் றிசைவரில் யோகஞ் செலுத்துவன் வாகனம் புரவி, நயமதாய்க் கிடைக்கும் நாரிய ரிணக்கம் நல்கிடப் பிரியனுமாவன், பயமுடன் இனத்தார் கண்டநோய் பிணியாம் பகர்ந்தனர் தந்ததாய் மரணம், சுயம்பெரு மகவுந் தழைத்துமே லோங்குஞ் சுங்கனர் கடையிற்றூர்ப் பலனே. (819)

பலமிகக் கொடுத்து இராஜயோக் கியனுய்ப் பவுசுடன் நல்லவனுகக், கலைபல வுணர்ந்த சாதுக்கள் பக்தன் கனஜன ரக்ஷகனெனவும், நிலவுமுன் திசையிற் கண்டமு முண்டாம் நிலவுதன் திசையின்மேல் நடத்தி, குலைசெயுஞ் சேயோன் அதிரண சுரத்தாற் குதித்திடு மெய்யைவிட் டுயிரே. (820)

வேறு.

மதிதனக்குக் கேந்திரத்தி லுயிரோன்பாம்பு
வந்திடவே சரிவீடாய் வளர அக்கோள்
சதிருடனே கேதுகுரு வுடனென்றுகித்
தரித்திடவே பரிவீடாய்ச் சசிக்குக் கேந்த்ரம்
விதியுடனே சூரியன்மால் புகரெட்டோனும்
விளங்கிடவே மறைவீடாய்த் தரிக்குமாகில்
துதிபெறவே மால்புகர்சேய் பரிதிபொன்னன்
தோன்றியநாள் தொகையாக வயதுசெப்பே. (821)

செப்பிடக்கே ளுதித்திடுஞ்சேய் வரும்யோகத்தைச்
சேர்ந்திடுநாள் ராகுவருந் திசையிற்பாதி
முற்படியே வருமுயற்சி யதிகமேலாம்
மொழிந்தனரால் வரும்பலனே உயர்ச்சிதுஞ்சும்
துப்பிதழாய்ப் பொன்னன்வருந் திசையிற்காரி
தோன்றியநாள் முதலாக யோகஞ்சேரும்
தப்பிடா திதுமுதலே தனவான்மேன்மை
சார்ந்திடுமே மறையின்வரை சாருஞ்செல்வம். (822)

சாருமெனக் கரிதிசையிற் தனதிற்செல்வம்
சார்ந்திடுமே அரசரின்பம் வளரும்பூமி
சீருடனே வருமுயற்சி அதிகமேலாய்ச்
சேர்ந்திடுமே வேண்டியபேர் புகழுண்டாகும்
கூறினர்கள் தப்பாது கணிதவாய்மை
குறித்தனரால் பதிபூமி வளரும்பாக்யம்
காரிவருந் திசைமுழுதும் அதிகயோகம்
கருதுமென யாவருக்குங் கனவான்மாதே. (823)

காரியுடன் பத்தினுக்கோள் மறைவீடேகக்
கருதுமக்கோள் பாம்புடனே கரிவீடாகச்
சாருயிரோன் யெட்டின்கோள் சேயாயைந்திற்
றரித்திடவே யிரவிபுகர் கேதுடன்வந்துற்றால்
கூறியதோர் தோன்றிடுஞ்சேய் வயதுமேலோர்
கொள்ளுமென ஐம்பதுயேழ் தாணிமீதில்
ஆரியனு ணைப்படியே மாணமென்று
ஆகமசாஸ் திரநூலால் அறிவித்தோமே. (824)

வேறு.

அட்டமத்திற் கரியிருக்க அத்துடனே கேது
அமர்ந்திடவே அதற்குடையோன் அம்புலிவீ டதனிற்
றிட்டமுடன் லக்கினத்தோன் பத்தின்கோ ளுடனே
சேரிடமே மறையாமற் சேர்ந்திடும்வீ டதிபன்
சட்டமுடன் பரிவீடாய்த் தனித்திடவே மறைந்தால்
சார்ந்திடுஞ்சேய் ஆயுளெனச் சாற்றினர் நூல் மொழியால்
மட்டவிழ்சேர் நாற்பதுநால் ஒன்றெனவே வயதாய்
வகுத்தனர் நூற் படியாக வந்திடுஞ்சேய் யோகம். (825)

வந்திடுஞ்சேய் யோகமென வன்புகரோன் றிசையில்
மந்திரிநாட் பாதியின்மேல் வந்திடுமே முயற்சி
சிந்தையுடன் புகர்வரையுஞ் சேர்ந்திடுமே பிலமாய்ச்
செப்பினர்கள் வரும்லாபம் செல்வமுமே லாகும்
முந்தியதோர் ஆறின்கோள் தோன்றியநாள் மதியில்
மோசம்வரும் மனக்கவலே மொழிந்தனர்கள் துயரம்
விந்தையுடன் ஐந்தின்கோள் வந்திடுநாள் முதலே
விளங்கிடுமே கீர்த்திபுகழ் மேலெனவே பிலமாய். (826)

வேறு.

அட்டமா திபனும் அட்டமந் தன்னில் அமர்ந்திடச் சுபர்கள் நோக் காதால், நிட்டைமா லுயிரோன் மாந்திபத் தோனும் நின்றிடம் ஓர்மனே மறையால், திட்டமாய்க் காரி பாம்புட னென்ருய்ச் சேரிடம் உயிர்க்குப்பன் னென்ருய்ச், சட்டமாய் வளரு மைம்பத்தைந் தாயுள் சார்ந்திடுஞ் சாதகன் றனக்கே. (827)

சாதகன் றனக்குக் குருகரி அருணன் தங்கிய திசைகளின் பலனே, வேதமா யுரைத்தார் சோதிட வழியால் விளங்கிடும் க்ஷேத்திரம் பூமி, ஓதினு ரிவற்கு மரணநாள் வரையும் உதவிடும் அதிகபாக் கியங்கள், போதவே வருமென் ருேதினர் பிலமாய்ப் புகழ்பெறும் சாதக மிதுவே. (828)

வேறு.

சூரியன்மா லுயிரோனும் ஓர்வீடேகித்
தோன்றுமிக்கோள் மதிகேந்த்ரம் வளரக்காரி
சீருடனே சுபர்வீடாய்க் கருமன்வீடாய்ச்
சேர்ந்திடவே அதற்குடையோன் சேருமில்லம்

கூறிடவே மறைவீடாய் வளரயெட்டோன்
குறுகிடவே உடனுகித் தரிக்குமானுல்
ஆறிருநால் றெட்டியெனத் தொகையதாக
அறைந்தனர்சே யவன்றனக்கு வயதென்ருேதே. (829)

ஓதிடவே உயிர்க்கோளன் தரிக்கும்நாதன்
உறைந்திடவே பவர்கூட மறையுமானுல்
சோதிட நூற் படியாகக் கணிதஞ்சொன்ன
தோன்றியமுன் ருகைவயதிற் ருலேயும்மாதே
வேதன்விதிப் படியாகக் கணிதமாய்ந்தோர்
விதித்தனர்கள் தப்பாது தாணிமீதில்
ஓதிடவே ராகுகுரு திசையிற்செல்வம்
உதவிடுமே அற்பமெனப் பலனென்ருேதே. (830)

அட்டமா திபனும் அரவுடன் புகரும் அமர்ந்திட நாலுமொன் பதுவாய்ச், சட்டமா யுயிரோன் சனியுட னென்ருய்ச் சாரிடம் மறையன் வீ டாக, மட்டிடும் மறையன் மறைந்திட அவர்க்கேழ் வருமுயிர்க் கோளனுங் கரியாங், திட்டமாய்க் கருமன் தினகரனுடனே சேரிடம் மறைந்திடா திடுகில். (831)

மறைந்திடா திடுகில் வருமனே சொந்தம் வளருங்கேந் திரமதா யிருந்தால், அறைந்தனர் வயது ஐம்பத்தெட் டாறில் அதிலுயி ரழிந்திடு மெனவே, துறந்தனர் மறையோன் றிசையினில் முயற்சி தோன்றிடுஞ் சமமென வளரும், குறைந்திடுஞ் சமமாய்ப் பூமிக்ஷேத் திரங்கள் குறித்தனர் தனம்வருங் கூறே. (832)

கூறிய மறையோன் திசையிலந் தியமாய்க் குறுகிய சேயவன் றனக்குச், சீருடன் முயற்சி அரசர்சந் தோஷம் சேர்ந்திடுங் கட்டுவன் சிவிகை, சாருமென் றுதவ யோகமே லாகுஞ் சார்ந்திடும் தனம்வரும் பூமி, பாரினிற் கனவான் அதிகக்ஷேத் திரனும் பகர்ந்தனர் தாணியில் மாதே. (833)

மாதென வெகுபேர் புகழ்ந்திட யோகம் வந்திடும் அதிகபாக்கியனும், ஓதிய தூங்கு சப்ரமம் சுகவான் உரைத்தனர் குடும்ப கீர்த் தியனும், வேதமாய் ராஜ லெட்சுமி காந்தன் விளங்குவன் கரிதிசை முடிவும், நீதமாய்க் காரி திசைமுடி வதனில் நேர்ந்திடும் அரசர்தன் வெகுளி. (834)

வெகுளியால் முபற்சி துஞ்சிடுஞ் சேய்க்கு விளம்பிய அத்திசை முடிவில், தருமென உயர்ச்சி சார்ந்திடும் பிலமாய் சசிமகன் நாள்வரும் பாதி, ஜெகமதி லுயர்ந்த வாழ்வுடை யோனும் சேர்ந்திடு மதில் வருந் தனங்கள், சுகமுள னுகத் தோன்றிடு மின்பஞ் சுகித்திடுஞ் சாதகன் பலனே. (835)

வேறு.

அட்டமத்தோன் மாலலது அலரிதிங்கள்
அமருமிக்கோ ளிவர்களிலே யெவரானாலும்
திட்டமுடன் கேந்திரமாய்ச் சுபர்கள்வீடாய்
சேர்ந்திடவே சேர்ந்திடும்வீ டதிபன்உச்சம்
சட்டமுடன் உயிரிதனி லுயிரின்கோளன்
தனித்திடவே கரியனுந்தன் வீடேயானால்
நிட்டைபுரி மால்மதிசேய் பரிதிபொன்னன்
நேர்ந்திடுநாள் திசைதொகையாய் வயதுசெப்பே. (836)

செப்புமென அட்டமத்தோன் சேரும்நாதன்
சேருமனை நீசபகை யாகுமானால்
முற்படிசொல் விடும்வயதி லழியும்யேழ்தான்
மொழிந்தனர்சோ திடப்படியே கணிதமாகத்
தப்புவது மில்லையெனத் தரணிதன்னிற்
சாஸ்திரநூற் படிவிதியால் உரைக்குமேலோர்
துப்பிதழாய் உயிர்தனக்கு யீராறெட்டு
தோன்றுது மூன்றதனில் வரினுங்கோளன். (837)

கோளெனவே வருங்கரிய னுகயெக்கோள்
குருவுமவ ருடன்கூடித் தரியாதானால்
தாளுறவே யிவன்றிசைநாள் முடிவிற்சேயன்
சாய்ந்திடுந்தப் பாதுயிது கணிதவாய்மை
சூழுறவே அட்டமத்தோன் கரியனோடு
தோன்றிடவே ஓர்மனையாய் மறையுமானால்
ஏழுடன்நால் ஒன்றெனவே வயதென்றோதி
யியம்பினர்க ளிதுதவறு தெனவென்றோதே. (838)

வேறு.

சந்திரனு முயிர்க்கோளாய் சாரிடம்நா லுபயந்
தானமதிற் றனித்திடவத் தானதிபன் உச்சம்
வந்திடவே மாந்திஅர வுடன்பரிதி யொன்றாய்
வருமிவர்கள் உயிர்தனக்கு மறையாமல் வருமால்
விந்தையுடன் அட்டமத்தோன் விளங்கியபத் தோனும்
விளங்குமிக்கோள் குருமனையாய் விளங்கிடக்கோ ளுச்சம்
சிந்தையுடன் தோன்றியதோர் சேயவன்றன் வயது
செப்பினரெண் பதுயெனவே சேர்ந்திடும்நூல் விதியால்.

விதியாக அட்டமத்தோன் விளங்கியபத் தோனும்
விளங்குமிக்கோள் குருமனையாய் விளங்கிடவே அக்கோள்
சதியாக நீசபகை யாகிடவே அவர்க்குச்
சாருமெக்கோள் சேராமல் சாரிடங்கேந் திரமாம்
அதிபதியா யிருந்திடிகி லறைந்திடுஞ்சேய் வயதில்
அழிந்திடுமீ ரேழெனவே ஆகமசாஸ்திரமாய்
விதியாக உரைத்தனர்கள் விளங்கியமே லோர்கள்
விதிதவறு தெனவேதன் விதித்தனர்சோ திடமாய். (840)

வேறு.

சூரியனும் அட்டமத்தோ னுகிமாலுந்
தொல்மதிசேய் உடனிவர்கள் கூடியொன்றாய்
பாரரியிற் கட்டமமா றீரிலேகிப்
பகர்ந்திடவே யிவர்கள்தனைச் சுபர்கள்நோக்கச்
சீருடனே உயிர்க்கோளன் மாந்திபத்தோன்
சேருமிக்கோ ளுயிரிலது ஐந்தேழுற்றால்
ஆரியன்மேல் ஆணைவிதிப் படியென்றோதி
அறைந்தனர்கள் வயதறுபதேகம்ஓது. (841)

சனியுடனே அட்டமத்தோன் மறைவீடேகச்
சாருமறை சுபருடனே சசிவீடேறப்
புனிதமுட னுயிர்க்கோளன் மாலோனுகிப்
பொருந்தியசேய் பானரவு உடனொன்றாகி
இனிதமுடன் உயிர்தனக்கு மூன்றுறெட்டி
லிருந்திடவே தோன்றியசேய் தனக்குஆயுள்
வனிதையேகேள் இருபதுயேழ் ரெட்டியாக
வகுத்தனர்சேய் நமபுறஞ்சென் றணுகுமென்றே (842)

மாலுயிர்க்கோள் தினகரனுங் கருமனோடு
வளருமிக்கோ ளுயிர்தனக்குப் பத்திலேகச்
சீலமுட னுயிர்தனக்கட் டமத்திலெட்டோன்
சேர்ந்திடவே உடனொருகோள் தரியாதாகத்
தூலமுடன் உயிர்தனக்கா றதனிற்காரி
தோன்றிடவே உயிரிடஞ்சுத் தமமதானல்
காலன்வரும் உலகமதிற் சேரஆயுள்
கருதுமென ஐம்பதுமொண் ணுபயமோதே. (843)

காரியுடன் பத்தினுக்கோள் குருவீடேகக்
கருதுமக்கோ ளட்டமமீ ராறிலேகப்
பாருயிரில் மாந்திபுக ருடனொன்றாகிப்
பகருகிறேன் அட்டமக்கோ ளுடனேசேர்ந்து

சாரிடங்கேந் திரம்வளர உயிர்சேயாகச்
சார்ந்திடுஞ்சே யவன்றனக்கு வயதுமேலோர்
கூறினர்க ளைம்பதுயேழ் பதினென்றாகக்
குறித்தனர்கள் ஆகமசாஸ் திரங்களோது. (844)

சுங்கனுயிர்க் கோளாகி வருமெட்டோனுந்
தோன்றியமால் சூரியன்றன் னுடனென்றாகித்
தங்கிடமால் வீடலது மதியின்வீடாய்த்
தரித்திடவே வருங்கருமன் நீசமேறத்
துங்கமுடன் உயிர்தனக்கீ ராறிலேகத்
தோன்றிடவே கரியனும்வந் திடினுமானல்
பங்கமுறும் உதித்திடுஞ்சேய் வயதுமேலோர்
பகர்ந்தனர்முப் பதுயிரட்டி கணிதம்ஓது. (845)

கரியுடனே மதியரவு வருமெட்டோனுங்
கருதுயிரிற் கேந்திரமாய்த் தரிக்குமாகில்
வருமுயிரோன் மாலோனுய் அலரியோடு
வருமுயிர்க்கு மூன்றலது ஆறெட்டேகத்
தருதுமென உயிர்தனக்குக் கருமநாதன்
சாருமிடங் கரிமனையாய்த் தனிக்குமானல்
அருமறைநூற் படிவிதியால் வயதென்றோதே
அறைந்தனர்கள் இருபத்தொன் றேகம்ஓதே. (846)

அட்டமத்திற் சூரியன்மால் கரியோன்பத்தோன்
அமர்ந்திடவே அதற்குடையோ னவ்வாறாகித்
திட்டமுடன் உயிரின்கோ ளுடனென்றாகிச்
சேருயிர்க்கீ ராறலது எட்டிலானல்
சட்டமுடன தோன்றியசேய் தனக்குஆயுள்
சார்ந்திடுமோ ராண்டதனுள் நாசங்காட்டும்
அட்டமத்தில் வருமுயிரோன் கருமன்யெட்டோன்
அமர்ந்திடஞ்சேய் அன்றிரவில் அழியுந்தேகம் (847)

மதிமகனு முயிர்க்கோளாய் ஆட்சியுச்சம்
வந்திடவே ஓர்பவர்க ளுடனென்றாகி
விதியுடனே அட்டமத்தோன் உதயமேறி
விளங்கிடவே மதிதனக்கு மறையாதாகச்
சதிருடனே மறையன்மனை அதனிற்காரி
தனித்திடவே தோன்றியசேய் தனக்குஆயுள்
அதிபதியா யிருபதுநா லிரட்டியாக
அறைந்தனர்சேய் நமபுறஞ்சென் றணுகுமென்றே. (848)

சுங்கனுமட் டமக்கோளாய் வருமெட்டோனுந்
தோன்றுமிக்கோள் கரியன்மனை அதனிலேகத்
தங்குகரி உயிர்தனக்கு மறையாதாகித்
தரித்திடவே உடனெவர்கள் தரியாதாகத்
துங்கமுட னுயிர்தனக்குக் கருமநாதன்
தோன்றுயிர்க்குக் கேந்திரமா யெட்டிற்பாம்பு
தங்கிடவே தோன்றியசேய் தனக்குஆயுள்
சாருமிரு பத்தெட்டை யிரட்டியோதே. (849)

சுக்கிரன்வீ டதிலுயிர்க்கெட் டாங்கோளேகித்
தோன்றுமதி யுடன்கூடி மறையாதாகத்
தக்கதென உயிர்க்கோளன் கரியனாகிச்
சற்குருவீ டதில்வளரக் குருவுஞ்சேரத்
தொக்குமென வருங்கருமன் பாவராகித்
தோன்றுபவ ருடன்கூடி மறையாதானல்
மைக்கருங்கண் விழியணங்கே வயதுகேளு
வகுத்தனர்க ளைம்பதுயேழ் வளருமென்றே. (850)

என்றெனவே உயிர்தனிலே அரவோனேக
யெவ்வுயிர்க்குக் கருமமதில் ஒருகோள்நின்றால்
நன்றெனவே முன்னுரைத்த வயதிற்பத்து
நாசமென வாக்கியமாய்த் திரட்டியோது
துன்றுயெட்டோன் பவக்கோளாய்ப் பவக்கோள்சேர்ந்தால்
துஞ்சிடுமே முன்வயது பாதிபோகும்
அன்றுமறை நூற்படியாற் கணிதமென்று
அறைந்தனர்கள் தவறாது யெனவென்றோது. (851)

காரியுயிர்க் கோளாகி ஆட்சியுச்சம்
கருதுமொரு கோளுடனே தரியாதாக
வாருமுயிர்க் கட்டமக்கோள் பரிகேதோடு
வருமுயிர்சேய் கோளலது கருமத்தேகச்
சாருயிர்க்கு வருங்கருமன் பதினென்றெட்டில்
தரித்திடவே மாந்திபுக ருடன்வந்துற்றால்
கூறுமெனத் தோன்றியசேய் தனக்குஆயுள்
கொள்ளுமென முப்பதுநா லெட்டிற்செப்பே. (852)

சனியுடனே தினகரனு முயிரின்கோளுஞ்
சாருமெட்டோன் கருமனுட னிவர்களொன்றாய்
இனிதமுடன் மதிமனையிற் றரிக்குமாகிற்
யிந்துவுமே கேந்திரமாய்த் தரிக்குமாகிற்
புனிதமுட னதனில்வா அரவோனேகப்
பொருந்துயிரு மாதெனவே தோன்றுஞ்சேய்க்குச்
சனிதிசைவந் திடுமதனிற் காலனூர்க்குச்
சார்ந்திடுவ னிவனுயுள் தவறாதென்றே. (853)

தேளுதைய மாகவதிற் புகர்பொன்மாந்தி
சேர்ந்திடவே தேளுடையோன் சேருமில்லம்
வாழுயிர்க்கட் டமமலது பதினொன்றேகி
வரினுமெட்டோன் பாம்புடனே சுபரிருக்குமாகில்
சூழுறவே கருமனுமே பகைநீசத்திற்
றோன்றிடவே காரிமதி வீட்டினுற்றால்
ஊழ்விதிநூற் படியெனவே வயதுமேலோர்
உரைத்தனர்கள் கரிதிசைமுற் பாதிபோக்கில். (854)

காரியுடன் அட்டமத்தோன் குருவீடேகக்
கருதுமக்கோள் கருமனுடன் மதிவீடாகப்
பாருயிர்க்கோள் மாலோனுப் புகர்பானோடு
பகருயிர்க்கு மூன்றலது பதினொன்றாகக்
கூருமெட்டு சுத்தமதா யிருந்தபேர்க்குக்
கொள்ளுமென வயதறுப தேகமாகுஞ்
சீருடனே அட்டமத்திற் கொடியபாவர்
சேர்ந்திடவே கருமனுடன் பவர்கள்வந்தால். (855)

வந்திடுமுன் ஆயுளதில் மாயுமீராற்
வரினுமொன்று நாசமெனக் கணிதமோது
சிந்தையுடன் வருமுயிரோன் கரியெட்டோனுந்
தினகரனும் புகருடனே கூடவொன்றாய்
விந்தையுட னுயிர்தனக்கு ஆறெட்டாக
விளங்குமித்தா னத்தில்வாச் சுபர்நோக்கில்லாச்
சுந்தரஞ்சேர் விழியணங்கே பிறந்தசேயுந்
துஞ்சிடுமே உபயதிங்கள் நாளிற்போமே. (856)

தேளுதய மாகஅதிற் புகர்பொன் மாந்தி
சேர்ந்திடவே தேளுடையோன் சேருமில்லம்
வாழுயிர்க்கட் டமமலது பதினொன்றேகி
வரினுமெட்டோன் பாம்புடனே தரிக்குமாகில்
சூழுறவே கரியனுமீ னைந்திலேகத்
தோன்றுமக்கோ ளாட்சியுச்ச மிருக்கு மானால்
ஊழ்விதிநூற் படியெனவே வயதுமேலோர்
உரைத்தனர்கள் மால்திசைவந் திடுகில்மாதே. (857)

புந்தியுயிர்க் கோளாகி ரவிகேதோடு
பொருந்துதய கேந்திரத்திற் றரிக்குமாகில்
வந்துயிர்க்கட் டமக்கோளன் குருதியாகி
வருமுயிர்க்கா றதில்வளர ஆறேன்நீசம்
சிந்தையுடன் வருங்குருவும் பதினொன்றெட்டில்
சேரவக்கோ ளுடனெவர்கள் தரியாதானால்
சுந்தரமாய்த் தோன்றியசேய் வயதுமேலோர்
சொல்லினர்கள் முப்பதுஆ றிரட்டிசெப்பே (858)

பீதகனு முயிர்க்கோளாய்ச் சுபரோடொன்றாய்ப்
பேணுயிர்க்கு வருங்கருமத் தானமேறச்
சீதமுடன் மீனுதய மதனிற்பாம்பு
சேருகரி யுடன்கூடித் தரிக்குமாகில்
வேதமுட னட்டமக்கோ ளுயிர்க்குநாலில்
விளங்கிடவே மறையனுநேர்ந் திடினுமானால்
ஓதுமென முப்பதுமுன் னிரட்டியாயுள்
உரைத்தனர்கள் கணிதமொழிப்படியென்றோதே. (859)

ஓதுமென வருமுயிர்க்கோள் மறைந்துபாவ
ருடனிருக்க மனையதனில் மதியொன்றாக
நீதியுட னட்டமக்கோ ளதனைப்பொன்னன்
நேருவிழிப் பார்வையினால் நோக்குமானால்
வேதமுடன் முன்னுரைத்த ஆயுள்தன்னில்
விதித்தனர்கள் பாதியென்று கணிதமாய்ந்தோர்
சோதிடசாஸ் திரப்படியே பால்போட்டெண்ணித்
தோன்றியசேய் ஆயுள்விதி திரட்டிச்சொன்னான். (860)

அட்டமத்தோன் வருமுயிரிற் கருமன்மாலும்
அமர்ந்திடவே மானதுவாய்த் தரிக்குமாகில்
திட்டமுடன் லக்கினக்கோள் மால்வீடேகிச்
சேர்ந்திடவே உடனொருகோள் தரியாதானால்
சட்டமுடன் தோன்றியசே யாயுள்மேலோர்
சாஸ்திரநூற் படிவிதியாற் கணிதம்பார்த்துக்
கட்டினர்க ளைம்பதுநால் யேகமென்று
கருதினர்கள் வெகுபரலாய்த் திரட்டிப்பார்த்தே. (861)

சூரியனு மட்டமத்தோ னாகிமாலுந்
தோன்றுமதி யுடன்கூடி மறையாதாகப்
பாருயிர்க்கோள் பாம்புடனே மறைவீடாகப்
பகர்ந்திடவே அக்கோளன் கரிவீடேகிச்
சாருயிர்க்கு வருங்கருமன் ஆட்சியாகத்
தனித்திடவே தோன்றியசேய் தனக்குஆயுள்
கூறினர்கள் பதினோராங் கோள்திசையிற்றானே
குறித்தனர்கள் தப்பாது தாணிமீதே. (862)

காரியுயிர்க் கோளாகிப் புகர்வீடாகக்
கருதுமக்கோள் கேந்திரமாய் மதிவீடேகிச்
சாருயிர்க்குவரினு மெட்டோன் மால்தன்வீட்டிற்
சாரவவ னுடன்மதியால் அரவோனுற்றால்
சீருடனே தோன்றியசேய் தனக்குஆயுள்
செப்பினர்கள் ஐம்பதைந்து தவறாதாகும்
பாருயிர்க்கோள் கேந்திரத்தில் நீசமுற்றால்
பகருமைம்பத் தைந்ததிலேழ் மாயுமென்றே. (863)

அட்டமத்திற் கரியுடனே வரினுங்கேது
அமர்ந்திடவே அதற்குடையோன் உயிரின்கோளாய்த்
திட்டமுடன் சூரியன்மா லுடனொன்றாகச்
சேருமிடங் கரிமனையாய்த் தரிக்குமாகில்
சட்டமுடன் வருங்கருமன் பதினொன்றேகித்
தரித்திடவே மாந்திமறை யுடன்வந்தெய்தக்
கட்டியமா லுயிர்தொலையாய்த் தோன்றுஞ்சேய்க்குக்
கருதுவய தைம்பதுயே ழாகுமென்றே. (864)

மாலோனு முயிர்க்கோளாய் உதயமேறி
வருமலரி யுடன்கூடித் தரிக்குமாகில்
நீலனுமட் டமக்கோளாய் அலரிவீட்டில்
நின்றிடவே யெக்கோட்கள் தரியாதாகச்
சீலமுடன் வருங்கருமன் தகர்மீனேகச்
செப்புமெனத் தோன்றியசேய் வயதுகூறு
மாலவன்பொன் சேய்மனைக்கோள் மதிநாளாக
வளருமிக்கோள் திசைதொகையாய்க் கணிதமோது. (865)

அட்டமத்தோன் வரும்புகா யிறைவன்கோளாய்
அமருமிடங் கரிவீடாய்த் தரிக்குமாகிற்
சட்டமுடன் வருமுயிர்க்குக் கருமந்தன்னிற்
சனிவருகச் சனியிருந்த வீட்டுநாதன்
திட்டமுடன் வரும்பவக்கோ ளுடனொன்றாகிச்
சேருயிர்க்கு நாலதனிற் றரிக்கப்பாவர்
மட்டிடுஞ்சே யவன்றனக்கு வயதுமேலோர்
வகுத்தனர்க ளைம்பதுமா றைந்துமோதே. (866)

சனியுடனே அட்டமத்தோன் புகரொன்றாகிச்
சாருயிர்க்கோள் தனில்வளரச் சுபர்நோக்கில்லா
புனிதரும்லக் கினக்கோளன் மாலதாகிப்
பொருந்தியபான் கேதுடனே உயிர்க்கெட்டேக
இனிதமுடன் வருங்கருமன் உச்சமேறி
இராகுடனே ஒன்றாகித் தரிக்குமாகில்
சனிதிசைவிட் டேகியதோர் மால்வந்துற்றால்
சாய்ந்திடுவ னவனாயு ளாகுமென்றே. (867)

காரியுயிர்க் கோளாகிக் கொடியோனோடு
கருதுயிர்க்குப் பஞ்சமமாய்த் தரிக்குமாகில்
பாருயிர்க்கட் டமக்கோளன் நீசமேறிப்
பகருயிர்கோ ளுடன்கூடித் தரியாதாகச்
சாருயிர்க்கு வருங்கருமன் அரவோடொன்றாய்ச்
சாருமிடம் உயிர்தனக்குப் பதினொன்றானாற்
கூறுமெனத் தோன்றியசேய் தனக்குஆயுள்
குறித்தன்ர்கள் மால்திசைவந் தேற்றஅன்றே. (868)

வேறு.

இரவியுயிர் மால்கூடி யிரவிசுத னிடத்தில்
இருந்திடவத் தானமது வெட்டதுவா யதிபன்
குருவுயிடத் திருந்திடவும் உடலதிபன் பொன்னுங்
குசன்றனக்கு நான்கினுறக் குளிகனும்பஞ் சமத்தில்
அரவுடனே சனிகூடி அந்தணன்வீ டமைய
அந்தணனும் லக்கினத்தை யதிபெலமாய் நோக்கத்
தெரியபுவி பிறந்தவர்க்கு மத்திபமாம் வயது
செப்புவோம் இப்பலனைச் செந்தமிழ்வல் லவரே. (869)

கவியினில்லஞ் செனித்திடவும் அதனவன்சே யிடத்திற்
கலந்திடஅன் னுதனுமே கவிக்கெதிராட் சியதாய்
செவியதனில் அரவுசனி யிருக்கவர்க்கு மூன்றில்
சிகண்டிதனைக் கலையனையத் திரும்பியிவர் பார்க்க
நவமதனிற் சிகியுறவன் னுதனுடன் பரிதி
நண்ணிலக்கி னேசனுக்கு வாக்கதனி லிருக்க
அவையிடத்தோன் உயிர்க்கிரண்டி லிருக்கினும்பின் யோகன்
அங்கமதில் வாதகுணன் பண்பினும்நல் லவனே. (870)

வேறு.

நல்லவ னெனவும் நாவிலான் றந்தை ரண்டுமூன் றுண்டினுள் நசிக்கும், சொல்லுத வாதான் திடுக்கெனப் பகர்வான் தோகை யர் மோகமுள் ளவனும், அல்லல்நோய் சோகை தங்குத லறை யில் ஆண்குறி புண்புரை கருவி, தொல்லையான் சுரமும் மகவுயிர் வதைக்குந் தோகையாற் கலகம்வந் தெய்தும். (871)

எய்திடு மூன்றும் வயதுமுப் பதின்மேல் யின்ப்னுந் தனமெ லாஞ் செலுத்தும், துய்யவெண் கிரகம் அணிபணி சேர்க்குந் துணைவரைக் காக்குமே லவனும், செய்தொழில் பலிதம் க்ஷேத் திரந் தழைக்கும் செல்வனுஞ் சயனசம் பானும், தெய்வசா தனத் தால் அறம்விரும் புதலான் சேர்ந்திடும் ஐம்பது வயதே. (872)

வேறு.

உதயமதற் குடையோனும் வெள்ளியென நான்கோன்
உறத்ததிபன் வாக்கிருக்க உடையவனும் ஒன்றுய்ப்
பதியுமிடம் மேதையில்லம் பொன்னவற்கு ஐந்திற்
பரிதிபகை யுடனிருக்கப் பத்துநவத் ததனில்
மதிகுருவும் யிருந்திடவத் ததிபதியு மிவரை
மாறிமதி பகைவனுட மதிமகனை நோக்கச்
சுதனெனவும் பிறந்தவர்க்கு ஆயுளறு பதுவாம்
தூயவுப காரியவன் சுகஜனா க்ஷகனே. (873)

ரட்சகனும் சுதன்துணைவர் அகன்றிடும்பின் யோகம்
ராஜகெரு விதன்சவுர்யன் வாகனமுள் ளவனும்
கெச்சிதன்சத் துருஜெயவன் கண்டம்வரும் விலகும்
கீர்த்திபெறும் ஆடவனுஞ் சாதகத்தோன் மைந்தன்
இச்சையுளன் தனர்தேட சபைக்குதவான் வஞ்சன்
இல்லறத்தின் மேன்மையினன் யின்பசுக போகன்
பட்சமிலான் தாய்வழியிற் றந்தையனுள் செலுத்தான்
பலதுரையான் கணவிதுன்பம் பாலனுஞ்சோ டியதே. (874)

எழுதற்கு உடையவனுஞ் சேயனுமாட் சியதாய்
இருந்திடத்துக் கேழதுவே உயிரெனவும் பாவர்
வாழவுமவ் விடத்தோனும் புகரெனவும் மாலும்
மார்த்தாண்ட னுடன்பகைவன் மருவிடஅன் னுதன்
கோளருட னிளந்தாலும் குசன்திரிகோ ணத்திங்
கொடியவர்கள்நோக்கிடினுங் கோத்திரத்தோர்க்கெல்லாம்
ஆளியனும் யிவன்றுணைவர் மன்னர்புகழ் யோகன்
அனேகமனுக் காக்கவல்லன் அரசர்க்கெரு விதனே. (875)

அரசர்கெரு விதனெனவும் அகத்தினினன் மார்க்கன்
அரிவையர்கள் விரகமிகும் அழகுகுண சீலன்
துரைகள்தரி சனஞ்சிவிகை வாகனசன் மார்க்கன்
தொடுத்திடுங்கா ரியஞ்செயிப்பன் துஷ்டரைச்சிட் சிப்பன்
இரவலர்கள் யீகையுளான் சாதகத்தோன் கணவிக்
கிடநடுவிற் கண்டம்வரும் யிணைபிரியான் சுகமாம்
நிறைபவுசன் மகவுளனும் ஞானிசெய்யுந் தொழிலான்
நீணிலத்தில் வயததுவும் ஐம்பதுடை யோனே. (876)

அரவுசனி யுடனிருக்க அந்தணனர் துறவில்
அன்னவனும் அலரிமகன் அமாமதி நடுவில்
இறையவனும் பவர்சுபரை அணைந்துபவர் யேழோன்
எட்டுளனை நோக்கயிவன் வயததுமத் திபமாம்
நிறைபவுசான் முப்பதுமேல் கனஜனரக்ஷ கனும்
நிருபரென வுடன்பிறந்தோர் மேலதிக வாழ்வன்
பாவுபுகழ் சற்கீர்த்தி தாளநவ மணிகள்
பணியணியுங் கணவிவரும் பாலருண்டாம் பலனே. (877)

பலனெனவும் யேழதிபன் திசையில்வரும் பீடை
 பரவுமதி யிருந்திடத்தோன் உடன்கூடுந் திசையில்
நலமனந்தம் பிதிர்மேலாம் தனதுசுக மணங்கள்
 நடத்தியசந் ததியுதிக்கும் பிதிர்கர்ம முடித்துச்
சலனமிகும் கிளைவழியில் தனக்குமனப் பீடை
 தனஞ்சேரும் விரையமுண்டாம் தன்துணையால் யோகம்
கலைதனக்கு ரெண்டிலுறுந் திசைநடுவிற் பின்னேன்
 கண்டம்வரும் விலகியன்னை காலகண்ட முரையே. (878)

உரைத்திடுஞ்சா தகர்தனக்குங் கணவிசுதன் துணைக்கும்
 உண்டெனவே நவகாண்டத் துரைத்திடுவேன் நிவர்த்தி
திரத்துடனே தெய்வநிஷ்டை பரிகாரம் செய்யில்
 தீயபலன் விலகிடுமேல் செல்வமிகக் கொடுத்து
நிறைந்தசுக வாகனங்கள் பின்வருமே லவனும்
 நிலவிருந்த அதிபதியான் திசையில்நலம் பின்னில்
கரைந்திடுமுன் காதலியைப் பித்தஅசீ ரணத்தால்
 கடக்குமிவன் ஆவியுமே ஆக்கையுந்துஞ் சுமதே. (879)

வேறு.

அட்டமத்தோன் சுக்கிரனு யுயிரின்கோளாய்
 ஆரல்கொடி யோனுடனே கரிவீடேகத்
திட்டமுடன் கரியனுங்கேந் திரத்தில்நீசஞ்
 சேர்ந்திடவே உடனெவர்கள் சேராதாகச்
சட்டமுடன் வருங்கருமன் மால்வீடேகித்
 தனித்திடவே தோன்றியசேய் தனக்குஆயுள்
நிட்டைபுரி மால்மதிசேய் புகர்காளாக
 நேருமிக்கோள் திசைதொகையாய் வயதுசெப்பே. (880)

மந்தனுயிர்க் கோளாகி வருஞ்சேயோடு
 வளருயிர்க்குப் பதினெண்கோள் வீட்டிற்சேரச்
சிந்தையுட னட்டமத்திற் கொடியோ னேகச்
 சேருமெட்டோன் மாலுடனே மறைவீடாக
விந்தையுடன் வருங்கருமன் கருமந்தன்னில்
 விளங்கிடவே உடன்மறையுந் தரிக்குமானல்
விந்தையுடன் தோன்றியசேய் தனக்குஆயுள்
 விளங்குயிர்க்கோள் திசைதனதில் முடிவிற்றுஞ்சும். (881)

அட்டமக்கோள் சூரியனும் மாலோடொன்ருய்
 அமருயிர்க்கோன் பதுவலது ஆறிலேகச்
சட்டமுட னுயிர்க்கோளன் கரியனுகிச்
 சாருயிர்க்குப் பதினோரந் தானமேகத்
திட்டமுடன் வருங்கருமன் மறையோடொன்ருய்ச்
 சேருயிர்க்குக் கருமமது அலதைந்தானுல்
மட்டிடுஞ்சே யவன்றனக்கு வயதுகாரி
 வருந்திசைமுன் பாதிஅந்தி கணிதங்கூறே. (882)

கூறுமென முன்னுரைத்த உயிர்க்கோளோடு
 குருதிவாச் சுபர்நோக்கா தாகுமாகில்
பாருயிர்க்கட் டமமதிலே கொடியோனேகப்
 பகருமந்தக் கொடியோனைப் பவர்நோக்குற்ருல்
சாருமெனத் தோன்றியசேய் வயதுமூன்றிற்
 சாய்ந்திடுவ னிதுதவரு தாகுமென்று
ஆரியன்மே லாணையென்று பெரியோர்வாக்கால்
 அறைந்தனர்க ளிதுதவரு தாகுமாதே. (883)

அட்டமத்தில் வருமாலோன் தரிக்கஅக்கோள்
 அம்புவிதன் னுடன்கூடி யுயிர்க்காறெட்டிற்
றிட்டமுடன் உயிர்க்கோளன் கரியனுகிச்
 செப்பியசே யுடன்கூடி மறையாதாக
நிட்டைபுரி மாலுடனே கருமனென்ருய்
 நேருயிர்க்கேழ் தனில்வளரத் தரிக்குமானல்
சட்டமுடன் தோன்றியசேய் தனக்குஆயுள்
 சார்ந்திடுமே முப்பதுநா விரட்டியோதே. (884)

எட்டுடையோன் வரும்புகராய் மதிபாம்போடு
 யேகுமில்லம் மறைமனையா யிருக்குமாகில்
திட்டமுடன் உயிர்க்கோளன் மறையானுகிச்
 சேருமிடம் ஆட்சியுச்சந் தரிக்குமாகில்
சட்டமுடன் வருங்கரியன் மூன்ருறெட்டிற்
 சாரயெக்கோள் சேராம லிருக்குமானல்
நிட்டைபுரி மால்மதிபொன் புகர்காளாக
 நேருமிக்கோள் திசைதொகையாய் வயதென்ருேதே. ()

சந்திரனு முயிர்க்கோளாய் நீசமேறித்
தனித்திடவே மறையவனும் நோக்குமாகில்
வந்துயிர்க்கட் டமக்கோளன் நீசமாகி
வருங்கொடியோ னுடன்கூடி மறையாதாகச்
சிந்தையுடன் வருங்கருமன் உபயந்தன்னிற்
சேர்ந்திடவே உயிரதனில் மறையோன்வந்தால்
விந்தையுடன் தோன்றியசேய் தனக்குஆயுள்
விதித்தனர்கள் நாற்பதுஆ றுபயஞ்செப்பே. (886)

செப்புமென வயதிருவேழ் மூன்றின்மேலாய்
சேருதனம் பூமிபதி காலியின்பம்
தப்பியதோர் வளருதனங் குறைவில்லாதான்
சார்ந்திடுமே வாணிபமாய்ப் பெருகுஞ்செல்வம்
முற்படியே வரவரவே தனம்வந்தெய்தும்
மொழிந்தனர்கள் மரணம்வரை தவருதாகுந்
துப்பிதழாய் யிதுகணித நூலென்ருேதிச்
சோதிடமாய் வெகுபரலாற் றிரட்டியோதே. (887)

வாக்குடையோன் ஐந்துடையோன் மாலதாகி
வளருபரி யுடன்கூடி மதிவீடேகத்
திர்க்கமுட னிக்கோளே மறைசெய்நோக்கச்
செப்புமெனத் தோன்றியசேய் உரைசொல்வஞ்சம்
தாக்குமென யேகலபி தணிந்தசொல்லன்
சார்ந்திடுமே அனுசரிப்பி ருரைசெய்யானும்
பாக்கியவா னறுபதுயே மூபயம்ஆயுள்
பகர்வயது மேலாகி லதிகயின்பம். (888)

வேறு.

மிதுனமாய்த் தோன்றிப் பாம்பதி னுதிக்கில் விளங்கிய லக்கின நாதன், உதயகேந் திரத்திற் சுபருடன் வாழ்க உயர்ந்தவ னிரண்டுநான் கேழில், கெதிபெற இருக்கில் அவனுட ஆயுள் கெணித்தனர் சோதிட விதியால், சதிசெயு மாண்டு ஒருபதி னுலாய்ச் சாற்றினுர் தாணியின் மீதே. (889)

அலவனிற் பிறக்கக் காரி யமர்ந்தவன் வாக்கி லேறப்
பலமுடன் மதியன் பத்திற் பதிந்திடப் பொன்னன் சாரில்
சலமுடன் பரிதி சுங்கன் தானுற் கிரக வீடால்
சிலைநுதல் மாதே கேளாய் செப்பிடு மெழுபத் தைந்தே. (890)

பாம்புடன் சனியுங் கூடிப் பகர்ந்தவன் வாக்கு நாலேழ்
எம்பிட வொன்பான் பன்னென் றெய்தியே நிற்பா ராகில்
வாம்புய மாதே கேளாய் வரும்வய தெழுப தின்மேல்
சாம்பமாந் தீர மென்று சாற்றினுர் கணித மாய்ந்தோர். (891)

வேறு.

மாந்திசொந்த வீடாக லக்கினத்துக் குடையோன்
மால்கரியால் பகைநீச மெய்யாதே யிடுமால்
சேர்ந்தபஞ்ச மத்தோனுங் காரகனு மெட்டாந்
தீக்கோளு மேமறைக்கு மறையாதே யிடுகில்
மாந்தியுடன் வருஞ்சுபர்கள் பாவரில்லா திருந்தால்
வஞ்சகத்தோன் தனயோக சாலியென வகுப்பாய்
சாந்தணியுந் தனத்தாளே சோதிடத்தி லதிகந்
தர்மபரி பூரணமா யறுபதிமூன் ருயுள். (892)

வேறு.

காரிஜென்மந் தரித்திருக்க வாக்கோனெட்டோன்
கருதியபா வருமாகி யொன்றுநான்கில்
வீரியமா யிருந்திடவுஞ் செனனந்தொட்டு
விளங்குபஞ்ச தானமதிற் சுபரேநின்ருல்
கார்குழல்மான் விழிமாதே தொண்ணூருகும்
கருதுபஞ்ச மத்தினிலே பாவர்சேர்ந்தால்
சாரதியா யறுபதின்மேல் ரெண்டுசெல்லும்
சாதகணிப் பலனென்று சாற்றலாமே. (893)

வேறு.

ஆயுள்கா ரகனே ரைந்தினி லமர அலவனிற் செனித்திட அதனில், தீயரால் மாந்தி நட்புறு மாகிற் சென்மலக் கினத்தினேன் மதியன், தாயுள நாலேழ் ஒன்பதிற் பாவர் தன்னுடன் தரித்திட அவர்க்கு, மாயுளு மெழுபத் தொன்றுட னென்று மறைந்திடி லவனியின் மாதே. (894)

அட்டமா திபனுங் காரியாய் மால்வீ டமர்ந்திட லக்கின நாதன், திட்டமாயைந்தோன் ஒன்பதி லுயிர்க்குச் சேர்ந்திடக் கரியிருந் திடத்தோன், விட்டபஞ் சமத்தோன் கேந்திர மெய்தில் விளங்கிய ஆயுளின் தீர்க்கம், மொட்டிளங் கொங்கை பிறைநுதல் மாதே மொழிந்திடோ ரறுபது மைந்தே. (895)

வேறு.

மாதேகேள் கரிவீட்டிற் பாவர்சுபர் கலந்து
வருமுயிராற் கரியோனும் மறையாத வகையால்
வேதனவர் வீடாதல் உயிர்க்குமறை யாதால்
விளங்குபஞ்ச மத்தோனும் பத்தினோன் றூனும்
தீதில்லா வீட்டிருக்கில் உயிர்க்குமறை யாமற்
றிங்களுமே கேந்திரக்கில் செனித்திடுஞ்சே யவற்குக்
காதலியே வயதெழுப தாகுமெனப் பகர்வாம்
கனயோக சாலியெனக் கருதுவித்தை யதிகம். (896)

அருக்கனுயிர் தனித்தாலும் அம்புலிநா லேழில்
அமாவித்தா னத்தோர்கள் பவர்பகையுஞ் சுகமாய்
இருக்கவரி யோன்பகையா லுயிர்க்குமறை யாதால்
யேந்திழையே நாலாங்கோள் நட்பாட்சி யுச்சம்
தரித்தவனுந் தனித்திடவு மவன்றனக்கோர் நாலோன்
தருமனிவர் அவன்றனக்கு மறையாதெய் திடுமால்
திருக்கமழு மிருபதொன்பான் வொன்றதனிற் றுயைச்
சேர்க்குமதின் மேலேகிற் செனித்தபிதா வொழியும். ()

வேறு.

சேருதயத் தோன்பாவர் சுபரோடேகிச்
செல்பாவன் றனக்குப்பகை நீசமானல்
நீறணியும் நுதலாளே யைந்தோ னெட்டோன்
நெடுஞ்சுபராய் உயிர்தனக்கு மறையாதாகில்
பார்சுபருங் கேந்திரத்திற் றனிக்குமானல்
பதிவயது யெழுபத்தைந் தென்றுசொல்வாம்
நீரமதி லொருவன்மறைந் திடுவனுகிற்
செப்புவய தறுபதொன்ப தொன்றுமானே. (898)

வேறு.

லெக்கினத்தோ னவர்வீட்டிற் றனித்திருப்பா னுகில்
நேர்சனியு மப்படியே பாவருடன் சேர்ந்தால்
மிக்ககுரு மறையாதா லவர்தனிக்க வவற்கு
வியந்தனிலே யெட்டோனு லைந்தோனு லிருக்கில்

தக்கதுலை முதல்மூன்று தனிற்செனிப்பா ராகிற்
சாறும்வய தறுபதைந்து சாற்றிடலா மிகவே
அக்குருவுக் கைந்திலுற மாந்தியும்பாம் பானல்
அவன்வயது ஐம்பத்தைந் தெனப்பகரலாகும். (899)

மாந்திஉயி ரேகிடவும் லக்கினத்தின்கோளன்
மால்குருவால் மதியோடு சேர்ந்திடுவானுகில்
சேர்ந்திடவுங் கரிவீடால் கரியிருந்தயிடத்தோன்
செனனமதிற் கேமறையா திருந்திடுவனுனல்
ஏந்திழையே அவன்வயது அறுபதுமூன்றுகும்
இதிற்பரிதி யுதித்திடுகி லவன்வயதோ ரெட்டுள்
நேர்ந்திடுமா தாவொழியுந் துணைவருமேயேகம்
நீணிலத்தி லிவன்றனக்கு நிக்ஷயமென்றுரையே. (900)

வேறு.

பாம்புயிர்தரிக்க லெக்கினத்துடையோன் பஞ்சம மேழினி லிருந்தால், ஓம்புகர்மாலுங் கூடவக்கோளன் உயிர்க்கவன் மறைந்திடாதிருக்கில், சாம்பனுஞ்சுபரோ டேகிக்கேந் திரித்தால் தன்வயதறுபதெட்டாகும், காம்பிளமுலையா யதுகடந்திடுகிற் கருதியதுதிகையுங் கூட்டே. (901)

வேறு.

பாம்புயிரில் லக்கினத்துக் குடையோனுஞ் சுபராய்ப
பதியகேந் திரமுறவத் தானத்துக் குடையோன்
காம்பிலையாய் பாவருமாய்ப் பகையில்லாவாயுட்
கதியோனுற் சுபமாக மறையாதா லுயிர்க்குச்
சாம்பனிருந் திடமதற்கா றட்டமத்தோன்வீடு
தரித்திடவும் நட்பாட்சியுச்சமதா யிடுகில்
ஆம்பல்புரி யோன்பதத்தா லவனுடைய தீர்க்கம்
அறைந்திடுமோ ரெழுபதுடன் அஞ்சாகுமடமாய். (902)

கருதுடற்கோ ளுயிர்க்கோளுங் காரகனுமொன்றாய்க்
கன்னியில்மீன் மிதுனமதிற் றேன்றுவரேயாகில்
வருதிகளிற் கோளுடனே பாவரொன்றே கிடுமால்
வந்தவற்கோ ரறுபதுக்கு வகுத்திடலாமாயுள்

அருமாது தந்தையவர் கன்னியற்குக்கர்மம்
அவனியற்று மூன்றலது சதுரதொகையாகும்
கருங்குழலா யவராலும் அனேகபொருளுதவுங்
காட்டுபிதிர் வழியாகுங் கற்றுணர்ந்த கண்ணே. (903)

அரவுகரி சூரியன்மூன் றிருக்கவத்தா னத்தோன்
அவனுயிர்க்கு மறைந்திடுகில் தன் துணைவர்யாரும்
பரிதிகண்ட யிருளதுபோ லென்றுரைக்கலாகும்
பன்னுசுப ரிருந்திடுகில்யேக துணையிபற்றுங்
கருவயதீ ராறினுக்குள் அத்துணைவரிறங்குங்
காசினியி லறுபதுக்கு மவனிருப்பனென்றே
புருவதனு சினைப்பழிக்கும் மடமானேகேளாய்
பொங்குகடல் சூழுலகந் தனிலறைவாய்மானே. (904)

வேறு.

மிக்கலக்கினத்தோன் பாவாய்நாலேழ் மேவிட யிருந்தயில் லவ
னும்,பக்குவசுபா யுயிருங்கேந்திரமாய்ப் பதிந்திடச் சுத்தமதாகில்,
இக்கவனுயிர்க்கு குருமறையாம விருந்திட யியம்பிய சேய்க்குத், துக்
கமில்லாம லுரைக்கலாமாயுள் துணிவுடன் யெழுபதினஞ்சே. (905)

வேறு.

காரக னுயிரின்கோளன் கருதிடஞ் சரவீடாகில்
நேரிடம் வேறுகோட்கள் நேர்ந்திடா திருக்கவெட்டோன்
பார்புக ழுஞ்சோனெவ்வீடாகிலும் பவர்களானல்
வாரணிதனத்தா ளிக்கோள் சுற்றமா யெழுபத்தஞ்சாம். (906)

அருணனு முயிர்க்கோளாகி யட்டமத் தருக்கனேடால்
பெருகுளி கனுமேவெய்தால் பேருயிர்க் காரகன்றன்
வருபகை யில்லமாகில் வருஞ்சுப ரேகுவானேல்
அருமதி கேந்திரித்தா லறுபத்தெட் டாகுமாயுள். (907)

காரக னுயிரின்கோளன் கருதிடப் பகைவீடாகில்
காரகற் குயிர்க்கைந்தாங் கோள் கதிர்குரு மறையாதாகில்
பாருயிர் முன்போலானல் பகரிடம் பவரெய்தாலும்
நேருயிர்க் கோளில்லாதால் நிசமறு பதுமேலொன்றே. (908)

வேறு.

லெக்கினத்தோன் சுபராகிக் காரகன்றன் வீட்டில்
நேர்ந்திடுமத் தானத்தோ னவ்வீட்டி லிருந்தால்
துக்கமுள்ள காரிதனக் கேகுருவும் மறையா
தோய்ந்தவிடத் தனித்திருக்க முன்பின்னற்'சுபரால்
பக்கமுடன் வயது அறு பத்தைந்து மூன்று
பகர்ந்திடலாந் திங்களுமோ ரொன்றெனவே பதியில்
மிக்கவுரைத் தனர்மேலோ ராகமத்தைத் தேர்ந்து
விளம்புநெறி புவிமீதில் அறைந்தனர்நற் றமிழால். (909)

மால்புகரும் மாந்திகரி யொருவீட்டி லிருந்தால்
மறையவனும் மகரகும்ப மதிற்மூன்று மானல்
தேடுமுயி ரவன்றீர்க்கந் தொண்ணூற்றைந் தாகுஞ்
சேயதனிற் கூடிடுகில் யெழுபதெனச் செப்பு
சீலமதாய்ப் பாம்பதனி லுதித்திடுவா ராகிற்
செப்புவய தெழுபதைந்து பஞ்சமந்திங் களுமாம்
வேல்விழியாய் சூரியனு மதிற்சேர்வா னானல்
விளம்பிடலா மறுபதின்மேல் ஒன்பதவ னுயிரே. (910)

பஞ்சமக்கோ ளொன்பாகோ ளுயிர்க்கோளு மொன்றாய்ப்
பதிந்தயிட முயிராகப் பஞ்சமசுத் தமத்தால்
கஞ்சமமால் தன்னிகருக் குடையவளே கேள்மின்
கருதிடுமா யுள்தீர்க்கம் யெழுபதென உரைப்பாம்
துஞ்சுமவன் தனவானே யாகுஞ்செட்டு
துணிவாக அன்னியரால் அனேகநிதி யுதவும்
பஞ்சமபுத் திரருடனே யவனேக தாரம்
பயின்றிடுநீ சாஸ்திரத்தின் பயனறிந்த மின்னே. (911)

வேறு.

ஆயுட்கா ரகனீ ராறில் அமர்ந்திட வவற்கு நாலில்
நேயமாய்ப் பரிதி சுங்கன் நின்றிடப் புதனுங் கூடில்
வேயும்லக் கினத்துக் கைந்தில் வியமதி பொன்னன் கூடிற்
காய்கனி நுதலாய் கேள்மின் கடுவய தறுபத் தைந்தே. (912)

சேயுடன் மாந்தி கூடில் தினகரன் வீடே யானல்
நேயமா யவற்கு நாலில் நிகழ்மதி தனிப்பா ராகில்
தூயபாந் தூலகாயந் தொருவய னறுப தின்மேல்
மாயையாந் தத்து நீங்கி வளர்ந்திடும் வயது மூன்றே. (913)

வேறு.

குருவுயிரோ னுகிடவும் மதிமறையா தானல்
குருவினுக்குக் கேந்திரத்தில் மதிதனிப்பா ராகில்
வருமதிக்கு முன்பின்னும் பாவரில்லா திருந்தால்
வளரைந்தோன் சுபராக யிருந்திடுவன் றனக்குக்
கருவினிற்பாக் கியனுகும் அவனுயிரின் தீர்க்கங்
கலந்திடலா மறுபதொன்ப தாகுமெனப் பின்னும்
மருவுருவாந் தளகர்த்த னெனப்பேரே கிடைக்கும்
மறைந்திடுகி லம்புலியு மவனுயிரை யறையே. (914)

ஏரேறு வோன்பதத்தை வணங்கியுரைத் தனன்யான்
யேழிலேந்திற் பாம்பிருக்க வத்தானத் தோனும்
பார்சுபரா யாக்கைதனக் கேமறையா திடுமால்
பாரொன்பான் கோட்பாவ ருடன்சேரு வானல்
வீரியமாம் புத்திரர்க்குக் கெடுதலுமே யாகும்
விளங்குபதி யாவதனி லெட்டாம்வாக் கியம்போல்
ஆரியராம் வேதியருக் கீய்ந்திடுவா னுகில்
அவர்க்குபய புத்திருண் டாகுமென வுரையே. (915)

வேறு.

குருபகை யாக அந்தக் குருவினுக் கெட்டி னுதன்
வருமுயிர் மறையு மாகில் மன்னுயி ருடைய கோளன்
இருசுபர் வீடில் லாம லிவனுயி ரைந்திற் பாவர்
வருகினும் பாம்பெய் தாலும் வயதுமூன் றதனிற் போமால். (916)

சென்மலக் கினத்தின் கோளன் திருகுரு வாதிப் பன்னேன்
உன்னியோ ரொன்பா னுகி லுறைந்தவர் முன்பின் பாம்பால்
சொன்ன அட் டமத்தோன் காரி தொல்லுயிர் கேந்தி ரித்தால்
இன்னுயிர் முன்பின் சுத்த மிருந்திடி லெழுபத் தொன்றே. (917)

என்றிடுஞ் சொன்ன கோட்க ளெவரெது வீடுற் ருலு
மன்றொரு கோட்க ளாலு மாறிடு வனுக்கு மேலாய்
நன்றறு பதுமே லேந்தோ டுபயமும் நவில லாகும்
அன்றிரு கோட்க ளாகி லவன்வய தருபத் தொன்றே. (918)

வேறு.

லெக்கினேன் குருவா யவனுடன் காரி நேர்ந்திடக் கேந்திர முறுமால், தக்கவன் றனக்கு நிலவுகேந் திரத்திற் சார்வரால் மதிதனக் கெட்டு, சுத்தமே யாகிற் சென்மமோ ரெட்டோன் சோதரர் வீட்டினி லிருந்தால், மிக்கவன் றனக்கோ ரறுபது மொன்றும் விளம்பலா மாக்கையின் விரிவே. (919)

வேறு.

ஆடுயிராய் லெக்கினத்தோன் பாவர்வீட்டி
லதிசுபரும் பாவருடன் யேகதானன்
தேடுயிரில் வருஷமதே மொன்பான்னிற்
சேர்ந்திடவுங் காரகனுங் கூடுமானல்
மேடமுயிர் மதிகுருபான் மாலாய்த்தோன்றில்
விளங்குமவன் தீர்க்கமது அறுபதின்மேலேந்தாம்
தேடுமுயர் பூர்வீகத்தில் பொருளெய்யாது
செப்பும்வய திருபதைந்தி லதியோகம். (920)

வே.று

காரகன்லக் கினத்தோனுய்க் கேந்திரத்தி லுறுமால்
காரகன்றன் னுடன்வேதன் சேர்ந்திருக்கத் தானன்
வார்குழலா யுயிர்க்குமறை யாதிருக்கி லவற்கு
வருந்தியகேந் திரத்தினிலே புகர்தனித்து யிருந்தால்
வீரியமா யட்டமத்தோன் சுபர்வீட்டி லேக
விதியறுபத் தொன்பதனை விளம்பலா மவற்குப்
பார்புகழக் காரகன்றன் னுடன்பாம்பு சேர்ந்தால்
பகர்வயது ஐம்பத்தொன் பதுவெனவே பகரவே. (921)

காரியவன் தந்தையிடம் கலக்கிலதற் கெட்டாய்க்
கதிபனும்போய் மால்புகருங் கலையிருந்த யிடத்தோன்
தேறியபாக் கியத்திருக்கச் சிகண்டிசனும் நோக்கச்
சென்மனுமே ரெண்டிலுறச் செப்புமின்னேன் வயது

கூறுவோம் நாற்பதின்மே லிரண்டில்தத்த தாகும்
குளிர்வாய்வு ரோகமதால் கண்டம்வந்து விலகும்
பாரிலொரு சலனம்வரும் வாய்வுரணத் தாலும்
பகருவோம் யிவன்மரணம் அருபதின்மே லாண்டே. (922)

வேறு.

உடலிருந் ததிபன் சேயவ னுக உயிரிஞேன் மையவ னுகி, அடருமத் தனத்தோன் சத்துரு நவத்தோன் அவருட னிருந்தவர் பார்த்தோர், படருபாக் கியத்தி லிருக்கப்பொன் னேக்கப் பரவிய காவனம் புகுந்தே, திடவலு மிருகம் படவதைத் தூரத்திச் செயிப்பவன் ஆறுபத் துடையோன் (923)

வேறு.

வந்திடுமெய்க் குடையவனும் வாதகனுப் பிலக்க
மறையோனும் அரவுடனே வந்திட அன் னுதன்
புந்தியென அட்டமனும் உயிர்மெய்க்கு மறைந்து
புகர்வீட்டில் அவ்விடத்தோன் பொன்னவலக் கினத்தில்
வந்திடவும் மாந்தியுடன் மதிநோக்க யிவரை
மாறியிவர் நோக்கிடவும் மதியினில்லஞ் சனியும்
அந்தயிடத் தமர்ந்துயிரோ னவன்றுரவைப் பார்க்க
அதியோக வாகனவன் அரசுபெரும் புவியான். (924)

அரசுபெறும் புவியுளவான் கல்விகளிற் பிலவான்
ஆசையுள்ளான் தனந்தேடும் அகத்தினிலுள் ளவனே
வரிசைபெருந் துரகசெச சிவிகையினுன் முன்னே
மதலையுள்ளான் பிறர்மனைக்கு மையல்தரும் மதரும்
பரிசைகளோ டூரவுசெய்யும் பதனகுணக் கபடன்
பவுந்தாரீ ரழிவுடனே பருத்தவிஷ வீக்கம்
குருதிசையின் பின்னிலுமே முன்னிலவ னுயிரும்
குடிபோகும் ஆக்கைவிட்டுக் குதித்திடுமென் றுரையே. ()

வேறு.

புகாவனில்லஞ் செனித்திட அதனிற்பொருமகன் அன்னவன் மறையோன், அகமதிலிருக்க அந்தணன்நோக்க ஆரலோன் அஞ்சினில்நீலன், மகவுடனுரைய மதியும்நான்கதனில் மாலவன்சேய்துரவேறி, சிகிபகை யுடனே வாதகம்நோக்கச் சிறிய அரவும் யெட்டுறவே.

எட்டுறத் துணைவ ராஜயோக் கியனும் யிரப்பவ ரெனவெறுப் புடையான், கட்டிய சூலை வாய்வுநோய் சிரசீர் கணவியு மகவுமே நாசம், வெட்டென வுரைப்பன் மேன்மையான் விரகி விடங்கண் ணுள் வேர்பட வாழ்வன், ஒட்டிய கிளையால் அடிக்கொரு நினைவு உரைவெறுப் பாமென வுரையே. (927)

உரைப்பவன் தமக்கு ஆண்டுவொன் பதனுள் உயர்ந்திடுஞ் செல்வயீ ரெட்டுள், கரைத்துமெய்ப் பீடை தேசம்விட் டகலும் கதித்திடும் முப்பத்தி ரண்டுள், யிரப்பவர் கிளைகள் யேகமாய்ப் பின்னே யினஜன வெறுப்புவுட் பிணியன், சிரத்துநீர் ரணத்தாற் கண்டமும் விலகித் தேவர்கோன் திசைவரில் மரிக்கும். (928)

வேறு.

நீலனில்லஞ் செனிக்க அதிற் பொன்னவனீ சமதாய்
நின்றிடத்தோன் உச்சமதாய்க் கேந்திரத்தி லிருக்க
வாலமதி தனுசிலுற மாலவனும் புகரும்
மதிதனக்கு நவத்திலுற மதிபகைவர் பத்தில்
நாலதிபன் சேயாகப் புகர்வீட்டில் மூன்றில்
நஞ்சிருக்கப் பவர்நோக்க நாதனுக்கு ஆறில்
சீலமுடன் கோளிருக்கப் பிறந்திடுஞ்சே யிழைக்குச்
செப்புவோம் வரும்வயது தீர்க்கமென வுரையே. (929)

வேறு.

உரைத்திடுஞ் சேயன் யோகவா னெனவும் உடன்துணைப் பின்னதை அழிக்கும், நிறைத்திடும் தந்தை பதியைவிட் டகலும் நிதிவரச் செல்வமுட் பயமும், கரைத்துமெய் வரச்சி யுணவது சிறுத்துக் கவலையும் ஓர்வழி சிதறும், தரித்திடும் வயது மூன்றரை மேலாம் தந்தையும் தனமெலாஞ் செலுத்தும். (930)

புகரவ னுயிரோன் பொருந்திய அரவில் பொசித்திடுந் தனதுஊ ணதனில், தகையுமுட் பிணியும் சத்துரு விதர்ப்பம் தனம்வரச் செலவுமே தாரம், பகையுடன் மணமாம் பந்துக்கள் சடவும் பலகலை தெரிந்தவர்க் குறவும், மிகும்வெகு பூமி வேண்டிடும் பலிதம் விஷத்தினுற் பீடைவந் தெய்தும். (931)

குருதிலக் கினத்தில் ஜெனித்திட அதனேன் கோதைய ரில்லத்தி லமர்ந்து, பரிதியின் மகனும் பளிங்கியோ டிருக்கப் பாம்புமால் யிவர்களைச் சூழக், கருதியே சுதனும் ஜெனித்திடும் நாளிற் கனம்பெறப் பவுசுமுள் ளவனுய், வாவரத் தேயந்து மறுத்தொரு அன்னை வசத்தினில் வளங்குமிப் பலனே. (932)

பலனெனுந் தார மிரண்டென முடிப்பன் பாலகன் முன்னவன் தனக்குப், பிலமிலா திருப்பன் பெண்பெறும் பின்னுல் பெற்றிடும் ஆணதே யோகம், நலமிலை யவற்கு காமநோய் ரணத்தால் நண்ணியே துஞ்சுவன் சேயோன், குலமெலாந் தன்னைப் பகைத்துமே யிருப்பன் கோதைதன் வயதுமத் திபமே. (933)

மதியவன் பகைவன் மந்திரியிடத்தில் வளங்கிய இல்லம்ரண் டதுவாய், அதிபனும் மதியி னிடத்திலுச் சனுமாய் அவர்க்கவர் மறைபடு மானுல், கதிர்மகன் றனக்கு ஒழிபதா யிருக்கக் கபடனுந் தந்திர முடையான், பதிதனில் வயது ஐம்பது மாகும் பாந்தவான் மேலவர்க் கன்பன். (934)

நேரிளை தோன்றிற் கேந்திர மதனில் லெக்கினத் தோன்சுபருடனே, சேரிட மக்கோ ளுயிர்தனக் கேகித் திருந்தியே மறைந்திடா திருக்கில், வாரணி முலையாய் பாவருஞ் சேரில் வருமிடஞ் சுபருட வீடால், பாரதி லவற்கு அறுபதோ டைந்தும் பகராலா முயிரினிற் றீர்க்கம். (935)

மாலவன் ரவிசேய் ராகுடன் கூடி வந்துகேந் திரமதி லிருக்க
நீலனுங் குருவுந் தனமுடன் லாபம் நின்றிடப் புகர்மதி கேந்த்ரம்
தூலமாம் வயது நாற்பதிற் சிவிகை துலங்கிய பிரமசன் யாசம்
பாலனுக்கறுபத் தெட்டதில் வயதிற்பரகெதி மோக்ஷமுமடைவன்

வேறு.

சுங்கனுமட் டமக்கோளா யுயிரின்கோளாய்த்
தோன்றியசேய் கேதுடனே கரிவீடேறச்
சங்கையுட னிக்கோட்க ளிருந்தயில்லோன்
சாருயிர்க்குக் கேந்திரத்தில் நீசமேறத்

துங்கமுடன் வருங்கருமன் மால்வீடேகித்
தோன்றிடவே யெக்கோட்கள் சேராதானுல்
தங்குமெனத் தோன்றியசேய் தனக்குஆயுள்
சார்ந்திடுமே ஐம்பதுஆ றுபயஞ்செப்பே. (937)

காரியுயிர்க் கோளாய்க்கேந் திரமெய்தாலுங்
கருதுமெட்டோன் ஐந்தோனும் ஓரில்லமாக
நாரியிக்கோள் நட்பாட்சி யுச்சமானுல்
நல்மதிக்குக் குருமறையா திருந்திட்டாலும்
கூறுயிரட் டமஞ்சுத்த மெய்தினுலுங்
கோள்வயது அறுபதைந்து மேலுண்டாகும்
காரிமறைந் திடாராசி பகைநீசங்கள்
கருதுமிக்கோ ளுடன்பலன்று னைம்பதாயுள். (938)

வேறு.

வேதமாய் அட்டமத்தோன் மால்புகர்சூ ரியனுல்
விளங்குமிவர் ஒன்றுக மனறந்திடா திடுகில்
நீதமாய் யோரேழோன் சுபனுகி யிடினும்
நிறைவிழியோன் ஐந்தோனும் நீலனுமொன் றுகக்
கோதாய்கே ளுயிர்தனக்கு ஒன்பதினில் வருமால்
குவலையத்தில் யிறப்பளவு மங்கலந்தட் டாது
தீதில்லா தவன்வயது அறுபதெனச் செப்பு
திறமுடனே யீரைந்திற் சேருமது மணநாள். (939)

வேறு.

ஓதிடு மைந்தோன் றுனும் ஒன்பதைந் ததனிற் சேர
நீதமாய்ச் சுபரும் பாபர் நின்றிட வக்கோ ளோடு
சேதமென் றுரைத்தா ரைந்து திறமுடன் வயதென் றோதச்
சாதகன் மரண மட்டுஞ் சஞ்சலம் வளரு மாதே. (940)

அட்டமா திபனும் பத்தி லமர்ந்திட வதற்கு நாதன்
திட்டமா யரவ மோடு சேரிடஞ் சுபர்வீ டானுல்
சட்டமா யுயிர்க்குள் ளோனுந் தனித்திட மறையா தாகில்
திட்டமா யுதிக்குஞ் சேய்க்குத் திறமுடன் அறுபத் தைந்தே. (941)

ஓதுயிர் தானந் தன்னி லுயர்வுடன் குசன்வந் துற்றுல்
நீதமா யறுபத் தொன்றுய் நிச்சய முரைக்க லாகும்

வேதமாய்க் கணவனில்லம் விரைவுடன் பதினே ழுக்குள்
மாதவன் சேர்வ தாகும் மங்கலம் மரண மட்டே. (942)

வேறு.

அட்டமா திபனுங் காரியு மருக்கன் அமர்ந்திட வுதயகேந்திரத்தில், திட்டமா யுயிரோன் மதியுடன் கிரகஞ் சேர்ந்திடப் பாவருஞ் சுபரும், சட்டமா யுதிக்கும் மங்கையர் தனக்குச் சதிருடன் பத்து மூன் றுக்குள், திட்டமாய் மரணம் விதித்தன ரென்று செப்பினார் கணிதநூ லாய்ந்தோர். (943)

வேறு.

சுங்கனு முயிர்க்குள் ளோனுந் துணிவுடன் சுபர்வீ டாகப்
பங்கமாய் மதியு மந்தன் பத்திரண் டைந்தொன் பானால்
கொங்கைதன் றலையுந் தேகம் குறித்தன ரறிந்த நூலோர்
இங்கிதத் துடனே போகும் யிருபது முப்பத் தைந்தில். (944)

வேறு.

காரியு முயிரோன் கலைமறை யுடனே கதிரவன் வீட்டினிலேகச், சூரியன் மானு மில்லமோ ரொன்றாய்த் தோன்றிட முன்பினிற் சுபர்கள், கூறிய அட்ட மந்தனிற் பாவர் குறுகிடுங் கன்னியர் தனக்குச், சூரியன் றிசையில் மங்கலம் வருமால் துணிவுடன் முப்பது வயது. (945)

மதிமக னிறைவன் அம்புலி கரும மமர்ந்திட அட்டமந் தன்னில், சதியுட னுயிரோன் காரிபாம் போடு சார்ந்திட வுதயகேந்திரத்தில், விதியுட னுதிக்கு மங்கையர் தனக்கு விதித்தன ரைந்துநா லொன்றில், அதிகமாய்க் கணவன் வருமென வுரைத்தார் அரசர்தன் யோகமு மவளும். (946)

மதியுடன் புகரும் மானுமொன் றாக வளருங்கேந் திரந்தனில் வருகச், சதியுட னுயிரோன் காரிபொன் னோடு சார்ந்திட அட்டமந் தன்னில், பதிதனிற் பிறக்கும் மங்கையர் தனக்குப் பகர்ந்தன ராறுபதாய் வயது, மதியுட திசையில் மங்கலம் வருமே வகுத்தன ரதியோக் கியமாய். (947)

அதிகமாய் வருவனால்தன் திசையில் அன்னவன் றனக்குமே சிவிகை, சதியுட னிறைவன் திசைவரு மட்டுந் தங்கிடுஞ் சிவிகையோ கமுமே, கெதிபெற யிருப்பன் மரணநாள் வரைக்குங் கேசரி யோகமென் றுரைத்தார், பதிதனிற் பிறக்கும் மங்கையர் தனக்குப் பகர்ந்தன ரதிகமாய்ப் பலன்கள். (948)

அட்டாமா திபனும் அருணனு மருக்கன் ஐந்தினோன் காரியு மொன்றாய்த், திட்டமாய் வளருங் கேந்திர மதனிற் சேர்ந்திடப் பாவர்கள் வீடால், மட்டிடுமேழில் மால்கரி குருவாய் வந்திடு மங்கையர் தனக்குச், சட்டமாய் வயது யெழுபதொன் றாகச் சாற்றினார் பெரியவர் மொழியால். (949)

பெரியவர் மொழியால் பிறந்திடுஞ் சேய்க்குப் பீதகன் றிசை வரும்நாளில், கரியுட னாணில் கணவனும் வருமால் கட்டிடும் பரிமுதற் செல்வம், துரிதமாய் வந்த மங்கையர் தனக்குத் துணிவுடன் மங்கல நாசம், பெருகிடு மென்று முப்பது நாளிற் பேசினார் சாதகி பலனே. (950)

அட்டம மதனிற் பாம்புடன் காரி அருக்கனும் மாந்தியு மதனில், திட்டமா யேழிற் சேயுடன் மதியுஞ் சேர்ந்திடச் சுபர்கள் வீடானாற், சட்டமா யுதிக்குங் கன்னியர் தமக்குச் சதிருடன் மங்கல மேழில், திட்டமாய் வயது நாற்பத்தொன் றாகச் செப்பினார் கணிதநூ லாய்ந்தோர். (951)

வேறு.

கெணிதநூற் படியே சொன்னேன் கேளவன் றானும் வந்தால்
துணிவுடன் கணவன் நாசம் தோன்றிடுஞ் சாத கற்கு
மணிமகப் பலன்க ளற்பம் வகுத்தனர் துணைவர் நாசம்
பணிதமாய் மரணங் காட்டும் பகர்ந்தனர் பிலமாய் வாழ்வே. (952)

பரிதியு முயிர்க்குள் ளோனும் பார்க்கவன் மதிமா லோடு
குருதிவீ டதனிற் சேரக் குருவுமே மறைவ தானால்
கருதியா யுதிக்கு மங்கை களத்திரம் பிலம தாகச்
சுருதியாயைம்பத் தொன்றாய்த் துணிவுடன் உரைத்தார் மேலோர்

வேறு.

மதிமக னைந்தோன் காரியு மொன்றாய் வந்திட அட்டமந் தன்னிற், சதிருடன் யெட்டோன் லக்கின னோடு சார்ந்திடப்

பொன்னவன் வீட்டில், விதியுடன் பிறக்கும் மங்கையர் தனக்கு விதித்தன ரைம்பதாய் வயது, மதியுடன் காரி பெட்டி னேன் மறைந்தால் மதித்தன ரிருபதா யாயுள். (954)

அட்டமந் தனிலே பாம்புசூ ரியனு மமர்ந்திடப் பாவர்வீ டாக, நிட்டைமா னுடனே காரியு முயிரோன் நின்றிட லக்கினந் தனிலே, திட்டமாயிக்கோள் தனையுமே சுபர்கள் சேர்விழிப் பார்வையே யானல், சட்டமாய்ப் பிறக்குங் கன்னியர் தனக்குச் சதிருடன் நாற்பதாம் வயது. (955)

வேறு.

மாலோனு முயிர்க்கோளாய்க் கேந்திரத்தில் வரினும்
வன்புகரோன் பவர்வீடாய் வந்திடவே மறைவாய்
நீலனெடு அட்டமத்தோன் கூடிடவே சுபர்கள்
நெடுந்தீயோர் சுபக்கிரகம் நின்றிடவே கிடினும்
கோலவிழி தோன்றுமது மாதுருட வயது
குவலயத்தில் யெண்பதுகால் தொகுத்திடுமே மரணம்
மாலோனும் நீசபகை யாகிடவே மறையில்
வகுத்திடுமே வயதுரையே மாலவனுள் வருமால். (956)

சூரியனும் பூமனுமாய் மேடத்திற் றேன்றச்
சுங்கனுந்தன் வீடதுவே சுபருடனே தரிக்கக்
காரியுந்தன் வீடதுவே தரித்திடவே பொன்னன்
கடகமதில் மதியுடனே கேந்த்ரதிரி கோணம்
ஆரிநுதற் கோதையுட தானமதில் மாந்தி
அமர்ந்திடவே யேழதனிற் கொடியரவம் வருமால்
பாரிவரும் நாள்முதலே கனயோக சாலி
பாக்கியமுதற் சேத்திரங்கள் வாவரவே பெருகும். (957)

பெருகுமதிற் றாணிதனிற் பிறந்திடவே சேய்க்குப்
பெறுவிதமாய் அதியோகம் பேசினர்கள் பெரியோர்
குருவுகரி திசைதனிலே சிவிகைமுதல் வருமே
குறித்தனர்கள் அன்னைதனைக் கொன்றிடுவ னுகில்
வருமுயிர்தன் றுணைகள்பிலன் மாயுமென வுரைத்தார்
வருஞ்சேய்க்கு ஐம்பதிலே மாய்ந்திடுவன் தந்தை
பெருகுபுகழ் மாணமது வருமுயிரோன் றுரைத்தார்
பேணிடுவன் ஐம்பதுநால் பேசினர்கள் பெரியோர், (958)

மறையவன்னெஞ் சுறத்தோனும் அட்டமனுந் தசத்தில்
மனைக்கோளில் யில்லமுற அதிபனுங்கேந்திரத்தில்
நிறைமதியின் றிடத்தோனும் நீலனெனப்பிலக்க
நிதிவாழ்வன் பலதுரையான் யாபாரப் பலிதன்
அறைகுவோம் யிவன்வயது முப்பதுமே ரண்டுள்
ஐம்பதுமே நான்கதுக்குள் அவமிருத்தாற்பிடை
வரைகடறும் அறுபதினும் உள்மூலவாய்வு
வாந்தியினல் மதிமயங்கி மரித்திடுமென்றுரையே. (959)

மதியினில்லஞ் செனிக்க அதில் மறைக்கோளும்மாலும்
மறையவனும் அறவுறினும் அதற்குடையோனுடனே
கதிரவனு மவன்மகனுங் கலந்துயிர்க்குத் தனத்திற்
கதிரிடத்தி லிருந்திடவுங் கருஅரவஞ்சேயும்
அதிபலமா யிருந்துயிரை நோக்கிட அன்னுதன்
அங்கிஷத்தில் ஆதவனுர் துரவுறமேல்யோகன்,
நிதிபதியான் மிவன்வயது யீரேழுமேலாய்
நீள்புவியில் யாவருக்கும் புனிதனெனப்புகலே. (960)

வேறு.

புகலுவோங்கிளையை ஆதரித்திடுவான் புரத்தியர்நேசமுள்ளவனும், யிகலிருந்தாயும் ரெண்டெனவகுக்கும் யேகனுயிருப்பன் மேலவனும், அகமொடுஞாலம் காலிவாகனங்கள் அதிபதி யமைச்சர் போல் செலுத்தும், சுகம் அனுபவிப்பன் தோகையர் மோகன் சொகுசுளான் அறுபதுவரைக்கும். (961)

வேறு.

மந்தபவ னதிபதி புகரொனலக் கினத்தில்
மால்குருவுங் கொடியவனும் மதியினிடத் திருக்க
அந்தரிபன் அட்டமனை அணைந்துஅவ ருடனே
அலரியுற அவரிவரும் அடுக்கடுக்காய் வரினும்
சந்திரன்நின் றிடத்தையும் சாமியும்லக் கினத்தை
சத்தமமுஞ் சேய்நோக்கச் சாதகற்கும் வயது
வந்துதவும் மத்திபமாம் மாந்தியிருந் ததிபன்
வாக்கினேன் திசைவரினும் வந்திடுங்கண் டமதே. (962)

கண்டமாமெனவே உரைத்தனர்மின்னே கருதினேன் இருப தினெட்டில், அண்டவாய்வதனால் முப்பதுரெண்டில் அஸ்தியிற் காங் கைபோல்பற்றும், பண்டுளோர்சலனம் தாய்தந்தைமரணம் பகர்ந்த னர் முப்பதுநாளுள், கொண்டசாதகற்கு நீரழிவதனால் கொல்லுமாம் ஐம்பதினெட்டே. (963)

நவத்துளோன் யேழோன் லாபத்தோன்புகர்பொன்நண்ணிய அட்டமத்திருந்து, மகத்துயிரோற்கு அஞ்சினிலிருக்க மையவன் மறையப்பொன்வீட்டில், பவர்களும்பகையிற் பார்க்க வீற்றிருக்கப் பகருவோம் மத்திபவயதாய், அவதரித்திடுவான் யோக மேற்பலனும் அறைந்தனர் கணித நூற்படியே. (964)

படியெனும்வயதுயிருபதினெட்டுள் பகர்ந்தனர் முப்பதுரண்டில் அடியவள்பீடை யானசாதகற்கு மப்படிக் கண்டமுண் டெனவே, முடியுநாற்பத்து நாலுஐம்பதிலே முடுகுநோய் வினைகளும் வந்து, மடி யவொண்ணாது அறுபதுவயதில் மரணமென் றுரைத்தனர்மேலோர்.

ஆறினுக்குடையோன் யெட்டினோன்நவத்தோன் அலரியும் மதி மகன்மூன்றில், தேறியேவருகுஞ் சுபருமாய்க்கலந்து சிகண்டிச னில் லத்திலிருக்கக், கூறுவோம்வயது யீரொன்பான் முப்பான் ரண்டினுட் கண்டம்வந்தெய்துந், தேறுவான்யோகஞ் செலுத்தியேவாழுஞ் செல் வனென் றுரைத்தனர் தெரிந்தோர். (966)

வேறு.

வளர்மதியி னில்லமதிலே யரவுமிருக்க
மாதாவுக் குடையோன்சேய் வீடுறைய அன்னோன்
தழுவுமிட மாலகத்தில் மனைக்கோள்விண்மணியும்
சத்தமத்தோ னுடனிருக்கத் தாரமிருவகையாம்
பழகுகுணன் இனியசொலன் பயிலதிகலையிலான்
பங்கமிலான் யிங்கிதவான் சங்கீதப்பிரியன்
அழகுடையான் வெகுபோகன் வயதெழுபதுடையான்
அரசர்புகழ்கண்ணனென அறைந்தனரின் நூலோர். (967)

அட்டமத்திற் புகரிருக்கக் கேந்திரத்தில் அருணன்
அஞ்சேழு வொன்பதனில் ஆரல்கரிபானுந்
திட்டமாய் யுயிர்க்கதிபன் புகர்வீடேயாகத்
திங்கள்குரு மறையாகிப் பவர்களில்லமாகக்

சட்டமதாய் முதுமகனும் பாம்புடனே யிருந்தால்
சாற்றினர் கெணிவிதத்தால் பெரியோர்கள் மொழியால்
திட்டமுடன் மங்கலத்துக் கழிவுவரு மென்றார்
திறமுடனே நாற்பதைந்து நால்தனிலே வொழியும். (968)

ஒழியுமெனக் கெணிவிதத்தால் உரைத்தனர்கள் மேலோர்
ஒன்பதுநா லைம்பதனில் உரைத்திட்டார் வயது
அழிவுவரும் பாலகற்கு வரவரவே நாசம்
அதில்விலகும் மூன்றுதிரம் அறிவித்தார் நூலோர்
மொழியுடனே வருங்கணவன் யோகமென வுரைத்தார்
முப்பதைந்தி லதியோகம் மொழிந்திட்டா ரிவட்குத்
தெளிவுதலாய் வருங்கணவன் வீரியவா னெனனும்
சேய்புருடன் உபயமது ஜெயமிகுவேற் கண்ணாய். (969)

வேறு.

அட்டமத்திற் குருவிருக்கக் குருவின்வீட்டில்
அரவமதி கரியுடனே யிருப்பதானால்
நிட்டைபுரி மதிமகனுந் தன்வீடாக
ரெண்டினோன் கேதுடனே தனிப்பானாகில்
திட்டமுடன் உயிர்தனிலே வெள்ளிசேர்ந்தால்
திறமுடனே யிறப்பளவுஞ் செல்வமாகும்
சட்டமுடன் வயதுரைத்தார் கணிதநூலாற்
சதிருடனே அறுபதுநால் வயதுசாற்றே. (970)

சாற்றிடவே வருங்கணவன் யோகஞ்சொல்வேன்
சற்குருதன் நிறமதுபோல் கணவன்சேரும்
மாற்றமுடன் அவன்றனக்கு நீரால்தத்து
மாயுமெனத் தெரிந்துரைத்தார் பெரியோர்வாய்மை
ஏற்றமுடன் வயதவற்கு அறுபத்தெட்டில்
யிசைவுடனே வருங்கணவன் நாசங்காட்டும்
பாத்திபர்போல் வாழ்வெனவே உரைத்தார்மேலோர்
பகர்மொழியால் அவள்கணவன் பாக்கியசாலி. (971)

வேறு.

கோதாய்கே ளட்டமத்தோன் சேய்புகர்மால் பொன்னன்
கூடியிக்கோ ளொன்றாகிக் குஜன்மதிமால் வீடாய்
மாதேகே ளட்டமமேழ் சுத்தமதாய் வருக
மாந்திகரி கொடும்பாவர் வருமிடமேல் மறையால்

வேதாய்கே ளிப்படியே பிறந்திடுந்தன் கன்னி
விரைவுடனே யிருநாலுள் விதித்தனர்கள் மணநாள்
நீதான்கேள் மரணம்வரை மங்கலமே வளரும்
நிச்சயமாய் எண்பதென நிகழ்த்தினர்கள் வயது. (972)

மதிவீட்டில் மதியிருக்க உயிரோனு மொன்ருய்
வந்திடவே அவர்க்கிரண்டில் மால்கரிசேய் வருமால்
சதியுடனே யவர்க்குயெட்டிற் சற்குருகே தோடு
தரித்திடவே அக்கோளேச் சனிமதிமால் நோக்க
விதியுடனே யுதித்திடுந்தன் கன்னியுந்தன் கணவன்
விளங்கிடுவன் வெகுபாக்கியம் வேந்தர்நிகர் சதியாம்
அதிவிதியா லிப்படியே யோகமெனப் பின்னும்
அவன்வயது ஐந்துபத்து அறிவுடனே வுரைத்தார். (973)

மதிமகனு முயிரோனுய்க் கேந்திரமே விடினும்
வரவவற்கு யேழ்தனிலே மதிபுகர்பொன் வருமால்
சதியுடனே கரிகேது ஆரல்பரி யுடனே
சாறுமிடம் பவர்மனேயாய் மறைந்திடவே யிருக்கில்
விதியுடனே உதித்துவரும் கன்னியர்தன் மணநாள்
விதித்தனர்க ளிருமூன்று வயதுதனில் நடக்குங்
கெதிபெறவே வருங்கணவன் ராஜனென மதிக்கக்
கெணிவிதத்தால் யிப்பலனே உரைத்தனர்கள் மாதே. (974)

மாதேகேள் வருங்கணவன் கேசரியாம் யோகம்
வருத்தனர்கள் இப்பலனுய் வந்திடுமே வயது
கோதாய்கேள் கருவதனிற் பாக்கியமாந் தந்தை
குறித்தனர்கள் இப்பலனுய்க் கொண்டிடுமே பிலமாய்
வேதமொழி தவருமல் உரைத்தனர்கள் கெணிதர்
விதியுடனே முப்பதெட்டாய் விதித்தனர்கள் வயதைச்
சாதகிதன் மரணம்வரை தனங்களிடுங் கையாள்
சாற்றினர்கள் பெரியோர்கள் மொழியெனவே உரையே. ()

சூரியன்சேய் தொல்புகரோன் சூரியன்வீ டேகித்
தோன்றிடமுன் பவனுகி உயிர்க்கோளன் பவனுய்க்
காரிமதி யுடன்சேர உயிர்க்கோள னுடனே
கருதுமுக்கோள் தனேச்சுபர்கள் கண்விழிப்பார் வையினல்

சீருடன்சேய் பிறந்திடுவோர் ஆண்டதனிற் றந்தை
சேர்ந்திடுவன் பரதேசம்செப்புமென வுரையே
கூறினர்கள் தந்தைபர தேசமது செல்வர்
குறித்தனர்கள் சேயொழியுங் குருசிவனு ராணே. (976)

வேறு.

மந்தனு முயிரிற் சேர வளரும்லக் கினத்து நாதன்
சந்திரன் ரவிபொன் னேடு சாரிடம் மறைவ தாகில்
வந்துயிர் தனக்கு மூன்றில் வக்கிரன் புகர்வந் துற்ருல்
விந்தையாய் வருமா தர்க்கு விதித்தனர் வயதென் ருேதே. (977)

ஓதிடும் வயது நாற்பத் தைந்தென உரைத்தார் மேலோர்
வேதமா யீரா ருென்றில் விதித்தனர் கணவன் சேரும்
நீதமா யிருபத் தொன்றில் நேர்ந்திடும் புருடன் யோகம்
போதவே மரண மட்டும் பொங்கிடும் அதிக செல்வம். (978)

காரியு மறைந்து நீசங் கருதிய புகர்பா னேடு
சாரிட மறைவீ டாகத் தரித்திட வுயிர்க்கோ ளுச்சம்
கூறிய யெட்டோன் கேது குறுகிட உபயஞ் சேர்ந்தால்
சீருடன் வயது நாற்பத் தொன்றெனச் செலுத்து வீரே. (979)

வேறு.

அட்டமன் கரியாய் மாலவ னுடனே அமர்ந்திட நீசமா யைந்தில், திட்டமாய்க் குருவுஞ் சேயுடன் மாந்தி சேர்ந்திட வுயிர்க்குயெட் டதனில், சட்டமாய் மதியுங் காரிவீ டதனிற் சார்ந்திடப் புகருமே மீனங், திட்டமாய் வரினுஞ் சேய்திசை யதனிற் செப்பினர் மாணமென் றுரையே. (980)

அட்டமன் புகராய்க் குருவுடன் உயிரில் அமர்ந்திடக் காரியுங் குளிகன், திட்டமா யுயிர்க்குப் பத்திலே வரினுஞ் சேயுமே உயிரின் கோள் நாலாய்ச், சட்டமாய்க் கர்மன் மதிக்குகோ ணமதாய்த் தனித்திடப் பிறந்தசா தகற்கு, மட்டிலா தாருேன் திசைமுதற் செவ்வாய் வரையென மதித்தனர் வயதை. (981)

மதித்தனர் வயதை கதிர்திசை யதனில் வாய்த்திடும் பீடைகளதிகம், விதித்தனர் வயது ஆறெட்டிற் கண்டம் விளங்கிடும் வியாதியா லனேகந், துதித்தனர் பிலமாய்த் தோன்றிடு மென்று சொல்லினுர் கணிதநூ லதனுல், வகுத்தனர் சத்தி குமரவேள் தன்னே வணங்கிடத் தேய்ந்திடும் பிணியும். (982)

வேறு.

அட்டமத்தோன் கேந்திரமாய்க் குருதியொன்றாய்
அமர்ந்திடவே யதற்குடையோ னருக்கனோடு
திட்டமுடன் பவர்வீடா யுயிர்க்கோன் பானிற்
சேர்ந்திடவே கரிநீசந் தரிக்குமாகில்
சட்டமுடன் கேதுயிரோன் அருணனில்லஞ்
சார்ந்திடவே புகர்திசைநாள் தனதுவந்தால்
மட்டவிழ்சேர் மங்கலநாள் தரிக்குமங்கை
மாயுமென முப்பதுவாய் வரினுமாயுள். (983)

வேறு.

மந்தனும் யெட்டி னோனும் வளருகேந் திரத்தி லேறச்
சந்திர னுயிரோ னாகிச் சாரிடம் பிலமா வானால்
வந்துயிர் தனக்கு ஐந்தோன் வருமிடம் உதய மானால்
சிந்தையாய் மாலோன் வந்தால் செத்திடும் வயதென் றோதே. (984)

ஓதுயிர் தனக்கு நாலில் உயர்வுடன் குருவந் துற்றால்
வேதமாய்ப் பாம்பு நாளில் விதித்தனர் உயற்சி அற்பம்
போதவே குருநாள் வந்தால் புகழ்தன முயற்சி மேலாஞ்
சாதகன் றனக்கு யோகஞ் சாற்றினார் மறைநாள் மட்டும். (985)

வேறு.

விதியாக அட்டமத்தோன் சுபராகித் தோன்றி
வெய்யவன்வீ டுற்றிடவே உயிர்க்கோள னுடனே
சதியாகக் காரிபுகர் வீடேகிப் பிலமாய்ச்
சாற்றிடவே மதிமகனும் மறையாமற் றணிக்க
மதியாகப் புகர்மறையா வருமாதர் மணநாள்
வகுத்திடுவார் வயதுபத்தார் வகுத்திடும்பாக் கியமாம்
நிதியாகத் தாணிதனில் அறைந்திடவே வயது
நிகழ்த்தினர் மால் காரிபுகர் நேர்ந்திடுஞ்சேய் தொகையாம்.

சதியாக அட்டமத்தோன் புகருடனே கூடிச்
சாருமிடம் மறையாமற் சுபர்மனையாய் வரவே
விதியாக உயிர்க்கோளன் கொடும்பாவ ருடனே
விளங்குமிடஞ் சுபர்மனையாய் மறைந்திடவந் திடுமால்

மதியேகேள் காரிஉயிர் தனக்கேழில்வருமால்
வருமாதர் மங்களநாள் மால்திசை வந்திடுகில்
விதியாக யிறப்பளவும் மங்கலந்தட்டாது
விதித்தனர்கள் பரிதிமதி குருவு தொகையுரையே. (987)

சூரியனும் மாலுடனே வோர்வீடேகித்
தோன்றுமிடம் பவர்வீடாய் உயிர்க்கெட்டாகக்
காரிசுபர் வீடேகி மறையாதாகில்
கருதுமக்கோள் தனைச்சுபர்கள் கண்விழிப் பார்வையினாற்
கூறுமுயிர்க் கோளனுமெட் டோனுமதியுடனே
குறுகிடவே பவர்மனையாய்த் தரித்திடுஞ்சாதகற்குச்
சூரியனும் புகர்மாலும் மதிதிசைசேயாண்டு
தொகையெனவேசொல்லிடுவாய்மேலோர்கள்மொழியால் ()

மாதேகே ளேழோன்மால் நாலுயிர்க்கோளுடனே
வரினுமிடம் மறையாமற் சுபர் மனைவந்திடுமால்
கோதாய்கே ளட்டமத்தோன் சுபரோடுபாவர்
குறுகிடவே சுபர்மனையாய்ப் பவர்விழிப்பார்வையினால்
வேதாநீ அட்டமத்தில் வெள்ளிதனித்திடவே
விரைவுடனே வருமாதர் விதித்தனர்மங்கலநாள்
ஓதிடுவன் அட்டமத்தோன் றிசைதனிலென்றோத
உளமகிழவெகுநிதிக ளுரைத்தனர்மேலோர்கள். (989)

வேறு.

சூரியன்மால் காரியுடன் ஓர்வீடேகித்
தோன்றுமிடஞ் சுபர்வீடாய் மறையாமல் வருமால்
கூறுமுயிர் அட்டமத்திற் புகர்வரவே அக்கோள்
கொடியவனோ டுடன்சேர்ந்து சுபர்வீடாயிருக்கில்
சீருடனே அட்டமத்தோன் றிசைதனில்மங்கலநாள்
செப்பினர்கள் வருகணவன் சேர்ந்திடுமாண்டெனவே
கூறிடவே புகர்கரிமால் ஆரல்வருந் தொகையாய்க்
குறித்தனர்கள் வயதெனவே குறுகிடுஞ் சாதகற்கே. (990)

வேறு.

மந்தனும் உயிரிற்சேர வளருங்கேந் திரத்துநாதன்
சந்திரன் ரவிபொன்னோடு சாரிடம்மறை யாதர்கில்
சிந்தையாய் உயிர்க்குமூன்றிற் சேர்ந்திடும் புகர்சேயானால்
விந்தையா யீராறொன்றில் விதித்தனர் கணவன்மாதே. (991)

மாதவர் கணிதநூலால் வகுத்தனர் யிருபத்தொண்மேல்
ஓதினார் பூமிசெல்வம் உரைத்தனர் கணவன்யோகம்
போதவே அதிகமாகும் பொருந்திடும் அரவுநாளாய்
வேதமாய் நாற்பத்தாறாய் விதித்தனர் வயதென்றோதே. (992)

வேறு.

மதிமகனு முயிர்க்கோளாய்ச் சேய்மறைவீடேகி
வரினுமக்கோள் கரிபுகர்பான் வளர்கொடியோனுடனே
சதியுடனே உயிர்தனக்கு ஆறிருமூன்றெட்டாய்த்
தரித்திடவே மதிதனக்குச் சற்குருவொன்பதனில்
விதியுடன்மா தற்குவரும் மங்கலநாள் கருதில்
விதித்தனர்கள் பிலமாகி விளங்கிய நூல்மொழியாள்
அதிவிதியால் ஆயுள்விதி செப்பிடவே கணிதர்
அறைந்தனர்கள் பரிதிமதி பொன்றொகை யென்றுரையே.

வேறு.

அட்டமாதிபனும் ஆயுள்காரகனும் அமர்ந்திட வுயிர்க்குயிராறில், திட்டமாய் உயிர்க்கோள் மதியனுயுச்சஞ் சேர்ந்திடமாந்திபாம் புடனே, நிட்டைமால்கருமன் அலறியோடொன்றாய் நேர்ந்துயிர் தனக்கு யெட்டோன்முன், சட்டமாய் வளரும் மாதர் தன்வயது சார்ந்திடும் இருபத்தேழ்யிரட்டி. (994)

வேறு.

முதுமகனும் உயிர்க்கோளும் எட்டின்கோளும்
முதியகரு மத்தோனும் ஓர்வீடேகிச்
சதியுடனே உயிர்தனக்கு நாலேழ்அஞ்சில்
தருகிடவே சுபர்வீடாய் பவர்நோக்கில்லா
விதியுடனே வருமாதர் மணநாள்காரி
விளங்கிடவத் திசைதனிலே புகர்நாளுண்டாம்
மதியுடன் மங்கலம்நாசம் கரிநாள்போக்கில்
மாய்ந்திடுமே மாதருக்கு வயதைம்பத்தொன்றே. (995)

வேறு.

அட்டாமாதிபனுங் கேதுடன்கூடி அமர்ந்திடப் பவர்மனையாகத், திட்டமாய்க்காரி மதிகதிருடனே சேரிடம் பணபரத்துறுமால், சட்டமாய் உயிரோன் பாவர்வீடேகித் தரித்திடப் பாவர் வந்திடுகில், திட்டமாய்வயது பத்திரண்டென்று செப்பினார் சாதகன்றனக்கே. (996)

வேறு.

ஓதினர்கள் மேலோர்கள் உரைத்தமொழி யெனவே
ஒன்றுபத்து நாலதிலே உதித்திடுமேதாரம்
வேதமுடன் இருபதஞ்சில் தாய்மரணங் காட்டும்
விளங்குமிரு பத்திரண்டில் விதித்தனர்கள் தந்தை
சேதமென வுரைத்தனர்கள் மேலவர்கள் மொழியால்
சேய்வயது இருபதொன்றில் சேதமென்றார் தாரம்
நீதமுடன் பிறந்துவருஞ் சேயுடதன் பலனை
நிகழ்த்தினர்கள் யிப்பலனாய் நேரெனவே பெரியோர் (997)

மதிதனக்குக் கேந்திரத்தில் குருவேநின்றால்
வரவவற்குக் கெஜமுடன்கே சரியாம்யோகம்
துதிபெருகோள் அரியாளி யதற்குமுன்னால்
தோன்றுகட கரிபோல வினைகளோடும்
அதிபதியாய் இவன்வயது யெழுபது மட்டுண்டாம்
ஆகமசாஸ் திரவேத மாராய்வா னென்னும்
பதியதினில் உரைத்திடலாம் யின்னம்வேண
பாக்கியங்கள் கொடுத்துநலம் பகருமாதே. (998)

மாதேகே ளிருவீடு ஓர்வீடாக
வரவவற்கு முன்பின்னுஞ் சுபரேநிற்கக்
கோதாய்கேள் யிருவீடுஞ் சுபர்வீடாயக்
கோளனுங்கேந் திரமாகிச் சுபர்வீடுற்றால்
வேதாய்கேள் தோன்றிடுஞ்சேய் வருநாள்தொட்டு
வேணநிதி க்ஷேத்திரங்கள் விளங்குந்தந்தை
மாதேகே ளிருவீடும் பவர்வீடாகி
வரினுமக்கோள் பவரோடு மறையுமாகில் (999)

மறையுமெனத் தோன்றிடுஞ்சேய் பலன்களெல்லாம்
வருஞ்சமனா யுதவிடுமே மாதேதந்தை
முறையுடனே பாக்கியமே சமனும்பூமி
மொழிந்தனர்கள் வயதுயிரு பதின்மேற்செல்வம்
விரைவுடனே சமபலனா யறைந்தார்மேலோர்
மேதினியிற் சாதகற்கு யிதுவிதியென்றோதே
மறைமதிசேய் திசைவருமால் பலன்மேலாகும்
வகுத்தனர்கள் பாக்கியமும் வருகுமேலாய். (1000)

140/R

சூரியனுமுயிரோனுய்ச் சேய்புகர்வீடேகச்
சுங்கனுமால் வெள்ளியுடன் தொல்புகர்வீடாகக்
காரியுந்தான் கேதுடனே மதியோடொன்றுய்க்
கரியவன்மால் குருவீடாய் வருவதானுற்
சீர்பெறவே யுதித்துவருஞ் சேயுடதன்வயதைச்
செப்பினர்கள் யெண்பதொன்றுய்ச் சேருமுயிர்தனக்குப்
பாருலகி லிவன்றனக்கு மாணமதுவரைக்கும்
பகர்ந்தனர்கள் சிவியோகம் பலித்திடுமென்றேதே. (1001)

—•• ••—

சாரதம்பாள் கிருபாகடாக்ஷம் பெற்ற

சங்கராச்சாரியசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

ஆயுட்பாவகம்

முற்றிற்று.

விவேகாநந்தா பிரஸ், மதுரை:—37.